உ

சிவமயம்

குமரகுருபர அடிகள்

300-வது ஆண்டு நினைவு
விழா மலர்



காஞ்சிபுரம்

1—5—89

T11463
R003107

ஸ்ரீ ஆதி குமர குருபர சுவாமிகள்

300-ஆம் ஆண்டு நினைவு விழா

நிகழ்ச்சி நிரல்

நாள் :	**1—5—89 திங்கட்கிழமை**
மாலை 4-00மணி	**திருவேகம்பநாதர் வழிபாடு**
,, 5-00மணி	பீடாதிபதிகளும் மகாசந்நிதானங்களும் திருக்கூட்டங்களுடன் திருவேகம்பத்திலிருந்து திருக்கச்ச பேசத்திற்கு எழுந்தருளுதல்
மாலை 6-00மணி	ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் காவணம் **கச்சபேசம்** **காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சந்திரசேக ரேந்திர சரஸ்வதி சங்கராசாரிய சுவாமிகள் அருளாசி.**
திருமுறை ஓதல் :	கலைமாமணி, காஞ்சிபுரம் **திரு. ஆ. விநாயக முதலியார்** அவர்கள் கலைமாமணி, தருமபுரம். **திரு P. சுவாமிநாதன்** அவர்கள்
வரவேற்புரை :	சித்தாந்தக் கலைமணி, மகாவித்துவான் **திரு. சி. அருணைவடிவேல் முதலியார்** அவர்கள் மலர்க்குழுத்தலைவர்
தலைமையுரை :	தருமையாதீனம் 26ஆவது குருமகா சந்நிதானம் **சீலஸ்ரீ. சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** அவர்கள்
மலர் வெளியீடு :	கயிலை மாமுனிவர் **ஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்** அவர்கள் திருப்பனந்தாள்
முதற் பிரதி பெறுபவர் }	செந்தமிழ்ப்புலவர், கல்விக்காவலர் **டாக்டர். ம. வே ஜயராமன்** எம் ஏ.டி.லிட் அவர்கள். பெங்களூர்

உ

திருச்சிற்றம்பலம்

ஆதி குமர குருபர அடிகள்

300 ஆவது ஆண்டு

நினைவு விழா மலர்

பதிப்பாசிரியர்:

சித்தாந்தக் கலைமணி, தருமையாதீனப் புலவர், முதுபெரும் புலவர்

திருமுறை உரைமணி, சைவப் பேரறிஞர்,

மகாவித்துவான் **சி. அருணை வடிவேல் முதலியார்**

காஞ்சிபுரம்.

1 — 5 — 1989

உ

ஸ்ரீ சந்த்ரமௌளீஸ்வராய நம:

PHONE: NV 2315

ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்யபரம்பரை

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீமடம் ஸம்ஸ்தானம்

காஞ்சிபுரம்-631502.

தேதி: 12—4—1989

யாத்ராஸ்தானம்; **ருஷிகேசம்**

ஊமையாகப் பிறந்தும் முருகனது அருளால் பக்திச் சுவை யொழுகும் பாக்கள் பாடும் திறமை பெற்று இறையுணர்வைப் பரப்பிய கவியடியார் திரு. குமரகுருபரர்.

காஞ்சீபுரத்தில் இவரது 300-வது ஆண்டு நிறைவு விழா வரும் சித்திரை 18இல் (1—5—89) கொண்டாடவிருப்பதையறிய மகிழ்கிறோம்.

இவ்விழா இனிதே நிறைவேறவும், இது சம்பந்தமாக வெளியிடப்படவிருக்கும் மலர் அடியவர் பெருமை மூலமாக ஆண்டவன் பெருமையை விளக்குவதாக விளங்கவும் ஸ்ரீ பரமேச்வரன் அருள் பாலிப்பாராக என ஆசீர்வதிக்கிறோம்.

நாராயணஸ்ம்ருதி

உ

சிவமயம் தொலைபேசி : 2679

ஸ்ரீ தொண்டை மண்டலாதீனம்,

சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

57, உபதலைவர் பரமசிவம் தெரு, பெரிய காஞ்சிபுரம்-2.

நாள்: 30—4—1989

ஆசியுரை

தென்பாண்டி நாட்டிலே பொருநை ஆற்றின் வடகரையில் திருக்கயிலாய புரம் என்னும் (திருநெல்வேலி - திருச்செந்தூர்க்கு இடையில்) ஊரில் 17-ஆம் நூற்றாண்டில் தோன்றியவர் அருட்டிரு குமரகுருபர சுவாமிகள்.

இவர் செந்திற் குமரன் திருவருளால் ஐந்தாண்டிலேயே பழுத்த தமிழ்ப் புலமை பாலிக்கப் பெற்றவராய் சிவமாநெறியை இமயம் முதல் குமரி வரை பரவச் செய்தவர். 12-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு சங்க காலப் புலவர் வரிசை யில் வைத்து எண்ணும்படி விளங்கியவர்; கலைமகள் அருளால் இந்துஸ்தானி யில் மொகலாய மன்னரிடம் பேசி அவரது ஆதரவால் காசியிலும் நேபாளத்தில் மோரங்கி என்ற இடத்திலும் திருமடங்கள் நிறுவியதோடு, அ/மி கேதாரீசுவர ருக்குத் தமிழ் நாட்டு முறைப்படி கோயில் அமைத்து அன்றாட சிறப்பு வழிபாடுகள் தொடர்ந்து நடைபெற வழி வகுத்தவர்.

குரு சீட பரம்பரையை விளக்கிய இவரது பண்டார மும்மணிக் கோவைக்கு ஒப்பான நூல் இலை என்பர்.

பொருட் சமய முதற் சைவ நெறி தான் பெற்ற புண்ணியக்கண் இரண்டு என்று ஞானசம்பந்தப் பெருமானையும், நாவரசர் பெருந்தகையாரையும், தெய்வச் சேக்கிழார் பெருமான் சுட்டுவதுபோல் கடந்த மூன்று நூற்றாண்டுகளில் சைவத்தின் இருக்ககண்ளாக விளங்கியவர்கள் இவரும், மாதவச் சிவஞான யோகி களும் ஆவர்.

தருமையாதீன 26.ஆம் பட்டத்தில் விளங்கும் குரு மகா சந்நிதானம் அவர் கள் அருளாணைப்படி இவ்வாண்டை இத்தகைய அருட்பேரடிகளது 300-ஆம் ஆண்டு விழாவாக பல்கலைக்கழகங்களும், சைவ நெறி அமைப்புக்களும் கொண் டாடி வருவது யாவரும் அறிந்ததே!

ஆதீன கர்த்தர்களும் அடியார் திருக்கூட்டங்களும் இணைந்து இவ்விழா வினைச் செய்ய வேண்டும் என விழாக் குழுவினர் முடிவு செய்தனர், இதற்கு அடிப்படைக் காரணம் தமிழக ஆதீனங்கள், அவைகளின் பயன்கள் ஆகியவற்றைப் பொது மக்கள் அறியும் வாய்ப்பு, திருக்கூட்டங்கள் ஒருங்கிணைந்து செயல் புரியும் வாய்ப்பு ஆகியவைகளை உருவாக்கும் என்பதே!

விழா நன்கினிது நடைபெறவும், இதிற் பங்கு பற்றும் அனைவரும் அனைத்து நலன்களுடன் நீடினிது வாழவும் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

சிவம்.

குருபாதம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்,
தருமபுரம், மயிலாடுதுறை, (அஞ்சல்) 609001

தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறிந்த முனிவரர்களில் ஒருவர் ஸ்ரீ குமரகுருபரர். கி.பி. 17ஆம் நூற்றாண்டில் தென்பாண்டி வளநாட்டில் ஸ்ரீ வைகுண்டத்தில் தோன்றிச்செந்தில் கந்தன் திருவருள் நலம் பெற்று தெய்வ மாக்கவியாகத் திகழ்ந்தவர் இவர், மதுரையில் எழுந்தருளி விளங்கும் ஸ்ரீ மீனாட்சி அம்மை மீது பிள்ளைத் தமிழ் பாடித் திருமலை நாயக்கர் அவையில் அரங்கேற்றும்போது அம்பிகையே அர்ச்சகரின் குழந்தைபோல வந்து மன்னர் மடிமீது அமர்ந்து கேட்டு முத்துமாலை ஒன்றை முனிவரர் கழுத்தில் அணிவித்து மறைந்தார் என்ற வரலாறு இவர் திருவருள் நலம் சிறக்கப் பெற்றிருந்ததைத் தெரிவிக்கும்.

தமக்கொரு குருநாதரை அருளவேண்டுமென்று திருச்செந்தூர் முருகனிடம் இவர் வேண்டிய போது வாக்குத் தடைப்படுமிடத்தில் குருநாதரைப்பெறலாம் என்று முருகனுரைத்த அசரீரிமொழிக் கிணங்க இவர் தருமையாதீனம் நான்காவது குருமூர்த்திகளாகிய ஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகளைத் தரிசித்த போது அவர்கள் 'ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள' என்ற பெரிய புராணப் பாடலுக்கு அனுபவப் பொருள் கேட்ட அளவில் தமது வாக்குத் தடைப்படுவதை அறிந்து வீழ்ந்து வணங்கித் தம்மை ஆதீன அடியவராக ஏற்றருள வேண்டினார். குருமகாசந்நிதானம் அவர்கள் காசியாத்திரை, சிதம்பர தரிசனம் செய்து வரப் பணித்து ஆட்கொண்டருளினார்கள் திருவருளோடு குருவருள் நலமும் பெற்ற குமர குருபரர் பண்டார மும்மணிக்கோவை என்னும் பாமாலையைக் குருநாதர் திருவடிகட்குச் சூட்டி வணங்கினார். குருமூர்த்திகள், காசியில் மொகலாய மன்னர் ஆட்சியால் சிவநெறி குன்றியிருப்பதை அறிந்து காசி சென்று தங்கிச் சித்தாந்த நெறி பரப்புக, எனப் பணித்தருளினார்கள்.

குமரகுருபரர் காசி சென்று குருவருளாசியாலும், தம் தவவலியாலும் மகமதிய மன்னர் இசைவுடன் திருமடங்கண்டு சிவநெறி பரவச் செய்யும் அரிய தொண்டை ஆற்றினார்.

இவர் 16 நூல்கள் வழங்கியுள்ளார். அந்நூல்கள் நுவலும் பொருள்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். 1. அறநெறி கூறுவது 2. அதன் வளர்ச்சியில் குருவருள் நாட்டத்தைப் பெறத் துணைநிற்பது 3 குருவருள் துணையுடன் திருவருள் பெற்றுய்ய வேண்டுவது இம்மூன்று வகையில் முதலாவதற்கு நீதி நெறி விளக்கத்தையும், இரண்டாவதற்குப் பண்டார மும்மணிக் கோவையையும், மூன்றாவது கருத்திற்குப் பிற நூல்களையும் கூறலாம். சிறுபிரபந்த வகைகளில் மும்மணிக் கோவை பிள்ளைத்தமிழ், நான்மணிமாலை, குறம் எனும் வகைகளில் நூல்களை அளித்துள்ளார்.

திருமடம் கண்ட வகையில் சிவநெறிக்கும், நூல்களை வழங்கிய வகையில் செந்தமிழுக்கும் தொண்டு புரிந்துள்ள குமரகுருபர முனிவர் 1688 ஆம் ஆண்டு இறையருள் பெற்று பரிபூரணம்

அடைந்ததை நினைவுகூர்ந்து இதுபொழுது முந்நூறாவது ஆண்டு நிறைவு நினைவு விழா நாடெங்கிலும் கொண்டாடப் பெற்று வருகிறது

அவ்வகையில் காஞ்சிபுரத்தில் தொண்டை மண்டல ஆதீனம் மகா சந்நிதானம் அவர்களின் திருவுளக் குறிப்பின் வண்ணம், அன்பர்கள் குமரகுருபரர் 300 ஆவது ஆண்டு நினைவு விழாக்குழு அமைத்து, விழாக் கொண்டாட இருப்பதும், அதனை ஒட்டி மலர் ஒன்று வெளியிட இருப்பதும் மகிழ்ச்சிக்குரியன.

விழா மலர் பக்திமணம் பரப்பிச் சிறக்கவும், இப்பணியில் ஈடுபடும் அன்பர்களும், அறிஞர்களும் எல்லா நலன்களும் பெற்று நீடு இனிது வாழவும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

உ

சிவ சிவ

கயிலைமாமுனிவர்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்,

அதிபர், ஸ்ரீ காசிமடம்

(தஞ்சை மாவட்டம்) திருப்பனந்தாள் 612504.

வாழ்த்துரை

செந்தில்நகர்க் கந்தனருள் பாலிக்கப் பெற்ற தெய்வீகக் கவிஞராம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின் 300-ஆவது ஆண்டு விழாக் 'கல்வியில் கரையிலாதது' எனப் போற்றப் பெற்ற காஞ்சிமா நகரில் மாண்புற நிகழ்வதும், விழாச் சார்பில் சிறப்பு மலரொன்று மலர்வதும் அறிந்து மகிழ்கின்றோம்.

காலந்தோறும் கவிஞர் பலர் தோன்றினும் தம்புகழ் நிறீஇத் தமது இலக்கியக் கொடைகளின் வாயிலாக என்றும் நிலைத்த வாழ்வு பெற்றுள்ள கவிஞர்கள் ஒரு சிலரே. அவருள் நமது சுவாமிகளும் ஒருவர்.

'சிற்றிலக்கியச் சக்கரவர்த்தி' 'தெய்வக்கவிஞர்' 'முத்தாரம் பெற்ற கவி' என்றெல்லாம் தமிழறிஞரால் போற்றப் பெறுபவர் நமது சுவாமிகள்.

எளிமையில் எளிமை வாழ்வியல் தழீஇய உவமை நலம், சமய உண்மைகளைப் பழச்சாறெனப் பிழிந்தளிக்கும் கவித்திறம், தமிழ் போற்றும் தகைமை என்னும் திறங்கள் பரிமளிக்க இவர் தம் கவிக்கோவைகள் கற்பார்க்குச் சுவைபல கூட்டுவனவாம்.

யாப்பு இலக்கண நெறியின் எல்லா அமைப்புகளுக்கும் இயைந்த எடுத்துக் காட்டுகளாக பக்திச் சுவை சொட்டுவதாக ஒரு நூலை யாத்த திறமிக்க கவிஞர் பெருமகனாரின் நினைவு விழாக் காஞ்சியில் நிகழ்வது சிறப்பு மிக்கதாகும். ''கச்சிபடுவ கடல்படா; கச்சி, கடல்படுவ எல்லாம் படும்' என்னும் தண்டியாசிரியரின் பாடல் தொடர் காஞ்சியின் சிறப்பினை விளக்கிடும்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின் 300-ஆவது ஆண்டு விழா இனிதே நிறைவுறவும் 'மலர்'' சுவாமிகளின் கவிகளில் அமைந்த பக்தி, இலக்கிய மனங்கமழும் பொன்மலராய்ப் பொலிந்து மலரவும் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

சுபம் சிவ சிவ

உ
சிவமயம்

திருக்கயிலாய பரம்பரை
ஸ்ரீ-ல-ஸ்ரீ
சிவப்பிரகாச தேசிக
பரமாசாரிய சுவாமிகள்
குருமகாசந்நிதானம்
திருவாவடுதுறை ஆதீனம்

திருவாவடுதுறை-609803.
(தஞ்சாவூர் மாவட்டம்)

நாள்: 6—4—1989

ஆசியுரை

காஞ்சிபுரம் இறைபணித் தொண்டர்களின் சிறந்த முயற்சியால் அண்மையில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300-ஆம் ஆண்டு நினைவு விழா மிகச்சிறப்பாக நடைபெறவுள்ளமையும், அதுபொழுது விழா மலர் ஒன்று மலரவுள்ளமையும் அறிந்து மகிழ்கிறோம்.

திருச்செந்திலாண்டவன் திருவருள் பெற்று ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நம் செந்தமிழ் மொழிக்கும், மேன்மைகொள் சிவநெறிக்கும் ஆற்றிய அரும்பணிகள் தமிழ் நன்மக்களால் என்றும் போற்றிப் பயன்கொள்ளத்தக்கன. சுவாமிகள் உலகு நலம்பெற அருளிய நெறிகள் நிலைபெற நிகழும் விழா நல்லவண்ணம் நிகழவும், விழா மலர் தெய்வத் தமிழ் மணங்கமழ மலர்ந்து உலகின்புறவும் நம் ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ ஞானமா நடராசப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்திக்தின்றோம்.

ஸ்ரீ முருகா

சூரியனார் கோயில் ஸ்ரீ சிவாக்ரயோகிகள் ஆதீனம்
26வது குருமகா சந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ தெய்வசிகாமணி தேசிக பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுரை

திருவாற்பொலியும் காஞ்சி மாநகர் பல திருக்கோயில்களைத் தன்னகத்தே கொண்டு அன்பர்களுக்கு அருள்பாலித்துவரும் சிறப்பினையுடையது, 'நகரேஷு' காஞ்சி எனப் புகழப்பெறுவது. காசிக்குக் காஞ்சி ஒரு 'ஞ்' (inch) அதிகம் எனச் சிலேடையாகத் தருமை ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம் கூறியது நினைவுக்கு வருகிறது. இத்தலத்தில் சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க ஆக்கப் பணிகள் மிகப்பல புரிந்து அருள் ஞானத் தவச்செங்கோல் ஓச்சி வரும் ''தொண்ட மண்டல ஆதீனம்'' ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் அவர்களின் திருவுளப் பாங்கின் வண்ணம் 1—5—1989 ல் விழாக்குழு அமைத்தும் திருக்கூட்டத்தார் கூட்டுறவுடனும் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளுக்கு 300-வது ஆண்டு நினைவு விழா பெரிய விழாவாகச் சிறந்த முறையில் கொண்டாடுவதறிந்து மகிழ்ந்து இன்புற்றுப் பாராட்டற் பாலது.

ஸ்ரீ குமரகுருபரர் முருகப்பெருமானின் திருவருள் பெற்றவர். மீனாட்சி அம்மைபால் தண்ணருளும் பரிசிலும் பெற்றுய்ந்தவர், சகலகலா வல்லியாம் சரஸ்வதியைப் போற்றிப் பாமாலை சாத்தி, இந்துஸ்தான் மொழி கற்று அரசனிடம் நன்மைகள் பல பெற்றுச் சைவமும் தமிழும் சிறந்தோங்க வாரணாசியில் திருமடாலயமும் கேதாரீஸ்வரர் திருக்கோயிலும் அமைத்தவர்கள். குமரகுருபரர் அருளிய பாட்டுக்கள் நல்ல சொல்லாட்சி, அரிய பொருளுடைமை, இலக்கண அமைதி, தத்துவம் போதிப்பது, அருளால் நிறைந்தது என்று பயின்று போற்றித் திருமுறையோடு சேர்த்துப் படிப்பது, ஒவ்வொரு தமிழரின் சித்தாந்த சைவரின் கடமை எனக்கொள்வது நன்மை தரும் அல்லவா?

கந்தர் கலிவெண்பா கந்தபுராணச் சுருக்கம், சித்தாந்த விளக்கம், என்பது யாவரும் அறிந்ததொன்று. ஸ்ரீ குமரகுருபரரின் பிரபந்தங்களைப் பரப்புவதும், படித்தின்புறுவதும் நம்மனோர் கடமையும் நன்றியும் ஆகும். தமிழ் பயிலும் மாணவர்களுக்குக் கந்தர் கலிவெண்பாவும், சகலகலாவல்லி மாலையும் வரம் தரும் அருள் நூல்கள் எனக்கூறுவது மரபு, ஐம்பதாண்டுகளுக்குமுன் தமிழ் பயின்ற மாணவர்கள் கந்தர் கலிவெண்பாவும், சகலகலாவல்லி மாலையையும் பயின்று நினைவாற்றலும் தேர்வில் நல்ல மதிப்பெண்ணும் பெற்றும் வெற்றி பெற்றிருக்கின்றார்கள் என்பதனுபவம்.

எனவே, 1—5—1989 ல் காஞ்சிபுரத்தில் நிகழும் ஸ்ரீ குமரகுருபரர் 300-வது ஆணடு நிறைவு விழாவும், அதனைச் சார்ந்த எல்லா நிகழ்ச்சிகளும் சிறப்புற நடைபெறுவதையும் விழாமலர் சைவத்தமிழ் ஒளியுடன் வெளிவருவதையும் விரும்புகிறோம். இதில் ஒல்லும் வகையெல்லாம் நன்றிப் பெருக்கோடும், கடமை உணர்ச்சியோடும் பங்கேற்கும் அன்பர்கள், திருக்கூட்டத்தார், எல்லோரும் பன்னலமும் பல்வளமும் பல்கிப் பெருகப்பெற்று நாள்கோள் நோய்நலிவின்றி செந்நெறி நின்று நீடுழி சிறக்க வாழ அருள் புரியுமாறு ஸ்ரீ ஞானப் பூங்கோதை ஸமேத ஸ்ரீ காளத்தீஸ்வரர் திருவடிகளைப் பிரார்த்திக்கிறோம்.

உ

சிவ சிவ

தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே.

தவத்திரு

குன்றக்குடி அடிகளார்

குன்றக்குடி-623 206
பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்
தொலைபேசி ; குன்றக்குடி 27

நாள் 7—4—89

வாழ்த்துரை

செந்தமிழ்க் குமரகுருபரர் விழாவைக் காஞ்சிபுரம் மக்கள் சிறப்பாகக் கொண்டாட இருப்பது மகிழ்வைத் தருகிறது.

திருவருள் துணையால் பழுத்த தமிழ்ப்புலமை பெற்றுப் பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனும் மக்கள் அடையத் தக்க வகையில் எண்ணற்ற பிரபந்தங்களை அருளியவர் அருளார்ந்த குமரகுருபரர். குமரகுருபர முனிவரைத் தமிழின் திருவுருவம் என்றே கூறலாம்.

செந்தமிழ்க் குமரகுருபரரின் விழா நினைவாகத் தமிழ்நாட்டில் தமிழர்களிடையில் தமிழுணர்வு கிளர்ந்தெழுதல் வேண்டும். ஆரியப், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளின் மேலாதிக்கத்தில் தமிழ் சிதைவுறுமல் காப்பது கடமை. தமிழர்கள் தமிழுணர்வும், தமிழ்நெறிச் சார்பும் பெறுவது குமரகுருபர முனிவரைப் போற்றும் நெறியாகும்.

வாழ்க, திருநெறிய தமிழ்!
வளர்க, தமிழ் மொழி!
வளர்க, குமரகுருபரர் மரபு!

அடிகளார்

தவத்திரு சுந்தர சுவாமிகள்,
ஆதீனகர்த்தர்,
கௌமார மடாலயம்
சின்னவேடம்பட்டி அஞ்சல்,
கோவை-641006.
☎ எண்: 850425, 850370

குமரகுருபர சுவாமிகள் 300வது ஆண்டு விழா

வாழ்த்து வெண்பாக்கள்

1. செந்தமிழ்த்தென் பாண்டித் திருநாட்டில் வந்துதித்து
செந்தில் குமரன் திருவருளால் — ஐந்து
வயதினிலே வாய்திறந்து மன்னுகவி வெண்பா
நயமாகத் தந்தார் நமக்கு.

2. ஆலவாய் மீனாட்சி யம்மைபிள் ளைத்தமிழும்
சீலக் கலம்பகமும் செப்பியே—ஞாலமிசைப்
புள்ளிருக்கு வேளூர்ப் புனிதமுத் துக்குமரன்
பிள்ளைத் தமிழ்தந்தார் பேறு.

3. திருக்கயி லாயத் திருமரபாய் வந்த
திருத்தருமை ஆதீனத் தின்கண்—மருவுகுரு
தேசிகரைச் சார்ந்து சிவதீக்கை பெற்றவர்மேல்
மாசிலா மாலையணிந் தார்.

4. குமர குருபரப்பேர் கொண்ட அடிகள்
அமரர்மெச்சும் பாடல்களே அன்றி—விமலனருள்
பெற்றுச்செய் அற்புதங்கள் பேசில் விரிவாகும்
கற்றவர்பாற் கேட்டல் கடன்.

5. கங்கைக் கரையில் கவின்காசி சென்றடைந்தே
அங்குக் கலம்பகநூல் ஆக்கியே—சிங்கமிசை
மன்னன் வியந்து வணங்கும் படிசெய்து
தன்னேர் மடமதமைத் தார்.

6. முந்நூறாம் ஆண்டுறலால் முன்னு திருப்பனந்தாள்
தன்னிலமை கரிசிமடத் தண்தலைவர் - முன்னும்வகை
நாடு முழுதும் நலமாய் விழாநடத்தக்
கூடுவகை சொன்னார் குறித்து.

7. அந்த முறையில் அவிர்சென்னை யூர்முதலாச்
சந்த விழாஎடுத்தார் தக்கோர்கள் - செந்தகையார்
காஞ்சியினில் ஆதீன கர்த்தர் எடுக்கும் விழா
ஆஞ்சிறப்பு மிக்கதுவா மால்.

8. ஆதீன கர்த்தாக்கள் ஆன்றமடத் தின்தலைவர்
வீதி உலாவாய் விளங்கிவர—நீதிமிகு
பல்சபையோர் பாடிவரப் பாங்குடனே செய்கின்றார்
நல்தொண்டை மண்டலாதீ னம்.

அன்புள்ள,

சுந்தர சுவாமிகள்

தொலைபேசி: 26

அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில்

திருப்போரூர்-603110

ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சிவஞான சுவாமிகள்

ஆதீன பரம்பரை தர்மகர்த்தர்.

உலகத்து உயிர்கள் தத்தம் வினைக்கு ஈடாகப் பல்வேறு உடலெடுக்கின்றன. அவற்றுள் தலைசிறந்த பிறவி மக்கட் பிறவியே. மக்களாய்ப் பிறத்தல் அரிது என்று ஆன்றோர் கூறுவர் அவருள்ளும் காணார், கேளார், நடவார், பேசார், ஆகிய குறைபாடின்றிப் பிறத்தல் அரிது காணாத நிலையும் கேளாத நிலையும் நடவா நிலையும் உடையோர்கள் மருத்துவர் வல்லுனர்களால் சீர் செய்யப்படுவர் ஆனால் பேசா நிலையை அவ்வாறு சீர் செய்ய இயலாது ஆனால் அந்நிலை இறைவன் திருவருளால்தான் இயலும். பேசாதவரை மூங்கையர் என்று கூறுகிறோம். பேச்சு மொழியில் ஊமையர் என்று கூறப்படுவர். 'ஊ' என்ற உயிர் எழுத்து ஆருவது எழுத்தாகும். 'மை' என்ற ஓர் எழுத்து ஒரு மொழிக்கு 'இருள்' என்று பொருள். ஆறெழுத்துண்மையை அறியாத இருள் படிந்த ஆன்மா, ஆறெழுத்துருவினனை அறுமுகச்சிவன் திருவருள் பெருக்கினாலே இருள் அகன்று ஒளி பெற்று உண்மை உணர்ந்து ஊமை நீங்கப் பெற்று, கலி தீர்ந்து நாநலம் பெற்று உலகத்திற்கு ஆறெழுத்துண்மையை யாவரும் அறியும் வண்ணம் அருட்பாசுரங்களாய் அருளிச் செய்தவர் நம் குமர குருபர சுவாமிகளேயாவர்.

ஞான பண்டிதனாகிய முருகப் பெருமான் தம் ஞான வேலாயுதத்தினால் நம் குமரகுருபர சுவாமிகளின் நாவில் தொட்டு எழுதினார்.

அகத்தியர், நக்கீரர், அருணகிரியார், சிதம்பர சுவாமிகள், நம் குமர குருபரர், பாம்பன் சுவாமிகள் ஆகிய அறுவர்க்கும் அருள்பாலித்து, அருளினால் பிராணவப் பொருளின் மெய்யுணர்வை உயிர்கட்கு உய்த்து உணர்த்திய நம் முருகப் பெருமான் மேற்கூறிய அறுவர்க்கும் அருளிய காரணத்தால் அவர்கள் பிரணவ பரம்பரையினர் என்று போற்றப் பெறுகிறார்கள். அவருள்ளும் நம் குமரகுருபரமுனிவருக்குத்தான் ஞான வேலாயுதத்தின் தொடு உணர்வு நாவிலே கைவரப் பெற்று ஞான வெள்ளம் உலகெங்கும் பெருகிப் பாய்ந்து இன்றைக்கு 300 ஆண்டுகளாகின்றன. சாதாரண பருக முந்நூறு ஆண்டுகள் பிடித்தது இப்போதாவது நம் போன்ற எளியோருக்குச் சுவாமிகளின் உயர்வும், அவரை நினைவு கூர்தல் வேண்டும் என்ற நல் நினைவும் கூட்டுவிக்கும்படி அருள்பாலித்த நம் காஞ்சித் தொண்டை மண்டல ஆதீனம் சீலத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகளின் அருள் ஆணை நம் பாரதப் பெருநாட்டின் அனைத்துத் திக்கிலும் நின்று நிலவ நம் அருமை அன்பர் அருணை வடிவேலனார் குரு ஆணையே தலையாய வரப் பிரசாதம் என்ற உண்மையை உணர்ந்து நம் குமர குருபர சுவாமிகட்கு ''நினைவு விழா'' எடுத்தமை கண்டு நம் ஆதி முதல்வர் அருள்திரு. சிதம்பர சுவாமிகளின் திருவருளைச் சிந்தித்து விழா என்றும் நின்று நிலைபெற ஆசி வழங்குகின்றோம். ஞாலம் எங்கும் அருள்திரு குமர குருபர சுவாமிகளின் அருள் வெள்ளம் வற்றாது பெருகட்டும்.

க. அன்பழகன், எம் ஏ.,
கல்வி அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை-600009

அன்புடையீர்,

வணக்கம்.

திருப்பனந்தாள் காசி மடாலயத்து ஆதி குமரகுருபரரின் 300-ஆம் ஆண்டு நினைவு போற்றிடும் விழா காஞ்சியில் சிறப்புடன் கொண்டாடப்படுவது அறிந்து மகிழ்கிறேன்.

வடபுலமும் வியந்து நிற்குமாறு கன்னித் தமிழ் அன்னையின் ஆற்றல் அவனியெல்லாம் பரவிடச் செய்த குமரகுருபரரின் திருப்பணி எந்நாளும் போற்றப்படுவதாகும்.

தங்களின் குமரகுருபரர் போற்றி விழா சிறப்புடன் நிகழவும், விழா மலர் அவரது பெருமைக்குச் சான்ருகத் திகழவும் வாழ்த்துக் கூறுகிறேன்.

அன்பன்,
க. அன்பழகன்
கல்வி அமைச்சர்.

பாலமுருகனடிமை
அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில்,
இரத்தினகிரி, கீழ்மின்னல் - 632 517.
வட ஆற்காடு மாவட்டம், தமிழ்நாடு.

அன்புடையீர்

நல்வாழ்த்துக்கள்

ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் 300-ஆவது ஆண்டு நினைவு விழா அழைப்பிதழ் பெற்றமைக்கு மகிழ்வு.

விழா இனிது நிறைவு பெற வாழ்த்திடும்.

பால முருகனடிமை

"அறமும் மெய்ம்மையும் வெல்லுதல் விழைவு"

பதிப்புரை

வேங்கடம், குமரி, தீம்புனல் பெளவம் எனும் நான்கு எல்லையுள் இருநிலம் புகழ இனிது விளங்கி நிற்கும் நம் தமிழகம், தொன்று தொட்டு வாழையடி வாழையாகத் தமிழ்ச் சான்றோர்களையும், திருவருட் செல்வர்களையும் ஈன்று புகழ் பெற்று விளங்குவது. அந் நிலைமையில், சென்ற 17-ஆம் நூற்றாண்டில். ஐந்தாவது ஆண்டிலே செந்தில் ஆண்டவன் முன்னின்று அருளச் செந்தமிழ்ப் பெரும்புலமையும், தருமையாதீனக் குருமூர்த்திகளது தண் -ணருள் நலனும் பெற்றுச் சைவமும், தமிழும் தழைத்தினிது ஓங்கச் செந்தமிழ்க் கவிமழை-யைப் பொழிந்து வாழ்ந்தவர் **குமரகுருபர அடிகள்.**

இவர், தாம் அவதரித்தருளிய தமிழ் நாட்டளவில் நில்லாது வடநாடு சென்று, **அக்** காலத்தில் அங்கிருந்து அரசு செலுத்தி வந்த **மொகலாய மன்னன் ஔரங்கசீபினைத்** தமது பெரும்புலமையாலும், பேரருட் செயல்களாலும் தம் வசப்படச் செய்து. அவன் மனம் உவந்து செய்த உதவிகளால் **காசியில், கங்கைக் கரையில், கேதார கட்டத்தில், 'திருக்குமாரசுவாமி மடம்'** என்னும் சீரிய திருமடம் ஒன்றை நிறுவி எழுந்தருளியிருந்து, வடஇந்திய மக்களும் செந்தமிழ்ச் சுவையில் திளைக்கவும், சிவனருள் வெள்ளத்தில் குளிக்கவும் அரும்பணிகள் ஆற்றினார். அக்காலங்களில் இவர்தம் இன்தமிழ்ப் பாமாலைக்கு மகிழ்ந்து **கலைமகள்** இவர் மொகலாய மன்னனோடும், மற்றும் அங்குள்ள மக்களோடும் நேரே உரையாடுதற்கு வசதியாக, உடனடியாக இந்துஸ்தானி மொழி கைவர அருள் புரிந்தமை குறிப்பிடத்தக்கதொன்று.

'அடிகள் வடமொழியில் வால்மீகி ராமாயணத்தையும் தமிழில் கம்பராமாயணத்தையும் அங்குள்ளார் சுவைத்துச் செவியும் சிந்தையும் களிக்க அருளுரைகள் பலவற்றை வழங்கினார் கள்' என்பதும், 'அந்த அருளுரைகளே **துளசிதாசர் இந்திமொழியில்** இராமாயணத்தைச் செய்யக் காரணமாயின' என்பதும் அங்குச் செவிவழியாகக் கேட்கப்பட்டுவரும் செய்திகள்.

அடிகள் தாம் அருளிச் செய்த **மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் திருமால் காப்பில் காஞ்சிச் சொன்ன வண்ணம் செய்த பெருமாள்** திருமழிசை ஆழ்வார் அருளிச் செய்த ஒரு தனிப்பாடலின்படி தமது பைந்நாகப் பாயைச் சுருட்டித் தோள்மேல் வைத்துக் கொண்டு **பைந்தமிழ்ப் பின்சென்ற** வரலாற்றைக் குறிப்பிட்டுப் பாடியிருப்பது, இவரது தமிழ் ஆர்வத்தினை என்றும் யாவர்க்கும் புலப்படுத்தி நிற்கின்றது.

அடிகள் வாழ்ந்த காலத்தை நோக்கும் போது இன்று ஏறக்குறைய முந்நூறு ஆண்டு கள் ஆவதால், தமிழ் அன்பர்களும், சைவப் பெரியார்களும் இவரது முந்நூறாவது ஆண்டு பற்றிய நினைவு விழாவைத் தமிழகத்தில் ஆங்காங்குக் கொண்டாடி வருகின்றனர். அம் முறையில், 'காசியை விட ஒர் இஞ்சு மிகுந்தது காஞ்சி' என்று நயம் படக் கூறப்படுவதாகிய காஞ்சிமாநகரில் இந்நினைவு விழாவை மிகச்சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்று தொண்டைமண்டல ஆதீன குருமகா சந்நிதானம் அவர்கள் திருவுளம் பற்றிக் காஞ்சியிலும்,

பிற இடங்களிலுமுள்ள அன்பர்களைக் கொண்டு அமைத்த விழாக் குழுவினர் இவ்விழாவில் மலர் ஒன்று வெளியிடக் கருதி, அதற்கென அமைக்கப் பெற்ற விழாமலர்க் குழுவினேம் மலர் நன்கு மலர்தற்கு வேண்டும் ஆசியுரைகளை வழங்க வேண்டித் திருமடங்களின் அதிபர்கட்கும், மகாசந்நிதானங்கட்கும் விண்ணப்பித்தும், மலருக்குரிய கட்டுரைகளைப் பெறவேண்டி அறிஞர் பலர்க்கும் பல தலைப்புக்களில் அன்பு கூர்ந்து கட்டுரை எழுதி அனுப்பும்படியும் வேண்டிக் கொண்டோம். எங்கள் வேண்டுகோளை ஏற்று அவர்கள் ஆசியுரைகளையும் கட்டுரைகளையும் எழுதி உரிய காலத்தில் அனுப்பி வைத்தார்கள். கட்டுரை அறிஞர்கள், பெரும்புலவர்களும், முனைவர்களும், பட்டதாரிகளும், பல்கலைக்கழகப் பலதுறைப் பேராசிரியர்களும் போன்றவரா வார்கள். அவர்கள் அனைவர்க்கும் எங்கள் உளமார்ந்த வணக்கத்தையும் நன்றியையும் தெரி வித்துக் கொள்கின்றோம்.

நல்லறிஞர் பலரும் குமரகுருபர அடிகள் அருட்பனுவல்களை மையமாகக் கொண்டு பல பொருள்கள் பற்றி வழங்கிய அறிவுக் கொடையின் தொகுதியாய் வெளிவருகின்ற இந்த விழா மலர் பலர்க்குப் பல வகையில் பயன் படுவதுடன் மாணவர்கட்குரிய பாட நூலாகவும் பயன் படுதற்கு உரியது.

இம்மலர் இத்துணைச் சிறப்புடன் வெளிவருவதற்குச் சிறப்பான ஒரு காரணம் வணிகக் குழுவினர், தனிப்பட்ட வணிகர்கள், மற்றும் பல நிறுவனத்தார்கள் தாங்கள் செய்ய விரும்பும் விளம்பரங்களை இம்மலருக்குக் கொடுத்து உதவியதாகும். அவர்கள் அனை வர்க்கும் எங்கள் மனமார்ந்த நன்றியுரியதாகின்றது.

இம்மலரை நல்ல வகையில் முயன்று அழகாக அச்சிட்டு உதவிய காஞ்சிபுரம் நல்விஸ்ரீ பிரிண்டர்ஸ் அச்சகத்தார்க்கு இம்மலர்க்குழு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது. இம்மலர் பலவகையிலும் இனிது மலரத் துணைபுரிந்த எல்லாம் வல்ல இறைவன் திருவருளை எண்ணி இறைஞ்சுகின்றோம். வாழ்க தமிழ்! வளர்க சைவம்!

தொண்டைமண்டல ஆதீனம்,
காஞ்சிபுரம்
1—5—1989.

இங்ஙனம்,
சி. அருணை வடிவேல் முதலியார்
தலைவர்,
மற்றும் மலர்க்குழுவினர்.

குருவே சிவம்

ஸ்ரீமத். குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்
ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.

உயிர்களை ஆட்கொள்வதற்காக இறைவன் பல வடிவங்கள் எடுத்து அருள் பாலிக்கிறான். 'பலவாய வேடங்கள் தானே யாகிப்பணிவார்க்கு அங்கங்கே பற்றானானை' என்று அப்பர் மொழிவார். நம்முடைய ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளும் "பருவ வடிவம் பலவாய்" என்று குறிப்பிடுகிறார். அவ்வாறு பல வடிவங்கள் கொண்டு இல்லாத ஒன்றையும் உற்பத்தி செய்யக் கூடிய திறமிக்கவன் இறைவன். "விச்சின்றி நாறு செய்வானும்" என்று அப்பர் கூறுவார். அதையே நம் குமர குருபர சுவாமிகள் "கருவின்றி நின்ற கருவாய்" என்றும் "ஞாலத்து வித்தின்றி வித்திய அனைத்துயிர்களும் தளிர்ப்ப" என்றும் இறைத்தத்துவத்தைக் கூறுகின்றார்.

இத்தகு அரிய பெரிய ஆற்றலுள்ள இறைவன் பன்றிக்குட்டிக்குத் தாய்ப்பன்றியாய் வந்து அருள்புரிந்தான். இவ்வாறாகச் சாதாரண உயிர்கள் முதல் மானிடர்கள் வரை அருளுகின்ற இறைவன் உயிர்களுக்கு மூன்று விதங்களில் அருள்புரிகின்றான். உயிர்களைக் கட்டியிருக்கின்ற மலங்கள் மூன்றாம். அவை ஆணவம், கன்மம், மாயை என்பனவாம். இவற்றுள் ஆணவம் என்னும் மூலமலம் ஒன்றால் கட்டப்பட்ட உயிரினர் விஞ்ஞான கலர் என்று கூறப்பெறுவர். ஆணவத்தோடு கன்மம் என்னும் மலத்தால் கட்டுண்ட உயிரினர் பிரளயாகலர் என்று கூறப்பெறுவர். முற்கூறப்பட்ட இரண்டுடன் மாயை என்னும் மலத்தால் கட்டப்பட்ட உயிரினர் சகலர் என்று கூறப்பெறுவர்.

இவ்வாறமைந்த உயிர்களுள் ஒருமலத்தை உடையவர்களுக்கு இறைவன் உள்நின்று உணர்த்துவான். இருமலத்தார்க்கு ரிஷபாருடனாக நான்கு கரங்களுடன் உமாமகேஸ்வரராக முன்நின்று அருளுவான். சகலர்க்குக் குருவாக வடிவம் கொண்டு படர்க்கையில் நின்று அருளுவான். இக்கருத்தை ஸ்ரீ குமர குருபர சுவாமிகள்.

வெள்ளிடைத் தோன்றா துள்ளத் துணர்த்தவும்
சேய்நிலை நின்று திருக்கண் சாத்தவும்
சாயா மும்மலச் சகலரே முய்ய
எம்முருக் கொண்டு ஏமமொடு பயின்றும்
மும்மலக் கிழங்கை முதலொடு மகழ்ந்தும்
சிற்பர முணர்த்துஞ் சற்குரு ராய

என்று அருளியுள்ளார்கள். இப்படியாக இறைவன் ஆன்மாக்களின் பக்குவ நிலைகளுக்குத் தகுந்தாற்போல் அருளுகின்றான். அந்த வகையில் நம்முடைய ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளுக்கு இறைவனே குருவாக வந்து அருள் பாலித்தான்.

சகலர் என்பார் மும்மலமுடையார் என முன்னர்க் கூறப்பெற்றது. ஸ்ரீ சுவாமிகள் 'சகலரேம்' எனத் தம்மையும் மும்மல முடையாராக அறிவித்தருளியுள்ளார்கள். செந்திற்கந்தனின் திருவடிபெற்ற பெருமகனார் அப்பெருமான் காட்டக்குருவினைப் பெற்ற பெருமகனார் சகலராதல் ஒவ்வாது. தன்னடக்கத்தாலும், எத்தகு நிலையினரும் குருவின் திருமுன்னர் இத்தகு பணிவு நிலை கோடல்

வேண்டும் என மன்பதைகட்கு அறிவித்தற் பொருட்டும் ஸ்ரீ சுவாமிகள் தம்மையும் சகல ராகக் கூறிக்கொண்டனர் எனல் பொருந்தும்.

உம்மை ஆண்டு கொண்ட இறைவன் குருவா? அவன் எந்த வடிவில் வந்தான்? என்ற ஒருகேள்வி எழுந்தது. அதற்கு ஸ்ரீ குமர குருபரர் கூறுகின்றார்.

"தலையிலே கலையாகிய நிலவைத் தாங்கவில்லை. அறுபத்து நான்கு கலைகள் இருக்கின்றனவே அதைத் தாங்கி வந்தார்; மானைத் தனது இடக்கையில் தாங்காது மானிட வடிவம் தாங்கி வந்தார்; எலும்பை மாலையாக அணியாமல் என்னுடைய பணியையே மாலையாக அணிந் தார்; பூதங்களைத் தன்னுடன் சூழ்ந்து இருக்க வைத்துக் கொள்ளாமல், பாராகிய பூமியில் வந்து அருள் பாலிக்கின்றார் என்று தம்முடைய குருநாதராகிய ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் இறைவனே என்பதை நயம்பட விளக்குகிறார்.

"தலைப்படு கலைமதி தாங்கா தாங்கத்
தலைப்படு கலைமதி தாங்கி நிலைப்படு
மானிடனாய வடிவுகொண் டருளாது
மானிட னாய வடிவுகொண் டருளி
எற்பணி பூணா தெற்பணி பூண்டு
பாரிடஞ் சூழாது பாரிடஞ் சூழ்தர
ஆரு ரமர்ந்த ஞான சம்பந்த" என்றும்,
"அருட்தாழ்சடிலத் தானவனாகம் பெறா
மாசிலாமணி" என்றும் கூறுவார்.

மாணிக்கவாசக சுவாமிகளும்,

கருணையின் பெருமை கண்டேன் காண்க;
புவனியில் சேவடி தீண்டினன் காண்க;

என்பார். அப்படிப்பட்ட இறைவனுக்குக் கழுத்தில் கறையிருக்குமே? ஏன் இல்லை இந்தக் குருமணிக்கு; என ஒருகேள்வியைக் கேட்டான் ஒருவன், அதற்கு நம் ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் கூறுகிறார். இறைவன் ஆலாலம் உண்ட காரணத்தினால் அவன் கழுத்து கருப்பு நிறமாக இருந்தது. ஆனால் இந்தக் குருமணியின் நாமம் என்ன தெரியுமா? இவர்களின் திருநாமம் ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் என்பதாகும். எனவே கழுத்தில் கருப்பு நிறம் இருந்திட்டால் அது மாசு உள்ள -தாகிவிடும். எனவேதான் இவர்தம் திருநாமத் திற்கு ஏற்றவாறு கழுத்தில் களங்கமின்றி எழுந்தருளி இருக்கின்றார் என்பார்.

"காசுலா மலினங் கரந்தகா ரணத்தால்
மாசிலா மணியென வண்பெயர் நிறீ'இ"

எனவே, இறைவனே குருவாய் எழுந்தருளி உபதேசம் செய்கின்றார் என்கிறீர்கள். ஆனால் அவர் சொக்கநாத பூசைசெய்கின்றார். இறைவனாகிய அவரே அவரைப் பூசித்துக் கொள்வதா? என்று மற்றொருவர் கேட்டார்.

அதற்கு ஸ்ரீ சுவாமிகள் கூறுகின்றார்:- முன்பு திருவிடைமருதூரில், இறைவனை எப்படிப் பூசிக்க வேண்டும் என்று தெரியாமல் அம்பாள் தவமிருந்தாள். அவளின் தவத்திற்கு இளகிய இறைவன் தானே தன்னைப் பூசித்துக் காட்ட, அவ்வாறே அம்பாள் பூசித்ததாக வரலாறு. அதுபோல அடியவர் திருக்குழாங் கள் எப்படி இறைவனைப் பூசிக்க வேண்டு மென்று உணர்த்த ஸ்ரீ மாசிலாமணி தேசிக ராகிய குருமணிகள் சொக்கநாதப் பெருமானைப் பூசனை செய்கின்றார். அந் நிலையில் ஆவாகனம் முதலிய பதினாறு வகை உபசாரங்களுடன் பூசிக்கின்றார். என்பதைச்

சூழ்போய் நிவந்த
வாழ்கட லுலகத்
தின்னருட் டிறத்தா
லிடைமரு தமர்ந்த
பொன்னவிர் கடுக்கைப்
புரிசடைப் புங்கவன்
அமையாக் காத
லிமைய வல்லிக்கு
வழிபடன் முறைமை
விழுமிதி னுணர்த்த
தானே தன்னைப்
பூசனை புரிந்தென
அருத்தியோ டெம்மைநம்
முருத்திர கணங்கள்

தெரித்து மற் றிவ்வா
நருச்சனை புரிதிரேன்
றங்கையற் கண்ணி
பங்கில் வீற்றிருந்த
செக்கர் வார்சடைச்
சொக்க நாயகனை
ஈரெண் டிறத்துப
சாரமும் வாய்ப்பப்
பூசனை புரியும்
தேசிக ராய

என்ற பகுதியில் குறிப்பிடுகின்றார்.

எனவே இறைவனே தனக்குக் குருநாதராக வந்தார். அக்குருநாதருடைய தனிப் பெருந்தன்மைகள் யாவை? அவருக்குள்ள புகழ்கள் என்ன? அவர்களின் தனிச்சிறப்பு என்ன? எவ்வாறெல்லாம் தனக்கு அருள் பாலித்தார்; அக்குருநாதரிடம் தாம் எவ்வாறெல்லாம் வரங்கள் கேட்டோம் என்பதையும், திருமடங்களில் அடியார் குழாங்கள், பக்தர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறைகள், பேசுகின்ற முறைகள் போன்ற சம்பிரதாயங்களையும் புகுத்தித் தான் தன் குருநாதர் மீது பாடிய நூலே பண்டார மும்மணிக் கோவையாகும். குருநாதரின் சிறப்பினைக்,

"குருவே சிவமெனக் கூறினன் நந்தி" எனத் திருமூலரும்,

"குருவாய் வருவாய் அருள்வாய் குகனே" என அருணகிரியாரும்,

"குருவடி வாகிக் குவலயந் தன்னில்" என ஒளவையாரும்,

அவனே பரமும் அவனே குருவும்
அவனே அகில மனைத்தும்—
அவனேதாம்
ஆனவரே சொன்னல் அவனே குரு
எனக்கு
நானவனா நிற்பதெந்த நாள்—எனவும்

ஞானநெறிக் கேற்றகுரு நண்ணரிய
சித்திமுத்தி
தானம் தருமம் தழைத்தகுரு—
மானமொடு
தாயெனவும் வந்தென்னைத் தந்தகுரு
என்சிந்தை
கோயிலென வாழும் குரு

எனத் தாயுமானவரும், குறிக்கின்றனர். நம்முடைய ஸ்ரீ குருஞான சம்பந்தரும்,

அரியயற்கு முன்னாள் அடிமுடியுங்
காணாப்
பெரியவனே வந்து பிறந்து—துரியம்
பெருக்குகின்றான் ஞானப் பிரகாசனாகி
இருக்கின்றா னாரூரி லின்று

என்றும்,

சித்தி தருநாதன் தென்கமலை
வாழ்நாதன்
பத்தி தருநாதன் பரநாதன்—முத்திப்
பெருநாதன் ஞானப் பிரகாசன்
உண்மை
தருநாதன் நம்குருநாதன்.

என்றும் விளக்குகிறார்கள். என்றாலும் குருநாதனுக்கு என்று தனிநூல் எழுதிய பெருமை நம்முடைய ஸ்ரீ குமரகுருபரர்க்கே உண்டு.

இத்தகு குருபக்தி நிறைந்த ஸ்ரீ குமரகுருபரரை ஏன் காசிக்குப் போய்வந்த பின்னரே காஷாயம் தருகின்றோம் என்று குருநாதர் கூறினார் என்று பலரும் கேட்கலாம்.

முதலில் ஸ்ரீ சுவாமிகள் தருமைத் திருமடத்திற்குச் செல்லும்போது திருமலைநாயக்க மன்னனும், பிரபுக்களும் காணிக்கையாக அளித்த பொருள்களுடன் சென்றார் அல்லவா? அந்நிகழ்ச்சி ஆடம்பரம் உடையதாக உலகவர் கண்ணுக்குப்படும். அதனைத் திருவுளம்பற்றி உலக வழக்குக்காக, காசிக்குச் சென்றுவர உத்திரவாகியது எனலாம். ஸ்ரீ குமரகுருபரர் தன் நிலையை எடுத்துக் கூற, அப்படியாயின் தில்லைக்குச் சென்று வரும்படி உத்திரவாகியது. அதன்படியே ஸ்ரீ குமரகுருபரரும் தில்லை யாத்திரையை மேற்கொண்டார் அந்த யாத்திரையை முடித்து வந்த பிறகு முன்னர் உலகவர் கண்ணுக்குப்பட்ட அந்நிலைமை இன்மையை அறிவிக்கும் குறிப்புடனேயே; பேரிற்குறுகினேன்' எனப் பண்டார

மும்மணிக்கோவையுள் பாடினர் எனவும் பொருந்தும். திருவிளையாடல் புராணத்தில் இந்திரன் பழி தீர்த்த படலத்தில் பரஞ்சோதி முனிவர்,

ஈசனுக் கிழைத்த குற்றம்
தேசிகன் எண்ணித் தீர்க்கும்
தேசிகற் கிழைத்த குற்றம்
குறவனே தீர்ப்ப தன்றிப்
பேசுவ தெவனே? தன்பால்
பிழைத்தகா ரணத்தால்வந்த
வாசவன் பழியைத் தீர்ப்பான்
குரவனே வழியுங்கூற;

என்று உணர்த்தியதைப் போன்ற நிகழ்ச்சியைக் காட்டவே குருநாதர் அப்படி உத்திர விட்டார்.

எனவே குருசீடன் பாவனைகள் எப்படி இருக்கும் என்பதையும் இறைவன் தான் குருநாதனாக வடிவம் கொண்டு வருகின்றான் என்ற உறுதியையும் தருபவர் நம்முடைய ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் என உணரலாம்.

எனவே அப்பெருமகனாரின் அரும் பெரும் சமயத்தொண்டு, சமுதாயத் தொண்டு, இலக்கியத் தொண்டுகளைப் பாராட்டுமுகமாக அவர்களின் 300-வது ஆண்டு விழாவைக் காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசன்னிதானமும், ஆன்றோரும் சான்றோரும், சமயச் சங்கங்களும் சேர்ந்து நடத்துவது கண்டு மகிழ்ந்து எல்லோர்க்கும் வழிகாட்டியாக இந்நிகழ்ச்சி அமைய வேண்டு மென்பதே பிரார்த்தனை.

PHONE { SHOP : 20345
RESI : 21945

QUALITY BREAD
BISCUITS & CAKES
MANUFACTURERS,

A. S. A Bakery

88, Long Bazaar,
VELLORE-632004. N.A.DT.

உடையாரும் உடையானும்

மகாவித்துவான் சி. **அருணைவடிவேல் முதலியார்,**
சிறப்புநிலைப் பேராசிரியர்,
தத்துவமையம்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
காஞ்சிபுரம்-631 503.

ஒரு பொருளை, அல்லது பல பொருள் களைத் தமக்கு உரித்தாக, அல்லது உரியன வாக உடையவர்கள், **'உடையவர்'** என்றும், **'உடையார்'** என்றும் சொல்லப்படுவர். இவர் களை, **'சொந்தக்காரர்'** என்றல் இக்கால வழக்கு.

ஒருவருக்கு உரித்தாய பொருள் **'அவரது உடைமை'** எனப்படும். இதனை, **'சொத்து'**, அல்லது **'ஆஸ்தி'** என்பர் இக் காலத்தார்.

ஒருவருக்கு உரியவாய் உள்ள பொருள் இரண்டு வகைப்படும். அவை, **'உடைமை'** **'அடிமை'** என்பன. **'உடைமை'** என்பது ஒரு -வருடைய பொருள்களில் சிறப்பாக உயிரில் பொருள்களையே குறிக்கும். அவை நிலம், கைப்பொருள், ஆடை, அணிகலம், மாளிகை முதலியன. இனி மனைவி, மக்கள், தம்பிமார், தங்கைமார்-என்னும் கிளைஞரும், ஆடு, மாடு முதலியனவும் உயிருடைப் பொருள்களாயினும் உடையவனுக்குக் கீழ்ப்படிதலால் 'உடைமை' என்றே கொள்ளப்படுதல் மரபு. இருமுதுகுர வரும், தமையன்மார், தமக்கைமார் ஆகி -யோர் ஒருவனுக்குக் கீழ்ப்படியாதவர் ஆகை -யால், அவர்கள் ஒருவனுக்கு 'உடைமை' எனப்படார்; இவன் அவர்கட்கு உடைமை -யாவான்.

இனிப் பணியாட்களும் உடைமையுள் அடங்குவராயினும், சிறப்பாக, **'அடிமைகள்'** என்று வேறுபிரித்துக் கூறப்படுவர்.

அடிமைகள் முற்காலத்தில் இருந்தனர்; இக்காலத்தில் இல்லை. 'அந்தணர் பிறர்க்கு அடிமையாதல் இல்லை' என அக்காலத்தில் இருந்தது போல இக்காலத்தில், 'மனிதன் மனிதனுக்கு அடிமையாதல் இல்லை' என்பது முறைமையாயிற்று. அதனால் இக்கால மக்கள் அடிமைகளைப் பற்றி நன்கு அறியார். அக்காலத்தில் அடிமைகளும் ஆடு, மாடு, நிலம், மனை முதலியவற்றைப்போல ஒற்றி வைக்கப்படவும், விற்கப்படவும் உரியராய் இருந்தனர். அவர்களை உடையவன் ஒற்றி வைக்கும் போதோ, விற்கும் போதோ அவை பற்றி யாதும் எதிர்பேச அடிமைகட்கு உரிமை -யில்லை. சிவபெருமான் அந்தண வடிவத்தில் வந்து **சுந்தரரை**, 'உன் பாட்டன் காலம் முதல் உன் குடிவழியினர் எனக்கு அடிமை' எனக் கூறி வழக்கிட்டதும், 'அஃது இல்லை' எனச் சுந்தரர் மறுத்து எதிர் வழக்குப் பேசியதும் இத்தகைய அடிமை நிலையைப்பற்றித்தான்.

'சமையத்தில் மனைவி மக்களும் விற்கப்படுவர்' என்பதை **அரிச்சந்திரன் கதையால்'** அறியலாம். **தருமன்** தன் தம்பி மாரையும் மனைவியையும் பணையமாக வைத்துச் சூதாடியதும் இந்தவகையில்தான்.

முதலில் எதிர் வழக்குப் பேசிய சுந்தரர் பின்பு உண்மையை அறிந்து,

''அத்தா உனக்கு ஆளாய், இனி,
அல்லேன் எனலாமே'' 1

என மனம் உருகிப்பாடியதை அறிகின்றோம். இன்னும் அவர்,

''மீளா அடிமை உமக்கே ஆளாய்'' 2

எனவும்,

''விற்றுக் கொள்வீர், ஒற்றியல்லேன்'' 2

எனவும் தொடர்ந்து அருளிச் செய்தவை களையும் பார்க்கின்றோம்.

இவ்வாறான **சுந்தரர் திருமொழிகளால்** இன்று நாம் அறிவது என்ன? இன்று மனிதனுக்கு மனிதன் அடிமையாகும் முறை ஒழிக்கப்பட்டுவிட்டது என்றாலும், 'அனைத்துயிர்களும் இறைவனுக்கு என்றும் அடிமைகள்' என்பதே. இந்த உண்மையைச் **சுதந்திரக் கவி சுப்பிரமணிய பாரதியாரும்**,

''பூமியில் எவர்க்கும் இனி அடிமை
செய்யோம்;
பரி-பூரணனுக்கே அடிமை செய்து
வாழ்வோம்''

எனப் பாடினார்.

'**பதி**, பசு, பாசம்' —என்னும் முப்பொருள்களுள் பதியாகிய இறைவன் உடையான். ஏனைப் பசுக்களாகிய உயிர்கள் அவனுக்கு அடிமைகள்; பாசங்களாகிய உலகங்கள் அவனுக்கு உடைமைகள். அவன் யாருக்கும் அடிமையல்லன். இதனை **அப்பர் பெருமான்**

''தாம் ஆர்க்கும் குடி அல்லாத்
தன்மையான சங்கரன், நற் சங்கவெண்
குழைஓர் காதிற்
கோமாற்கே **நாம் என்றும் மீளா ஆளாய்க்**
கொய்ம்மலர்ச் சேவடி யிணையே
குறுகினோமே'' 3

என அருளிச் செய்தார். **இவ்வுண்மையை உணர்ந்தோரே மெய்யுணர்ந்தோர் ஆவர்.** இவ்வாறன்றி, 'யாமே பெரியோம், எம்மையுடையார் எவரும் இலர்' என உணர்தல் மயக்க உணர்வேயாம். அஃது எங்ஙனம் எனின், பித்தளையை ஒருவன் 'பொன்' என்று மயங்கினானாயினும், உரைகல்லில் உரைத்துப் பார்க்கும்பொழுது 'அது பொன் அன்று' என்பது விளங்கிவிடும். அதுபோல எவன் ஒருவனும், 'யானே முதல்வன்; எல்லாம் என்னால் இயலும்' என மயங்குவானாயினும், அநுபவம் வேறு வகையாக நிகழும் பொழுது அவன் அம்மயக்கத்தினின்றும் நீங்குவான். 'உண்மையில் அநுபவம் எவ்வாறு உளது' என்பதைக் இங்குக்காணும் ஔவையார் பாடல் நன்கு விளக்குகின்றது.

ஒன்றை நினைக்கின் அதுஒழிந்திட்
டொன்றாகும்,
அன்றி அதுவரினும் வந்தெய்தும்; —
ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும்
நிற்கும்;
எனைஆளும் ஈசன் செயல். 4

இம்மெய்யுணர்வுடையோரையே **மெய்கண்டார்**,

''தம்மை உணர்ந்து, தமைஉடைய
தன்னுணர்வார்'' 5

என்றார்.

உலகத் தலைவர்கள்போல இறைவன் தன் அடியார்களை அவர்களது நலத்தைச் சிறிதும் நோக்காது தம் நலத்திற்காகவே பயன்படுத்திக் கொள்கின்றவன் அல்லன், மாறாக, அவர்கள் நலத்திற்காகவே தான் செயற்படுபவன். காரணம், உலகத் தலைவர்களுக்குக் **குறைகள்**, அவையாவன **தேவைகள்** பல உள்ளன. அதனால் அத்தேவைகளை நிரப்பிக் கொள்வதிலே அவர்கள் நாட்டமாய் இருக்கின்றனர். இறைவன் குறை-விலா நிறைவு. அதனால் அவனுக்கு, 'தேவை' என்று எதுவுமே யில்லை. அதனால் தனக்காகப் பிறரை அவன் வேண்டத் தேவையில்லை.

தேவை எதுவும் இல்லாமையால் தன் அடியவர்கள் நலத்தையே தன் நலமாக அவன் கருதுகின்றான். அதனால் அவர்களை மேலும் மேலும் உயர்த்தி, முடிவில் தானா-கவே ஆக்கிக்கொள்கின்றான்.

''சேர்வார் தாமே தானாகச்
செயும் அவன்'' 6

என்பது ஞானசம்பந்தர் வாக்கு இறைவனை முழுமையாக அடைந்தோர் இறைவனே ஆகின்றனர். அதனால், 'அடியார்களை உடையான் இறைவன்' என்றால், அனைவரையும் உடையார் அடியார்களேயாவர். இது பற்றியே **மெய்கண்டார்**,

''தம்மை உணர்ந்து தமைஉடைய தன்
உணர்வார்
எம்மை உடைமை'' 5

என்றார். இவர்களைக் குமர குருபரர் ''**எம் உடையார்**'' எனக் குறிப்பிட்டு, அவர்களது பெருமையைத் தமது **நீதிநெறி விளக்கத்தில்** கீழ்க்காணுமாறு விளக்கினார் :-

> எவர்எவர் எத்திறத்தர் அத்திறத்த ராய்நின்று
> அவரவர்க்கு ஆவன கூறி —எவர் எவர்க்கும்
> **உப்பாலாய் நிற்ப; மற்று எம் உடையார், தம் உடையான்**
> **எப்பாலும் நிற்ப தென.** (7)

எம் உடையார் — எம்மை ஆளாக உடையவர்; இறையடியார்கள். தம் உடையான் — தம்மை(அவர்களை) ஆளாக உடையவன்; இறைவன். அவன் எப்படி எப்பாலும்(எங்கும் நிறைந்து நிற்கின்றானோ அப்படியே இவர்களும் எங்கும் நிறைந்து விளங்குவர். **எவர் எவர்க்கும உப்பாலாய் உலகியலில் எத்துணைப் பெரியவர்களாய் இருப்பினும் அவர் அனை -வர்க்கும் மேலாகியிருப்பர்.** இதனால் இவர்களை '**ஆளுடையார்கள்**' என்பர். இவர்கள் பலர் ஆகலின் 'எம் உடையார்' எனப் பன்மையாகவும், அவர்களை உடைய இறைவன் ஒருவனே யாகலின் அவனை 'தம் உடையான்' என ஒருமையாகவும் அடிகள் கூறினார். **மெய்கண்ட தேவரும்**

> "தம்மை உணர்ந்து, தமையுடைய தன் உணர்வார்'' (5)

எனப் பன்மையாகவும், ஒருமையாகவும் கூறினமை உற்று நோக்கத் தக்கது.

ஆகவே, 'உடையார், உடையான்'' என அடிகள் அருளிச் செய்த அருமை ஊன்றி உணர்ந்து பயன் பெறத் தக்கதாம். மற்றும் 'நீதிநெறி விளக்க' நூலின் இறுதியில் அடிகள் **மெய்யியல் பற்றி** அருளிச் செய்துள்ள வெண்பாக்கள் ஆழ்ந்து, அகன்று, நுணுகி நிற்கும் பொருள்களை உடையவாதலும் நோக்குதற்குரியன.

அடிக்குறிப்பு :-

1. திருமுறை — 7-1-1.
2. திருமுறை — 95-1, 2.
3. திருமுறை — 6-98-1
4. நல்வழி —
5. சிவஞானபோதம்-அவையடக்கம்
6. திருமுறை — 1.126.7.
7. நீதிநெறி விளக்கம் — 97

With best Compliments of :

Phone : 24538

THANGAM BRICK WORKS

Chamber Brick Manufacturers,

★ ★ ★ ★

44/15, SAMBANDA MOORTHY STREET,

MADURAI-1.

குமரகுருபரரின் அருட்பனுவல்
அடியவர் வழிபாடு

'செந்தமிழ் வாரிதி'
டாக்டர். இரா. செல்வக்கணபதி, எம் ஏ., பி. எட்., பிஎச்.டி.,
தமிழ்ப் பேராசிரியர்,
தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரி,
தருமபுரம்.

முன்னுரை :

சைவத்தில் முத்திற வழிபாடுகள் சிறப்பாகப் பேசப் பெறுகின்றன. அவை முறையே 1. குரு வழிபாடு, 2, இலிங்க வழிபாடு, 3, சங்கம (அடியவர்) வழிபாடு என்பன. சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணத்தில் இம்முத்திற வழிபாட்டையும் சிறப்பாகக் காண இயலும். எல்லாம் வல்ல சிவபரம்பொருளைக் குருநாதர் வடிவில் இனங்கண்டு போற்றுதலும், சிவலிங்கத் திருமேனியில் கண்டு வழிபடுதலும், சிவனடியார் திருவுருவில் போற்றித் துதித்தலும் வீடு பேற்றிற்குரிய வாயில்களாகச் சேக்கிழார் இனங்காட்டுகின்றார். இம்முத்திற வழிபாடுகளையும் சமயம் வாய்க்கும் போதெல்லாம் வற்புறுத்திக்கூறுவர் அருட்கவிஞராகிய குமரகுருபர சுவாமிகள். குமரகுருபர சுவாமிகளின் அருட்பனுவல்களுள் சுட்டப் பெறும் அடியவர் வழிபாட்டுத் திறங்களை இச்சிறு கட்டுரை கோடிட்டுக் காட்ட முயல்கின்றது.

அடியவர் இலக்கணம் :

சைவ சமய அடியவர்களை 'நடமாடுங்கோயில் நம்பர்' என்பர் திருமூலர். 'கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்' எனக் குறித்து இலக்கணம் விரிப்பர் சேக்கிழார். குமரகுருபர சுவாமிகள் 'தம்மை விடுத்து ஆயும் பழவடியார்' எனப் பசு போதம் நீங்கப் பெற்ற சமயச் சான்றோர்களை இனங் காட்டுவார்.

''......ஒழுக்கமுடன்
இம்மைப் பிறப்பில் இருவா தனை
அகற்றி
மும்மைப் பெறாமலங்கள் மோசித்துத்—
தம்மைவிடுத்(து)
ஆயும் பழைய அடியார்''

என அடியவர் இலக்கணங்களைக் கந்தர் கலிவெண்பாவின் நிறைவில் சுவாமிகள் விரித்துரைப்பர். சமூகம் போற்றும் நல்லொழுக்கங்களில் தலை நிற்றல், அகப்புறப் பற்றுக்களிலிருந்து விடுபடுதல், ஆணவம் முதலாய மும்மலங்களின் கட்டுக்களை அறுத்தெறிதல், பசு போதம் நீங்கப் பெறுதல், இடையறாது சிவப்பேற்றிற்குரிய நெறிமுறைகளை ஆராய்ந்து தலைநிற்றல் முதலியன அடியவர் இலக்கணங்களாக அவர்களால் சுட்டப்பெறுகின்றன. இத்தகு பழவடியாருடன் தம்மைக் கூட்டுவிக்கும் அருளிப்பாட்டைச் செந்திலாண்டவனிடம் சுவாமிகள் யாசிக்கிறுர்கள்.

சிற்றடியவர் குற்றேவல் வேண்டுதல்:

'அடியார்க்கும் அடியேன்' எனத் தம்மைக் குறிப்பர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். மதுரைச் சொக்கலிங்கப் பெருமானைப் பலபட வாழ்த்தி அப்பெருமானின் 'பொன்மலர் பொதுளிய சின்மலர் பழிச்சி' ஒரு வேண்டுகோளை முன் வைக்கிறார் குமரகுருபர சுவாமிகள். 'செம்பொருட் செல்வ' நின் சீரடிகளை வணங்கி வழிபட்ட என் அடிமைத் திறத்திற்குச் சிறந்த பொருளேதும் கிடைக்காது போகுமாயினும் போகட்டும்! நின்னையன்றி வேறு ஒரு கடவுளை வழிபடுவதனால் பெரும்பயனும், தலைமைப் பேறும் அமைவதாயினும் அமையட்டும்! அவற்றை யான் விழையேன். சொக்கேசா! உன்னை வழிபடும் பேற்றிற்கு யான் நின்பால் வேண்டுவது ஒன்றே. நின் சிற்றடியவர்களை அணுகி, அவர் இடும் குற்றேவல்களைத் தலைமேல் கொண்டு, 'ஆ' இவ்வரிய பேறு கிடைத்ததே என்று பெருமிதம் கொள்ளும் திறம் ஒன்றை மட்டுமே நின்பால் வேண்டி நிற்கின்றேன்' என அருளிச் செய்கின்றார்

'...நின்
பொன்மலர் பொதுளிய சின்மலர் பழிச்சுதும்'

என்று தொடங்கி,

'...நின்
சிற்றடியவர்க்கே குற்றேவல் தலைக்
கொண்டு
அம்மா! கிடைத்தவா வென்று
செம்மாப் புறூஉம் திறம்பெறற் பொருட்டே'

என்று நிறைவிக்கும் குமரகுருபர சுவாமிகளின் மதுரைக் கலம்பகத் தொடர்களில் 'அடியவர் வழிபாடு' சிறந்து தோன்றுதல் புலனாகின்றது.

அடியவர் நிலை வேறுபாடுகள்

கந்தர் கலிவெண்பாவில் அடியவர் இலக்கணம் கூறி அவர்களைப் 'பழவடியார்' எனக்குறித்த சுவாமிகள், மதுரைக் கலம்பகத்தில் 'சிற்றடியவர்' எனக் குறித்துப் போந்தார்கள். பண்டார மும்மணிக் கோவையில் 'மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்' என்று சேக்கிழார் நெறி போற்றி, அடியவர் வழிபாட்டிற்குப் பிறிதுமோர் தடம் வகுத்தருளுகின்றார்கள். 'பத்துடையீர் ஈசன் பழ அடியீர்' என அடியவர்களின் அகப்புற இலக்கணங்களைத் திருவெம்பாவையில் சுட்டினர் மணிவாசகர். குமரகுருபர சுவாமிகள் தம்ஞானசிரியர் மாசிலாமணி தேசிகரை முன்னிலைப் படுத்தும் புதிய அடியவர் வழிபாட்டு நெறி ஒன்றை வேண்டுகின்றார். 'பிறவா நன்னெறி பெற' வேண்டி, 'ஒரு வேளை என் தகுதிக்குறைபாடுகளால் அதனை வழங்க இயலாது போனால், வேறு ஒன்றை எனக்கு வழங்கியருள்க' எனப் பிரார்த்திக்கின்றார். இந்திரன் பிரமன், திருமால் பதங்களை வேண்டேன்; ஏன் என்றால்,

'...அவைதாம்
ஆரா இன்பமென் றரும்பெயர் பெறினும்
வாரா வல்வினை வருவிக் கும்மே!

எனவே, வல்வினைக்கு ஆட்படாத பிறிதோர் பேறு எனக்கு வழங்குதல் வேண்டும்' என்கின்றார்.

புதுத்தடம் காட்டுதல்:

'ஒழுக்கமுடன்' என்று அடியவர் இலக்கணம் பேசிய குமரகுருபர சுவாமிகள் பண்டார மும்மணிக் கோவையில், அடியவர் என்பார்.

'விழுத்தகு கல்வியும் ஒழுக்கமும் இலராய்ப் பழிப்புள ராயினும்'

அடியவர் என்ற மதிப்பீட்டில் குறைவு பட்டார் எனப் புதுத்தடம் காட்டுகின்றார். அவர் தம்மை அடியவர் என யாம் போற்ற ஒரு தகுதி மட்டுமே வேண்டத் தக்கது

'' வழுத்தும் நின்
பொன்னடித் துணைசேர் நின்னடித்
தொண்டர்'

சிவபரம்பொருளின் வடிவாகவே திகழும் குருநாதராகிய தங்கள் திருவடிகளின் பால் அன்பு கொண்டு வாழ்த்தும் தகுதி ஒன்றே அடியவர் என்பதற்குப் போது மானது எனச் சுவாமிகள் குறிக்கும் இலக்கணம், சைவம் பத்திமை ஒன்றை மட்டுமே பெரிதாகப் போற்றும் தன்மை யது என்பதை மெய்ப்பிக்கிறது.

ஞமலிப் பிறப்பு வேண்டுதல் :

அடியவர் வழிபாட்டில் குமரகுரு பரசுவாமிகள்ஞானாசிரியரிடம்வைக்கும் விண்ணப்பம் கற்பாரை நெகிழ வைக் கிறது தருமையம் பதிவாழ் சற்குரு ராய'! தேவரீரின் திருவடிகள் போற்றி வாழும் தொண்டர்கள் உணவு கொண்டு தெருவில் வீசி எறிந்த எச்சில் இலையில் உள்ள மிச்சிலை உண்டு பிறவிக் கடலில் துன்புறும் ஒரு நாயாகப் பிறக்கும் பிறப் பை எளியேனுக்கு அருளிச் செய்ய வேண்டும் என வேண்டி இரக்கின் றார்கள்.

'விழுத்தகு கல்வியும் ஒழுக்கமு மிலராய்ப்
பழிப்புள ராயினும் ஆக; வழுத்துநின்
பொன்னடித் துணைசேர் நின்னடித்
தொண்டர்
திருவமு தார்ந்து தெருக்கடை எறிந்த
பரிகல மாந்தியிப் பவக்கட லுழக்கும்
வரனுடை ஞமலி யாகிநின்
அருளையும் அயரா தவதரிப் பதுவே !

நிறைவுரை:

குமரகுருபர சுவாமிகள் அருட்பனுவல் களில் காணக் கிடக்கும் அடியவர் வழி பாட்டு நெறிகளில் உன்னதமான பகுதி கள் இங்கே திரட்டித் தரப் பெற்றன. சைவ சமயத்தில் அடியவர் என்பார் புறக்கோலம் யாதாயினும், சமூக ஒழுக்க நியதிகளை அவர் போற்றிலராயினும், பத்திமை ஒன்று மட்டும் உடையராயின் அவர் வணங்கி வழிபடத் தக்கவர் என் பதைச் சுவாமிகள் நன்கு இனங் காட்டு கின்றார்கள். திருத்தொண்டர் புராணச் சீரடியவர் பலரையும் பலவிடத்தும் வழி பட்டு ஏத்தும் குமரகுருபர சுவாமிகளின் அடியவர் வழிபாட்டுத் திறம் இக்கட் டுரையில் விளக்கப் பெற்றது.

வடபுலஞ் சென்ற ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள்

சிலம்புச் செல்வர்
டாக்டர். ம. பொ சிவஞானம்

சிறப்பு மொழிகள்

ஒன்பது கைலாசங்களும் ஒன்பது திருப்பதிகளும் தன்கரையில் அமையப் பெற்ற தாமிரபரணி நதியின் வடகரையில் ஸ்ரீ வைகுண்ட மென்று வழங்கும் திருப்பதியின் வடபாலில் ஸ்ரீ கைலாச மென ஒரு பகுதி உண்டு. அங்கே பரம் பரையாகத் தமிழ்ப் புலமையும் முருகக் கடவுளது பக்தியும் வாய்ந்த சைவ வேளாள குலத்தில் சண்முக சிகாமணிக் கவிராயரென்ற ஒருவர் தம் மனைவியா ரான சிவகாம சுந்தரியம்மையாரோடு வாழ்ந்து வந்தார். அவ்விருவருக்கும் ஓர் ஆண் குழந்தை உதித்தது. அதற்குக் குமரகுருபரன் என்னும் பெயர் சூட்டி அவர்கள் வளர்த்து வருவாராயினர்

திருவிளையாடல் புராணம் பாடிய பரஞ்சோதி முனிவரையும், சித்தாந்த-வேதாந்த மதங்களிடையே சமரசங் காணப் பாடிய தாயுமானவரையும் தந்த வேளாளக் குலமே குமரகுருபரரையும் தந்தது.

x x x x x

தமிழகத்திலுள்ள சைவ மடங்கள் பலவாயினும் தருமபுரம் மடம்தான்சைவ சமயத்தை வடபுலத்திலும் பரப்பும் திருத் தொண்டைத் தொடங்கி வைத்தது குமர குருபரர் வாயிலாக!

குமரகுருபரர் தமிழிலே பன்னி ரண்டுக்கு மேற்பட்ட பிரபந்தங்களைப் பாடினார் அவற்றை யெல்லாம் தொகுத்து ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந் தத்திரட்டு என்னும் பெயரில் பிற்காலத்தில் திருப்பனந்தாளிலுள்ள ஸ்ரீகாசி மடம் வெளியிட்டது.

அவற்றுடன், "நீதிநெறி விளக்கம்'' என்னும் பெயரில் சுவாமிகள் பாடிய நீதி நூலும் சேர்க்கப்பட்டுள்ளது.

x x x x x x

குமரகுருபரசுவாமிகள் தம் காலத்தில் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தில் 4ஆம்பட்டத்தில் குருமூர்த்தியாக விளங்கிய ஸ்ரீ மாசிலாமணி தேசிகரைக் குருவாகக் கொண்டு தீட்சை பெற்றுத் துறவியானார்.

தம் ஞானாசிரியரின் உதேசப்படித் தான் குமரகுருபரர் காசிக்குச் சென்று, அங்கு மடம் நிறுவினார்.

குமரகுருபரருக்குப் பின் ஸ்ரீகாசி வாசி தில்லை நாயக சுவாமிகளால் கி.பி. 1720ல் திருப்பனந்தாளில் ஒரு மடம் நிறுவப்பெற்றது.

ஆதிசங்கரர், இராமாநுஜர், மாத்வர் ஆகிய தென்புலத்து மெய்ஞ் ஞானியர் பாதையில் நடைபோட்டு முதன் முதலாக வடபுலஞ்சென்று புகழ் பெற்ற சைவ சமயத்துறவி குமரகுருபர சுவாமிகளே யாவார்.

x x x x x x

பாரதியார் கூறுவது போல, ஹிந்துஸ்தானி பயின்றால் இந்தி மொழியிலும் பயிற்சி ஏற்பட்டுவிடும். ஆகவே, குமரகுருபரர் இந்திமொழியிலும் பயிற்சி பெற்றிருந்திருக்கவேண்டும். அம்மொழியின் வாயிலாகத்தான் இராமபக்தரான துளசிதாசரிடம் குமரகுருபரருக்குத் தொடர்பு ஏற்பட்டிருக்க வேண்டும். அந்தத் தொடர்பு இலக்கிய ரீதியானது என்பதையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

x x x x x x

பாதுஷாவின் நல்லெண்ணத்தைப் பெற்ற பின்னர், அவருடைய தயவால், காசி கட்டம் என்னுமிடத்தில் சிறிது நிலம்பெற்று, ஒரு மடத்தை நிறுவினார். இது இந்து-இஸ்லாமிய ஒற்றுமைக்கு பாதுஷாவும் காசிவாசியும் செய்த தொண்டு போலும்!

காசியில் புராண சாலை என்னும் பெயரில் ஒரு மண்டபத்தையும் நிறுவி, அதிலே குமரகுருபரர் சைவ புராண — கம்பராமாயணச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி வந்தாராம்! 'சொற்பொழிவு' என்றால், தமிழில் மட்டுமல்ல; ஹிந்துஸ்தானியிலுந்தான்! அதனால், துளசிதாசர் குமரகுருபரரின் சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்ந்ததோடு, கம்பராமாயணத்திலுள்ள புதிய செய்திகளைச் சேகரித்துக் கொண்டு, தமது ராம சரிதத்தில் சேர்த்துக்கொண்டார் என்றும் சொல்லப் படுகிறது.

x x x x x x

குமரகுருபரர் இந்துஸ்தானியும் இந்தியும் பயின்றமையால், சைவத்தை வடக்கே பரப்பவும், அதற்கென காசியில் ஒரு மடம் நிறுவவும் முடிந்தது.

x x x x x x

தெய்வங்களால் விரும்பப் பெறும் தமிழினிடத்தே அன்பு செறிந்த இவ்வாசிரியர் தம்மைப்போன்ற புலவர்களையும் தாம் சென்ற நெறியே செல்லப் பணிக்கின்றார்.

''செஞ்செவி கைப்பயாள்
றெரிந்த இன்மொழி
அஞ்செவி மருத்தரங்
களித்தன னதனால்
தேத்தமிழ் தெளிக்குஞ்
செந்நாப் புலவீர்
பாத்தொடுத் தடுத்த
பரஞ்சுடரை
நாத்தழும் பிருக்க
வேத்துமி னீரே''

x x x x x x

கௌமார மடம் நிறுவியவரும், வள்ளற் பெருமான் காலத்தில் வாழ்ந்தவருமான திருப்புகழ் தண்டபாணி சுவாமிகள், தாம் பாடியுள்ள புலவர் புராணத்துள் குமரகுருபரருக்குத் தனிப் புராணம் தந்துள்ளார்.

தென்புலத்தில் தாமிரபரணியாற்றின் கரையிலுள்ள ஸ்ரீவைகுண்டத்தில் பிறந்த குமரகுருபரர், தம் வாழ்க்கையின் முடிவில் வடபுலத்தில் கங்கையாற்றின் கரையிலுள்ள புனித காசியிலே மறைந்தார். இதனாலும், அவரது வரலாறு இந்திய கலாசார ஒருமைப்பாட்டிற்கு உதவி புரிகிறது.

பொதுவாக, கடந்த மூன்று நூற்றாண்டுகளாக, தமிழ் செய்த தவத்தால் குமரகுருபரர் - தாயுமானவர் - வள்ளலார் ஆகிய ஆன்மிகக் கவிஞர்கள் தமிழ்நாட்டுக்குக் கிடைத்தனர். இப்பெரும்மும் மணிகளை இணைக்கும் நூல் போன்றவர் பாரதியார் அதனாற்றான், அவரது ஆன்மிகப் புலமையானது இம்மூவருக்குள்ளே மறைந்து நிற்கின்றது!

வாழ்க, குமரகுருபரர்-தாயுமான வர்-வள்ளலார்-பாரதியார் புகழ்!

x x x x x x

கலைமகளைத் துதிக்குமிடத்து, வடநூற்கடலும் தேக்கும் செழுந் தமிழ்ச் செல்வமும் தொண்டர் செந்நாவினின்று காக்குங் கருணைக் கடல்'' என்பர்.

குமரகுருபரர் பாடிய இலக்கியங் களின் தொகுப்பும் பிரபந்தம் என்னும் பெயரால் தரப்பட்டுள்ளதாயினும், அவற்றுள் அடங்கியுள்ள ஒவ்வொரு இலக்கியமும் அதில் நம் முனிவரால் போற்றப்படும் தெய்வங்களுக்குரிய தலங் களிலேயே தங்கித் தவஞ்செய்து அத் தெய்வங்களின் அருளைப் பெற்றுப் பாடி யவையாகும். இந்தப் பெருமை வேறெந்த பிரபந்தந் தொகுப்புக்கும் இல்லை எனலாம்.

திருச்செந்தூர் என்னும் திருப்பதி யில் பிள்ளைப் பருவத்தில் முனிவர் தம் பெற்றோருடன் தங்கியிருந்த போது, செந்தூர் முருகன் அருள் பெற்றுப் பாடி யது கந்தர் கலி வெண்பா!

மதுரை ''மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்'' என்னும் இலக்கியம், அம்மையாரின் திருத்தலமான மதுரை யம்பதியில் தங்கி, அங்குள்ள மக்களும் தலயாத்திரை மேற்கொண்டு வந்து போ வோரும் மீனாட்சியம்மை பால் காட்டும் பக்திப் பெருக்கைக் கண்ணாரக் கண்டும், வைணவரும் தெலுங்கருமான மன்னன் திருமலை நாய்க்கன் மீனாட்சியை வழி படு தெய்வமாகக் கொண்டுள்ளதைக் கண்டு கவர்ச்சியுற்றும் பாடினார்.

மீனாட்சியே குழந்தை வடிவாகி வந்திருந்து கேட்டு மகிழ்ந்தது. தன் கழுத்திலிருந்த முத்து மாலையை முனிவர் கழுத்தில் அணிவித்து ஆசி கூறி மறைந்தாரென்றும் வழங்கி வரும் செவி வழிச் செய்திகளை மீண்டும் நினைவில் கொள்வோம்.

x x x x x x

வடபுலத்திலுள்ள நம் இந்துக் களின் புனிதத்தலமான காசியில் முனிவர் தங்கி வாழ்ந்த போது காசிக்கலம்பகம் பாடினார்.

x x x x x x

தம் காலத்திலிருந்த தருமையா தீனத்திடம் தீட்சை பெற்றுச் சந்நியாச வாழ்க்கையை மேற்கொள்ள குமரகுரு பரர் விரும்பியபோது, அம்மடத்தின் மரபுப்படி, ''காசிக்குச் சென்று திரும்பி னால் தீட்சை தருவோம்'' என்று ஆதீனம் சொன்னதற் கிணங்கித்தான் குமரகுருபரர் காசி சென்றார்.

காசியில் தமிழ் வழங்காத குறை யை அகற்ற விரும்பித்தான் அந்த புனிதப் பகுதியில் சைவ மடத்தை ஸ்தா பித்தார் போலும்!

x x x x x

காசிவாசி குமரகுருபரர் தம் தாய் மொழியல்லாத வேற்று மொழியில் இலக்கியமெதுவும் படைக்கவில்லை யென்றாலும், அவருக்குப் பின் தோன் றிய திருப்பனந்நாள் காசிமடம் அவரு டைய திருச்செந்தூர்க்கந்தர் கலி வெண் பா, நீதிநெறி விளக்கம் ஆகிய இரண்டு இலக்கியங்களையும் ஹிந்தியிலும ஆங் கிலத்திலும் மொழி பெயர்த்து வெளியிட் டுள்ளது.

x x x x x x

சண்மத ஸ்தாபகரான சங்கராச்சாரியர் பாரதத்தில் திசைதோறும் மடங்களைத் தோற்றுவித்தார். பிற்காலத்தில் வழிவழிவந்த அந்த மடங்களின் அதிபர்கள் சங்கராச்சாரியார் என்று அழைக்கப்படுவது வழக்கமாகிவிட்டதால் சங்கரமட ஸ்தாபகரை ''ஆதி சங்கரர்'' எனக்குறிப்பிடுவது வழக்கமாகி விட்டது.

அதுபோல், திருப்பனந்தாள் காசி மட ஆதீனகர்த்தாக்களை குமரகுருபரர் என்று அழைப்பது வழக்கமாகி விட்டதால் காசி மட ஸ்தாபகர் 'ஆதி குமரகுருபர சுவாமிகள்' என்றழைக்கப்படுகிறார்.

x x x x x x

பொதுவாக, ஆதிகுமரகுருபர சுவாமிகள் ஆதிசங்கரரைப் போன்றே அறுவகைச் சமய ஒருமைப் பாட்டைக் காணவே — அத்துறையில் ஆதிசங்கரர் தொடங்கிய பணிக்கு வெற்றிதேடவே வடபுலஞ்சென்றார் என்பது எனது நம்பிக்கை. அவர் தம் நூல்களிலே ஒவ்வொன்றுக்கும் படைத்த காப்புச் செய்யுட்களிலே காணாபத்யர்களின் தெய்வமான கணபதி, சாக்தர்களின் தெய்வமான சக்தி, கௌமாரப் பிரிவினர்களின் தெய்வமான குமரன், வைணவர் வழிபடும் திருமால், சைவர் வழிபடும் சிவபெருமான் ஆகியோருக்குத் தனித்தனியே காப்புச் செய்யுள்களைப் படைத்தார்.

துளசிதாசரோடு தோழமை கொண்டு கம்பராமாயணத் தொடர் சொற்பொழிவுகளைக் காசியில் நிகழ்த்தினார்.

கேதார கட்டத்தில் மறைக்கப்பட்டிருந்த சிவலிங்கத்தைப் பலரறிய வெளியே எடுத்து அதற்குத் தனிக் கோயிலெழுப்பித் தந்தார்.

இறைவன் அவருக்கு இன்னும் அதிக ஆயுளைக் கொடுத்திருந்தால், சமய வழியில் தேசிய ஒருமைப் பாட்டை வலுப்படுத்தும் பணியைத் தொடர்ந்து செய்திருப்பார். அவர் செய்துள்ள தொண்டுகளை முழு அளவில் தமிழர் அறிந்துகொள்ள அவரது முந்நூறாவது ஆண்டு நிறைவு விழா பயனபடுவதாக!

குமரகுருபரரின் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் எனக்குப் பிடித்த— எனது நெஞ்சிலும் நாவிலும் நீங்காது நிலைத்துள்ள ஒரு செய்யுளை எடுத்துக் காட்டுவதோடு முடிக்கின்றேன்.

தொடுக்கும் கடவுட் பழம்பாடற்
றொடையின்பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழின்
ஒழுகுநறுஞ்
சுவையே அகந்தைக்
கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்ப
குளக்கோயிற்கு
ஏற்றும் விளக்கே வளர்ச்சிமய
இமயப் பொருப்பில்
விளையாடும
இளமென் பிடியே
யெறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் 'திருவுள்ளத்தில்' அழ
கொழுக வெழுதிப்
பார்த்திருக்கும்
உயிரோ வியமே
மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமின்
வஞ்சிக் கொடியே வருகவே!
மலையத் துவசன் பெற்ற பெரு
வாழ்வே வருக, வருகவே!

வளர்க, ஆதிகுமரகுருபரர் புகழ்!

தோன்ருத்துணைக்கோர் துணை

(கே எம். வேங்கட ராமையா, திருப்பனந்தாள்)

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பாடியருளிய பிள்ளைத்தமிழ் நூல்கள் இரண்டு; ஒன்று மீனாட்சியம்மைபிள்ளைத்தமிழ்; பிறிதொன்று முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் வெண்பாவுக்குப் புகழேந்தி, பரணிக்குச்செயங்கொண்டான், கோவை உலா அந்தாதிக்கு ஒட்டக்கூத்தன், விருத்தத்திற்குக்கம்பன், சந்தப்பாடல்களுக்குப் படிக்காசுப்புலவர், கலம்பகத்திற்கு இரட்டையர்கள் என்று பண்டையோர் கருதி, ஒரு பாடலும் வரைந்துள்ளனர். அங்ஙனமே பிள்ளைத்தமிழ்க்குக் குமரகுருபரர் என்று மழவை மகாலிங்கையர் கருதினர். ஸ்ரீ குமரகுருபரர் முதன்முதலில் பாடிய பிள்ளைத்தமிழ், மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் ஆகும். இந்நூல் மதுரை மீனாட்சியம்மை திருக்கோயிலில், திருமலைநாயக்கர் முன்னிலையில் அரங்கேற்றப் பெற்றது. அரங்கேற்றுங்கால் அம்பிகையே அருச்சகர் மகள் உருவில் எழுந்தருளி நாயக்க மன்னன் மடியமர்ந்து பிள்ளைத்தமிழ் கேட்டு உள்ளம் உவந்தனள் என்பர். இந்நூலில். ஐந்தாவது, முத்தப்பருவத்தில் முதற்பாடல் ''காலத்தொடு கற்பனை கடந்த'' என்ற தொடக்கமுடையது. இப்பாடலில் அம்பிகை, ''கடவுள்மணியே'' என்றும், 'ஒளிபூத்து அருள் பழுத்த கற்பகமே' என்றும் ''தோன்ருத் துணைக்கோர் துணையாகி .. முழுமுதலே'' என்றும் விளிக்கப் பெறுகிரும்.

தோன்ருத்துணை

இறைவனே எல்லாச் சீவராசிகளுக்கும்தோன்ருத்துணையாயிருக்கிருன் என்பது வெளிப்படை. எனினும், ஒருவர் மட்டும் தமக்கு இறைவன் தோன்ருத் துணையாயிருந்தமையை ஒரு பாடலில் கூறினர்.

திருநாவுக்கரசரைச் சமணச் சார்பினனுகிய அந்நாளைய பல்லவ வேந்தன் நீற்றறையிலிட்டும், நஞ்சு கலந்த பாற்சோறூட்டியும், யானையையே வியிடறச் செய்தும் துன்புறுத்தினன்; திருநாவுக்கரசர் ஊறுபாடின்றி இருந்தார். இறுதியில் மன்னன் அவரைக் கல்லிற் பிணித்துக் கடலில் நூக்கச் செய்தான். அவர் திருவைந்தெழுத் தோதிக் கல்லே தெப்பமாகத் திருப்பாதிரிப்புலியூர்ப் பாங்கர்க்கரையையடைந்தார்; பாடலீசுவரர் திருக்கோயிலுக்குச் சென்று,

''ஈன்ருளு மாயெனக் கெந்தையு
மாயுடன் தோன்றினராய்
மூன்ரு யுலகம் படைத்துகந்
தான்மனத் துள்ளிருக்க
ஏன்ருன் இமையவர்க் கன்பன்
திருப்பா திரிப்புலியூர்த்
தோன்ருத்துணையா யிருந்தனன்
தன்னடி யோங்களுக்கே''

என்று திருவிருத்தம் பாடினுர். இத் திருப்பாடலில் தோன்ருத்துணை என்று திருநாவுக்கரசர் இறைவனைக் குறிப்பிடு கிருர். இவ்வரிய சொற்ருெடரே ஸ்ரீகுமர குருபரர் வாக்கில் தவழ்ந்தது என்று கூறலாம்.

தோன்ருத்துணைக்கோர் துணை

அம்பிகை, இறைவனிடமிருக்கும் பிரிவில் சக்தியாவள். அம்பிகையோ இறைவனுக்குத் துணை — துணைவியாக அதாவது மனைவி என்ற நிலையில் மட்டும் துணை நிற்கவில்லை.

''கனகமார் கவின்செய் மன்றில்
அனகநா டகர்க்கெம் மன்னை
மனைவிதாய் தங்கை மகள்''

என்ற வெள்ளொத்தாழிசைப் பாடலில் பெருமானுக்கு, அம்பிகை, மனைவியாக-தாயாக - தங்கையாக - மகளாகத் துணை நின்று மன்பதைகட்கு உபகரிக்கிருள் என்பர் குமரகுருபரர்.

ஆமாறு

''சிவம் சக்தி தன்னை யீன்றும் சக்திதான் சிவத்தை யீன்றும் என்ற சிவ ஞான சித்தியாரால் இறைவற்கு அம்பி-கை மனைவிதாய் மகள் ஆதல் அறியப் படும். யசுர்வேதமுடையார் சிவபெரு மானுேடுடன் தோன்றுதல் பற்றி அருட் சக்தியாகிய அம்பிகை இறைவற்குத் தங்கையாவர் என்று அரதத்த சிவாசாரி யர் சதுர்வேததாற்பரிய சங்கிரகத்தில் கூறியுள்ளதாக ஆன்ருேர் கூறுவர். மணிவாசகப் பெருமானும் திருவாசகம் 207இல், ''எம்பெருமான் இமவான் மகட்குத் தன்னுடைக் கேள்வன் மகள் தகப்பன் தமையன்'' என்றமை காண லாம். திருமூலரும்,

வாயும் மனமும் கடந்த மனேன்மணி
பேயும் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயும் அறிவும் கடந்த அரனுக்குத்
தாயும் மகளும்நற் ருரமும் ஆமே'' (1178)

என்ருர். எனவே அம்பிகை, இறைவனே டொன்றியிருந்து தோன்ருத்துணை யீசர்க்கு இங்ஙனம் பல்லாற்ருலும் ஒப்-பற்ற துணையாகி மண்பதைகட்கு அருள் பாலித்தல் அறியப் பெறும்.

தோற்றம்

தோன்ருத்துணைக்கோர் துணையா கிய அம்பிகையை ''துவாத சாந்தப் பெருவெளியில் துரியங் கடந்த பரநாத மூலத்தலத்து முளைத்த முழுமுதல்'' என்று சாத்திரச் சொற்ருெடர்களைப் பெய்து அடுக்கி முடுக்கிப் புனைந்துள்ளார் குமரகுருபர சுவாமிகள். துவாத சாந்தப் பெருவெளியாவது, பிரமரந்திரத்துக்குப் பன்னிரண்டங்குல அளவில் மேம்பட்ட பகுதியாகும். பிரமரந்திரமாவது, தலை யின் உச்சிக்கண் உள்ள துவாரம். துரிய மாவது நான்காமவத்தை (மற்றவை சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்பன. துரியங்கடந்த நிலையாவது, துரியாதீதம், அதாவது ஆன்மா மிகத் தூய்மையாய் இருக்கும் நிலை, நாதமாவது ஒலி. பர நாதமாவது ஒலிகளுக்கு முன்னைய நிலை. நாதமூலமாவது, ஒலிகளுக்கெல்லாம் தோற்றமாகிய மூல ஒலி; எல்லாம் ஒடுங் கிய காலத்தில் இறைவன் தோற்றுவிக் கும் ஒலி; இதனை அப்பர் ''எம்மிறை வீணை வாசிக்குமே'' என்று குறிப்பிடுவர்; ''ஒத்துலகமெல்லாம் ஒடுங்கிய பின் வேதத் தொலி கொண்டு வீணை கேட் பார்'' என்ற திருத்தாண்டகமும் இக் கருத்துப் பற்றியதே எனவே, துரியா தீத நிலையில், துவாத சாந்தப் பெரு வெளியில், நாதம் தோன்றுமிடத்தில், முழுமுதற்பொருளாக, அம்பிகை தோன் றியருளி உபகரிக்கிருள் என்பது அறியப் பெறும்

குறிப்பு:- ''காலத்தொடு கற்பனை'' என்ற பாடல் அரங்கேற்றியதும் அம்பி கை குமரகுருபரர்க்கு முத்துமாலை அணி வித்தனள் என்றும் சிலர் கூறுவர்.

ஆதி குமரகுருபரரும் இசைக் கலையும்

பேராசிரியர். வி சா, பாலசுப்பிரமணியன்,
தமிழ்த்துறை, மன்னர் சரபோஜி அரசு கல்லூரி,
தஞ்சாவூர்

இசை மக்களையேயன்றி, பிற அஃறிணை உயிர்களையும்ஈர்க்கவல்லது என்பர். இசை மக்களின் உயிர். இதனால்தானோ என்னவோ இறைவனையே இசை வடிவாய்ப் போற்றினர் நம் முன்னோர். ''ஏழிசையாய் இசைப்பயனாய்'' என்பது சுந்தரமூர்த்திசுவாமிகள் வாக்கு.

இந்தியத் தத்துவ ஞானிகள், கவிஞர்கள், குருமார்கள், ஆசாரியர்கள் என்று எல்லோருமே இசையைச் சிறந்த கருவியாகக் கையாண்டு வந்துள்ளனர். தேவார திருவாசகங்களும், திவ்யபிரபந்தங்களும், பிறவும் இதற்கு எடுத்துக்காட்டாக நிற்பன. இசையுடன் பாடுவதால்மனம்உருகுவதனை யாரும்எளிதில் அறிவர். அது மட்டுமல்ல அக்காலத்தில் பாடல்களை மனப்பாடம் செய்வது வழக்கத்தில் இருந்து வந்துள்ளது. இதனால் ஏற்பட்டதே எதுகை மோனை வேதங்கள் எழுதா இலக்கியமாக இருந்தகாலத்தில் மரபு வழி இசையுடன் ஆசிரியர் ஓத மாணவர்கள் பயின்றுவந்துள்ளனர், என்பது சரித்திரப் பிரசித்தம் இசையின் ஆற்றல் உணர்ந்த ஆதிகாவிய வான்மீகி இராமன் கதையைஅழகியஇசைவடிவில் அமைத்தார் என்பர். ''இசையாவதுநரப்படைவால் உரைக்கப்பட்ட பதினொராயிரத்துதொள்ளாயிரத்துதொண்ணூற்று ஒன்று ஆகிய ஆதி இசைகள்'' என்பர்— சிலப்பதிகார அரும்பத உரை ஆசிரியர்,

ஆதி குமரகுருபர சுவாமிகள் தெய்வத்திருவருள்பெற்றபெரும்புலவர். அவரும் தம் பாக்கள் பலவற்றையும் இசை அடிப்படையில் பாட ஏற்றனவாய் அமைத்துள்ளார். ''ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளுடைய செய்யுட்களில் தனிச் சிறப்புப் பெற்று விளங்குவது அவற்றின் இன்னோசையே ஆகும். சொற்களும், சொற்றொடர்களும் ஒன்றனோடு ஒன்று செவிக்கு இனிமை தரும் வண்ணம் பொருந்தி அமைந்துள்ளன. ''பொருளிலே கருத்துச் செல்வதற்கு முன் செய்யுட்களில் ஓசை நம் கருத்தை இழுக்கின்றது'' என்று முதுபெரும் புலவர் உ.வே.சா. சுட்டுவது இங்கே கவனிக்கத் தக்கது. தமிழ் என்றதும் தெய்வமும் அதற்கு அடுத்த நிலையில் இசையும் இவர் கருத்து முன் நிற்பன என்பதற்கு.

''பண்முத் தமிழ்க்கோர் பயனே சவுந்திர
பாண்டியனே''

எனவரும் இவர்தம் வாக்கே சான்று. இங்ஙனம் இவருக்கு இசைமீது இருந்த ஆர்வத்தை இவர்தம் பிரபந்தங்களில் ஆங்காங்கே காணப்படும் இசைக் குறிப்புகள் மூலம் அறியலாம்.

பண்

''பண் என்னாம் பாடற்கு இயைபு என்றேல்'' என்பது குறள் தமிழகத்தில் எக்காலத்தும் இசை சிறந்து விளங்கிற்று எனினும், பண் என்ற அமைப்பு தேவாரங்கள் மூலம் பெரிய இடத்தைப் பெற்றது. இத்னைஉளங்கொண்டசுவாமிகள் கலைக்குத் தெய்வமாகிய கலைமகளிடத்தில் ''பண்ணும் பரதமும்'' வேண்டிப் பாடுகிறார். இதில் பண் முதன்மை பெற்றது ஆராயற்பாலது. பண் இங்கே இசையைக் குறிப்பது என்பர் சிலர் எனினும் ராகம் அல்லது மெட் என்ற பொருளில் அது ஆளப்படுகிறது என்பது தான் உண்மை. இது தவிர ''விளரி''

(விளரிப்பண்) என்று மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழிலும், "சுரும்பர் செவ் வழிப்பாட" என்று மதுரைக்கலம்பகத் திலும் இவர் வேறுவேறு பண்கள்பற்றிக் குறிப்பர்.

ஏழிசை

இசைக்கு அடித்தளமாக ஏழு சுரங் களை ஆள்வர் இசை வல்லார். அவை 'சரிகமபதநி' என்பன. ஆதி குமரகுருபர சுவாமிகள் தம் பிரபந்தங்களில் "எழு தாக் கிளவியும் ஏழிசை பழுத்த இழு மென் குரல் மழலைத் தீஞ்சொல்" எனத் திருவாரூர் நான் மணிமாலையிலும், "ஏழிசைப் பாணன்" என்று காசிக் கலம் பகத்திலும் "மூவகை நிலைத்து ஏழுசுரம் நிறீஇ" என்று பண்டார மும்மணிக் கோவையிலும் குறிப்பது காணலாம். இங்கே மூவகை நிலை என்பது மந்தரம் மத்திமம், தராம்— அல்லது இன்னிசை, ஒத்திசை, தொகை இசை என்பனவே.

குழல்

இவர் தம் பாடல்களில் குழல், யாழ், வீணை முதலிய இசைக் கருவி களும் குறிக்கப்படுகின்றன. வள்ளுவர் குழல்யாழ் இசைகளில் மனம் பறி கொ டுத்தனர். கண்ணன் வேய்ங்குழலில் வல் லவன்; அதன் இசையில் மகிழ்பவன். அவனை 'குழலிசை பழகிய மழைமுகில்' எனத் தம் மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழில் சுவாமிகள் சுட்டுகிறார். இனிய இசையுடன் கூடியது குழல் என்பதால் தலைவியை வருத்தியவற்றுள் அதுவும் ஒன்று. இதனை 'தீங்குழல் கானம் ஒன்று கவர்ந்துணும்" என்னும் காசிக் கலம்பக அடிகளில் குறிப்பார் இவர். இனி மீனாட்சியின் மழலைக்கு உவமை யாக குழலிசையை 'தீங்குழலின் மதுரம் கனிந்த பசுங்குதலை மழலை" என்று இவர் குறிப்பிடுகிறார்.

யாழ்

யாழ் பழந்தமிழர்க்கே உரிய நரம் புக் கருவி, ஐவகை நிலத்திற்கும யாழ் இருந்தமையை இலக்கியங்கள் காட்டும். அது தவிர சீறியாழ், பேரியாழ், மகர யாழ் முதலியனவும் இருந்தன. "தெள் விளி எடுக்கும் சீறியாழ்ப்பாண" என்று காசிக்கலம்பகத்திலும், பெண்கள் இனிய குதலைக்குஇரங்கி மரவமரங்கள்(வெண் சுடம்பு) துகில் போன்ற பூக்களை வழங் கும் என்பதை "மகரயாழ் மழலைக்கு மரவங்கள் உண்டுதுகில் வழங்க' என்று மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழிலும் குறிப்பிடுவர். பிறிதோரிடத்தில் கின்ன ரப் பறவை வியக்கும் வண்ணம் மகளிர் யாழ் வாசித்தலையும் சுட்டுவார்.

வீணை

வீணை பற்றியும் இவர் பாடல் குறிப்பிடுகிறது. விபஞ்சி என்பது அதற் குப்பெயராகஇவர் ஆளும்சொல்"இனிய செவ்வழிப்பாட்டினை வரு விபஞ்சி பயில் தரும் மதங்கர் தெரு" என்று முத்துக் குமார சுவாமி பிள்ளைத் தமிழில் (4) குறிப்பிடுகிறார்.

முடிவுரை

"ஆடகத் தியன்ற சூடகக் கரத்தால்
மாடகத் திவவியாழ் மருமமீ தணைத்து
மூவகை நிலையத் தேழுசுரம் நிறீ இக்
கொவ்வைவாய் திறந்து குயிலென
மிழற்றுபு
மென்னரம் புகிரான் விரன்முறை தடவிக்
கின்னரம் வியக்குங் கீதம் பாட"
(பண்டார மும்மணிக்கோவை 17)

என்று யாழ் வாசிக்கும் முறையையும் அதனுடன் வாய்ப்பாட்டு இணைந்து நிற்கும் நிலையையும் இவர் பாடுவது கண்டு இன்புறுகிறோம்,

இசைக்குப் பூக்கள் மலரும்; தேனை ஒழுக விடும் என்பதனை

"குழலிசை பழகுஅளி பாடிடக்கேட்டு
உடை
மடல் அவிழ் துளபநறா எடுத்து"

என்ற அடிகளில் குறிப்பிடுகிறார்.

இவர், பிற ஜோதிடக் கலை, கணிதம், சிற்பம் முதலியவற்றிலும் வல்லவர். எதனையும் நுனித்து நோக்கி உணர்ந்து பாடும் இவரது தனித்தன்மை மெச்சத் தக்கது.

வாழ்க ஆதிகுமரகுருபர சுவாமிகளின் அருட்புகழ்!

மலயத்துவசன் பெற்ற பெருவாழ்வு

பேராசிரியர். **தண். கி. வேங்கடாசலம்,**
பெங்களூர்.

முன்னுரை :

பெங்களூரில் அண்மையில் சிறப்புற நடைபெற்ற தமிழ்மாமுனிவர் குமரகுருபர அடிகளாரின் 300-ஆம் ஆண்டு விழா நிகழ்ச்சிகளை என் உள்ளம் இன்பமாக அசை போட்டுக் கொண்டிருந்தது. கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் அடிகளார் ஆற்றிய பல்வகைத் தொண்டுகளையும் எண்ணி எண்ணி இறும்பூதுற்றேன். அந்நிலையில் கச்சியம்பதியிலிருந்து குமரகுருபர அடிகளார் 300-ஆம் ஆண்டு விழாவினைப் பற்றிய அறிக்கை வந்தது. விழா மலருக்கு 'மலயத்துவசன் பெற்ற பெருவாழ்வு' என்ற தலைப்பில் கட்டுரை வேண்டுமென்ற அன்புக் கட்டளையும் வந்தது. அது யான் பெற்ற பெருவாழ்வு' எனஎண்ணிக்கொண்டேன்.

குமரகுருபர அடிகளார் சிவப்பேறும் தமிழ்ப்பேறும் ஒருங்கே பெற்ற திருவருட் செல்வர். அவர் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் வருகைப் பருவத்தில் 'மலயத் துவசன் பெற்ற பெரு வாழ்வு' என்ற தொடரால் மீனாட்சியம்மையைச் சுட்டுகின்றார். இத் தொடரின் சொற்களையும் பொருளையும் எண்ணி எண்ணிப் போற்றலாம். மலயத்துவசன் ஒரு பாண்டிய மன்னன். மதுரை மீனாட்சியை அம்மன்னன் குழவியாகப் பெற்றான். அக்குழந்தை அவன் பெற்ற பெரு வாழ்வு ஆயிற்று. இது வெளிப்படைப் பொருள். ஆழ்ந்து நோக்கின் 'மலயத்துவசன் பெற்ற பெரு வாழ்வு' என்பது அம் மன்னன், உலகெலாம் உய்யப் பெற்ற பெரு வாழ்வு அம் மீனாட்சியம்மை என்பது புலப்படும்.

மலயத்தின் மாண்பு:

மலயம் என்பது பொதிகை மலை. அது தொன்மைமிக்கது தமிழ் முனிவன் அகத்தியனின் உறைவிடம். தமிழ் பிறந்தது அம்மலையில் தானே! ஒரு புலவர் தமிழன்னையைக் குறிப்பிடும் போது 'வானார்ந்த பொதியில் மிசை வளர்கின்ற மதியே!' என்றார். 'அப் பொருப்பிலே பிறந்தவள் தமிழ் அணங்கு' என்கிறார் மற்றொரு புலவர். மலய மலை சந்தனத்திற்கும் பெயர் வாய்ந்தது. பொதிகைச் சந்தனம் தனிச் சிறப்புடையதன்றோ? பொதிகையிலே பிறக்கும் தென்றலைப் பாடாத புலவர் யார்? பொதிகைத் தென்றல் புல்வர் நாவிற் பொருந்தியது என்பர் இளங்கோவடிகள். அத் தென்றலே மந்த மாருதம், அதுவே மலய மாருதம்! 'மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்று' என்பது வள்ளலார் வாய்மொழி.

மலயத்துவசன் :

மலயத்துவசன் மதுரையை ஆண்டுவந்த பாண்டிய மன்னர்களில் தனிப்புகழ் பெற்றவன். அவன் பெருமையினைத் திருவிளையாடல் இங்ஙனம் கூறும்:

'மனுவறம் உவந்துதன் வழிச்செல நடத்தும்
புனிதன்மல யத்துவசன் வென்றிபுனை
பூணான்
கனியமுதம் அன்னகரு ணைக்குறையுள்
காட்சிக்'(கு)
இனியன்வட சொற்கடல் தமிழ்க்கடல்
இகந்தோன்.'

அவன் தன் கொடியில் மலயத்தை வரைந்து கொண்டான், அவன்அகத்திய முனிவனை வணங்கி அவன் திருமுன் 'யான் தருமமே நடத்தக் கடவன்' என உறுதி கூறி அதற்குச் சான்றாக அம் மலய மலையினைத் தன் கொடியில் வைத்துக் கொண்ட காரணத்தால் மல யத்துவசன் எனும் பெயர் பெற்றான், அவன் செய்த தவப்பயனால் மதுரை மீனாட்சியம்மையினை மகளாகப் பெற்றான், அது அவன் பெற்ற பெரு வாழ்வு மட்டுமன்று; அனைத்துலகும் பெற்ற பெரு வாழ்வு ஆகும்.

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்

செந்தில் முருகன் திருவருளாற் பேச்சாற்றல் பெற்றுக் கந்தர் கலிவெண் பாப் பாடிய குமரகுருபர அடிகளார் மதுரை வருகிறார். மதுரை மீனாட்சி யம்மையின்பால் பக்தி மீதூரப் பெற்று மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் பாடி மகிழ்கிறார். மதுரையை அக்கா லத்தே ஆண்டு வந்த தெலுங்கு மன்னன் திருமலை நாயக்கன் அடிகளாரின் பெருமையை உணர்ந்து அவரைப் போற்றி மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழைத் தன் அவையில் அரங்கேற்றி அடிகளாருக்குப் பெருஞ் சிறப்புக்கள் செய்கிறான். அரங் கேற்றத்தின்போது 'தொடுக்கும் கடவுட் பழம் பாடல்' என்ற வருகைப் பருவப் பா டல் பாடுங்கால்மீனாட்சியம்மையே,திரு மலை மன்னனின் பெண் போல் வந்து அவன் கழுத்தில் அணிந்திருந்த முத்து மாலையை எடுத்து அடிகளார் கழுத்தில் சூட்டி அடிகளாரைப் பாராட்டிப் பெருமைப்படுத்துகிறாள்!

இறைவி மீனாட்சியம்மையின் பெருமைகள் எவ்வளவோ இருப்பினும் அவள் பாண்டியன் மகளாக அவதரித்து மனித வடிவில் உயிர்கள் உய்ய அருள் செய்த பெருமையினை அடிகளார் மிகவும் பாராட்ட விழைகிறார். மலயத் துவசன் பெற்ற பெருவாழ்வே என அம் மையை அழைக்கும் போது அடிகளாரின் அகமெலாம் குளிர்கின்றது.

மலயத்துவசன் பெற்ற பெரு வாழ்வு :

அடிகளார் தம் மீனாட்சியம்மை யைப் பாண்டியன் மகள் எனக் குறித்துப் பக்தி வெள்ளத்தைப் படிப்படியாகப் பெருக்கிக் காட்டுகிறார். காப்புப் பருவத் தின் இரண்டாம் பாடலில்

'வழுதியுடையகண் மணியொடுலவு பெண்மணி' எனத் தொடங்குகிறார். காப்புப் பருவத்தின் எட்டாம் பாடலில் 'பாண்டிப் பிராட்டி' எனப் பாராட்டு கிறார். தென்னனாகிய பாண்டியன் பெற்ற பாவை மலையரசன் பெற்ற மலைமகளே என்பதை வலியுறுத்துவது போல் செங்கீரைப் பருவத்தின் முதல் ஐந்து பாடல்களிலும்

'தென்னற்கும் அம்பொன்மலை மன்னற்கும் ஒரு செல்வி' என்ற தொடரைப் பெய்து வைத்து மகிழ்கிறார். தெளிதமிழ் மதுரையில் வளரும் ஓர் இளமயிலை 'மதுரைத்துரை மகள்'(தாலப்பருவம்-6) எனக் கொஞ்சிக் குலவித் தாலாட்டு கிறார். தமிழொடு பிறந்து பழ மதுரை

யில் வளர்ந்த கொடியினை 'மலயத் துவசன் வளர்த்த பசுங்கிளி' என அடுத் தடுத்துச் சொல்லிப் பார்க்கிறார் (தாலப் பருவம்-9, 10) 'கவுரியர் குலமணி' எனப்புனைகிறார் (முத்தப்பருவம்-9,10) இன்னும் அவருள்ளம் நிறையவில்லை போலும்! வருகைப் பருவத்தில் தம் அன் பினையெல்லாம் ஒரு சேரத் திரட்டி 'மலயத்துவசன் பெற்ற பெருவாழ்வே!' என ஐந்து முறை (வருகைப்பருவம்-6,7, 8,9,10) அழைக்கிறார். முதல் மும்முறை அழைத்த போது மீனாட்சியம்மை மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்துத் திகைத்துப் போய், நான்காம் முறை 'மலயத்துவசன் பெற்ற பெருவாழ்வே வருக! வருகவே' என அழைத்ததும் மீண்டும் மதுரை மன்னன் (திருமலை) மகளாக வந்து முத்து மாலையினைப் பரிசாக வழங்கி விடுகிறாள். அடிகளார் அன்புப் பரவசராகி அடுத்த பாடலில் மீண்டும் மலயத்துவசன் பெற்ற பெரு வாழ்வே! என உளமுவந்து கரை கின்றார்.

பொற்கலத்திற் பெய்த அமுது:

'மலயத்துவசன் பெற்ற பெரு வாழ்வு' என்ற மணிமுடி பூண்ட வரு கைப் பருவப் பாடல்கள் ஐந்தும் அமைக் கப் பெற்றுள்ள திறம் வியத்தற்குரியது. அவ்வைந்து பாடல்களில் முதல் இரண் டும் 'தமிழ் நிலைபெற்றதாங்கரு மரபின், மகிழ் நனை மறுகின் **மதுரை**'யின் பெருமையினைக் கூறுவன. மீனாட்சி யம்மை தன் வாழிடமாகக் கொண்ட மதுரை, அமிழ்தினைத் தாங்கும் பொற் கலமாகும். அம்மையே அமிழ்து! அந்த அமிழ்தின் சிறப்பு அடுத்துவரும் மூன்று பாடல்களிலும் சுவை சொட்டச் சொட் டக் கூறப்படுகின்றது. மகளிர் விளை யாடும் போது வாரிக் குவித்த மணிக்குப் பை வான் வழியை அடைக்கின்றது. வழி தப்பிய செங்கதிரும் மதிப்பிறையும் விண்மீன்களும் பொங்கி எழும் வையைப் பெருவெள்ளத்தில்பரிசிலாகவும்,தோணி யாகவும், மிதப்பாகவும் மிதக்கின்றன. ஐராவதத்தின் மத நதியும் ஆகாய கங் கையும் எதிர் கொள்ள வைகைநதி ககன வெளியினையும் கற்பகக் காவினையும் கடந்து, கடலும் சிறிதெனக் கடலில் மடுக்கின்றது. இத்தகைய வைகை வள நாட்டின் மதுரை அமிழ்தே மீனாட்சி (வருகைப்பருவம்-6) மருதத் தச்சன் மதுரையில் அமைத்த தாமரை மலர்க் கோயில்கள் பல. அக்கோயில்களின் இதழ்க் கதவுகளை வண்டுகள் திறக்கத் திருமகள் உவந்து குடிபுகுகின்றாள். மருதத் தச்சன் அமைத்த கமுகின் மணப் பந்தரின் விதானத்தில் அமைத்த மணிக் கொடிபோல் நெற்கதிர்கள் அசைந்தா டும் பண்ணைகள் சூழ்ந்த மதுரையின் அமிழ்தே மீனாட்சி. இவ்விருபாடல்களும் பொற்கலம் எனின் அடுத்த மூன்றும் அமிழ்தாகும்! 'மகரக் கருங்கட் செங்கனிவாய் மடமான் கன்று' எனும் மீனாட்சியம்மை குழல் மணங்கமழவும், சிறு மருங்குல் ஒசியவும், முறுவல் நிலவெறிப்பவும் வரும் அழகு அடுத்த பாடலில் உளங்கவரப் புனையப்படுகின் றது அடுத்த பாடல் தான் முத்து மாலைப் பரிசு தந்த தெய்வத்திருப் பாடல். பாடலின் பயன் என்றும் தமிழின் சுவை என்றும் அடியவர் உளக்கோயில் விளக்கு என்றும், இமயத்தில் விளையா டும் இளம்பிடி, என்றும், இறைவன் திரு வுள்ளத்தில் எழுதிப் பார்க்கும் உயிரோ வியம் என்றும், வஞ்சிக்கொடி என்றும் அப்பாடல் அம்மையைப் புகழும், அடுத்த பாடலில் அம்மையை இளம்பிடி, ஞானப் பெருக்கு, இறைவனின் முக்கண். விருந்து, மும்முதற்கும் வித்து, வித் தின்றி விளைந்த பரமானந்தத்தின் விளைவு, மறைக் கொழுத்து, அருட் கொம்பு பிறவிப் பிணி தீர்க்கும் மருந்து (அமிழ்து), மழலைக்கிளி என்றெல்லாம் போற்றிப் புளகம் எய்துகிறார். நாமும் அடிகளார் வழிநின்று அப்பொற்கலத்து அமிழ்தைத்துய்த்துஉய்திபெறுவோமாக

கலைமகளின் கவினும் அருளும்

டாக்டர். பேராசிரியர். வி. பெருமாள்
எம்.ஏ., பி.டி., எம்.ஆர். ஏ.எஸ்., எப் எப். ஐ.,டி. லிட்.,
நிறுவனத்தலைவர் & தலைமை நெறியாளர்
அனைத்துலக நட்புறவு இந்திய மன்றம்
பண்பகம்
சொர்ண நகர், ராபர்ட்சன் பேட்டை,
கோலார் தங்கவயல் (K. G. F.)-563122.
கர்நாடக மாநிலம்

கவிதை பாடுவதற்கெனத் தனியாக ஒரு பொருளில்லை. உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களையும் பற்றிய கட்டுரைகளைக் கலைக் களஞ்சியத்தில் காண்பதைப் போலக் கவிதையிலும் காணலாம். ஓர் எளிய பறவையாகிய காக்கையைப் பாடிய காரணத்தால் ஒரு புலவர் 'காக்கை பாடினியார்' என்று பெயர் பெற்றார் என்பதை நாம் அறிகின்றோம். அணுமுதல் அண்டம் வரை எல்லாப் பொருள்களும் கவிதைக்குரிய பொருள்களே. கதிரவன், திங்கள், விண்மீன், தென்றல், மலை, குன்று, அருவி, ஆறு, ஏரி, குளம், கடல், தாமரை, கிளி, மயில், குயில், சுனை, சோலை, காடு, இடி, மழை, மின்னல், அன்பு, காதல், அழகு, இயற்கை, இறைவன் முதலிய மரபுத் தலைப்புக் களிலும் சீர்திருத்தம், புரட்சி, புதுமை, சிந்தனை, பகுத்தறிவு, விஞ்ஞானம், மறுமலர்ச்சி, கிளர்ச்சி, புதுயுகம், மகளிர், முன்னேற்றம், பெண்கல்வி, விதவைமணம், கலப்புமணம், சாதி ஒழிப்பு முதலிய புதுமைத் தலைப்புக்களிலும் கவிதை இயற்றலாம்.

கவிதையை மலருக்கு ஒப்பிட்டால் கவிதைப் பொருளை மணத்திற்கு ஒப்பிடலாம். சொல்லால் வடிவம் பெற்றுப் பொருளால் கமழ்வது கவிதை. இவ்வுண்மையைப் பின்வரும் பாடல் தெளிவாக உணர்த்துகின்றது.

"சொல்லென்னும் பூம்போது
தோற்றிப் பொருளென்னும்
நல்லிருந் தீந்தாது
நாறுதலான்-மல்லிகையின்
வண்டார் கமழ்தாம
மன்றே மலையாத
தண்டாரான் கூடற்றமிழ்"

'எப்பொருளைக் குறித்துக் கவிஞன் பாடுகிறான்' என்று ஆராய்வதைவிட, 'எப்படிப் பாடுகிறான்' என்று சிந்திப்பதே, உண்மையான இலக்கிய ஆராய்ச்சியாகும். மிக உயர்ந்த பொருளைப் பற்றியதாக இருந்தாலும் சுவையில்லாமல் உணர்ச்சியற்ற முறையில் பாடப்படுவது கவிதையாகாது. சுவை தோன்றவும் உணர்ச்சி ததும்பவும் மிகச் சாதாரணப் பொருளைப் பற்றிப் பாடும்போதும் அது கவிதையாகின்றது. தேசிக விநாயகம்பிள்ளை ஒரு முறை சிரங்குக்கு ஆட்பட்டார். மேனி முழுவதும் சிரங்கு மயமாயிருந்தது. ஒரு சிரங்கு முத்தைப் போலவும் இன்னொன்று பவழத்தைப் போலவும் மற்றுமொன்று முழு வயிரத்தைப் போலவும் வேறொன்று மாணிக்கத்தைப் போலவும் திகழ்ந்தன. இவையெல்லாம் சேர்ந்து நவமணியாலான பதக்கம்போல் காட்சியளித்தன. கவிஞர், துன்பத்திலும் இவ்வாறு நகைச்சுவை தோன்றப் பாடியதுடன் இச்சிரங்குகளைத் தமக்கு வழங்கியவன் சிரங்கப்பராயன் என்று குறிப்பிட்டு நகைச்சுவைக்கு மேலும் உயிரூட்டுகின்றார்.

''முத்துப் பவழம்
முழுவயிரம் மாணிக்கம்
பத்தியொளி வீசு
பதக்கமெலாம்—சித்தன்
சிரங்கப்ப ராயன்
சிறியேன் தனக்குத்
தரங்கண்டு தந்த தனம்''

மிகச் சாதாரண பொருளைப்பற்றிப் பாடினாலும் பாடுகின்ற முறையிலேதான் சுவை அடங்கியிருக்கின்றது.

''கொடியணி மாடமோங்கிக்
குலவுசீ ரானைக் காவில்
படியினி லுள்ளார் செய்த
பாக்கிய மனையான் செங்கைத்
தொடியினர் மதனன் சோம
சுந்தரன் கடையில் செய்த
பொடியினைப் போடா மூக்குப்
புண்ணியம் செய்யா மூக்கே''

என்னும் தியாகராசச் செட்டியார் பாட்டு மற்றுமொரு எடுத்துக்காட்டாம். கவிஞனின் உள்ளத்தைத் தொடுகின்ற பொருளும் உள்ளத்திற்கு மகிழ்ச்சியளிக்கும் பொருளும் கவிதைக்குரிய பொருளாகும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் இயற்கை அழகைக் கண்டார். அவ்வழகு அவர் நெஞ்சத்தில் குடியேறி மகிழ்ச்சியளித்தது. அதனுடன் அஃது அவர் கவிதைக்குக் கருவூலமாகவும் அமைந்தது.

''காலையிளம் பரிதியிலே
அவளைக் கண்டேன்!
கடற்பரப்பில் ஒளிப்புனலில்
கண்டேன்! அந்தச்
சோலையிலே மலர்களிலே
தளிர்கள் தம்மில்
தொட்ட இடம் எலாம்
கண்ணில் தட்டுப் பட்டாள்!
மாலையிலே மேற்றிசையில்
இலகு கின்ற
மாணிக்கச் சுடரிலவள்
இருந்தாள்; ஆலஞ்
சாலையிலே கிளைதோறும்
கிளியின் கூட்டந்
தனில்அந்த அழகென்பாள்
கவிதை தந்தாள்''

'சிறுகுழந்தை விழியினிலே
ஒளியாய் நின்றாள்
திருவிளக்கிற் சிரிக்கின்றாள்;
நாரெடுத்து
நறுமலரைத் தொடுப்பாளின்
விரல்வளைவில்
நாடகத்தைச் செய்கின்றாள்;
அடடே! செந்தோட்
புறத்தினிலே கலப்பையுடன்
உழவன் செல்லும்
புதுநடையில் பூரித்தாள்;
விளைந்த நன்செய்
நிறத்தினிலே என்விழியை
நிறுத்தினாள், என்
நெஞ்சத்தில் குடியேறி
மகிழ்ச்சி செய்தாள்;

பாரதிதாசன் தாம் கண்ட அழகுக் காட்சியே அவர்க்குக் கவிதைப் பொருளாக அமைந்தது என்பது இங்கு நோக்கத் தக்கது.

கவிதையை உணவிற்கு ஒப்பிட்டால் கவிதை நயத்தை உணவிலுள்ள சுவைக்கு ஒப்பிடலாம். சுவை மிகுந்த உணவை மக்கள் விரும்பியுண்பதைப்போல நயம் செறிந்த கவிதையைக் கற்றோர் உவகையுடன் பயில்வர். தமிழ்க் காப்பியங்களிலும் இலக்கியங்களிலும் கவிதை நயம் அங்கிங்கெனுதபடி எங்கும் திகழ்கின்றது. சிலப்பதிகாரத்தில் ஒரு காட்சி; மதுரை மாநகரில் ஆயர்பாடியில் இடைக்குல மடந்தையொருத்தியின் அடைக்கலமாகக் கோவலனும் கண்ணகியும் இருக்கின்றனர் கோவலன் தன் குற்றத்திற்காகவும் கண்ணகிக்கு இழைத்த தீமைக்காகவும் மிகவும் மனம் வருந்திக் கண்ணகியை நோக்கி, 'உன் இரண்டு சிலம்பில் ஒன்றை எடுத்துக் கொண்டு போய் மாறி(விற்று) வருகிறேன்' என்று கூறுகிறான்.

''சீறடிச் சிலம்பின்
ஒன்றுகொண்டியான்போய்
மாறி வருவன்
மயங்கா தொழிகென''

ஆனல் நடந்தது என்ன? சிலம்பை எடுத்துக்கொண்டு மனிதனாகச் சென்றவன் பிணமாக மாறினான் 'மாறி' என்னுஞ் சொல் அமங்கலச் சுவை தோன்ற விளங்கு-கின்றது.

கம்பராமாயணத்தில் ஒரு காட்சியைக் காணலாம். காட்டிற்குச் சென்ற இராமன் அகத்தியரைக் கண்டு வணங்குகின்றான். தமிழ் முனிவராகிய அகத்தியர் இராமனை அன்புடன் அணைத்து இன்னுரை கூறி வரவேற்-கின்றார். அகத்தியர் பெரியவர்; தமிழ் முனிவர்; சான்றோர். ஆனால் உருவத்தில் குள்ளமானவர். இராமனோ அகத்தியரைவிட உயரத்தால் பெரியவன். இராமன் உயரத்தில் நெடியவன் என்பதையும் அகத்தியர் குள்ளமா-னவர் என்பதையும் குறிப்பிட விழை-கின்றார் கம்பர். இராமன் உயரமானவன் அதில் எந்தவிதமான சங்கடமோ கடினமோ இல்லை. ஆனால் அகத்தியரைக் குள்ளமானவர் என்று எவ்வாறு உரைப்பது? கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம் ஆகிய எல்லாவற்றிலும் உயர்ந்தவராயிற்றே அகத்தியர். அத்தகைய அகத்தியரைக் குள்ளமானவர் என்று குறிப்-பிட்டால் அஃது அவர்க்கு இழுக்காக அமை-யாதா? ஆனால் அகத்தியர் குள்ளமானவர் என்பதை உறுதியாகக் கற்போர்க்கு உணர்த்த வேண்டும் என்பது கம்பர் விருப்பம். இந்-நிலையில் கம்பர் 'நின்று கொண்டிருந்த அகத்திய முனிவரை அங்கு வந்த நெடியோ-னாகிய இராமன் வணங்கினான்'' என்று கூறுகின்றார். 'இராமனை நெடியோன்' என்றும் அகத்தியரை 'நின்று கொண்டிருந்த அகத்தியர் குள்ளமானவர் என்பதைக் குறிப்-பாகவும் உறுதியாகவும் உணர்த்திவிட்டார் கம்பர்.

''நின்றவனை வந்தநெடி
யோனடி பணிந்தான்
அன்றவன் அன்பொடு
தழீஇயமுத கண்ணான்
நன்றுவரவு என்றுபல
நல்லுரை பகர்ந்தான்
என்றுமுன தென்றமிழ்
இயம்பிசை கொண்டான்''

இத்தகைய கவிதை நயம் வாய்ந்த பாடல்கள் கற்போர்க்கு மிக்க இன்பம் பயக்க வல்லன

குருவருளாலும் திருவருளாலும் கவிபாடி வல்லமை பெற்றவர்கள் தமிழ் இலக்கிய வரலாற்றில் பலர் உண்டு. செந்திற் பெருமான் திருவருளால் பேசும் ஆற்றல் பெற்றதுடன் கவி பாடும் திறனையும் மிகச்சிறப்பாக பெற்றுப் பெரும்புகழுடன் விளங்கியவர் குமர குருபர சுவாமிகள். சகல கலா வல்லி மாலை பாடிக் கலைமகளுக்கும் பெருமை சேர்த்துத் தாமும் மாபெரும் புகழ் பெற்றுத் திகழ்ந்தவர் குமர குருபரர் இவர் இப்பாமாலை பாடிக் கலைமகள் திருவருளால் இந்துஸ்தானி மொழித்திறம் பெற்றார். சகல கலாவல்லியின் ஒவ்வொரு பாடலும் சொற்-சுவை, பொருட்சுவை, பக்திச்சுவை ஆகிய முச்சுவையும் பெற்றுக் கம்பர் கூறிய சான்றோர் கவியெனத் திகழ்வதைக் காணலாம். குமர குருபரர் கலைமகளை வெறுந்தெய்வம் என்று குறிப்பிட்டார் அல்லர். கலைமகளைக் **கண்கண்ட தெய்வம்** என்று மனமாரப் போற்றியுள்ளார். கலை மகளின் பல்வேறு சிறப்பியல்புகளையும் குறிப்பாகவும் சிறப்பாகவும் கலைச்செல்வியின் மாபெருந்திருவருளையும் வியந்து போற்று கின்றார். இதோ அவர்தம் பாடல் :-

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும் என்
பண்கண் டளவில் பணியச்செய்
வாய்! படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடிஉண்
டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ?
சகல கலாவல்லியே!

குமரகுருபரர் கலைமகளின் **அருளால்** பாடினார். கலைமகளின் **அருளைப்** பாடினார்; கலைமகளின் **அருளுக்காகப்** பாடினார். கலைமகளின் கவினைப் பாடினார்.

அம்மானை ஆடல்

—'சேயோன்' **ந. முருகன்**, 6, வசந்தா பிரஸ் சாலை,
அடையாறு, சென்னை-600020.
தொலைபேசி எண்: 416456.

வையம் போற்றும் வளமிகு மொழியாம் நம்செந்தமிழில் பேரிலக்கியங்களும் சிற்றிலக்கியங்களும் மிகுந்துள்ளன. அவை பண்டைத் தமிழர்தம் பண்பாடு, பழக்கவழக்கம், அகப்புற ஒழுக்கங்கள், ஆட்சிமுறைகள், இறை ஈடுபாடு, ஈகைத் திறன், உழைப்பின் மேன்மை முதலானவற்றை நன்கு விளக்குகின்றன. தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் கற்பனை வளமும், கவின்மிகு நடையும், சிந்தனைத் திறனும் பொற்புறப் புனைந்து ஒளிரும் இலக்கியம்தான் கலம்பகம்! அக்கலம்பகத்தின் பதினெட்டு உறுப்புக்களில் மூன்றாவதாக முகிழ்ப்பதே 'அம்மானை'!

தமிழ்நாட்டில் பெண்கள் விளையாடும் விளையாட்டுக்களுள் ஒன்று அம்மானை. பழங்காலந்தொட்டு இந்த விளையாட்டு இருந்து வருகிறது. அம்மானைக் காய்கள் மூன்றினை வைத்துக் கொண்டு இரண்டு கையாலும் பெண்கள் விளையாடுவார்கள். இரண்டு கைகளிலும் இரண்டு காய்கள் இருக்க, மேலே ஒன்று இருக்கும். ஒரு பெண் ஒரு கையில் இருக்கும் அம்மானைக் காயை மேலே வீசி, அந்தக் கையால் மேலுள்ள அம்மானைக் காயைப் பிடித்தல் வேண்டும். இப்படிச் சாமர்த்தியமாக ஆடும்போது, காய் தவறிக் கீழே விழுந்துவிட்டால், வேறு ஒரு பெண் ஆடுவாள். ஒருத்தி ஆடுவதும், பலர் சேர்ந்து பந்தயம் போட்டு ஆடுவதும் உண்டு. பெரும்பான்மையாக மூன்று பெண்கள் சேர்ந்து ஒருவர்பின் ஒருவராக ஆடுவது வழக்கம். இப்படி அம்மானை ஆடும்போதுபாட்டுப் பாடிக்கொண்டே இருப்பார்கள். அதற்குத்தான் 'அம்மானைப் பாடல்' என்று பெயர் வழங்கப்படும். அதனை 'அம்மானை வரி' என்றும் கூறுவர்.

கலம்பகத்தில் ஓர் உறுப்பாக வரும் அம்மானைப்பாடலை மூன்று பெண்கள் பாடுவர். முதற்பெண் ஒரு செய்தியைச் சொல்ல, இரண்டாமவள் அதில் ஒரு வினாவை எழுப்ப, மூன்றாமவள் அதற்கு விடை கூறுவாள். அதில் சிலேடை நயமும், சிந்தனையைத் தூண்டும் செய்தியும் அமைந்திருக்கும்.

சைவக்குரவர்களுள் செஞ்சுடராகத் திகழ்பவர் சிவப்பிரகாச சுவாமிகள். வெண்சுடராக ஒளிர்பவர் குமரகுருபர சுவாமிகள். பதினான்குக்கும் மேற்பட்ட நூல்களை இயற்றிய குமரகுருபர சுவாமிகள் மதுரைக் கலம்பகம், காசிக் கலம்பகம் என இருகலம்பக நூல்களைப் பாடியுள்ளார். கைலைக் கலம்பகமும் உள்ளது. இரண்டில் அம்மானைப் பாடல்கள் உள்ளன. அவை படித்து இன்புறத்தக்கன.

மும்மூர்த்திகளுள் பிரமதேவருக்கும் திருமாலுக்கும் காண்பதற்கு அரிய வராய் விளங்கியவர் சிவபெருமான். அவர் மதுரையம்பதியின் தலைவர் 'சித்தன்'என்பவனுடையஉடலைவெட்டி வெற்றிச் சின்னங்களை அணிந்தவர் சிவன்-என்றாள் ஒரு பெண். அதற்கு இரண்டாவது பெண், சித்தன் உடலை வெட்டிய சிவன் மட்டும் இரு பாகங் களாகக் காட்சியளிக்கிறானே! ஓர் உடம் பில் இரு கூறுகள் உள்ளனவே என்கி றாள். அதற்கு மூன்றாமவள் 'சிவன் இரு கூறாகக் காட்சியளித்தாலும் அதில் காயம் ஒன்றும் இல்லையே' என நகைச் சுவை ததும்பக் கூறுகிறாள்.

'விருதுகட்டி அங்கம் வெட்டி வென்றனர்
காணம்மானை'—என்னும்

தொடரால் குமரகுருபர சுவாமிகள் இறைவனின் திருவிளையாடலைக் கூறி யுள்ளார்

சிவத்தொண்டிலும், பக்தியிலும், வீரத்திலும் சிறந்து விளங்கியவரைக் குருவாகக்கொண்ட மாணவனேசித்தன். அவன் தன் ஆசிரியரின் அளவு கடந்த பெருமைகள் மீது பொறாமை கொண் டான். அவருக்குப் போட்டியாகத்தானும் ஒரு கருவிக் கூடம் உண்டாக்கிச் சில ருக்குக் கற்பித்து வந்தான் இதன் நோக்கமே அவனது ஆசிரியரின் வரு வாயைக் குறைக்க வேண்டும் என்பதற் காக. அது மட்டுமன்றி வேறு பல தீங்கு களையும் குருவுக்குச் செய்தான். அது கண்டு உள்ளம் பொங்கினார் கருணைக் கடவுளான மதுரைச் சோமசுந்தரனார். சித்தனின் ஆசிரியர் வடிவம் பூண்டு, சித்தனோடு போரிட்டு அவனது உடலை வெட்டி வென்றார். இவ்வாறு வென்ற வரின் உடம்பில் இருகூறு இருக்கலாமா? என்பது இரண்டாமவளின் வினாவாக அமைகிறது. அதற்கு மூன்றாமவளின் கருத்து விடையாக வெளிப்படுகிறது.

இருவருக்குங் காண்பரியஈசர்மது ரேசனார்
விருதுகட்டி யங்கம் வெட்டி வென்றனர்
காணம்மானை!
விருதுகட்டி யங்கம் வெட்டி வென்றனரே
யாமாகில்
அருமையுடம் பொன்றிருகூ றாவதேன்
அம்மானை!
ஆனாலும் காயமிலை யையரவர்க்கு
அம்மானை'!

அர்த்தநாரீஸ்வரராகத் தோன்றும் சிவன் உடம்பில் காயமில்லை என்ற கருத்துத் தெளிவாகிறது.

அம்மானை ஆடல் வழி குமரகுரு பர சுவாமிகள் கூறும் கருத்துக்கள் பன் முறை படித்துச் சிந்திக்கத்தக்கன; கருத்துச் செறிவும் கற்பனை வளமும் மிக்கன; நாளும் ஓதி உணர்ந்து இன் புறும் திறத்தன! (மதுரைக் கலம்பகம்)

குமரகுருபரரின் அருட்பனுவல்

"ஞானத்திறன்"

(முனைவர். ச. கங்காதரன், சைவ சித்தாந்த தத்துவத் துறை,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.]

ஞானம் சைவ சித்தாந்தத்தில் வீடு பேற்றுக்கு நேர்ச் சாதனம் எனப் படுகிறது. ஞானம் என்பது உயிரின் அறிவு அளவில் பொருள்களின் தன்மையைத் தெளிவாக உணர்வதை மட்டும் குறிக்காது. ஞானம் என்பது அறிவுத் தெளிவில் ஆரம்பித்து, அறிவுத் தெளிவின் பயனாக உணர்ந்த உண்மையை இதயத்தில் உணர்ந்து, நம் வாழ்வில் வெளிப்படும்போதுதான் ஞானம் முழுமையாகிறது. பரஞானம், அபரஞானம் என்று இருவகையாக ஞானம் உபநிடதங்களில் பிரிக்கப் பெறுகிறது.

'அனுபவ வழி' எழும் அறிவியல் கொள்கைகளும் கலைப் பிரிவுகளும், புனித அறிவினால் குறிக்கப் பெறும் அழியும் இயல்புடைய பொருள்களும், நுகர்வுகளும்அபரஞானத்துள்அடங்கும். நான்கு வேதங்களும் அபரஞானத்துள் அடங்கும். நாரதர் கலைக் களஞ்சியம் போன்ற விரிந்த அறிவு உடையவர்; உலக இயலையும், ஆன்ம இயலையும் ஒருங்கே அறிந்தவர். ஆயினும் அவர் துன்பத்தால் பாதிக்கப்படுவதாக உபநிடதத்தில் குறிப்பு வருகிறது. சனத்குமாரர் நாரதருடைய அறிவு அனைத்தும் பெயரளவில் அமைந்து உள்ளதாகக் கூறுகிறார். அழியாதது (அக்ஷரா) பற்றிய அறிவே உயர்ஞானமாகும்.

பரஞானம் 'கேளாதன எல்லாம் கேட்பிப்பது', 'சிந்திக்கப் பெறாதனவெல்லாம் சிந்திக்கச் செய்வது,' 'அறியாதனவெல்லாம் அறியச் செய்வது' 'அடி நிலை அறிவு' என்றெல்லாம் விளக்கப்படுகின்றது, உமாபதி சிவம் சிவப்பிரகாசத்தில் உயர்ஞானம் இருவகை என்று, அருள்கிறார். நம்மைத் துன்புறுத்தும் ஆணவ மலம் அகலுமாறு நம்முடனே எப்போதும் உடனிருந்து அறிவித்துவரும் நிலைபெற்ற அறிவு வடிவான திருவருள் ஒன்று, மற்ற ஒன்று அந்தத் திருவருளை நாம் பெறுமாறு உதவுகின்ற சிவாகமங்கள்.ஆகவே சிவாகமங்கள் நம் வாழ்வை நன்முறையில் மாற்றும் தன்மை பெறும்போதுதான் பரஞானமாகிறது. பரஞானம் என்பது இவ்வாறு வாழ்வை மாற்றும் ஞானம் (*transformative knowledge*) என்று கூறலாம்.

இன்ப துன்பங்களை நுகருமாற்றால் உயிர்களின் வினை பக்குவப்பட்டுச் சிறிது நல்ல காலம் வந்ததும், ஏணிப் படிகள் போல அமைந்துள்ள புறப்புறம், புறம், அகப்புறம் என்னும் சமய நெறிகளில் அடைந்து ஈடுபாடு கொள்ளும்படி செய்து பலவகை விரதங்கள், பிரம்மசரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்னும் ஆச்சிரமங்கள் முதலியவற்றைக் கடைப்பிடிக்கச் செய்து, உயிர்

களைப் படிப்படியே சரியை, கிரியை, யோகம்என்னும்சாதனங்களிற்செலுத்தி, சாலோகம், சாமீபம், சாரூபம் என்னும் பதமுத்தி இன்பங்களை, உயிர்கள் பெறு மாறு செய்பவன் முருகன் என்பதை,

''..... பக்குவத்தால்
நற்காரணஞ் சிறிது நண்ணுதலும்- தர்க்க மிடும்
தொன்னூல் பரசமயந்தோறும் அதுவதுவே
நன்னூல் எனத் தெரிந்து நாட்டுவித்து — முன்னூல்
விரதமுதலாய பல மெய்த்தவத்தின் உண்மைச்
சரியை கிரியா யோகம் சார்வித்து- அருள் பெருகு
சாலோக சாமீப சாரூபமும் புசிப்பித்து
ஆலோகந்தன்னை அகற்று வித்து''

என்று குமர குருபரர் கூறுகிறார். இப் பகுதியில் 'ஆலோகந்தன்னை விரிவித்து' என்னும் தொடரால் பரஞானத்தை அருள்கிறார். இப்பரஞானத்தை அடை வதற்கு வாயிலாக இருப்பவை சரியை, கிரியை, யோகம் என்பதும் புலனாகிறது.

இவ்வாறு அரிதில் பெற்ற ஞானம் நிலையாக நம்மிடம் இருக்கவேண்டில் அடியார் உறவே இன்றியமையாதது என்பதை

ஒழுக்கமுடன் இம்மைப்பிறப்பில் இருவா தனை யகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத்— தம்மை விடுத்து
ஆயும் பழைய அடியாருடன் கூட்டித்
தோயும் பரபோகம் துய்ப்பித்துச்—சேய
கடியேற்கும் பூங்கமலக் கால் காட்டி— ஆட்கொண்டு
அடியேற்கு முன்னின்றருள்''

என்று கந்தர் கலிவெண்பாவின் இறுதிப் பகுதி மூலம் தெளிவாக்குகிறார். 'பழைய அடியாருடன் கூட்டி' என்னும் தொடர் அணைந்தோர் தன்மையைக் கூறும் சிவ ஞான போதப் பன்னிரண்டாம் சூத்திரத் தை நினைவூட்டுகிறது.

''ஆலோகந்தன்னை அகற்றுவித்து'' என்று 20வது கண்ணியில் வரும் தொட ரை ''தம்மை விடுத்து'' என்று வரும் 121வது கண்ணியில் வரும் தொடரோடு இணைத்துப் பொருள் கொள்ள வேண் டும். உயிரின் அறிவு விளக்கம் முத்திக்கு அடிப்படையாக அமையினும்,பசுஞானத் திலிருந்தும் நீங்குவதே சிவஞான முத் திக்கு வழி என்பதையும் கந்தர்கலிவெண் பாவின் மூலம் குமரகுருபரஅடிகள் தெளி வாக்குகிறார்.

தமது குருவாகிய மாசிலாமணி தேசிகர் குருவாக எழுந்தருளி மும்மலக் கிழங்கை அகழ்ந்தெடுக்கிறார் என்பதை

''சாயா மும்மலச் சகலரே முய்ய
எம்முருக்கொண்டும் எம்மொடுபயின்றும்
மும்மலக் கிழங்கை முதலொடு மகழ்ந்து
சிற்பர முணர்த்தும் சற்குரு ராய'

என்று பண்டார மும்மணிக் கோவை (30)ல் தெரிவிக்கிறார். மேலும்,

''மான் இடனாய வடிவுகொண்டருளாது
மான்இடனாய வடிவு கொண்டருளி
எற்பணி பூணாது எற்பணி பூண்டு
பாரிடஞ் சூழாது பாரிடஞ் சூழ்தர
ஆரூரமர்ந்த ஞான சம்பந்த
நிற்புகழ்ந்திறைஞ்சும் கற்பின் மாக்கள்
விருப்பு வெறுப்பு அற்றிருப்பர் என்ப''

பண்டார மும்மணிக் கோவை (14)ல் அருளுகிறார். இப்பாடலில் சிவபிரான் தான் குருவாக வருகின்றார். என்னும் செய்தியுடன் ''கற்புடை மாக்கள்'' என்று வரும் தொடரின் ஆழ்ந்த பொருளை நோக்க வேண்டும். தலைவனின் நோக் கம் அறிந்து தலைவி நடப்பது தமிழ்

மரபு ''யான் எனது என்று அற்ற இடமே திருவடியா'' என்று கந்தர் கலிவெண் பாவில் அடிகள் அருள்கின்றார். இறை வனாகிய தலைவன் ஒருவன் முன் ஆண், பெண் ஆகிய அனைவரும் தலைவியாக நிற்பவரே. ஆகவே தலைவனின் நோக் கை அறிந்து, அவன் அருள் வழி நடக் கும் தன்மையுடையவரை ''கற்புடை மாக்கள்'' என்று குமரகுருபர அடிகள் கூறும் ஞானத்திறம் சிந்தித்துச்சிந்தித்து நாம் கடைபிடிக்கும் தன்மை வாய்ந்தது. கற்புடை மாக்கள் என்னும் தொடர்க்குக் கல்வியையுடைய மக்கள் என்று கூறும் போது, யான் எனது என்னும் செருக்கு நீங்கும் கல்வியே உயர்ந்த கல்வி என்ப தும் ஈண்டு எண்ணற் பாலது

பண்டார மும்மணிக் கோவையின் 11வது பாடலின் முற்பகுதியில் ஞானா சிரியரை உழவனாக உருவகம் செய்கி றார். குடிலை என்னும் வளமான வய லில் அருள் என்னும் வித்தையிட்டு, கரு ணையாகிய நீரைப் பாய்ச்சி வேதம் என் னும் மரத்தை ஞானாசிரியர் வளர்க்கி றார். அவ்வேதமாகிய மரத்தில் இலை, தளிர், அரும்பு, மலர், பிஞ்சு, காய் முதலிய பல பொருள்கள் தோன்றுகின் றன. பலர், இவற்றில் சிலவற்றை விரும்பி உவந்தனர். வேதத்தின் முழு மையை அறிந்த சிலர் வேதாந்தமென்று உச்சியிற் பழுத்த அருங்கனியின் சுவை யாகிய சைவ சித்தாந்தத் தேனமுது அருந்துபவர் என்று அடிகள் பின்வரு மாறு அருள்கிறார்.

''குடிலை என்னுந் தடவயல் நாப்பண்
அருள் வித்திட்டுக் கருணைநீர் பாய்ச்சி
வேதமென்னும் பாதவம் வளர்த்தனை;
பாதவ மதனிற் படுபயன் பலவே,
அவற்றுள்
இலை கொண்டுவந்தனர் பலரே இலை
ஒரீஇத்
தளிர்கொண்டு உவந்தனர் பலரே தளிர்
ஒரீஇ
அரும்பொடு மலர் பிஞ்சு அருங்கா
யென்றிவை
விரும்பினர் கொண்டு கொண்டுவந்தனர்
பலரே
அவ்வாறுறுப்பும் இவ்வாறு பயப்ப
ஒரும் வேதாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆரா இன்ப அருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவ சித்தாந்தத்
தேனமுது அருந்தினர் சிலரே''

என்று அருள்கின்றார். இத்தகு நன்னி லைபெறுதற்கு நான் அன்னியனாயினும் குருவின் கமலப் பொன்னடி விளக்கிய தீம்புனல் அமுதம் உண்டதனால் விண் ணவர் அமுதமும் வேம்பெனக் கருதும் தன்மை எனக்கு உண்டாயிற்று என்று மேலும் கூறுகிறார்.

இவ்வாறு வரும் சைவ சித்தாந்த ஞானத்தைப் பெற்ற பயன் இறைவன் எங்கும் இருக்கின்றான், நம் செயல்கள் எல்லாவற்றையும் கண்டு வருகின்றான் என்னும் உள்ளத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்னும் உண்மையை,

''வஞ்சித்தொழுகும் மதியிலிகாள்
யாவரையும்
வஞ்சித் தோமென்று மகிழன்மின்—
வஞ்சித்த
எங்கும் உளன் ஒருவன் காணுங்கொல்
என்றஞ்சி
அங்கங் குலைவது அறிவு''

என்று நீதிநெறிவிளக்க 94வது பாடலில் தெளிவுறுத்துகிறார்.

திருவள்ளுவர் மெய்யுணர்தலைப் பற்றிக் கூறும் போது நிலையாமை,

துறவு, மெய்யுணர்தல் என்று வகைப்
படுத்தி மெய்யுணர்தலின் பயன் அவாவ
றுத்தல் என்று முடிக்கின்றார். குமரகுரு
பரரும் சிதம்பர மும்மணிக்கோவை
29வது செய்யுளில் 'செல்வம் என்பது
சிந்தையின் நிறைவு' என்னும் உண்மை
யை இலக்கிய நயம்பட எடுத்துரைக்
கிறார். இருநிலம் புரக்கும் பெரு வேந்
தனாயினும் தன்னைவிடச் செல்வமும்
செல்வாக்குமுடைய வேந்தனைக் கண்டு
பெரிய தன் செல்வமும் சுருங்கி அவனுக்
குத் தோன்ற, பொறாமை கொண்டு
சுவையான உணவு, மங்கை நல்லாளு
டன் வாழும் இன்பவாழ்வு, அமைதியான
உறக்கம் முதலியவற்றையும் இழந்து
துன்புறுகிறான். விறகு விற்று ஊர்தொ
றும் சுமந்து திரியும் ஏழை கூழ், கீரை
ஆகிய எளிய உணவுகளை உண்டும்
தனக்கிணையெல்லை என்று மனக்
களிப்புடன் வாழ்கிறான்.

இவ்வுண்மையை,

" .....
இருநிலம் புரக்கு மொரு பெருவேந்தன்
மிக்கோ னொருவன் வெறுக்கை
நோக்குழித்
தொக்கதன் வெறுக்கை சுருங்கித்
தோன்ற
இழப்புறு விழும் மெய்தி யழுக்கறுத்து
மற்றது பெறுதற் குற்றன தெரீஇ
அயிற்சுவை பெறாஅன் துயிற்சுவை
யுறாஅன்
மாணிழைமகளிர்தோள் நலங் கொளான்
சிறுகாற்று வழங்காப் பெருமுச் செறிந்து
கவலையுற் றழி வதூஉங் காண்டும்;
விறகெடுத்
தூர் தொறுஞ் சுமந்து விற்றுக் கூலி
கொண்டு
புற்கையு மடகுமாந்தி மக்களொடு
மனையும் பிறவு நோக்கி அயன்மனை
முயற்சியின் மகனை இழித்தனன் எள்ளி
எனக்கிணை யிலையென வினையன்
மற்றொருவன்
மனக்களிப் புறீஇ மகிழ்வதூஉங்
காண்டும், அதனால்
செல்வமென்பது சிந்தையின் நிறைவே;
அல்கா நல்குரவு அவாவெனப்படுமே;
ஐயுணர் வடக்கிய மெய்யுணர் வல்லதை
உவாக் கடல் சிறுக உலகெலாம்
விழுங்கும்
அவாக் கடல் கடத்தற் கரும் புணை
யின்றே,''

என்று அருள்கின்றார்,

குமரகுருபர அடிகள் ஞானத்தினைத்
தம் அருட்பனுவல்களில் பலவாறு
எடுத்தி விளக்குகிறார். இலக்கிய நயமும்,
சித்தாந்தச் செறிவும் கொண்டு விளங்கும்
அடிகள் அருளிய பனுவல்கள் நம் வாழ்க்
கையை நன்கு நடத்த உதவும் கருத்துக்
கருவூலங்கள் எனின் அது மிகையாகாது.
தனியொரு துறவியாய் வடபுலம் சென்று
தமிழ் நாகரிகத்தையும், பண்பாட்டையும்
கோயில், மடம் முதலியன நிறுவுவதன்
மூலம் வெளிப்படுத்திய அடிகட்கு அடிப்
படையாக அமைவது அடிகளின் ஞானத்
திறமே என்பதில் ஐயமில்லை.

திருச்சிற்றம்பலம்

அருந்தமிழ் வளர்த்த அறத்திரு குமரகுருபரர்

(டாக்டர். நாவலர். இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.,டி.லிட்.,)

நறைபழுத்த துறைத்தீந்தமிழின் ஒழுகும் நறுஞ்சுவை சொட்டச்சொட்ட, பனுவல்கள் பல இயற்றி, அருந்தமிழ் அறிந்த, நற்றமிழ்ச் சான்றோர் பலரும் சிந்தை இனிக்க, செவி இனிக்க, இலக்கிய இன்பத்தை நுகர, வழிகாட்டி விட்டுச்சென்ற பெரும்புலவர் அறத்திரு குமரகுருபர அடிகளாரின் 300-வது நினைவுநாள், சிறப்புறக் கொண்டாடப் பெறுவது அறிய பெருமகிழ்ச்சியுறுகிறேன்.

அறத்திரு குமரகுருபர அடிகளார் தமிழ்மொழி ஆக்கத்திற்கும், சிவநெறி ஆக்கத்திற்கும் ஆற்றிய அரும்பெருந் தொண்டுகள் அளப்பரியனவாகும். ஐந்து வயதுவரைப் பேச்சுத்திறன் பெறாமலேயே, பெற்றோர்க்கும், உற்றார். உறவினர்க்கும் பெருங்கவலையைத் தந்து கொண்டிருந்த அடிகளார், ஐந்து வயதுக்கு மேல் பேச்சுத்திறன் வரப் பெற்று, கல்விகேள்விகளிற் சிறந்து, கவிபாடுவதில் வல்லவராகித் திகழ்வதைக்கண்ட பெற்றோர் உள்ளிட்ட எல்லோரும் பெருமகிழ்ச்சியும், பெருவியப்பும் கொள்ளத்தக்க அளவுக்கு ஓங்கு புகழ் எய்தி விளங்கினார். பழம் பெரும் இலக்கண —— இலக்கிய நூல்களையெல்லாம் கற்று, அவற்றில் பெரிதும் தோய்ந்து தேர்ந்து காணப்பட்டார். அவரது சிந்தனை ஆற்றலும், சொல்லாற்றலும், கற்பனை ஆற்றலும், கவி பாடும் ஆற்றலும் தமிழறிஞர்கள் அனைவரும் போற்றிப் புகழும் அளவுக்கு ஈடும் எடுப்பும் அற்றனவாக விளங்கின.

அடிகளார் இயற்றிய கந்தர் கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், கைலைக் கலம்பகம், மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம், திருவாரூர் நான் மணிமாலை, முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை, சிவகாமியம்மை இரட்டைமணிமாலை, பண்டார மும்மணிக்கோவை, காசிக்கலம்பகம், சகலகலாவல்லிமாலை முதலிய நூல்கள் சொல்லுக்குச்சொல் சுவையும், பொருளுக்குப் பொருள் ஒளியும், அடிக்கு அடி ஓசைநயமும், கவிதைக்குக் கவிதை கற்பனை வளமும் பெற்றுத் திகழ்வனவாகும்.

மதுரையில், அறத்திரு குமரகுருபர அடிகளார் ''மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழை'' அரங்கேற்றம் செய்த அரங்கைப் பற்றிக் கூறவந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள்.

'' அரங்கிடை அரசன் ஓர்பால்,
அறிஞர்கள் ஓர்பால், கேட்கத்
தெரிந்தவர், கலையில் வல்லோர்
செந்தமிழ் அன்பர் ஓர்பால்
இருந்தனர்! அரி யணைமேல்
இருந்தனன் குரு பரன்தான்!
வரும் மக்கள் தமிழருந்த
வட்டிக்க ஆரம் பித்தான்!''

என்று அடிகளாருக்கு அரசன் அளித்த மதிப்பைக் கூறுகிறார்.

'பிள்ளைத்தமிழ்' என்ற அந்த நூலை அரங்கேற்றி முடித்த அடிகளாருக்கு, அரசன் திருமலைநாயக்கன் செய்த சிறப்புப் பற்றிக் கூற வந்த புரட்சிக்கவிஞர்,

''முழுதுநூல் அரங்கேற்றிப் பின்
முடிமன்னன், குதிரை யானை,
பழுதிலாச் சிவிகை செம்பொன்
காணிக்கை பலவும் வைத்துத்
தொழுதனன், குருபரன் பின்
துதிநூலும் நீதிநூலும்
எழுதிய அனைத்தும் தந்தே
சின்னாட்கள் இருந்து''

என்று குறிப்பிடுகின்றார்.

அறத்திரு குமரகுருபரர் திருச்சி, திருவானைக்காவல், திருவாரூர், தருமபுரம், சீர்காழி, சிதம்பரம். காசி ஆகிய ஊர்களில் தங்கிப் பாமாலைகள் பலதொடுத்த வரலாறும் தருமபுரத்தின் பெரிய மடத்தில் அவர் துறவறம் பூண்ட வரலாறும், தமிழின் சிறப்பையும், அவரது கொள்கையான சிவநெறியின் மேன்மையையும் வடநாட்டுப் பகுதியில் பரவிடச் செய்ய அவர் காசிக்குச் சென்று அங்கு முயன்ற வரலாறும், அவர் இந்துஸ்தானி மொழியைக் கற்றுத் தேர்ந்து, சிங்க ஏற்றின்மேல் அமர்ந்து சென்று, டில்லிப் பேரரசனைக் கண்டு, பேசி, தம் அறிவாற்றல் திறமைகளை வெளிப்படுத்தி, அவனால் மிகவும் பாராட்டப் பெற்ற வரலாறும் தனிப்பெருஞ் சிறப்பு வாய்ந்தனவாகும்.

வடநாட்டிற்குத் துணிந்துசென்று, டில்லி பாதுஷாவிடம் தம் அறிவாற்றல திறமைகளை வெளிப்படுத்தி, வென்று நின்ற தமிழ்ப்பெரும்புலவர் குமரகுருபரரைத் தவிர வேறு யாரும் இல்லை. சிங்க ஏற்றை அடக்கி அதன்மீது உட்கார்ந்து, வீறுடன்சென்ற புலவரும் அவரைத்தவிர வரலாற்றில்வேறுயாரும் இல்லை. தமிழ் தழைக்கவும், அவர் விரும்பிய சிவநெறி ஓங்கவும் காசியில் மடம் ஒன்றினை எழுப்பிய பெருமையும் அவரையே சாரும்.

அறத்திரு குமரகுருபரரின் அருந்தமிழ்ப் பாக்களில், பொதிந்து கிடக்கும் ஓசைநயம்——சொற்சுவை——பொருட்செறிவு——கற்பனைவளம்——நடை ஓட்டம் போன்ற அழகுகள் எப்படி மிளிர்கின்றன என்பதற்கு ஒரு சில எடுத்துக் காட்டுக்கள் மட்டும் வருமாறு:-

'' பழம் பாடல், தொடையின் பயனே!''

'' நறைபழுத்த, துறைத்தீம் தமிழின்
ஒழுகும்நறும், சுவையே!''

'' அகந்தைக்கிழங்கை அகழ்ந்து,
எடுக்கும் தொழும்பர் உளக்
கோயிற்(கு),ஏற்றும்விளக்கே!''

'' ஏறிதரங்கம், உடுக்கும் புவனம்
கடந்துநின்ற, ஒருவன்
திருவுள்ளத்தில் அழகொழுக,
எழுதிப் பார்த்திருக்கும்,
உயிர்ஓவியமே!''

'' மதுரகம்வாய், மடுக்கும் குழற்காடு
ஏந்தும் இளவஞ்சிக்கொடியே!
வருக வருகவே!''

'' கொழி தமிழ்ப்பெருமை யாரறிவார்''

'' நறவு கொப்பளிக்கும்
பனிமலர்க் குழலியர்''

'' இளம்பரிதி நூறா யிரங்கோடி போல,
வளந்தரு தெய்வீக வடிவும்''

'' தேனூறு கிளவிக்கு
வாயூறி நின்றவன்''

'' அழகு கனிந்து முதிர்ந்த இளங்கனி''

'' தோலாத முத்தமிழ் நாவா''

'' துளிதூங்கு மழைமுகிற் படலம்
கிழிக்கும், துகிற்கொடிகள்
சோலை செய்யத், தோரண
முகப்பிற் றவழ்ந்தேறு
கலைமதித் தோற்றம்''

'' இழுமென் அருவி சொரியும் இமயம்''

'' இயலும் நடையும் வடிவும் அழகும்
எழுத அரியன்''

'' அளிக்கும் செழுந்தமிழ்த்
தெள்ளமுது ஆர்ந்து''

'' தெள்ளித் தெளிக்கும் பனுவற்
புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே!''

சுவைதரும் செந்தமிழை அள்ளி அள்ளித் தமிழ்ப்பெருங்குடி மக்களுக்கு ஊட்டிய, அறத்திரு குமரகுருபர அடிகளாரின் முந்நூறாவது ஆண்டு நினைவு விழாவைக் கொண்டாடுவதன் மூலம், தமிழ்மொழி செழித்தோங்கி வளருமாக! தமிழ்ஆர்வம் நாடெங்கணும் பரவுமாக! தமிழ்ப்பண்பாடு தமிழ் மண்ணில் நிலை பெறுமாக!

வாழ்க குமரகுருபரரின் புகழ்!

With Best Compliments from:-



Phone : 2433

S. T. Ponnusami Chettiar

Hand-Loom Silk & Lace Cloth Producers,

23-A, Mettu Street,
KANCHIPURAM-1.

குமர குருபரரின் சந்தச் சிறப்பு

டாக்டர் சி. வேங்கடசுப்பிரமணியன்,
எம். ஏ., பி. எல்., பி. டி., பி. எச். டி.,
துணைவேந்தர்,
புதுவைப் பல்கலைக் கழகம்,
புதுச்சேரி-605 001.

கற்பவர்களின் கருத்தினைக் கொள்ளை கொள்வன கவிதைகள். பின்னப்படும் சொற்களோ அன்றி சொல்லப்படும் பொருளோ சிறந்திருந்தால் மட்டும் போதாது. சொல்லும் பொருளும் இணைந்து செயல்படும் பொழுது தான் கவிதையானது உயர்நிலை அடையும், உயிரும் வாழும். மனிதர்களது மனமாற்றத்திற்கேற்ப கவிதைகளின் அமைப்பு முறையும் காலத்திற்குக் காலம் மாறுதலடைந்தே வருகின்றது. அவ்வகையில், 'சந்தப்பாக்களின்' வருகையினையும் கொள்ளலாம். செய்யுளின் வண்ணமாகிய சந்தம், கருத்துக் கேற்பவும், உணர்வுக்கேற்பவும், சுவைக்கேற்பவும், விளக்கத்திற்கேற்பவும், பல வித வேறுபாடுகளை உடையதாய்க் கவிஞர்களால் படைக்கப் பெறுகின்றது. பல்வித ஓசை வேறுபாடுகளை அது கொண்டிருப்பதால் பலராலும் விரும்பப்படுகின்றது. அத்தகைய ஓசைநயமுடைய பாடல்களைப் பாடுவதில் குமரகுருபரர் முதன்மையானவராய்த் திகழ்கிறார் எனலாம்.

முருகப்பெருமானின் அருளாசியைப் பெற்ற குமரகுருபரர், தம்முடைய பிள்ளைத் தமிழ் நூல்களிலும், கலம்பகங்களிலும் சந்தப்பாக்களையும். சந்தவேறுபாடுகளையும் உடைய பாடல்களையும் அமைத்து கருத்துச் செறிவினையும், உணர்வின் வேகத்தினையும் புலப்படுத்துகின்றார்.

குமரகுருபரரின் பாடல்களில் செவிக்கினிமை பயக்கும் விதத்தில் சந்தவிருத்தப் பாக்கள் பின்பற்றப்பட்டுள்ளன. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் மட்டும் பத்து சந்த விருத்தப்பாக்களை அமைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சந்த விருத்தம் :

சந்தக்குழிப்பின்படி அமைந்த பாடல்கள் சந்தவிருத்தப்பாக்களாகும். முருகதாசர் தமது வண்ணத்தியல்பு எனும் நூலில்,

''தத்தவும் தாத்தவும் தந்தவும் தாந்தவும்
தனவும் தானவும் தன்னவும் தய்யவும்
தாத்தா என்பதன் நீடலும் அடங்கும்
எண்வகைக் கூறின என்பார் பெரியோர்''
(முருகதாசர், வண்ணத்தியல்பு, ப. 3)

என்று எண்வகைச் சந்தங்களின் எழுத்தளவுகளைக் கூறுவர். குமரகுருபரர் சுவாமிகள் இவற்றிற்கும் மேலாகப் பாடுகின்றார்.

சந்த வேறுபாடுகள் :

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் பாடியுள்ள சில வேறுபாடுகளை மட்டும் இதில் காணலாம். மதுரை மரகதவல்லியினைக் காக்க சிவபெருமானை வேண்டுபவர்,

தனன தனதன தனன தனதன
தனன தனதன தய்யனத் தாத்தன

என்னும் சந்தத்தினை அமைத்து,

'சிகர வடவரை குனிய நிமிர்தரு
செருவில் ஒருபொரு வில்லெனக்
கோட்டினர்;

என்று பாடுவர். 'உச்சியையுடைய வடமலையாகிய மேருமலை வளையும்படி நேர்ந்த போரில் ஒப்பற்ற போர் செய்யத்தக்க வில்லாக வளைத்தவர் என்ற பொருளில் இச்சந்தத்தைப் பயன்படுத்தியிருப்பது சிறப்பாகும். அடுத்த பாடலிலேயே சந்தத்தினை மாற்றி,

தத்தன தானன தனனத் தனத்தன—
என்றமையும்படி,

கைத்தல மோடிரு கரடக் கரைத் திரை

என்ற பாடலை சித்தி விநாயகக் கடவுளைப் பரவிப் பாடுகின்றார். இச்சந்த வேறுபாட்டால் பொருளும் சிறக்கிறது, இனிமையும் பிறக்கின்றது.

முருகக் கடவுளினைக் காக்க விடுக்கும் அழைப்பிலும் சந்தத்தினை மாற்றுகின்றார்.

தனன தனத்தத் தனாதனத் தாத்தன
—எனும் சந்தத்தில்,

'பமரமடுப்பக் கடாமெடுத் தூற்றுமோர்'

எனப்பாடுவர். இவ்வகையில் பத்து சந்த விருத்தங்களையும் அமைத்துப்பாடியது மீனாட்சியம்மையினையே கவர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

குமரகுருபரர் அமைக்கும் அறுசீர், எழுசீர் சந்தவிருத்தங்களும் மிகுதியும் சிறப்புடையன.

அறுசீர்ச் சந்த விருத்தம் :

தான வெங்களி றோடு மிந்திரன்
சாப முந்தொலையா
மேனி தந்தகல் யாண சுந்தரர்
மேவு வண்பதியாம்
வானி மிர்ந்திட வாடு மொண்கொடி
வால சந்திரனும்
கூனி மிர்ந்திட வேநி மிர்ந்திடு
கூட லம்பதியே
—(மதுரைக் கலம்பகம் பா. 44)

எனும் பாடல்;

'தான தந்தன தான தந்தன
தான தந்தனனா :-

என்ற சந்தக் குழிப்பினைக் கொண்டு மதுரையம்பதியின் பெருமையினைப் பேசுகின்றது.

எழுசீர்ச் சந்த விருத்தம் :

குமரகுருபரர் எதுகை மோனை இவை இயைந்துவரப் பாடல்கள் யாப்பதில் மிகவும் வல்லவராக விளங்குபவர். ஏகார ஓகாரங்கள் கவிதையினை மிகச் சிறப்பாகச் செய்பவை. அவ்வகையில் ஓகாரத்தையும், ஏகாரத்தையும் பயன்படுத்தி எழுசீர்ச்சந்த விருத்தத்தினையும், எதுகை, மோனை இயையவும் இப்பாடலைஅமைக்கின்றார். அப்பாடல்வருமாறு:

'சிலையோ கரும்புபொரு
கணையோ வரும்புசிவ
சிவா வியொன்று முளதோ
இலையோ வறிந்திமாம்
மதனாண் மையென்புகல்வ
திதுவே தவம்பி றிதெனாம்
முலையே யணிந்தமுகிழ் நகையீ
ரொர்பெண்கொடியின்
முலையோ டுமுன்கை வளையால்
மலையே குழைந்திடுத
மிருதோள் குழைந்துறைநம்
மதுரே சர்தந்த வரமே''
—(மதுரைக் கலம்பகம் பா. 84)

இப்பாடலில்
தனனா தனந்தனன தனனா தனந்தனன
தனனா தனந்த தனனா
—என்ற சந்தக்குழிப்பு

அமைந்திருப்பது அறிந்து இன்புறத்தக்க தொன்றாகும்.

சந்தக்கலித்துறை :

பொதுவாகவே கலித்துறைப் பாக்கள் பொருள் நயம் உடையவனவாய் அமைவன. கவிப்பெருமானாரேரா சந்தக்கலித்துறையினையே அமைக்கின்றார்.

'தனதன தனதன தனதன தந்தானா'
என்னும் சந்தக்குழிப்பினை.

'வடகலை யலபல கலையொடு தமிழ்
வளருங்கடல்

எனும் பாடலில் அமைக்கின்றார். யாரேனும் தூது சென்று விளம்பின் நலமாகும் என்ற சொல்லுக்குத் தகுந்த 'இதய ஒலி' யினையும் சேர்த்தமைத்தாற்போல் உள்ள இப்பாடல் குமரகுருபரருக்கு உரிய தனிச்சந்த அமைப்பெனலாம்.

எதுகை மோனையினைச் சிறப்புடன் அமைக்கும் குமரகுருபரர் மீண்டும், மீண்டும் படித்துப் பரவசம் அடையத்தக்க முகமாக,

‘தோலாத முத்தமிழ் நாவா
மூவா மாவாமச்
சூர்வே ஏறத்தொடு வேலா
நூலா நூலோதும்
சிலாம லைக்கொடி பாலா
கீலா மேலாகும்
தேவாதி பற்கொரு தேவா
வோவா தேகவும்
காலாயு தக்கொடி வீரா
வேறா வேறேறும்
காபாலி பெற்றகு மாரா
வீரா பேராளா
சேலார்வ யற்குரு கூரா
தாலோ தாலேலோ
சேனாப திப்பெரு மாளே
தாலோ தாலேலோ’

எனும் பாடலில் பாடியிருப்பது மிகுந்த நயமுடையதாய் விளங்குகின்றது இப்பாடல்.

‘தானா தனத்தன தானா
தான தானான,

எனும் சந்தக் குழிப்பினைப் பயன்படுத்தி அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். ‘அடி’ — என்ற சொல்லினையும், முழ, மழ, என்ற சொல்லினையும் ஆசிரியர்

அடிக நெனவு னடிகள் பணியும்
அடிய ரலது மற்றும்வே
றமரர் குழுவு மகில மறையும்
அரியு மயனு முற்றுநின்
முடியு மடியு முணர வரிய
முதல்வ தருக முத்தமே
இனியர் பரவு படுதி புரியின்
முருக தருக முத்தமே’

—(முத்துக் குமாரசாமி பிள்ளைத்தமிழ்

என்ற பாடலில் அமைத்துள்ளார்.

இவ்வாறாகச் செவிக்கு இனிமையினை ஊட்டும் வண்ணத்திலும், கருத்தினையும் உணர்வினையும், பொருளினையும், பாடலது செறிவினையும் விளக்கும் தன்மையிலும் குமரகுருபரர், சந்தங்களையும், சந்த விருத்தங்களையும் தம்முடைய பாடல்களில் கையாண்டு இனிமைசேர்க்கிறார். இறை இன்பத் வெள்ளத்தில் மூழ்கடிக்கின்றார்.

With Best Compliments From :

Insist on WEST LINE for quality and durability of Full Pants, Half Pants, Jeans, Baggies, Export quality Shirts, Skirts etc.,

Jain Cloth Market
BELLARY-583101.
Ph. 2779, 4510

LOKSEVA DRESSES.
Hind Apparels,
West Line.

புறத்திணை அமைதி

கவிஞர். மு. வேங்கடேசன், தமிழாசிரியர்,
சபாநாயக முதலியார், இந்து மேல்நிலைப் பள்ளி,
சீர்காழி.

ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் இறையருள் பெற்ற மகாகவி. அடிகளவர்கள் அருளிச் செய்த பாடல்கள் காலத்தை வென்று ஞாலத்தில் நிலைத்து நிற்கக் கூடியவை. அவை பக்திச் சுவை நிறைந்த பனுவல்கள்; கற்பனை வளமிகுந்த கவிதைகள். மல்லிகை மலர்ச் சரங்கள் போல மெல்லிய சொற்களாலான கவிச் சரங்கள்! சீலமெல்லாம் நிறைந்திருக்கும் அந்தச் செந்தமிழ்க் கருவூலத்தைக் காலமெல்லாம் போற்றிக் கற்றுக் கொண்டே இருக்கலாம். சுவாமிகளின் பிரபந்தங்களில் காணப் பெறும் அகத்திணையியல், புறத்திணையியல் செய்திகள் ஏராளம், ஏராளம் அவற்றுள் ஓரிரு புறத்திணையியல் செய்திகளை இங்குக் காணலாம்.

புறத்திணைகளுள் ஒன்றாவது காஞ்சித் திணையாகும். மகட்பாற்காஞ்சி என்பது அதன் துறைகளுள் ஒன்றாகும். மன்னன் ஒருவன் மறவனிடம் பெண் கொள்ளத் தூது விடுப்பான். மறவரோ அந்தத் தூதை மறுத்துத் துச்சமாக இகழ்ந்து பேசுவர். இது கலம்பக நூல்களில் 'மறம்' என்னும் உறுப்பாகப் பேசப்படும்.

'ஏந்திழையாள் தருகென்னும்
வேந்தனொடு வேறுநின்றன்று' என்று

இதனை வெண்பா மாலை ஆசிரியர் கொளுவாகச் சுவைபடச் சுருங்கக் கூறுகின்றார்.

இத்துறைப் பொருளை ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் மதுரைக் கலம்பகத்தில்

'தருமுகத்து நிமிர் குடுமி' எனத் தொடங்கும் பாடலில் நயம்படப் படைத்துள்ளார்.

கற்பகத் தருவின் உயர்ந்த மாடங்களையுடைய மதுரை சவுந்தர பாண்டியர் குடியாகிய எம்மிடத்துப் பெண்கேட்டு வந்து உயிரிழந்த மன்னர் பலவராவர். இப்போது திருமுகம் எழுதித் தந்து இவனை அனுப்பிய மன்னவன் யார்? அவன் தலை எழுத்தையும் படித்துப் பார்ப்போம். 'வீரனே! நீ சென்று அவன் தலையரிந்து, சிகைப் பிடித்துத் தூக்கிக் கொண்டு வா' என இகழ்ந்துரைக்கும் திறம் வியக்கற்பாலது.

இவ்வாறே காசிக் கலம்பகத்தில் 'வைய முழுதும் ஒருங்கீன்ற' என்னும் பாடலில் பெண் கேட்ட அரசனின் கண்ணைத் தோண்டி, மூக்கையும் கன்னத்தையும் காதையும் அரிவோம் எனச் சூளுரைப்பதும் படித்துச் சுவைக்கத் தக்கதாகும்.

சுவாமிகள் யாத்த இலக்கிய மணிகளுள் தலையாயது மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழே எனில் அது மிகையாகாது. இந்நூல் சொல் வளமும் பல்சுவையும் ஒருங்கே அமையப் பெற்றது. பழந்தமிழ்ப் புலவர்கள் பேணிக் காத்த அகத்திணை, புறத்திணை அமைதிகளை ஆங்காங்கே தன்னகத்தே கொண்டு சிறப்புற்று நிகரற்று விளங்குவது.

சான்றாக இந்நூலில் கண்ட சேனாபராகம் என்னும் அமைதி ஒன்றனைக் காணலாம்.

எழிலார்ந்த சோலை. பெரு மரங்களும் குறும்புதர்களும் வேனிலின் மாநலம் விளங்கப் பூத்துக் குலுங்குகின்றன. பூத்த மலர்களின் தேன் பொய்கைகளிலே வண்டினங்கள் நீந்த மடிக்கின்ற நேரம். மீனாட்சியம்மை தன் தோழியரோடு அழகு மரநிழலில் அமர்ந்து அம்மானை ஆடுகிறாள். தன் தோழியர் பெருங் கைகளினாலே ஆடிய முத்து முத்தான

அம்மானைக் காய்களை மீனாட்சியம்மை தன் சிறு மலர்க் கைகளினாலே இடசாரி, வலசாரி யாக மேலேழுமாறு வீசி வீசி விளையாடு கிறாள்.

அது கண்டு மலர்களில் தேனை மாந்தி யிருந்த வண்டினங்கள் அஞ்சுகின்றன. அவை ஆரவாரத்துடனே எழுந்து பறக்கின்றன. அது போது மலர்களிலிருந்து வெளிப்பட்ட மகரந்தத் தூள்கள் படலமாக எங்கும் பரந்து இவ்வுல கையே இருளச் செய்கின்றன. அம்மை வளர வளர அவரால் தமக்கு என்ன ஊறு நேருமோ? என அவரிருக்கும் திசையையே நோக்கி நின்ற குபேரபுரியினரும், தேவலோகத்தினரும் மண் ணுலகையே தங்கள் பார்வையினின்றும் மறைத்துவிட்ட மகரந்தப் படலத்தைக் காண் கின்றனர்.

முன்னொரு சமயம் அம்பிகை திக்கு விஜயம் செய்த காலத்தில் அவர் சேனைக்கு முன் எழுந்த தூசுப் படலம்போல் தோன்று கிறதே, மீண்டும் மீனாட்சி படை எடுத்து வருகின்றாரோ என அஞ்சினர்.

இக்கருத்தமைந்த சொற்செட்டு மிக்க சுவையான பாடலைக் கற்றுக்களிக்கலாம்.

இன்னும் இவை போன்ற புறப்பொருள் இலக்கணவமைதியுள்ள பாடல்கள் நிறைய உண்டு. அப்பாடல்களைக் கண்டு கற்றால் பெருத்த மகிழ்வுற்றிடலாம்.



அடியார் பக்தி

டாக்டர். சாமி. தியாகராசன்
தமிழ்த்துறை
அரசு ஆடவர் கல்லூரி, கும்பகோணம்.

ஆதியும் அந்தமும் மாலயனுக்கு அருளாதார் எளிவந்து இரவுப் பொழுதில் இரண்டு முறை தூது சென்று தொண்டரை ஆண்ட திறம் பற்றிப் பேசுவோர் ஒரு பக்கமும்; பரவையின் புலவி தீர்க்கப் பரமனையே தூது செல்லச் செய்த நம்பியின் தோழமைத் திறம் பற்றிப் பேசுவோர் ஒரு பக்கமுமாக அந்தண் பழனத்து அணியாரூர் வாழ்வோர் அன்று இரண்டு அணியாகப் பிரிந்து நின்று முந்தின இரவு நடந்த செயலைச் செய்தியாக்கிப் பேசிப் பேசி வியந்து கிடந்தனர்.

எல்லாராலும் போற்றிப் பாராட்டி வியந்து பேசப்பட்ட அந்நிகழ்ச்சி ஒருவர் காதுக்கு எட்டியது. செய்தி கேட்ட அவர் சீறினர். நம்பி செயல் நற்செயல் என்பாரைச் சாடினர்; உங்களால் பாராட்டப் பெறும் சுந்தரமூர்த்தி 'தொண்டன்' என்ற சொல்லுக்கும், 'அடியவன்' என்ற சொல்லுக்கும் உரிய பொருளைப் புரிந்து கொள்ளாதவன் என்றார்.

கேட்டோர் வாயடைத்துப் போயினர். மாற்றுரைக்கும் வகையறியாது திகைத்தனர். அவருள் ஒருவர் மட்டும் சிறிது தைரியமுடையவராக முன் வந்து ''கலிக்காமரே! அவசரப்பட்டுப் பேசாதீர். நம்பியின் பொருட்டு நம் ஈசனே இரங்கி, இறங்கி முன் வந்து செய்த செயல் இது. இதனை விமர்சிப்பது அவ்வளவு அழகன்று'' என்றார்.

'எம்பிரான் செயலை நான் குறை கூறவில்லை குறைசொல்லவும் முடியாது அடிமைக்கு ஆற்றார் அவர். அதனாலன்றோ தூது செல்ல நண்ணினார். அவர் எளிவந்து தூது செல்ல ஒப்பினால் அதனை ஏற்றுத் தூது செல்லச் சொல்லலாமோ? அதுவும் அரிவை காரணமாக அதனைச் செய்யச் சொல்லலாமோ? நாயனை அடியவன் ஏவும் காரியமன்றோ இது?

காரிகை தன்பாற் செல்லும் காதலால் இவர் ஏவ-அவர் பாத தாமரைகள் நோவச் செல்வது வருவதாகி ஒரிரவெல்லாம் உழல்வது - நன்று! நன்று! இச் செயலுக்கு உள்ளம் கம்பியாத அவனை என் முன் காணும் நாள் எந்நாள்? கண்டால் அந்நாளில் என்ன செய்வேன் என்பது எனக்கே தெரியாது'' என்று மிகுந்த கோபத்துடன் கலிக்காமர் பேச, அவர்கள் அஞ்சி விலகிப் போயினர்.

ஏயர்கோன் சீற்றம் சுந்தரருக்கு எட்டியது. எண்ணிப்பார்த்த சுந்தரர்

தாம் செய்தது பிழைதான், கலிக்காமர் கோபம் நியாயமானதுதான் எனஎண்ணி அவர் கோபம் மாறச் சிவபெருமானிடம் விண்ணப்பம் செய்தார்.

இருவரும் சேர்ந்து இருக்க வேண்டும் என எண்ணிய இறைவன் ஏயர்கோனுக்குக் குடர் நோய் தந்து, 'சுந்தரராலேயே அது தீரும்' என அவர் கனவிடைச் சொல்லிச் சுந்தரரிடமும் 'நீ போய் அவர் சூலையைத் தீர்ப்பாயாக' எனச் சொல்லி மறைந்தார்.

சூலை தீர்க்க ஆரூரர் எழுந்தருளு கிறார் எனக்கேட்ட கலிக்காமர்; தூதனைய் எம்பிரானை ஏவினான் சூலை தீர்க்கும் ஏதம் இங்கெய்த எய்தில் என் செய்வது? என எண்ணி - 'அவன் வந்து சூலை தீர்ப்பதன் முன் சூலையை யானே போக்குவேன்? எனத் துணிந்து உடைவாளை எடுத்து வயிற்றினூடும் கிழித்து நிற்க உயிரோடு சூலையும் தீர்ந்தது.

★ சூலைநோய் சுந்தரராலேயே நீக்கப்படவேண்டும் என ஈசன் எண்ணிச் செய்த செயல் இங்கே ஈடேறவில்லை. பக்திக்குமுன் பரமன் தோற்ற இடம் இது.

பெரிய இடத்துத் தயவு இருக்கும் காரணம் கொண்டு எதையும் செய்யலாம் என்பதை நம் அடியவர்கள் ஒருக்காலும் ஒப்பமாட்டார்கள் என்பதுடன், மாறுகக் குரல் கொடுத்து, நியாயத்தை நிலைப் படுத்துவர் என்பதற்கு இவ்வரலாறு சான்றாக அமைவதுடன், ஒருவரிடம் கொண்டபக்தி,கொள்ளும்பக்தி எவ்வாறு இருக்க வேண்டும், எப்படி அமைய வேண்டும் என்பதற்கு உரைகல்லாகவும் இருக்கும் இடம் இது. ★

இது கருதியே ஏயர்கோன் கலிக் காமர் முதலான எண்ணிறந்த அடியார் களின் பக்தியை நம் சேக்கிழார் பெரு மான் "ஓது காதல் உறைப்பு என்றும்" "கூடும் அன்பினிற் கும்பிடலே அன்றி வீடும் வேண்டா விறல்" என்றும் "ஈர அன்பின் வீரம்" என்றும் வியந்து பாராட்டுவது இவ்விடத்தில் நாம் அறிந்து இன்புறத்தக்கனவாகும்.

★ கலிக்காமரது வரலாறு பற்றிக் கட்டுரை யாளர் தரும் விமர்சனம் இது.

—மலர்க்குழுவினர்



குமரகுருபரரின் அருட்பனுவல்—அறத்திறன்

செஞ்சொற் கொண்டல், தமிழாகரர், திருமுறை உரைமணி, நல்லாசிரியர்,
டாக்டர். சொ. சிங்காரவேலன், M. A , Ph. D.
(தமிழ்ப் பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மயிலாடுதுறை.)

அறத்திறன்:

குமரகுருபர அடிகளாரின் அறத்திறன் தனித்தன்மை வாய்ந்தது. தமிழ் இலக்கியத்தில் நீதி கூறும் இலக்கியங்களில் அடிகளாரின் 'நீதி நெறி விளக்கம்' தலைசிறந்த இடத்தைப் பெற்றுள்ளது. திருக்குறளின் பிழிவாகவும், அதேநேரத்தில் தனித்தன்மை வாய்ந்த உயர் பனுவலாகவும் விளங்குகின்றது.

நீதிநெறி விளக்கம் :

காப்புச்செய்யுளிலேயே, 'இளமை' 'செல்வம்,' 'யாக்கை' ஆகியவற்றின் நிலையாமையை அடிகளார் இணைத்துப் பாடுவர்:

'' நீரிற் குமிழி இளமை; நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை; நமரங்காள் என்னே
விழுத்தாத தெம்பிரான் மன்று''

நீரில் தோன்றிடுகின்ற குமிழியையும், அலைகளையும்,எழுத்தையும்ஆகியஓரினப் பொருள்களைஎளிமையாக எடுத்தாண்டு நிலையாமையை விளக்கிவிடுகின்றார் அடிகளார்.

இல்லறம்-துறவறம் இலக்கணம்

துறவறத்தின் இலக்கணத்தைப் பதினெட்டுச் செய்யுட்களால், (85-102) கூறி முடிக்கின்றார்; துறவறத்தார்க்காகாத செயல்களை முதற்கண் தொகுத்துரைக்கின்றார்: பெண் தன்மையை வியந்து பேசலாகாது; அவர்களின் பெயர்களை எடுத்துச் சொல்லலாகாது; அவர்களை நெஞ்சு அழுந்தும் வண்ணம் கண்களால் நோக்கலாகாது; அவர்கள் பாடும் பண்களையும், பாடல்களையும் செவி மடுக்கலாகாது என்கின்றார், பேருண்டி துயில், காமம்முதலியனதாமத உணர்வினை விளைக்கு மாதலின் துறவிகள் அவற்றைக் கொள்ளலாகாது' என்பதும் அடிகளார் கருத்து. 'தம் உடம்பைப் பாதுகாத்தலில் மனம் கொள்ளார் துறவியர்' என்பார்; 'உலக இன்பத்தை ஒரு பொருளாகக் கருத மாட்டார்; பயனற்ற செயல்களையே செய்து காலம் போக்கியும், பிறர் அறிவுறுத்திக் கூறிய இடத்தும் நற்செயல் செய்ய நடுங்கியும் வாழ்வாரை நினைந்து இரங்குவார்; 'புண்ணியம் செய்தார்க்கே தவம் செய்தல் கூடும்' என்பனவும் அடிகளார் கருத்துரை.

உள்ளத்துறவின் சிறப்பை அடிகளார் உரைத்தது போல் வேறு யாரும் உரைத்ததில்லை:

''நெஞ்சு புறம்பாத் துறந்தார் தவப் போர்வை
கஞ்சுகமன்று பிறிதொன்றே—கஞ்சுகம்
எப்புலமும் காவாமே மெய்ப்புலம் காக்கும்; மற்று
இப்புலமும் காவாது இது''

(நீ.நெ.வி. 93)

இவ்வாறே 'இறைவன் நெஞ்சில் இருத்தலால்; அவனை அறியாமல் வஞ்சித்து ஒழுகலாம்' என்று கருதும் மதியின்மையை நினைந்து பாடும் பாடல் இனியது:

''வஞ்சித் தொழுகும் மதியிலிகாள்!

யாவரையும்
வஞ்சித்தே மென்று மகிழன்மின்!—
வஞ்சித்த
எங்கும் உளனொருவன் காணுங்கொல்
என்றஞ்சி
அங்கம் குலைவது அறிவு''
(நீ.நெ.வி 94)

அறம் உரைக்கும் ஞானசிரியர் இயல்பை, 'எவரெவர் எத்திறத்தர் அத் திறத்தராய் நின்று அவரவர்க்கு ஆவன கூறி, எவ்விடத்தும் கலந்து நிற்கும் இறைவனைப்போல 'இருப்பர்' (பா.98) என்றருளுவர். மெய்யுணர்வால் தோன்றும் இன்பச் சிறப்பை,

''கற்றுத் துறைபோய காதலற்குக்
கற்பினாள்
பெற்றுக் கொடுத்த தலைமகன் போல்''
(நீ.நெ.வி-100)

என்று அழகிய உவமை வழி விளக்கும் திறன் வேறு எங்கும் காண வியலாதது. ''முற்றத் துறந்தார்க்கு மெய்யுணர்வில் தோன்றுவதே இன்பம்'' என்பது அழகிய கருத்து.

சிதம்பர மும்மணிக் கோவையில்:

இனி, சிதம்பர மும்மணிக் கோவையில், இல்லறத்தின் இலக்கணமும், (2:24-33) துறவறத்தின் இலக்கணமும் (2:34-46) பேசும் பகுதிகள் இங்கு நோக்கத் தக்கவை:

''அற்புதக் கூத்த நின்அமுத வாக்களித்த
நல்லற நூல்களிற் சொல்லறம் பல; சில,
இல்லறம் துறவறம் எனச் சிறந்தனவே''
(2:21-23)

என எடுத்து, அவற்றுள் இல்லற இலக்கணமாக அடிகளார் கூறும் பகுதி திருக்குறட் பிழிவு:

''கடிமனைக்கிழவன்
நற்குணம் நிறைந்த கற்புடை மனைவியோடு
அன்பும் அருளும் தாங்கி, இன்சொலின்
விருந்து புறந்தந்து, அருந்தவர்ப் பேணி,
ஐவகை வேள்வியும் ஆற்றி இவ்வகை
நல்லறம் நிரப்பிப் பல்புகழ் நிறீஇப்
பிறன்மனை நயவான் அறன்மனை
வாழ்க்கைக்கு
வரையா நாளின் மகப்பேறு குறித்துப்
பெருநலம் துய்க்கும் பெற்றித்து அன்றே''
(2:25-33)

அன்பு, அருள், இனியவை கூறல், விருந்தோம்பல் முதலிய அறங்களை மனைவியுடன் ஆற்றிப் பிறனில் விழையாது, புகழ் நிறுவுதல் இல்லறம் என்றவர், இதன்பிறகு மேற்கொள்ளும் துறவறம் குறித்துச் சுருங்கக் கூறுவர்:

''மனையறம் நிரப்பி
முற்றுணர் கேள்வியின்முதுக்குறை வெய்திப்
பொருளும் இன்பமும் ஒரீஇ அருளொடு
பொறையும்ஆற்றலும்நிறை பேரொழுக்கமும்
வாய்மையும் தவமும் தூய்மையும் தழீஇ
ஓரறிவுயிர்க்கும் உறுதுயர் ஓம்பிக்
காலோய் நடைய னாகித் தோலுடுத்து
என்பெழும் யாக்கையன், துன்புறத்
துளங்காது
வரையும் கானும் எய்திச் சருகொடு
கானீர் அருந்திக் கடும்பனிக் காலத்து
மாநீ ரமுவத் தழுங்கி வேனிலில்
ஐவகை அழலின் மெய்வருந்த வருந்தி
இவ்வகை ஒழுகும் இயல்பிற்றன்றே''
(2:34-46)

இல்லறத்தின் பிறகே துறவறம் மேற்கொள்ளத் தக்கது என்பது அடிகளார் கருத்தாதல், 'மனையறம் நிரப்பி' என்ற தொடரால் விளங்கும். 'அருளுடைமை துறவறப் பண்பு' என்பதும், 'உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமையே தவம்' என்பதும் அடிகளார் முடிவு.

இவ்வாறு, அடிகளார் உரைக்கும் அறத்திறன் அவர்தம் அருட்பனுவல்களில் தனித்தன்மை பெற்று விளங்குகின்றது.

''மாணவை மண்ணுறுத்தும் செல்வம்''

டாக்டர். பழ. முத்தப்பன், எம்.ஏ.பிஎச்.டி,
முதல்வர், கணேசர் செந்தமிழ்க் கல்லூரி,
மேலைச்சிவபுரி.

தண்டமிழ்ப் புலவர்களில் தம் உழைப்பால் புலமைத்திறம் வளர்த்து உயர்ந்தோர் ஒருவகையினர். தெய்வத் திருவருளால் புலமைத் திறம் வாய்க்கப் பெற்று உயர்ந்தோர் மற்றொரு வகையினர். இவ்விரு வகையினருள் —இரண்டாம் வகையைச் சார்ந்தவர்களில் சிறப்பிடம் பெற்று விளங்குபவர் குமரகுருபரர் ஆவார். கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் தோன்றிய குமரகுருபர அடிகள் தமது ஐந்தாம் வயதில் திருச்செந்தில் முருகன் திருவருளால் பழுத்த தமிழ்ப் புலமை பாலிக்கப் பெற்றவர் என்பது வரலாறு தரும் செய்தி. கந்தக் கடவுள் தந்த செந்தமிழ்ப் புலமையால் — பல்வேறு இலக்கியப் பனுவல்களை அடிகள் தமிழ் உலகிற்குத் தந்தருளினார்கள். அவரருளிய நூல்களில் நீதி இலக்கியமாக விளங்குவது நீதிநெறி விளக்கம் ஆகும்.

''நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்''

என்று சகலகலாவல்லியில் அடிகள் வேண்டியாங்கு கிடைத்த பாடும்பணியில் ஓர் அழகுவிளக்கு-வாழ்வியல் தத்துவம் நீதிநெறி விளக்கம் என்றால் அது மிகையாகா. 102 வெண்பாக்களைக் கொண்ட நீதிநெறி விளக்கத்தில் முதல் எட்டுச் செய்யுட்களில் கல்வியின் இயல்பை அடிகள் வலியுறுத்துகிறார். நீதிநெறி என்று எண்ணுகின்றபொழுதேயே அடிகளுக்குக் கல்விப் பொருள் நினைவிற்கு வந்தமை குறிப்பிடத் தக்கதாகும். அறியாமை அகன்றால் ஒழிய நீதியை — வாழ்வியல் கோட்பாடுகளை அறிய இயலாதுஎன்பது அடிகளின் முடிந்த முடிவாகும் எனத் தெரிகிறது. எனவேதான் தொடக்கத்திலேயே 'அறம், பொருள், இன்பம், வீடு பயக்கும்' என்று கல்வியின் பயனைக் கட்டுரைத்துத் தருகிறார். சிற்றுயிர்க்கு உற்ற துணையாகிய கல்வியை மானிடர் பெற்றிடல் வேண்டும் என வற்புறுத்த வந்த அடிகள் தம் நூலின் நான்காம் பாடலில் உருவக அணியை அமைத்து-கல்வியின் சிறப்பை வெளிபடுத்துகிறார். அப்பாடலில் அடிகள் பிற கவிஞர்கள் எண்ணிப் பார்க்காத அளவிற்குக் கல்வியை ஓர் மனைவியாகக் காணுகின்றார். அதிலும் கற்புநலம் கொண்ட கவினுறு மனைவியாய் அடிகள் காண்பது மகிழ்வைத் தருகிறது. கல்வியைக் கற்புடைப் பெண்டிர் என்று அடிகள் கூறுவதற்குக் குறிப்புரைகாரர் உ. வே. சாமிநாதஐயர் அவர்கள் அடிக்குறிப்பு எழுதும்போது, ''கற்புடைப் பெண்டிர் என்றார் எழுமையும் தொடர்ந்து வருதலின்'' என்று குறிப்பிடுகிறார். ஆம். எழுமையும் ஏமாப்புடைத்தாம் கல்வி — ஒருவனுக்கு எப்பிறவியிலும் துணையாகும் மனைவியைப் போன்றதே என்று கொள்ளும் போது கல்வியும்-மனைவியும் ஒருவனுக்

குப் புகழ்தரும் கருவிகளாக மிளிர்கின்றனர். இதனால் அன்றோ, ''இம்மை மாறி மறுமை ஆயினும்—நீ ஆகியர் என் கணவனை; யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே'' என்று சங்கச் செய்யுளும்- ''புகழ்புரிந்த இல் இலோர்க்கு இல்லை இகழ்வார்முன் ஏறுபோல் பீடு நடை'' என்றுதிருக்குறளும் கூறுகின்றன. கல்வி கற்புடைப்பெண்டிராக விளங்கும்போது-இல்லறம் தலைப்பட்டு விடுகிறது. இல்லறம் இனிது விளங்க வேண்டுமானால் நன்கலம் நன்மக்கட்பேறு இலங்கிட வேண்டும். கல்வியாம் கற்புடைப் பெண்ணிடத்தில் தோன்றும் புதல்வன் இன்புடைக் கவியாக அமையும் என்பது அடிகளின் அருள்வாக்கு. ஆம். மானிட வாழ்வில் கற்புடைப் பெண்டிராகக் கல்வி அமையுமானால் - அக்கற்புடைப் பெண்ணிடத்தில் ஒருவன் பெறும் புதல்வன் ஈர்ங்கவியாய் அமையும் என்கிறார் அடிகள் கவிதை ஓர் இன்பப் புதல்வனாக உருவகிக்கப் பெறுகிறது.

கல்வியின் பெருமை பேசவந்த அடிகள் முதலில் கல்வியை கற்புடைப் பெண்டிராக உருவகித்துவிட்டதால் — அதற்கேற்பப் புதல்வன் ஒருவன் உருவகிக்கப் பெறல் வேண்டும் என்ற நோக்கில் ஒருவனின் கல்வியாற்றலால்வெளிப்படும் கவிதைச் செல்வத்தை — புதல்வனாக உருவகித்துள்ளார். கல்வி ஒருவனிடத்தில் அமைந்துவிட்டால் மட்டும் போதாது-தான் பெற்ற கல்விச் செல்வத்தைப் பிறர்க்குப் பயன்பட - வெளிப்படுத்தும் நற்குணம் அமைய வேண்டும் என்பது அடிகளின் தெளிந்த முடிவு எனத் தெரிகிறது.

இல்லறத்தில் மனைவியும் மக்களும் அமைந்து விட்டால் மட்டும் போதாது — வாழ்வு வளம்பெற — பொருட்செல்வமும்அமைதல்வேண்டும். பொருள் இல்லார்க்கு இவ்வுலகம்இல்லாகியாங்கு என்பதற்கேற்ப உலக வாழ்வில் தனித்த இடம்பெற்று விளங்குவது பொருட் செல்வம் ஆகும் எனவே கல்வியாம் கற்புடை மனைவியும், கவிதையாம் செல்வப்புதல்வனும் அமைந்த ஒருவனுக்கும் வளப்பம் மிகுந்த செல்வமாக விளங்குவது அவனுடைய சொல்வளம் ஆகும். விரையாது-வெகுளாது - விரும்பி முகமலர்ந்து பிறர் உளம் கொளக் கூறும் சொல்லாற்றல் சிறப்புடைய செல்வமாகும். தாம் கற்றதை வெளிப்படுத்தும் கவிதையை-சொல்லாற்றலால் தெளிவாகச் சொல்லும் போதுதான் ஒருவன் கற்றதன் பயனைப் பெறமுடியும் என அடிகள் நினைவுபடுத்துவது சாலச் சிறப்பாகும்.

கல்வி, கவித்துவம், சொல்லாற்றல் என்ற மூன்றும் ஒருவனுக்குத்தேவை என்று எண்ணிய அடிகள் மனைவியாய், புதல்வனாய், செல்வமாய் அவற்றை உருவகித்துத் தம் பாடலில் அமைத்து நிறைவு காண முயன்றுள்ளார். மூன்று நிலைகளை உருவகமாக்கிய அடிகள் அம் மூன்றில் நிறைவு கொள்ளாமல் நான்காவதாக நாவன்மையும் ஒருவனுக்கு வேண்டும் என்பதைவலியுறுத்திப் பாடலை நிறைவுபடுத்துகிறார். ஆனால் நாவன்மை கற்றவர் அனைவருக்கும் அமைந்துவிடுமா? அடிகளுக்கு ஐயம் ஏற்பட்டது. கற்றவர் அனைவரும் நாவன்மை கொண்டவராகத் திகழ்வதுஇல்லை என்பதைத் தம் காலத்திலேயே உணர்ந்திருக்கிறார் அடிகள். இன்றைய உலகில் நன்கு கற்றவர்களாக - ஆய்வுத் திறன் மிக்கவர்களாக - அறிவுச்செம்மல்களாக விளங்குபவர்கள் கூட அவையத்தில் தம்

நாவன்மையைக் காட்ட முடியாததால் பாராட்டுப் பெற இயலாது குடத்தில் இட்ட விளக்காக இலங்குவதைக் காண முடிகிறது. இந்நிலை குமரகுருபரர் காலத்திலும் இருந்திருக்கிறது போலும். எனவேதான் ''மாணவைமண்ணுறுத்தும் செல்வமும் உண்டு சிலர்க்கு'' என்று குறிப்பிடுகிறார். மாட்சிமை மிக்க அவையின் கண்ணே தாம் அறிந்தவற்றை அழகுறச் சொல்லும் நாவன்மை சிலர்க்கே தான் அமையும் என்பதை வலியுறுத்த உயர்வு சிறப்பு உம்மையாக ''செல்வமும் உண்டு'' என்கிறார் அடிகள்.

செல்வமாக விளங்கும் சொல்லாற்றலுக்கும்,நாவன்மையாகிய சொல்லாற்றலுக்கும் வேறுபாடு உண்டு. இவ் வேறுபாட்டை உ வே. சா. அவர்கள் குறிப்பிடும்போது சொல்வளம் என்பது அறிய விரும்பியவர்க்கு உரைக்கும் வன்மை.பின்னர்க்கூறியது அறிஞர் நிறைந்த அவையில் பேசும் வன்மை; என வேறுபாட்டை விளக்கிக் காட்டுவார். எனவே கற்றோர்க்கு இயல்பாகச் சொல்வளம்-அதாவது பாடம் சொல்லும் முறைமை அமையும் ஆனால் கற்றோர் அவையத்தில் கற்ற பொருளை விளக்கிச்சொல்லத் தனி ஒரு ஆற்றல் வேண்டும். அது கற்றவராகிய அனைவருக்கும் அமைந்துவிடும் எனக் கூற இயலாது. ஒரு சிலர்க்கே அந்நாவன்மை அமையும். அந்நாவன்மை கற்றோர்க்குக் கிடைத்திடும் அருட்கொடையாகும் எனவேதான் மனைவி, மகன், செல்வம் என்று உருவகித்த அடிகள் நாவன்மையை மீண்டும் செல்வம் என்றே உருவகிக்கிறார். எனவே சொல்வளம்செல்வமாகஇருக்க-நாவன்மை பிறிதொரு செல்வமாக அமைய வேண்டும் என்பது பெறப்படுகிறது.

இத்தகைய நிலையில் கல்வியின் பெருமையை உருவக அணியின் மூலமாக அடிகள் நீதிநெறி விளக்கமாகத் தந்து நம்மை வழிப்படுத்துகிறார். அவரின் அழகுறு பாடல் இதோ:

''கல்வியே கற்புடைப் பெண்டிரப்
பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே யீர்ங்கவியாச் —
சொல்வளம்
மல்லல் வெறுக்கையா மாணவை
மண்ணுறத்தும்
செல்வமு முண்டு சிலர்க்கு.''

காசிக் கலம்பகம்: கற்பனைத் திறன்

டாக்டர். அ. பாண்டுரங்கன்,
தமிழ்ப் பேராசிரியர், துறைத் தலைவர்,
புதுவைப் பல்கலைக் கழகம்,
14, லெமேர் வீதி, காரைக்கால்-609 602.

பல்வகை யாப்புகளும் பொருள்களும் கலந்து அந்தாதியாகப் பாடப்பெறுவது கலம்பகம். குமரகுருபரர் பாடிய இரண்டு கலம்பகங்களுள் ஒன்று சிவராசதானியாகக் கருதப்பெறும் மதுரையைப் பற்றியது; மற்றொன்று சிவபெருமான் முக்தி தரும் தலங்களுள் மிகச்சிறப்பாகக் கருதப்பெறும் காசியைப் பற்றியது. குமரகுருபரர் நூல்கள் அனைத்திலும் அவருடைய பெருமித நடையும், அணியலங்காரங்களும், கற்பனைச் சிறப்பும் ஒன்றையொன்று விஞ்சும் வகையில் அமைந்துள்ளன. சங்கப் புலவர்களின் கற்பனை உள்ளது புனைதல்; நம் குருபரர் கற்பனை இல்லது புனைதல். சங்கப்புலவர்கள் இயற்கையில் கண்டவற்றை இனிய, எளிய சொற்களால் புனைந்தார்கள்; அவை புனையா ஓவியங்கள் போலக் காண்பார் நெஞ்சில் நிலைபெற்று நிற்பன. ஆயின், குருபரரின் கற்பனை உயர்வு நவிற்சியாய், மிகைக் கற்பனை யாய்க்கற்பார் மனத்தை மயக்குகின்றது. முன்னது மண்ணில் காலூன்றி நடப்பது; பின்னையது வண்ணச்சிறகுகளை விரித்துக் கொண்டு விண்ணில் பறப்பது. வடமொழிப்புலமையும், புராணக்கதைகளும், சமய நம்பிக்கைகளும் இவர்தம் கற்பனைக்குப் பின்புலமாக அமைந்து கற்போர் நெஞ்சில் களிப்பைஊட்டுகின்றன. இம்முனிவரர் காசிக் கலம்பகத்தில் காட்டும் சில கற்பனைக் காட்சிகளைக் காண்போம்.

காசி விசுவேசுவரரிடம் காதல் கொண்ட தலைவியின் கூற்றாக ஒரு கற்பனை அமைகின்றது, தலைவி இறைவன் மேல் காதல் கொண்டாள்; அவரோ அவளுக்குஇரங்கவில்லை. இந்நிலையில் மாலை வருகின்றது. அந்தி வானில் அழகிய பிறையைக் கண்டதும் தலைவியின் துன்பம் பெருகுகின்றது. அப்பிறை தன் மீது கொடிய விடத்தை அள்ளி வீசுவதாகத் தலைவி கலங்குகிறாள். பாற்கடலைக் கடைந்த காலத்தில், தேவர்கள் 'ஓலம் ஓலம்' என்று முறையிட்டுக் கொண்டு ஓடினார்கள். தேவர்களைக் காப்பதற்காகச் சிவபெருமான் ஆலகால விடத்தை எடுத்து அமுதுசெய்து, தன் கண்டத்தில் நிறுத்தினான். இவ்வாறு ''உன்கழுத்தில் ஒளிந்திருந்த கரியவிடம் இப்பொழுது வெண்பிறை வடிவில் வெளிப்பட்டு எம்மை வருத்தத் தோன்றியது. என்ன வியப்பு?'' என்கிறாள் தலைவி. இப்பொருள் அமைந்த பாடலைக் காண்போம்

''மறைக்கோலம் கொண்ட அகிலேசரே
இன்று மாதர்முன்னே
பிறைக்கோலம் கொண்டு புறப்பட்ட
வாமுன் பிறைமுடித்த
இறைக்கு ஓலம் ஓலம் எனத்தேவர்
ஓலமிட இருண்ட
கறைக்கோலம் கொண்டுநும்கண்டத்(து)
ஒளித்த கனல்விடமே''

காசிக் கலம்பகம், 7.

காசிநாதன் மேல் காதல் கொண்டாள் கன்னி ஒருத்தி. அவனோ அவளைக்கனவிலும் கூடவில்லை. அவன்மீது மையல் ஏறிய மாது, காணும் இடம் எல்லாம் தன் காதலனாகிய காசிநாதனையே உருவெளித் தோற்றமாகக் காண்கிறாள். இருப்பினும் அவன் அங்கிங்கு எனாதபடி எங்கும் பரந்து நிற்பதை உணரவில்லை; இது என்ன பேதமை?'' என்று பேசுகிறாள் தோழி. இவ்வாறு சொல்ல வருகின்ற தோழி, காசிப்பெருமானின் சிறப்புகளையும் உடன் எண்ணுகிறாள். 'ஒழுகுநறை மருக்கோல நீலக் குழலி விசாலாட்சியின் கேள்வன்; அவிமுத்தவாணன், பழமையான இருக்கு முதலிய வேதங்கள் ஓலமிட்டும் அவற்றால் உணர முடியாமல் இருப்பவன்; பார்பதம் அண்டம் அனைத்தும் பற்றிப் படர்ந்துள்ள பரமன் அவன். இத்தகு பெருமை வாய்ந்த அப்பெருமானை, உருவெளித்தோற்றத்தில் கண்டும் உணராமல் போனது என்ன பேதமை!'' என்று நயம்படப் பேசுகின்றாள் தோழி.

பாடலைப் படிப்போம்:

''திருக்கோலம் கொண்டநல் தேன்மொழி
யாள் எண்டிசையினும் நின்
உருக்கோலமே கண்டும் கண்டிலள் போலும்
ஒழுகுநறை
மருக்கோல நீலக் குழல்சேர் அவிமுத்த
வாண! தொல்லை
இருக்குஓலம் இட்டு உணரா எங்கும் ஆகி
இருப்பதுவே''

காசிக்கலம்பகம், 25

காசிப்பெருமான் மீது காதல் கொண்ட நங்கை ஒருத்தி அவனைப் பெறாது துடித்தாள்; அவன் தாராயினும் வாங்கித் தந்தால் உய்வேன் என்று சொல்ல எண்ணி, கொன்றை மாலை என்றாள்: அவ்வளவில் பேச்சிழந்தாள்; நெட்டுயிர்த்தாள்; மண்ணில் சோர்ந்து வீழ்ந்தாள்; எதனையும் உணராமல் கிடக்கின்றாள். ''மக்கள் இறக்குங்காலத்தில் அவர்கள் காதில் பிரணவ மந்திரத்தை ஓதி, அவர்கள் சாயுச்சிய பதவி பெற ஓடிவருர் காசி விசுவநாதன் தன் காதிலும் பிரணவம் ஓத வருவான்; அப்போது காணலாம் என்று துணிந்து தரையில் கிடக்கின்றாளா? வேறு என்ன கருதியோ! யான் அறியேன்'' என்று தோழி கூறுகின்றாள். இங்கே காசிநாதனைக் கூறும்பொழுது ''கண்ணொன்று திருநுதலில் கனலுருவமாப் படைத்த காசிநாதா,'' என்று நெற்றிக்கண் இருப்பதைத் தோழி சுட்டிக்காட்டுகின்றாள்.

''கண்ணொன்று திருநுதலில் கனல் உருவ
மாப்படைத்த காசி நாதா,
தண்ஒன்று நறைஇதழித் தார் என்றாள்;
நெட்டுயிர்த்தாள்; தரைமேல் வீழ்ந்தாள்;
எண்என்று உணராமே கிடக்கின்றாள்;
இதுகண்டால் எழுத்துஒன்று ஓதத்
துண்என்று வருவர்எனத் துணிந்தனளோ
அறியேன் இத் தோகை தானே.''

காசிக் கலம்பகம், 10

காசிப்பிரான் மீது தீராக் காதல் கொண்ட நங்கை அவனைப் பெற முடியாத நிலையில் தன் குறை முடித்துத் தருமாறு வண்டுகளைவேண்டுகின்றாள். வண்டுகளை விளிக்கும்போதே ''சிறை விரிக்கும் மதுகரங்காள்''-அழகானசிறகுகளை விரித்துப் பறக்கும் வண்டுகளே! என்று அன்புடன் அழைக்கின்றாள். தலைவன் நாட்டு வளத்தையும் பெருமையையும் அடுத்துக் கூறுகிறாள். அவன் தேம்பிழி வண்டுகள் இனிது பாடும் சோலைகள் சூழ் காசித்திருநாடன்; அவன் காலில் அணிந்துள்ள சிலம்புகள் வேதம் கீதம் முரலும் சிலம்புகள். அவன் மறை

விரிக்கும் சிலம்படியான். அவன் திரண்ட தோள்களில் நறுமலர்ப் பூங்கொன்றை மாலைகள் புரளுகின்றனவாம். அம்மாலைகள் தம்மை நாடி விருந்தாக வந்த வண்டுகளுக்குத் தம்மிடமுள்ள மதுவை விருந்தாக ஊட்டுமாம்; தம் இதழ்க்கரத்தால் வண்டுகளுக்கு ஊட்டுமாம். கொன்றை நறை விரிக்கும் இதழ் கரத்தால் மது ஊட்டும். அவ்விருந்தினை நயந்துஉண்ட பிறகு, தும்புருநாரதர் என்னும் இருவர் பாடும் இசைகளையும் தன் திருச்செவிகளால் கூட்டுண்ணும் என் தலைவரிடம் என் குறை விரித்துக் கூறுவீரே - பக்குவமாக அவன் திருச்செவிகளில் என் நிலைமையைப் பகர்வீரே என்று வண்டுகளைக் குறையிரந்து தூது விடுக்கும் பாடல் கற்பனை நயத்துடன் மிளிர்கின்றது.

''சிறைவிரிக்கும் மதுகரங்காள்! தேம்பிழிபூம்
பொழில்காசித் திருநாடு ஆளும்
மறைவிரிக்கும் சிலம்படியார் திரள்புயத்துப்
புரளும்' நறு மலர்ப்பூங் கொன்றை
நறைவிரிக்கும் இதழ்க்கரத்தால் ஊட்டும் மது
விருந்துண்டு நயந்து மற்றுஎன்
குறைவிரித்து ஓர் இருவர் இசை கூட்டுண்ணும்
திருச்செவிக்கட் கூறு வீரே.''

காசிக் கலம்பகம், 59.

காசிக் கலம்பகம் காட்டும் கற்பனை சமயச்சார்புடையது. நம் பண்டைய புராணங்களையும் சாத்திர தோத்திரக் கருத்துக்களையும் உணர்ந்தவர்களுக்கு இக்கற்பனை நயங்கள் சுவையூற்றுகளாய்த் திகழ்கின்றன. பண்டைத் தமிழ்ப்பயிற்சியும், சமய இலக்கியங்களில் ஆர்வமும் குன்றி வருகின்ற இக்காலக் கட்டத்தில் குமரகுருபரர் போன்ற அருட்கவிகளின் வாக்குகளை எளிய தமிழில் இளைஞர்களுக்கு வழங்க வேணடுவது சான்றோர்களின் கடமை.

அணிகளின் அணிவகுப்பு

செந்தமிழ்ச்செல்வர். ம. வே. ஜயராமன், எம். ஏ., டி. லிட்.
பெங்களூர்.

குமர குருபரர் தமிழ் உலகின் தனிப்பேரொளி. அவர் திருவருட் செல்வர். தமிழ்ச் சுவையினை வாரி வாரி வழங்கும் பெருவள்ளல். நாட்டு ஒருமைப்பாட்டின் முன்னோடி. தூக்கும் பனுவல் துறை தோய்ந்த கல்வியும், சொற்சுவைதோய் வாக்கும் வல்லவர். சொல் விற்பனமும் அவதானமும் கவி சொல்லவல்ல நல்வித்தையும் பெற்றவர். எழுத்து முதலாம் ஐந்து இலக்கணமும் தோய்ந்து பழுத்த தமிழ்ப் புலமையும் மேவியவர். அவர்தம் பாடல்களில் சிவம் மணக்கும்; தமிழ் கமழும். இலக்கிய அணிகள் அவர் பாடல்களில் இடம் பெற 'நான் முந்தி நான் முந்தி' என அணி வகுத்து நிற்கும். அணிகளைத் தேடி அவர் செல்லுவதில்லை. அணிகள் அவரை நாடிவரும் நாடிவந்து புத்தழகும், புதுப்பொலிவும்பெற்றுத் திகழும். அத்தகைய பெரும் புலவர் அவர். புலவர்கள், மலரவனாம் பிரமனைவிட மேலானவர்கள் என்று வெற்றிப்பறை கொட்டும் வீறு மிக்கவர் அவர். மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் அவருடைய பண்கண்டளவில் பணிந்து பரவுவர். இது புனைந்துரையன்று. பொருள் உரையே. வடபுலம் ஆண்ட நவாபும் தென்புலம் ஆண்ட திருமலை நாயக்க மன்னனும் இதற்கு நிலையான சான்று ஆவர்.

சொல்லுதல், நல்லவற்றைச் சொல்வதல், தெளிவாகச் சொல்லுதல், சுருங்கச் சொல்லுதல், அழகுறச் சொல்லுதல் ஆற்றல் படச் சொல்லுதல், உளங்கொளச் சொல்லுதல் எல்லாம் புலவர் கலை. இக்கலை கைவந்தவர் குமரகுருபரர் பொருளணியும்,சொல்லணியும் ஆற்றொழுக்காகவும் கடல் மடை திறந்தாற் போலவும் பாய்ந்து பரவிக் குமரகுருபரக்குப் புகழ் சேர்க்கும். உவமையோ, உருவகமோ, தற்குறிப்போ, வேற்றுமையோ, பின்வருநிலையோ, மடக்கோ, சிலேடையோ-எவ்வணியும் அவர் பாடல்களில் அணிவகுத்து நிற்கும் அழகே அழகு!

அணிகளுக்கெல்லாம் அன்னையாய் விளங்குவது உவமையணி. அது நம் புலவர் கையகப்பட்டு ஒளிர்வதைக் காணலாம். மீனாட்சியம்மையின் விளையாட்டுக்களை அடுக்கிக் கூறுகிறார் புலவர். தன் தோழியருடன் கண்பொத்தி விளையாடுகின்றாள் மீனாட்சி. கண் பொத்தும் போது முகம் சொல்லப்பட வேண்டும். முகத்தில் உள்ள கண்கள் சொல்லப்படவேண்டும். அக்கண்களைப் பொத்தும் கைகள் சொல்லப்படவேண்டும். முகம் செந்தாமரை மலர் போன்றுள்ளது. கைவிரல்கள் காந்தள் மலர் போன்றுள்ளன. கண்கள் கருங்குவளை மலர்கள் போன்றுள்ளன. எனவே கண் பொத்தும்போது இம் மூன்று வகை மலர்களும் ஒன்று சேர்ந்திருக்கும் அரிய காட்சியைப் புலவர் காண்கிறார்.

'காந்தள் செங்கமலத்த கழுநீர் மணந்தென' என்பது பாடல் வரி (மீனா. பிள். தமிழ்—35). இது இல்பொருள் உவமையாயினும் பளிச்செனப் பதிந்துவிடுகின்றது.

மீனாட்சியம்மையை முத்தம் தருமாறு கேட்கும் புலவர் முத்துக்கள் பிறக்கும் இடங்கள் பல வற்றைக்கூறி, 'அங்குப் பிறக்கும் அம்முத்துக்கள் எல்லாம் அம்மையின் வாய் முத்தத்திற்கு இணையாகா' எனச் சொல்ல விழைகிறார். முத்துக்கள் மட்டுமா? முத்துக்கள் பிறக்கும் இடங்களும் கூட அம்மையாரிடம் தோற்று உடைகின்றனவாம்! எப்படி? கார்மேகம் அம்மையின் கூந்தலுக்கும், கரும்பு அம்மையின் மென்மொழிக்-

கும், செந்தாமரை அம்மையின் திருவடிக்கும், சங்கும் கமுகும் அம்மையின் கழுத்துக்கும்-மூங்கில் தோளுக்கும், தந்தங்கள் மார்புக்கும் தோற்று உடைந்துவிடும். அவ்வாறாயின் அவையீன்ற முத்துக்கள் அம்மையின் திருவாய் முத்தத்துக்கு எங்ஙன்ம் இணையாகும்? இங்கு ஒன்றையொன்று முந்திக்கொண்டு ஏழு உவமைகள் அடுக்கடுக்காய் அணிவகுத்து நிற்கின்றன (மீனா. பிள். தமிழ்—45).

'முற்றும் உணர்ந்தவர் இல்லை; முழுதும் கற்றோம் என்ற செருக்கு வேண்டா' என்பதை உணர்த்துதற்குக் குமரகுருபரர். வழங்கும் உவமை எளியது; இனியது' 'கொல்லன் கூடத்தினால் தகராத மலையும் சிற்றுளியால் தகர்ந்து விடும்.' இஃது அவ்வுவமை. (நீதி நெறி—14).

ஒருவன் தன் புகழைத் தானே கூறிக் கொள்ளுதல் உண்மையில் அவன் புகழினையே கெடுத்துவிடுமாம் எதுபோல் எனில் நெருப்பினை வளர்க்க நீரினை ஊற்றினால் அது அந்நெருப்பினனயே அவித்துவிடுமே; அதுபோல் என்கிறார் குமரகுருபரர் (நீதிநெறி—19).

இறைவன் வெள்ளி வெற்பாகிய கயிலை மலையில் மங்கை பங்கனாய் வீற்றிருக்கும் வியத்தகு காட்சியில் நெகிழ்ந்து நிற்கும் குமரகுருபரர் கந்தர் கலிவெண்பாவில் அமைத்துள்ள பகுதி நம் உள்ளத்தையும் நெகிழ்விக்கும் உவமையழகுடன் திகழ்கின்றது.

'மின் இடத்துப் பூத்த பவளப் பொருப்பொன்று வெள்ளிவெற்பில் வாய்த்தனைய தெய்வ வடிவாகி—(கந். கலி. 30—31) இடது பக்கத்தில் உள்ள பார்வதிக்கு மின்னல் உவமை. செம்மேனி அம்மானுக்குப் பவள மலை உவமை. வெள்ளிமலையில் உள்ளது பவளமலை! பவளமலையின் இடது பக்கத்தில் மின்னல் பூத்துப் பொலிகிறது!

உவமை முற்றி இயைந்தால் உருவகம் பிறக்கும் என்பர். மீனாட்சியம்மையாகிய குழவியைக் காக்கவேண்டுமென்று கலைமகளைப் பாடுகிறார் குமரகுருபரர். அங்கே உருவகம் பிறக்கின்றது. கலைமகள் தன் வெண்டாமரையாகிய வீட்டில் தமிழாகிய கடலினைக் கடைந்து பெற்ற அன்பின் ஐந்திணை எனத் தொடங்கும் இறையனார் களவியலாகிய தெள்ளமுதினைக் கூட்டுண்ணும் கலைமகளாகிய அவ்வெள்ளையன்னத்தைப் பணிவோம் என்கிறார் புலவர். இங்கு அடுக்கடுக்காக நான்கு உருவகங்கள் அணிவகுத்து நிற்றல் அரிய காட்சி. (மீனா, பிள், தமிழ்—9)

மீனாட்சியம்மையின் சிற்றில் விளையாட்டினைக் காண்போம், சக்கரவாளகிரியே சுவர், திசைக்கரிகள் எட்டும் சுவர்க்கால்கள் ஆகாயத்தின் முகடே கூரை, மேருமலையே நடுத்தூண், செஞ்சுடரும் திங்களும் விளக்குகள், புவனமே அடுகலம். புதுக்கிய ஊழே அக்கலத்தில் அடப்பட்ட உணவு, இப்படிச் சிறுவீடு கட்டிச் சிறுசோறு அடுகின்றாள் குழந்தை மீனாட்சி அவ்வீட்டினைப் பெரும்பித்தனாகிய சிவன் அழித்தழித்துக் களிக்கிறான். அழிக்க அழிக்க முடியாது அடுக்கி அடுக்கிச் சிற்றில் விளையாடுகிறாள் அம்மை (மீனா. பிள். தமிழ்—15).

செந்தாமரை மலராகிய வீட்டின் இதழ்களாகிய கதவுகளைத் தும்பிகளாகிய ஏவலர் திறந்து விடுகின்றனர். திருமகளாகிய அரசி அக்கமலக் கோயிலில் குடிபுகுந்து மகிழ்கிறாள் இப்படிப் பல கோயில்களை மருதமாகிய தச்சன் அமைத்துத் தருகிறான். சோலைகள் மணப்பந்தர்கள். முகில்களே மேற்கட்டிகள். இப்படியொரு நயமான உருவகம்! (மீனா பிள். தமிழ்—59).

மீனாட்சியம்மையினை 'வருக வருக' என அழைக்கும் பாடல் 'தொடுக்கும் கடவுட் பழம் பாடல்' எனத்தொடங்குவது. இப்பாடலை அரங்கேற்றும்போது மதுரை மீனாட்சியம்மையே மன்னன் மகளாக வந்து உவந்து குமரகுருபரருக்கு முத்துமாலையினைப் பரிசளித்துப் பாராட்டினாள் எனக் கூறுவர். இப்பாடலின் உருவக அணிவகுப்பே அதற்குக் காரணம் எனத்துணிந்து கூறலாம். மீனாட்சியம்மையை எப்படி எப்படியெல்லாம்

உருவகிக்கின்றார் புலவர்! அவள் திருமறையின் பயன்! தமிழின் நறுஞ்சுவை! அகந்தையாகிய கிழங்கை அகழ்ந்தெடுக்கும் அன்பர்தம் உள்ளக்கோயிலின் திருவிளக்கு! இமயமலையில் விளையாடும் இளமென்பிடி! இறைவனது உள்ளக்கிழியில் எழுதிக்கொண்ட உயிரோவியம்! குழற்காடு ஏந்தும் வஞ்சிக்கொடி! மலயத்துவசன் பெற்ற பெருவாழ்வு! இவையேழும் தமிழ்த்தேனில் ஊறிய பக்திச் சுளைகள் அல்லவோ? இப்பாடல் உருவகக் களஞ்சியம்! (மீனா. பிள். தமிழ்—62).

நீதிநெறி விளக்கப் பாடல்கள் சில அழகிய உருவக மாலைகளாக அமைந்துள்ளன.

கல்வியே கற்புடைய மனைவி. இனிய பாடலே செல்வப் புதல்வன். சொல்லுகின்ற வளமே செல்வம். (நீதிநெறி—4).

பண்புடையவர்கள் கற்பக மரம். இனிய பார்வையே அரும்பு. நகைமுகமே மலர். இனிய வாய்மையே காய். வள்ளன்மையே கனி. பண்புடையவர்கட்கு இனிய பார்வை, நகை முகம், வாய்மை, கொடை என்பன மிக மிக இன்றியமையாதன என்பதை இவ்வுருவகம் விளக்கும். (நீதிநெறி-37).

இல்லத் தலைவிக்குக் கற்பாகிய ஆடையும், அன்பாகிய மலரும், நாணமாகிய சந்தனமும், நற்குண நற்செய்கைகளாகிய அணிகலன்களும் வேண்டும். மக்கட்பேறே அவளுக்குச் செல்வம் ஆகும். (நீதிநெறி—81).

உயர்வு நவிற்சி என்பது மிகைபட மொழிதல். அதுவும் அழகாகக் கூறப்படும் போது ஒரு தனித்தன்மை பெற்று அணியாக உயர்ந்துவிடும். மதுரையின் வயல்வளம் ஒரு பாடலில் (மீனா. பிள். தமிழ்—49) புனைந்துரைக்கப்படுகின்றது. கற்பனை சிறகடித்துப் பறக்கிறது.

கடலாகிய மதுக்குடம் முழுவதையும் பருகிவரும் கருமுகிலாகிய உழவர்கள் கையில் வெண்பிறையாகிய அரிவாளுடன் செல்கின்றனர். உடன் இடைநுடங்க மின்னலாகிய உழத்தியரும் செல்கின்றனர். வயலில் வரால் மீன் குதிக்கின்றது. அது கண்டு மின்னலாகிய உழத்தியரும் விண்மீன்களும் அஞ்சி நடுங்க, விண்புலமே விளைபுலமாகக் காட்சி நல்குகின்றது. மதுரை வயற் கரும்புகளை ஐராவதம் கவளமாகக் கொள்கிறது. செந்நெற் கதிர்களைக் காமதேனு தின்று குதட்டுகிறது. வரால்மீன் குதிப்பதும், கரும்பும், செந்நெலும் முறையே ஐராவதத்திற்கும், காமதேனுவுக்கும் உணவாவதும் உயர்வு நவிற்சியின் மணி முடியாகும்.

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் 58-ஆம் பாடல் காட்டும் உயர்வு நவிற்சி வருமாறு:

மதுரையின் விளையாட்டுப் பெண்கள் மணிகளைக் குப்பைகள் என வாரிக்குவிக்கின்றனர். வான்வழி அடைபடுகின்றது. வைகை வெள்ளம் உயர்கின்றது. வழிதப்பிய செங்கதிரோன் வெள்ளத்தில் பொன் பரிசிலாகவும், பிறைத்திங்கள் கைப்படகாகவும், விண்மீன்பரப்பு சிறு மிதப்புகளாகவும் மிதக்க, ஐராவதத்தின் மதநதியும், ஆகாச கங்கையும் வைகை நதியை எதிர் கொண்டு வரவேற்க, அது கற்பகச் சோலையையும் கடந்து சென்று, கடலும் சிறிதெனும்படியாகப் பாய்கின்றது. இதனை இக்காலத்து வைகையாற்றின் நிலையோடு ஒப்பிட்டுப் பார்த்தால்தான் இவ்வுயர்வு நவிற்சியின் பெருமை புலனாகும்.

தேன் வெள்ளமாகப் பாய்கிறது. பலாக் கனியைக் குடமாகக் கொண்டு கடுவன் அச்சத்துடன் நீந்துகிறது. சோலையில் மந்திகள் தாவும் விசையில் எழுகின்ற மரக்கிளைகள் பாய்வதால் திங்களின் வயிறு கிழிந்து நிலா வமுது ஒழுகுகின்றது. திருமால் நெடுமாலாக வளர்ந்து கால்வீச, அண்டகோளத்தின் முகடு கிழிந்து வெண்ணிறக் கங்கையின் அருவி கொட்டுவது போல் அக்காட்சி விளங்குகிறது. (மீனா. பிள். தமிழ்—99).

தற்குறிப்பேற்றம் என்பது இயற்கை நிகழ்ச்சிகளைக் காணும் புலவர் அந்நிகழ்ச்சிகட்குத் தம் குறிப்பில் தோன்றும் காரணங்களை ஏற்றிக் கூறுவதாகும் இது புலவர்களின் கற்பனை வளத்தைப் புலப்படுத்தப் பயன்படும்.

மீனாட்சியம்மை அம்மானை ஆடுகிறாள். அவளுடைய அழகிய கைகளிலிருந்து அம்மானைக்காய்கள் புறப்படுகின்றன. முத்தினாலான காய் முன்னே செல்ல,மாணிக்கத்தாலான காய் அதனைத் தொடர்கிறது. புலவருக்கு இங்கே கற்பனை பிறக்கிறது. அம்மையின் கை செந்தாமரை போல் உளது. கதிரவன் அதனைச் செந்தாமரையாகிய தன் காதலி என மயங்குகிறான். அது மட்டுமா? அக்கையிலிருந்து புறப்பட்ட முத்துக்காயினைத் திங்கள் எனவும் அத்திங்கள், தன்னுடைய தாமரைக்காதலியைத் தீண்டிச் செல்கின்றான் எனவும் எண்ணி அத்திங்களைத் துரத்திச் செல்கின்றானாம். எப்படி? மாணிக்கக்காய்தான் கதிரவன். அக்காய் முத்துக் காயினை (திங்கள் என எண்ணி) விரட்டியடிக்கின்றதாம். உலகியல் உணர்வையொட்டி ஊறிய இக்கற்பனை இனிய தற்குறிப்பேற்றமாகும். (மீனா. பிள் தமிழ்—76).

முத்துக்குமரனின் திருவிளையாடல் அழகிய கற்பனைக்கு வித்தாகின்றது. முருகன் தன் தந்தையின் திரு முடியிலுள்ள பிறை மதியினையும், தாய் பார்வதியின் திரு முடியிலுள்ள பிறை என்னும் அணியினையும் ஒருங்கிணைத்துப் பார்க்கிறான். அது முழு மதிபோல் காட்சி தருகின்றது. முழுமதியினைப்பற்றுவதற்குச் சடையிலுள்ள பாம்பு விரைகின்றது. அப்பாம்பு வருவது கண்ட முருகன் அது தான் சூடிக் கொள்ளும் காந்தள் என்று கருதி நெருங்குகிறான். பாம்பு வெருண்டு ஓடுகின்றது. அங்கே பிரமனின் நகுதலை சிரித்த நிலையில் உள்ளது. அது தன்னைக்கண்டு எள்ளி நகையாடுகிறது போலும் என நினைத்த குமரன், அதனை நோக்கி ''ஏன் சிரிக்கிறாய்? முன்பு என்னால் குட்டுண்டதை அறியாயோ?'' எனப் பல்லைக் கடிக்கின்றானாம்! (முத்து. பிள். தமிழ் வருகை—4).

இறைவன் திருமுடியின் மேலுள்ள மதி என்றும் வளராது தேய்ந்தேயிருக்குமாம். காரணம் என்ன? ஒரு கற்பனை! அந்த மதி வளர்ந்து முழுமைபெற்று விட்டால் செஞ்சடை மேலுள்ள அரவு அதனைத் தீண்டிவிடுமாம்! அவ்வச்சத்தால் தான் அது, காமத்தீப் பிணிக்கு அஞ்சித் தம் உடலை வாட்டும் முனிவர்களைப்போல், தன் உடல் தேய்ந்தே இருக்குமாறு செய்து கொண்டுள்ளதாம்! (சிதம்பரமும்மணிக்கோவை—24)

வேற்றுமையணி என்பது இரண்டு பொருள்களிடை முதலில் ஒப்புமை கூறிப் பிறகு ஒருவகையான் வேற்றுமை காட்டி ஒன்று மற்றதைவிடச் சிறந்தது எனச் சாதுரியம்பட்க் கூறுதல். புலவரும், பிரமனும் படைத்தல் என்ற தொழிலால் ஒப்புமையுடையவர்கள். ஆனால் வேறுபாடும் உண்டு! பிரமன் படைக்கும் உடம்புகள் மாய்ந்து போகும். ஆனால் புலவர் படைக்கும் செய்யுட்களாகிய உடம்புகள் என்றுமே அழியாது நிலைபெற்று நிற்கும். அதனால் புலவர்கள் மலரவனாகிய பிரமனைவிட உயர்ந்தவர்கள். (நீதிநெறி—7).

சொற்பொருட் பின்வருநிலையணி சுவை மிக்கது. ஒரே பாடலில் முதலில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் அதே பொருளில் வந்து இன்பம் தரும்.

''நற்கரும்பு முக்கட் கரும்
பென்னு நங்கைமீர்
விற்கரும்பன் கைக்கரும்போ
வேம்பென்னும்—சொற்கரும்பின்
வாமக் கரும்பு மனைக்
கரும்பாம் ஆரூரர்
காமக் கரும்பும் கரும்பு.''
(திருவா. நான்மணி—34)

இது செவிலி கூற்று, ''இடப்பாகத்துக்கரும்பை இல்லக்கிழத்தியாகக் கொண்ட ஆரூரரின் காமத்திற்கு அரும்பும் கரும்பு போன்ற தலைவி, முக்கட்சிவனாகிய கரும்பை நற் கரும்பு என்றும்,காமன் கைக்கரும்பை வேம்பு என்றும் கூறுவள்'' எனச்செவிலி தோழி மார்களிடம் கூறுவதாக அமைந்தது இப்பாடல். கரும்பு என்ற சொல் திரும்பத்திரும்ப வந்து கரும்பாய் இனிக்கின்றது.

பொய் என்றான் மெய் என்றான்
பொய்யான பொய்யுடலை
மெய் என்றான் பொய் என்றான்

மீண்டு.'' (பண்டார மும்மணிக்கோவை—21)

இப்பாடலில் பொய் என்பது நான்கு முறை ஒரே பொருளிலும் மெய் என்பது இருமுறை வேறு வேறு பொருளிலும் வந்து அழகு செய்வதைக்காணலாம்.

மடக்கும், சிலேடையும் குமரகுருபரருக்குக் கைவந்தகலை. கலம்பகத்தில் மடக்கு ஒருறுப்பாக வரும். மதுரைக் கலம்பகத்தில் இரு பாடல்களும் காசிக்கலம்பகத்தில் மூன்று பாடல்களும் மடக்காக வந்துள்ளன. தொடர்கள் பிரிக்கும் பொழுது வேறு வேறு வகையாகப் பிரிந்து வேறு வேறு பொருள்கள் தருமாறு அமைக்கப்படும்.

'தொடுத்த ணிந்தது மம்புத ரங்கமே
சுமந்திருந்தது மம்புத ரங்கமே'
—மதுரைக்கலம்—27.

இதன் பொருள் இறைவன் மாலையாகத் தொடுத்து அணிந்தும் அம் (அழகிய) புதர் (தேவர்களின்) அங்கமே (எலும்பு) எனவும்; சுமந்திருந்தது அம்பு (கங்கை) தரங்கம் (அலை, எனவும் கொள்ளப்படும். தொடர்களை இவ்வாறு அமைத்தலில் எளிமையும் இனிமையும் தோன்ற வருதல் சிறப்பாகும்.

சிலேடை, ஒன்றுக்கு மேற்பட்ட பொருளைத் தந்து இன்பம் பயப்பது.

'ஆனாலும் காயம்இலை ஐயரவர்க் கம்மானை' என்பது மதுரைக்கலம்பகத்தில் (14) வரும் அம்மானை வரி. இறைவன் உடம்பு இரு கூறு ஆவது ஏன் என்ற வினாவிற்கு இது விடையாக வருகிறது. இறைவனுக்கு (உடம்பில்) காயம் இல்லை என்பதும் இறைவனுக்குக் காயமே (உடம்பு) இல்லை என்பதும் நயமான இரு வேறு பொருள்கள்.

'எட்டுவரை யைக்கடலை முட்டியுளடக்கிடுவன்' என்ற கூற்று' எட்டு மலைகளையும் கடலையும் கைக்குள் அடக்குவேன்' என்று அரிய செயலாக்வும்; எள், துவரை, கடலைகளைக் கைக்குள் அடக்குவேன் என எளிய செயலாகவும் தோன்றுமாறு இரு பொருள் தருவதாகும்.

இவ்வாறு, குமரகுருபரர் பாடல்களில் அணிகள் அணிவகுத்து அழகு செய்யும் இடங்கள் மிகப்பல. இடமும், காலமும் கருதி அவைகளிற் சிலவே இங்கு எடுத்துக் காட்டப் பெற்றன. காலமெல்லாம் படித்துச் சுவைத்துப் போற்றற்குரிய பாடல்களை யாத்துத் தந்த அடிகளாருக்கு என்ன கைம்மாறு செய்யக் கடவேம்? அடிகளாரின் நெறிவழி நின்று சிவத்தொண்டும், தமிழ்த்தொண்டும் சமூகத்தொண்டும் புரியக்கடவேம்!

அகத்திணை அமைதி

புலவர். மா. விசுவநாதன், பெங்களூர்.

நம் செந்தமிழ்மொழி, பிறமொழிகட்கு இல்லாத பல சிறப்புக்களைக் கொண்டது. அவற்றுள் ஒன்று வாழ்க்கைக்கு இலக்கணம் கூறும் பொருள் இலக்கணம். மிகப் பழைய நூலாகிய தொல்காப்பியம் பொருள் இலக்கணத்தை விரிவாகக் கூறுகிறது. இது அகப்பொருள், புறப்பொருள் என இரு வகைப்படும் சங்க நூல்களில் அகப்பொருள் பாடல்களே மிகுதியாகவுள்ளன. இடைக்காலத்தில் தோன்றிய தேவாரம், திருவாசகம், திவ்விய பிரபந்தம் போன்ற பக்தி நூல்களிலும் இறைவனைத் தலைவனாகவும் உயிரைத் தலைவியாகவும் கொண்டு பாடப்பட்டுள்ள அகப் பொருள் பாடல்கள் உள்ளன. பிற்காலத்தில் தோன்றிய பிரபந்தங்களிலும் அகப் பொருள் பாடல்கள் மிகுதியாகவுள்ளன. தற்காலக் கவிதைகளிலும் இவை மிகுதியாக இருப்பதைக் காண்கிறோம். எனவே தமிழ் மொழியில் அன்று தொட்டு இன்று வரை அகப் பொருட்பாடல்கள் நீக்கமற நிறைந்திருப்பதைக் காண்கிறோம். இக்கட்டுரையில் பிரபந்த வேந்தரும் தூய துறவியுமாகிய தமிழ் மாமுனிவர் குமர குருபர அடிகளார் அருளியுள்ள நூல்களில் அமைந்துள்ள அகத்திணைப் பாடல்களில் சிலவற்றைக் காண்போம்.

குறிப்பறிதல்

தலைவன், தலைவியின் வேட்கையை அவள் பார்வையால் அறிந்து மகிழ்வதே குறிப்பறிதலாகும்.

'நாட்டம்' இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்
கூட்டி யுரைக்கும் குறிப்புரை யாகும்''

என்பது தொல்காப்பியம்.

'இருநோக்(கு) இவள்உண்கண் உள்ளது
ஒருநோக்கு
நோய்நோக்கு ஒன்(று) அந்நோய் மருந்து'

என்பது திருக்குறள். தலைவியின் கண்களுக்கு இருநோக்கு உள்ளது எனக் கூறிய வள்ளுவர் அதற்கேற்ற ஓர் உவமை கூறவில்லை. குமர குருபரர் தலைவியின் கண்களுக்குக் கடலை உவமையாகக் கூறுகிறார். கடலில் அமுதும், நஞ்சும் தோன்றியது போலத் தலைவியின் கண்களில் அருட்பார்வையும், மருட் பார்வையும் தோன்றின என்று கூறுவது மிகவும் பொருத்தமாகவுள்ளது. இவ்வுவமையை இதே துறைக்கு மூன்று பிரபந்தங்களில் குறிப்பிடுகிறார் குமர குருபரர். அவை வருமாறு:-

அஞ்சேல் மடநெஞ்(சு)
அபிடேகச் சொக்கரருட்
செஞ்சே வடிக்கடிமை
செய்யார்போல்-துஞ்சா(து)
எறிதிரைக் கருங்கடல்
ஏய்க்கும்
அறலியல் கூந்தற்(கு)
ஆடமர்க் கண்ணே.

(மதுரைக் கலம்பகம்-45)

பருந்தளிக்கும் முத்தலைவேல்
பண்ணவற்கே யன்றி
விருந்தளிக்கும் விண்ணோர்
பிறர்க்கும்-திருந்த
வலனுயர் சிறப்பின்
மன்ற வாணன்அக்
குலமுனி புதல்வனுக்(கு)
ஈந்த
அலைகட லாகும்இவ்
வாயிழை நோக்கே.

(சிதம்பரச் செய்யுட்கோவை-82)

விண்ணமிர்து நஞ்சாம்
விடமும் அமிர்தாம்
உண்ணமிர்தம் நஞ்சோ(டு)
உதவலால்-தண்ணென்
கடலொடு பிறந்தன
போலும் தடமலர்க்
கடிநகர்க் காசியுள்
மேவும்
மடலவிழ் கோதை
மதர்நெடுங் கண்ணே.

(காசிக் கலம்பகம்-70)

நலம்புனைந்துரைத்தல் :

தலைவன், தலைவியின் அழகைப் பாராட்டிக் கூறுவது 'நலம்புனைந்துரைத்தல்' எனப்படும். நீரில் தாமரை மலர்கள் மலர்ந்துள்ளன. அவை, தலைவியின் முகத்துக்கு ஒப்பாக வேண்டும் என்று கருதி நீரில் ஒற்றைக்காலில் நின்றுதவம் செய்வது போலத் தலைவனுக்குத் தோன்றுகிறது. அதனால் அவன், 'தாமரை மலர்களே! தலைவியின் முகத்துக்கு ஒப்பாகவேண்டும் என்று எண்ணித்தவம் செய்வதாக இருந்தால் வாழ்க!' என்று வாழ்த்துகிறான். நீர்நிலையில் உடம்பு மெலிய ஒற்றைக் காலில் நின்று தவம் செய்வார் நிலையும் புலப்படும்படிக் குமரகுருபரர் இப்பாடலில் சொற்களை அமைத்துள்ள நயம் பாராட்டத் தக்கதாம்.

> புனலமுவம் புக்குடைந்(து) ஒர்
> தாளூன்றி நின்று
> வனசங்காள்! செய்தவநீர்
> வாழியரோ வாழி!
> பொருவிடையோன் தெய்வப்
> புலியூரை ஒப்பாள்
> திருமுகத்துக்(கு) ஒப்பச் செயின்.
> (சிதம்பரச் செய்யுட்கோவை—12)

செவிலி இரங்கல்:

தலைவனைப் பிரிந்த தலைவிக்குத் துன்பம் செய்வன பிறைச்சந்திரன், கடல், தென்றல் மாலைப்பொழுது முதலியனவாம். ஒரு செவிலித்தாய் தன்மகளுக்குத் துன்பம் செய்வன ஒன்றல்ல, ஒரு கோடி என்று இரங்கிக் கூறும் பாடல் மிகச்சிறப்பாகவுள்ளது, அது வருமாறு:

> மாற்றொன் றிலையென் மருந்துக்(கு) அந்
> தோ! சொக்கர் மாலை கொடார்
> கூற்றொன் றலஒரு கோடி கெட்
> டேன்! கொழுந் தொன்று தென்றற்
> காற்றொன்(று) இளம்பிறைக் கீற்றொன்று
> கார்க்கடல் ஒன்று கண்ணீர்
> ஊற்றொன் றிவளுக்(கு) உயிரொன்
> றிலைஉண்(டு) உடம்பொன்றுமே.
> (மதுரைக் கலம்பகம்—6)

'என்னுடைய அமுதம் போன்ற மகளுக்குப் பரிகாரம் ஒன்றுமில்லை. ஐயோ! சொக்கநாதர் தாம் அணியும் மாலையைத் தர வில்லை. கெட்டேன்! இவளுக்கு எமனோ ஒன்றல்ல, ஒருகோடி உள்ளன. அவை இளந்தென்றல் காற்று ஒன்றும் பிறைச் சந்திரன் ஒன்றும், கரிய கடல் ஒன்றும் ஆகும். கண்ணீர் ஊற்றுப் பொருந்திய இவளுக்கு உயிர் என்பதொன்று இல்லை. உடம்பு ஒன்று மட்டுமே உள்ளது' என்று செவிலித்தாய் இரங்கிக் கூறுகின்றாள். இதில் 'மருந்துக்கு மாற்றில்லை' என்பது ஒரு நயம்.

மடலேறும் வகையுரைத்தல்:

தலைவன் தோழியைப் பார்த்து, 'நான் நாளை நின் ஊர்த்தெருவில் மடல் ஊர்ந்து வருவேன்' எனக் கூறுவது மடலேறும் வகையுரைத்தல் என்னும் துறையாம். 'இளைய மானைப் போன்றவரே! அமுதம் போன்ற உமாதேவியாருக்கு இடப்பாகத்தையும், நஞ்சுக்கு அழகிய கழுத்தையும் இடமாகக் கொடுத்தருளிய சொக்கநாதர் நரிகளைக் குதிரைகளாக்கிச் செலுத்தினார். எனது தன்மை அத்தன்மையினும் சிறந்தது என்று கூறும்படி, பனைமடல்கள் பெரிய வல்லமையுடைய குதிரையாய் வரும்படி மாற்றி, மதுரையின் அழகிய வீதியில் வருவேன்' எனத் தலைவன் தோழியை நோக்கிக் கூறுகிறான். உயிருள்ள ஒரு விலங்கை மற்றொரு விலங்காகச் செய்வதைவிட, உயிரில்லாத பனைமடலால் ஒரு குதிரையைச் செய்வது அரிய செயல் என்று தலைவன் குறிப்பிடுகிறான். (மதுரைக் கலம்பகம்—72)

இவ்வாறு மடலேறுதல் ஆடவர்க்கு மட்டுமே உரியது. மகளிர் மடலேறுதல் மரபில்லை. இதனை,

> 'எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்
> பொற்புடை நெறிமை இன்மை யான'

என்னும் தொல்காப்பிய நூற்பாவால் (அகத்திணை—38) அறியலாம்.

> கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
> பெண்ணிற் பெருந்தக்க தில்.'

என்னும் திருக்குறளும் (1137) இதனைத் தெளிவு படுத்துகிறது. எனினும், மகளிர் மடல் ஏறுவோம் என்று கூறுவதாகப் புலவர்கள் பாடியுள்ளனர். குமரகுருபரரும் அவ்வாறு (மதுரைக் கலம்பகம்—34) பாடியுள்ளார்.

பாணனைப் பழித்தல்:

பரத்தையிற் பிரிந்த தலைவன், தலைமகளது கருத்தை அறிந்து வரும்படி பாணனை அனுப்பினான். பாணன் தலைவனைப் பரத்தையர் வீட்டிற்கு அழைத்துச் சென்று, அங்கே இருக்கச் செய்து விட்டுத் தன் வீட்டில் வந்து அவனைத் தேடுகிறான் என்பது தலைவிக்குத் தெரியும். அதனால் அவள் அவனைப் பார்த்து, 'அறிவில்லாத பாணனே! சுந்தரர் பொன்னைத் திருமுது குன்றத்தில் உள்ள மணிமுத்தாற்றில் இட்டுத் திருவாரூர்க் குளத்தில் தேடியெடுத்தார். அது போல இம்மதுரையில் தலைவரைப் பரத்தையர் மனையில் தங்க வைத்துவிட்டு எம்மனையில் வந்து தேடுகின்றாய்' (மதுரைக் கலம்பகம்—75) என்று தலைவி பாணனைப் பழித்துரைக்கின்றாள்.

இத்தகைய அருமையான பல அகத்திணைப் பாடல்களைக் குமரகுருபரர் பாடியுள்ளார். நாம் அவற்றைப் படித்துச் சுவைத்து மகிழ்வோமாக!

அந்தணன்

மு. கிருஷ்ணன், ஐ.ஏ.எஸ்.(ஒய்வு)
சென்னை.

தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
சுந்தரர் அருளிய திருத்தொண்டத் தொகை–7ம்
திருமுறை.

அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது. குறள் 8

குறளில் வந்துள்ள அ ந் த ண ன் என்ற சொல்லுக்கு கடவுள் என்று தான் பொருள் கொள்ளப்படுகிறது. காரணம் இக்குறள் கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் வருவதால், ஆனால் தேவாரத்தில் வரும் அந்தணர் என்ற சொல்லுக்கு தில்லையில் வாழ்கின்ற எல்லா அதாவது மூவாயிரம் அந்தண்ர்களை அதாவது பிராமணர்களைக் குறிக்கும் என்று பொதுவாக பொருள் கொள்ளப்படுகிறது. இது பொருந்தாது என்பது அடியேன் கருத்து. அந்தணர் என்ற சொல்லோடு தம் என்ற வார்த்தை உள்ளது. அந்தணருக்கு அடிமை என்று சுந்தரர் கூறவில்லை. அந்தணருடைய அடியார்க்கும் அடியேன் என்று கூறியுள்ளார். சைவப் பெருமக்களுக்கு தில்லையாகிய சிதம்பரம் தான் முக்கிய வழிபடும் தலமாகும். ஏனென்றால் உயிர்களை எல்லாம் இயக்கி வருகின்ற ஆடவல்லான் எப்பொழுதுமே நடனமாடிக் கொண்டிருக்கிறார். யாத்திரை தொடங்குவதென்றால் கூட சிதம்பரத்தில் தான் தொடங்குவது என்பது மரபு. தவத்திரு குமரகுருபரர் சுவாமிகளுக்கு அவருடைய குருநாதர் தருமை ஆதீன நான்காம் பட்டம் குருமகா சன்னிதானம் மாசிலாமணி தேசிகர் சிதம்பர தரிசனம் செய்து வரச்சொல்லி உபதேசம் வழங்கியதாக வரலாறு. ஆகவேதான் திருத்தொண்டர்களின் பெருமையை பாடமுற்பட்ட சுந்தரர் முதலில்தில்லையை நினைத்தார்.தில்லை வாழ் என்று கூறியிருப்பதால் தில்லையில் எழுந்தருளியுள்ள நடராசப் பெருமானை நினைத்து அவருடைய அடியார்களுக்கு அடியேன் என்று பதிகத்தை துவக்கியுள்ளார். இதே போன்று ஒன்பதாம் திருமுறை ஆசிரியர்களில் ஒருவரான சேந்தனார் திருபல்லாண்டு பாடல் ஒன்றில் மன்னிய தில்லை தன்னுள் ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே இடம் ஆக...' என்று குறிப்பிட்டுள்ளார். தில்லலயை முதலில் எடுத்துக்கொண்டதால் தில்லையில் வாழ்ந்த திருநீலகண்ட நாயனாரை சுந்தரர் முதலில் குறிப்பிட்டுள்ளார். மற்ற நாயன்மார்களைக் காட்டிலும் பெருமையில் சிறந்தவர் என்று இவரைத் தனி அடியார்களில் முதலில் குறிப்பிட்டுள்ளார். என்று கூறுவது பொருந்தாது. நால்வர்களை விட இவர் சிறந்தவர் என்று கூறுவது பொருந்துமா?

மேலும் பலரும் பொருள் கொள்வது போல் தில்லை வாழ் மூவாயிரவர்களைத் தான் அந்தணர் என்று சொல் குறிக்கும் என்றால் இவர்கள் தொகை அடியார்களில் வைத்து எண்ணபடவேண்டும் இத்தகைய தொகையடியார்களை சுந்தரர் 10-வது பாட்டில் வைத்து பாடுகிறார் அதில் வரும் முப் போதுந் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன் என்ற தொடர் கோயில்களில் பூசை புரிந்து தீரும் சிவாச்சாரியார்களைக் குறிக்கும் தில்லை மூவாயிரார் தொழிலும் முப்போதும் திருமேனி வண்டிபூசை புரிவதுதான்.

செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப் பெருந்துறையுறை கோயிலுங்காட்டி
அந்தண ணாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தருளாயே

திருவாசகம்-திருப்பள்ளியெழுச்சி-8

இங்கும் மாணிக்கவாசக சுவாமிகளும் திருப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ள பரனை அந்தணன் என்றே குறிப்பிடுவதை நோக்கற்பாலது. மேலும் திருக்கோவையாரிலும் கீழ்க்கண்ட

பாடலில் நடராஜப் பெருமான் தில்லை மூவாயிரவரைச் சேர்ந்தவர் அல்லர் என்று குறிப்பிடுகிறார்

ஆவா! இருவர் அறியாஅடி தில்லை அம்பலத்து
மூவா யிரவர் வணங்க நின் றோனைஉன் னாரின்முன்னித்
தீவாய் உழுவை கிழித்ததந் தோ ! சிறி தேபிழைப்பித்
தாவா மணிவேல் பணிகொண்ட வாறின்றோர் ஆண்ட கையே.
(பாடல்-72)

மேலும் கண்டராதித்தர் பாடிய திருவிசைப்பா பாடல் ஒன்றில் (9ம் திருமுறை)

முத் தியாளர் நான் மறையர் மூஆயவரவர் நின்னோடு
ஒத்தே வாழும் தன்வையாளர் ஓதிய நான் மறையைத்

என்று பாடியுள்ளார் இங்கும் தில்லை மூவாயிரவர்களில் தில்லைக் கூத்தன் ஒருவனல்ல என்பது தெளிவு பெற விளங்குகிறது

திருஞானசம்பந்தர் திருவேட் களத்தைக் கடந்து புலியூர்ப் (சிதம்பரம்) புக் கணையும் போழ்தின் தில்லை மூவாயிரவர்களும் கண நாதர் களாய்த் தோன்றினார்கள் என்றும் அக்காட்சியை உடனிருந்த திருப் பெரும்பாணர்க்கும் காட்டியருளினார் என்றும் பெரியபுராணம் கூறுகிறது. அப் பெரியபுராணப் பாடல் இதுதான்.

அண்டத் திறைவர் அருளால் அணிதல்லை
முண்டத் திருநீற்று மூவாயிரவர்களும்
தொண்டத் தகைமைக் கண நாதராய்த் தோன்றக்
கண்டப் பரிசு பெரும் பாணர்க்குங் காட்டினார்.
(திருஞானசம்பந்தர் புராணம்-பாடல் 170)

இப்பாடல் படியும் தில்லை முவாயிரவர்களில் அம்பலவாணன் ஒருவனல்ல என்பது தெள்ளிதின் விளங்கும்.

மேற்கூறியவற்றால் சுந்தரர் தம் திருத் தொண்டத் தொகையில் முதலில் கு றி ப் பி ட் ட அந்தணர் என்ற சொல் நடராஜப் பெருமானைத் தான் குறிக்கும் என்பதில் ஐயமுண்டோ!

திருவள்ளுவர் இதே சொல்லை கீழ்க்கண்ட குறட்பாவில் மற்றொரு பொருளிலும் கூறியுள்ளார்.

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்.
குறள் 30 நீத்தார் பெருமை

எல்லா உயிர்களிடத்திலும் செம்மையான அருளை மேற்கொண்டு ஒழுகுவதால் அறவோரே அந்தணர் எனப்படுவோர் ஆவார். அறவோர் என்பவர் யார் என்பதை திருவள்ளுவர் விளக்குவதைப் பார்ப்போம்.

மனதில் குற்றம் இல்லாதவனாக இருக்க வேண்டும் குறள் 34,

பொறாமை, ஆசை, சினம் கடுஞ்சொல் ஆகிய இந்
நான்கு குற்றங்களுக்கும் இடங்கொடுக்காமல் ஒழுக வேண்டும் குறள் 35

முகத்தான் விரும்பி இனிமையுடன் நோக்கி உள்ளம்
கலந்த இன்சொற்களைக் கூறும் தன்மையுடையவராய்
இருக்கவேண்டும் குறள் 93.

மேற்படி பண்புகளை உடையவர்கள் தான் அந்தணர் என்பது வள்ளுவ நெறி. இதே சொல்லை இறைவனைக் குறிப்பதாக கடவுள் வாழ்த்தில் திருவள்ளுவரும், திருப்பள்ளியெழுச்சியில் மாணிக்கவாசகரும், திருப்பல்லாண்டில் சேந்தனாரும் கூறியிருப்பதால் அறவோர்கள் இறைப் பண்பை பெற்றிருப்பார்கள் என்று பெறப்படுகிறது.

இப்போது நடைமுறையில் ஒரு குறிப்பிட்ட பிராம்மண சமூகத்தந்தை அந்தணர் என்ற சொல் குறிப்பிடுவதாக வழக்கில் உள்ளது. பிராம்மணர் என்ற இனம் பிறப்பு அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது ஆனால் மனபரிபாகத்தையும் வாழ்க்கை முறையையும் வைத்து ஒருவனை பிராம்மணன் என்கிறது அறநூல். இம்முறைப்படி பிராம்மணன் எந்த சமூகத்திலும் எந்தக் குடியிலும் எக் காலத்திலும் தோன்றலாம். சாதாரண மனிதர்கள் பிராம்மண இயல்பு களை உடையவர்களானால் அவர்கள் பிராம்மணர் என்று கூறத் தகுதியுடையவர்கள். பிராம்மண இயல்புகள் எவை என்று ஸ்ரீமத் பகவத் கீதை விவரிக்கிறது.

அகக்கரணங்களை அடக்குதல், புரக்கரணங்களை அடக்குதல், தவம் தூய்மை, பொறுமை நேர்மை, சாஸ்த்திர ஞானம், சுவானுபவ ஞானம், ஈசுவர நம்பிக்கை.

அத்தியாயம் 18 சுலோகம் 42

ஆகவே பிராம்மணன் என்பவன் இறைப்பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும். அதாவது கட்டுப்பாடான வாழ்க்கையுடையவனாய் இருக்க வேண்டும். மனவடக்கமும் பொறிகளின் அடக்கமும் மேற்கொள்ளவேண்டும். பரத்தை நாடித்தவம் புரிதல் வேண்டும். மனம், மொழி, மெய் ஆகிய திரிகரணங்களும் தூய்மையாக இருக்க வேண்டும். பொறுமை வேண்டும். சிந்தையிலும் சொல்லிலும் செயலிலும் நேர்மை இருக்க வேண்டும். சாத்திர ஞானமும் வாழ்க்கை அனுபவ ஞானமும் தெரிந்தவனாக இருக்க வேண்டும். கடவுள் நம்பிக்கை உள்ளவனாக இருக்க வேண்டும்.

இப்பண்புகளை இயல்பாய் உடையவன் தான் பிராம்மணன் என்று கீதை கூறுகிறது. இவனையே திருவள்ளுவர் அந்தணன் என்று குறிப்பிடுகின்றார். இவ்வகையினரே எல்லா உயிர்களிடத்தும் அருளைச் சொரிந்து செந்தண்மை பூண்டு ஒழுகுவர் இவ்வருளாளர்களால் உலகத்துக்கு நன்மையுண்டு. நாடும் நலம் பெறும் நாமும் எல்லாரும் இப்பண்புகளைப் பெற்று அந்தணர்களாக வாழ முயலுத வேண்டும்

'பழுத்த தமிழ்ப் புலவர்'

(புலவர் பனசை சுவாமிநாதன், எம். ஏ., பி. எட்., எம். பில்.,)

முன்னுரை :

தமிழ் மொழி மிகவும் பழமையான மொழி; அதன் தோற்றத்தை அறுதியிட்டுச் சொல்ல இயலாது. "இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் இயம்பலின்" என்பது நன்னூல் தமிழின் மிகப் பழைய இலக்கண நூல் தொல்காப்பியமே அதற்குப் பலநூறு ஆண்டு கட்கு முன்பே தமிழ் இலக்கியங்கள் செழித்திருந் தன என்பதை உணரலாம். தொல்காப்பியக் காலம் ஏறத்தாழ கி. மு. 4-ஆம் நூற்றாண்டு என்பர் டாக்டர் மா. இராசமாணிக்கனார். இவ்வாறான பண்பட்ட இலக்கிய வளமும், எண்ணற்ற கலை நலங்களும் செறிந்த தமிழ் மொழியின் தலை சிறந்த கவிஞர் பெருமக்களில் தவராஜசிங்கமாகத் தாரணியில் சைவமும் தமிழும் போற்றிப் பரப்பிய ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

தெய்வீகக் கவிஞர் :

"எல்லாப் படைப்புகளும் (Writlng) இறைவன் கருணையினால் உருவாவன என்பர் அறிஞர். (All writnig comes by the grace of God - Emerson). நமது சுவாமிகள் கந்தனருளால் மூங்கைநிலை நீங்கிப் பழுத்த தமிழ்ப் புலமை பாவிக்கப் பெற்றவர். அவரது இலக்கியங்கள் இணையில்லாத நயங்கள் செறிந்தவை. அவற்றுள் பருந்தின் வீழ்வாக - மேலோட்டமாகக் கண்டு சில அற்புதக் கவி களைத் தொகுத்து ஆய்வதே இக்கட்டுரை நுதலிய பொருள் ஆகும்.

எல்லாப் பொருளும் உள :

"இலக்கியம் என்பது மொழி என்னும் கருவிவாயிலாக அமையும் "வாழ்க்கை வெளியீடு ஆகும்" என்பர் ஹட்சன் எனும் அறிஞர். (அ. பாலசந்திரன், இலக்கியத் திறனாய்வு 1976, பக். 70, 71); அத்தகு வாழ்க்கை வெளியீடாகத் தமது பனுவலகளை யாத்துள்ள கவிஞர் தம் படைப்புகளில் சொல்லாத பொருள் இல்லை. பரம்பொருளைப் பேசுபவர் குறத்திப் பெண்ணையும் பாடுகிறார். குழந்தையையும் வயது முதிர்ந்தோரையும் எடுத்துச் சுட்டுகிறார். வருணனைகள் அவர் பாடலில் வளமுடைய தாகத் திகழ்கின்றன. கற்பனைத்தேர், 'வான் வழங்கியற்கை வளிமூட்டியோ, மான் உருவாக மனம் பூட்டியோ' பறக்கிறது. "படிப்போர்க்கு இன்பம் தருவதாக — அமைய வேண்டும்; சொல்லப்பட்ட பொருள் மூலமாக அன்று; சொல்லப்பட்ட முறையினால் இன்பம் தர வேண்டும்; அதுவே இலக்கியம் என்பர் அறிஞர். (Writing is not literature urless it giues to the reader a pleasure which arises not only roma the lhings said, but from the way in which they are said Stofford A Brooke) அவ்வாறான அமைப்புகள் செறிந்த இவர்தம் நூல்களில் எல்லாப் பொருளும் உள; இல்லாத பொருள் இல்லை' — என்று கூறலாம்.

கல்விச் சிந்தனை :

சிற்றுயிர்க்குக் கல்வி உற்ற துணை'யாகும் (நீதிநெறி - பா - 1) என்று மொழியும் இக் கவிஞர்கோ, சிறந்த, இன்றைய கல்வி நெறி முறைகளில் பலவிதமான ஆய்வுகளுக்குப் பின்

கண்டுபிடிக்கப்பட்ட, சில கருத்துக்களை மிகவும் நுட்பமாகக் குறிக்கிறார்.

1. கல்வியானது ஒரு தொடர்ச்சியான செயல்முறை; கற்க வேண்டும்; நுட்ப உணர்வுடன் இடமறிய வேண்டும். இத்துடன் தான் கற்ற ஒன்றைக் 'கற்றார்முன் கற்ற செலச் சொல்வார்' என வள்ளுவம் கூறியது போல எடுத்துரைக்கும் ஆற்றல் வேண்டும் எனக் கூறுவர். (நீதி : 4)

2. கற்றனவற்றை மனத்தில் இருத்த வேண்டும்; அதனை மறந்து, பிறிதொன்றைப் பயில முனையக் கூடாது. (நீதி : 8)

3. எல்லாம் கற்றவர் யாருமில்லை. ஆதலால் கற்ற சில கொண்டு தருக்குதல் கூடாது (நீதி : 13)

4. தம்மை விடக் கற்றவரைக் கண்டு மனமடங்கி அவரனைய உயர்வைப் பெற முயல்க. (நீதி : 14)

உலகியல் சிந்தனை :

இலக்கியம் வாழ்வியலை அடித்தளமாகக் கொண்டது. எனவே, கவிஞர் தமது வளவிய நயங்கள் மிக்க இலக்கியங்களில், வாழ்வியலைக் கூர்ந்து நோக்கிச் சில செம்மையான கருத்துகளை உள்வைத்துப் பாடுகிறார்.

மனிதனின் உயர்வுக்கு இரண்டு பண்புகள் அவசியம். பிறர் குறைகளைத் தூற்றாமை; அவரது சிறப்புகளை மட்டும் சொல்கின்ற தன்மை ஆகிய பண்பொன்று, ஏனையது யாவர் மாட்டும் அடக்கம் உடையாய் வாழ்தல். ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்நாள் முழுவதும் கைக்கொண்டு போற்ற வேண்டிய ஒழுகலாறாக அவர் குறிப்பது இதனையே :-

"பிறர்பிறர், சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்து யார் யார்க்கும் தாழ்ச்சி சொலல்"
(நீதி : 19)

ஆசையென்பது கடல் போன்றது; அதற்கு அளவில்லை. கடல் மேலும் ஆட்சி செய்ய ஆசைப்படுவர் மனிதர் — என்று தாயுமானவர் கூறுவார்.

"ஆசையை விட்டொழியுங்கள்; ஆசைதான் துன்பங்கட்குக் காரணம்" — இது புத்தரின் பொன்மொழி.

"ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள் ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்" என்று திருமூபர் அறிவுறுத்துவர்.

நமது சுவாமிகள் அற்புதமாகச் சொல்வார்; மானிடர்களே! உங்களிடம் ஓரளவு பொருள் உள்ளது. உங்களைவிடப் பொருள் குறைவாக உள்ளவர்களைப் பாருங்கள். இவர்களை விட நாம் உயர்ந்துள்ளோம் என மன நிறைவு அடையுங்கள் (Self content); அம்மன நிறைவு தான் செல்வமாகும். அந்நிறைவு இல்லையேல் அதுதான் வறுமை நிலையாகும் என மிகவும் நுட்பமான, பிறர் கூறாத, அரிய கருத்துகளைக் கூறும் அவர்தம் வாக்குகள் வருமாறு :-

'தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை அம்மா பெரிதென் றகமகிழ்க' (நீதி : 14)

'செல்வ மென்பது சிந்தையின் நிறைவே அல்கா நல்குரவு அவாவெனப் படுமே'
(சி. மு. கோ. 26)

தாய் என்ற ஓர் உறவு முறை உலகிலேயே ஒப்புயர்வில்லாதது. 'பால் நினைந்தூட்டும் தாய்' — என்பர் அருளாளர். அப்படிப்பட்ட தாயானவள், குழந்தைக்கு நோய் ஏற்பட்டால், வருந்துவள்; நோய்க்குரிய மருந்தைத் தான் உண்டு; அதன் வெம்மையைக் குறைத்துப் பால் வழியாகக் குழந்தைக்குத் தருவாள்.
(சி. மு. கோ. 2)

அன்னை குழந்தையைக் கண்டிப்பது அவரிடம் கொண்ட வெறுப்பினால் அல்ல; அருள் உணர்வினாலேயே; (சி. செ. கோ. 68) என்றெல்லாம் முனிவர் அருளுவர்.

இலக்கிய நயம் :

"வரிகளும், கோடுகளும் இட்டு அளக்கும் உலகம் ஒன்று; நெஞ்சினாலும் கற்பனையினாலும் உணரத்தக்க உலகம் மற்றொன்று; என இரண்டு உலகம் உண்டு" என லெய்ஹண்ட் என்ற பேறிஞர் கூறுவார். (The are two worlds; the world that we can measure nith liue and rule, and the world that we feel nith our hearts and imagiretions Leigh Hunt'); இலக்கிய உலகம் கரையிலாக் கடல் போன்றது; அக்கடலில் பலவிதமான முத்துக்கள் காணப்படும் அது வல்லவர் கையில் தான் புலப்படும். நமது சுவாமிகள் மிக்க நுட்பம் கொண்டவர்; அவர் உரைக்கும் சில உவமைகள் ஒப்பற்றவை;'உய்'ந்ததன் மேற்றே' எனத் தொல்காப்பியம் கூறுவதற்கு ஏற்ப அமைந்தவை;

'கன்மத்துக் கீடாய்க் கறங்கும்
சகடமும் போல்'
(கந் ' கலி : 16)

தாரணியில், இ ந் தி ர சா லம்புரிவோன்
யாவரையும் தான்மயக்கும் தந்த்ரத்தில்
சாராது சார்வது போல்'

இளமை நீரில் தோன்றும் குமிழி போன்றது; செல்வம் நீரில் உண்டாகும் அலைகள் போன்றது. நீரில் எழுதிய எழுத்து ஒத்தது உடம்பு — என நீரில் அமையும் பொருள்களை வைத்துக் கொண்டு மாபெரும் நிலையாமைக் கருத்துகளைச் சொன்னவர் பிறரில்லை எனலாம்.

(நீதி : காப்பு)

யாக்கை,

'உன்னாமுனம் மின்னாமென உளது'
(சி. செ. கோ. 50)

என்பர் ஓரிடத்தில்

'நீர்க்கோல வாழ்வை நச்சி'

எனும் கம்பன் வாக்கு ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது.

இவ்வாறு, இலக்கிய நயங்களைக் காணப் புகின் எதிர்ப்படுவனவோ ஓராயிரம்; இல்லை அதற்கும் மேலாம்.

பதச் சோறாய் ஒன்று; பெருமான் வளையல் விற்றார். அவரழகில் பெண்கள் மயங்கினர்; அவர்களின் கை வளையல்கள் சோர்ந்து வீழ்ந்தன. கவிஞர் கேட்கிறார்? ஏனய்யா! நீர் வளையல் விற்க வந்தீரா? இல்லை வாங்க வந்தீரா? என்று அருமையான நயம் செறிந்த பாடல்.

(மதுரைக் கலம் பகம் : 8)

முடிவுரை :

கவிஞர் ஓதாதுணர்ந்த போதம் மிக்கவர். அவர்தம் கவிகள் வரைந்த ஏட்டைத் தொட்டால் கை மணக்கும். சேற்றில நட்டால் தமிழ்ப் பயிராய் மணக்கும். ஏனெனில் அவர் செந்தில் கந்தனருளால் '**பழுத்த தமிழ்ப் புலமை**' பாலிக்கப் பெற்றவர் அல்லவா?

"ஒண்மலர் சொன்மலர்க் கொவ்வாது போலும்"

Estd: 1921 Phone: 23631

Sri Mahalakshmi Iron Works,

(Prop: **P. N. R Rajaram,** L. M. E.)

72, South Avani Moola Street, Madurai-625 001.

P. B. No. 192.

Mfrs: **ASHOK ROLLING SHUTTERS**

ஸ்ரீ மஹாலெக்ஷ்மி இருர்பு தொழிற்சாலை,

(உரிமையாளர்: P. R. N. ராஜாராம், L. M. E.)

72, தெற்காவணி மூலவீதி, மதுரை-625 001.

தபால் பெட்டி எண்: 192

தயாரிப்பாளர்கள்: **அசோக் ரோலிங் ஷட்டர்கள்**

உ

கோமதி ஏஜன்சீஸ்,

நூல் வியாபாரம்,

34, ராமசாமி கவுண்டர் வீதி,

ஈரோடு-1.

PHONE: Off: 74180 Res: 75180
73600 75280
79890

இறைவனின் திருவருட் சிறப்பு

(குமரகுருபரரின் அருட்பனுவல்களில்)

டாக்டர் **கோமதி சூரியமூர்த்தி,**

சைவ சித்தாந்தத் துறை,

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

முன்னுரை :

குமரகுருபரரின் அருட்பனுவல்களிலிருந்து அறியவரும் இறைவனின் திருவருட் சிறப்பு இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றது.

உயிர்களுடன் தொடர்பு கொள்வது திருவருள்

எல்லாம் வல்ல முழுமுதற் பொருள் சிவம், சக்தி என ஈரியல்பு உடையதாய் விளங்குகின்றது. சூரியன் தன்னளவில் நிற்கும் பொழுது கதிரவன் என்றும், உலகோடு தொடர்பு கொள்ளும் நிலையில் கதிர் என்றும் கூறப்படுவது போல, இறைவன் தன்னளவில் நிற்கும் பொழுது சிவம் என்றும், உயிர்களோடு தொடர்பு கொள்ளும் நிலையில் சக்தி என்றும் கூறப்படுகின்றான். இறைவனது திருவருளே சக்தி எனப்படும். "அருளது சக்தியாகும் அரன் தனக்கு" என்கின்றார் அருணந்திசிவாசாரியார் (சித்தியார் சுபக்கம், செ. 239) சக்தியைப் பெண்ணாக உருவகிப்பது சைவ சமய மரபாகும். குழந்தையின் குடர் மருந்தைச் சீரணிக்கும் சக்தியற்றதென்று மருந்தைத் தான் உண்டு அதன் பயனைப் பாலின் வழியே அக்குழந்தை பெறும்படிச் செய்யும் தாயைப்போல அம்பிகை நடராச மூர்த்தியின் திரு நடனத்தைத் தான் தரிசித்து அதன் பயனை உயிர்கள் நுகரவைப்பள் என்று குமரகுருபரர் கூறுவது (சித. மும். கோ. 2. வரி 14 - 21) திருவருள் விளக்கத்தை உணர்த்தும்.

இறைவன் வடிவு கொள்ளக் காரணம் திருவருளே

இறைவன் சொருப நிலையில் ஓர் நாமம் ஒருருவம் ஒன்றுமிலான். தடத்த நிலையில் உருவம், அருவுருவம் அருவம் என்ற மூவகைத் திருமேனிகளை எடுக்கின்றான்

''உருவும் அருவும் உருவருவு மாகிப்
பருவ வடிவம் பலவாய்''

(கந்தர் கலிவெண்பா, கண்ணி 11)

என்று குமரகுருபரர் கூறுகின்றார். அவ்வாறே அவன் மூவகைத் திருமேனிகள் கொள்வது உயிர்களிடம் கொண்ட கருணையினால் உயிர்கட்கு அருட்செய்யும் பொருட்டேயாகும்.

''ஆட்பா லவர்க்கருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான் புகில் அளவில்லை'' என்று

திருஞானசம்பந்தர் கூறியபடி இறைவன் பல்வேறு உயிர்களை அவரவர் தகுதிக்கேற்பப் பல்வேறு முறையால் ஆட்கொண்டருள்வதால் "பருவ வடிவம் பலவாய்.'' என்றார்.

ஐந்தொழில் ஆற்றக் காரணம் திருவருளே :

"அருள் முந்துறுத்த ஐந்

தொழில் நடிக்கும் பரமானந்தக் கூத்த'' (சித. மும். கோ. II. வரி 20) என்று குமரகுருபரர் கூறுவது உயிர்களின் பொருட்டு அவர்கள்பால் கொண்ட அருளால் இறைவன் ஐந்தொழில் செய்கின்றான் என்பதை உணர்த்தும். உயிர்களின் ஆணவமலம் பரிபாகமடையப் படைத்தலையும், கன்மமலம் பரிபாகமடையக் காத்தலையும், இளைப்பாற்றுவிக்க அழித்தலையும் (ஒடுக்கம்), கன்ம பலனை நுகரவைப் பதற்காக மறைத்தலையும், பேரின்பமாகிய முக்தி தர அருளலையும் செய்கின்றான். குமரகுருபரர் மற்றுமோர் பாடலில் இறைவனை நோக்கி, "ஒரு தொழிலுமில்லாத நீ ஐந்தொழிலும் எவ்வாறு உடையாய்? தொழில் செய்யும் கரணங்கள் நினக்கில்லை. ஐந்தொழில் விளையாட்டும் உன் பெயரை வைத்து உன் சக்தி நடத்துவதே. எவ்வுயிரும் ஈன்றெடுத்த திருவருட் சக்தி முனிவதும் அவற்றின் நலன் பொருட்டே என்பதை,

"இன்னருளே மன்னுயிர்கட்கு எத்தொழிலும் ஈன்றெடுத்த அன்னை முனிவதுந் தனயர்க்கு அருள் புரிதற்கேயன்றே'' (சித செ கோ 68, தாழிசை—4) என உணர்த்துகின்றார். எத்தொழிலும் இன்னருளே.

திருவருள் உயிர்களிடத்து பதியும் காலமும், பதியும் முறையும் :

வீடு பேறடைதற்குத் தகுதிபெற சத்திநிபாதம் வேண்டும். அதற்கு இருவினையொப்பும் மலபரிபாகமமும் உயிர்களிடத்து அமைதல் வேண்டும் என்று குமரகுருபரர் கந்தர் கலி வெண்பாவில் கூறுகின்றார். திரோதானமாய் நின்று மறைப்பைச் செய்து வந்த இறைவனின் சக்தி, உயிர்களின் மலங்கழலும் சமயத்தில் அருட் சக்தியாக மாறி உயிர்களிடத்துப் பதிதலே சத்திநிபாதமாகும். (சக்தி - திருவருள், நிபாதம் — வீழ்தல்) உயிர்களிடத்து திருவருள் பதியும் முறையாவது. உயிர்களின் பக்குவ நிலைக்கேற்ப மந்ததரம். மந்தம், தீவிரம், தீவிரதரம் என நான்கு வகையாய் நிகழும் (கந்தர் கலி வெண்பா கண்ணி 20 — 22).

முக்திக்கு உதவுவது திருவருளே

தவமிக்க பெருந்தொண்டர் மெய்ந்நூலினைப் பல்காலோதி சிவமிது எனத் தெளிந்து அம்பலவாணரை ஆரா அன்பினோடு மனமார வணங்கிப் பேரா இயற்கை (முக்தி) பெற்றனர். யானோ சரியை, கிரியை, யோக ஞானங்களில் பயிலாது உன் பொற்றிருமன்றினை வாளா நோக்கிப் பிறவா நெறி பெற்றனன் என்று குமரகுருபரர் சிதம்பர மும்மணிக்கோவையில் (செ. 5, வரி 1 - 10) கூறுகின்றார். சைவ சமயம் இறைவனை அடைதற்குரிய நெறிகளாக சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கினைக் கூற, அந்நெறிகளில் நில்லாமல் இறைவனைக் கூடுவது எவ்வாறு என்ற ஐயம் எழலாம். சைவ சித்தாந்தம் இந்த ஐயத்தை நீக்கி தெளிவுபடுத்துகின்றது. சரியை, கிரியை, யோகம் முதலியன ஞானம் கிடைத்தற்கு நிமித்தமே தவிர அவையே முதற் காரணமாகா. திருவருளே முதற் காரணமாகும். ஞானமும் வீடு பேற்றிற்கு வாயிலே தவிர வீடு பேறடைவதற்கும் திருவருளின் துணை இன்றியமையாததாகும்.

தவப்பெருந்தொண்டர் பன்னாள் முயன்று பெற்ற பேற்றிற்கும், அடிகளார் சிறிதும் முயலாது தரிசனம் மாத்திரம் செய்து பெற்ற பேற்றிற்கும்

பயனில் வேறுபாடில்லை என்பதை, பொன்னிறப் புறாவும், கருநிறக் காகையும், இமயமலையைச் சார்ந்த போது ஒரு நிறத்தனவாதலை உவமையாகக் கூறி விளக்குகிறார். (சித. மும். கோ. 5 வரி 27 — 31) குமரகுருபரரின் இக்கூற்று இன்னருள் பழுத்த இறைவனின் திருச்சந்நிதிப் பெருமையை உணர்த்தும். அமுதத்தை யாருண்டாலும் அவர்கள் இறவாமை நீங்கி அமரராதல் போல இறைவன் தரிசனத்தை யார் பெறினும் அவர் வீடு பெறுவர் என்று குமரகுருபரர் கூறுவதும் (சித. மும். கோ. 7) இங்கு நினைவு கூர்தற்குரியது.

அடிகளார் தாம் தவம் செய்யாதிருந்தும் திருவருளுக்கு இலக்காயினமைக்கு நயம்பட ஒரு காரணம் கூறுகின்றார். அடியேன் புறத்தே தொண்டர் வேடம் தாங்கி, அகத்தே தீயொழுக்கம் உடையவனாக இருந்தும் நின் தொண்டர்களோடு பழகினமையின் அவர்கள் என் புறவேடத்தை மெய்யென நம்பி என்னைத் தக்கவனாகப் பாவித்தனர். என்பால் தேவரீர் எழுந்தருளி இருப்பதாக அவர் பாவித்த பாவனை உண்மையிலேயே நான் உய்யும் நெறியைப் பெறச் செய்தது என்று கூறுகின்றார். (சித. மும் கோ II வரி 5—16). அடிகளார் புறம் போன்றே தூய்மையான சிறந்த ஒழுக்க சீலரே. அடிகளாரின் முற்கூறிய கருத்து புறமொன்றும் உள்ளொன்றுமாய்த் திரியும் சில மனிதர்களின் இயல்பைக் குறிப்பதோடு திருவேடச் சிறப்பினையும் உணர்த்துகின்றது.

திருவருள் பெற குருவருள் துணையாதல்

'' சத்திநிபாதம் நின் சந்நிதிப் பட்ட இத்திறத் தெளிதினில் எய்தியது எனக்கே '' என்று குமரகுருபரர் பண்டார மும்மணிக் கோவையில் (செ. 29 வரி 39 — 40) கூறுவது திருவருள் பெறக் குருவருள் துணை செய்வதை உணர்த்தும்.

அருளும் முறை

சகலராகிய உயிர்கள் அருள் பெறுவதற்கு அவர்களிடத்துப் பக்குவமும் வேண்டும், ஞான குருவும் வேண்டும் என்பது சித்தாந்தக் கோட்பாடு. அடிகளார் தமக்கு சத்திநிபாதம் பெறும் தன்மை வரவில்லையாயினும் இறைவன் மெய்ப்பொருளுணர்த்தித் தம்மை ஆட்கொள்ளலே சிறப்புடைத்தென்பதை பின்வருமாறு நயமுடன் நவில்கின்றார் (பண்டார மும்மணிக் கோவை 17, வரி 26—44). ''நீ மெய்ம்மயிர் சிலிர்ப்பக் கண்ணீர் வார மொழி தடுமாற உழுவலன்பு அலைப்பச் சத்திநிபாதத் தன்மை வந்தடைந்தோர்க்கு ஞானம் நல்குதல் வியப்பாகாது. மணிவாசகனார் முற்றுமுணர்ந்த பெரியோர் நடுவே கைக்குறிப்பொன்றை அறிவதனால் கண்ணே செவியாகப் பெற்ற ஊமைப் பெண்ணைப் பேசுவித்து ஆட்கொண்டது வியக்கத்தக்க செயலாமாறு போல, அடியேனையும் நீ ஆட்கொள்வதே சிறந்தது, நின் திருமுன் எய்திய விசேடத்தால் உய்தி பெறாதார் யாரும் இல்லை. வாழைத் தண்டில் தழல் கொளுத்தி சில சூழ்ச்சிகளால் பையப் பைய அதனை முற்றிலும் தீப்பற்றும்படி செய்வதுபோல, நீ எனக்கு ஞானம் நல்கும் பக்குவம் வராவிடினும் பையப்பைய என் பிறவி மயக்கத்தை ஒழித்து அருள் புரிவது நின் கடனே என்கிறார்.

மேலும் எனக்குப் பக்குவமில்லை

என்று அருளாவிடில் இகழ்ச்சி உனக்கே ஏற்படும் என்கின்றார். தாய் சினந்தாலும், தன் குழந்தையைப் பிறிதொரு கால் எடுத்துப் பசியாற்றுதல் அவள் கடனே. நீ குருவாக உருக்கொள்ளுதல் அடிக்கடியன்று. ஆதலால் சமயாதீதப் பொருளை அடியேனுக்கு அறிவுறுத்தற்கு இப்போது சமயமில்லை என்று மறாது எனக்கு அருள் புரிய வேண்டும். விதியின்படி பதினாறாண்டு எல்லையளவே வாழ்வதற்குரிய மார்க்கண்டேயர் பொருட்டு அவர் உயிரினை உரிய கால எல்லையில் கவர வந்த நமனைக் கொன்று அவர் வாழ் நாளை நிலைப்படுத்தியதற்காக உன்னைக் குறை கூறுவார் யார்? அதுபோலப் பருவமில்லாத எனக்கு நீ அருள் புரிந்தாலும் உன்னைத் தடுப்பார் எவருமிலர் என்று கூறுகின்றார், (பண் மும். 20, வரி 36—47)

கொடைமடப் பட்ட வள்ளல்கள் தம்மை நாடிவரும் பரிசிலர்கட்கு அவர்களின் மேன்மை தாழ்மை நோக்காது உடனே வரையாது வழங்குவது போல நீயும் என் தகுதியின்மையைக் கருதாது, சரியை முதலியன செய் என்று பணித்துக் காலம் நீட்டியாமல் இப்பொழுதே அருள் புரிவாயாக என வேண்டுகின்றார். (பண். மும். 29 வரி 31—45)

முடிவுரை

இளம் வயதிலேயே முருகப்பெருமான் திருவருள் பெற்ற குமரகுருபர அடிகளாரின் அருட்பனுவல்களில் திருவருளின் சிறப்பைப்பல இடங்களில் பரக்கக் காணலாம் ‘‘விரும்பும் பெரும்புலியூரெம்பி ரானருள் மேவிலொரு துரும்பும் படைத் தழிக்கும் அகிலாண்டத் தொகுதியையே’’ என்று குமரகுருபரர் கூறுவது (சித. செ. கோ 74) இறைவனின் திருவருள் பதியப்பெறின் யாரும் எத்தொழிலும் செய்ய வல்லவராவர் என்பது அடிகளின் கருத்தாகும் என்பதை உணர்த்தும். இதற்கு மேலும் இறைவனின் திருவருட் சிறப்பை எடுத்துரைக்க வேண்டுமோ? திருவருளே உயிர்களின் அறிவுக்குக் காட்டியும் கண்டும் உதவுகின்றது என்பதற்கொப்ப அடியேனை. திருவருட் சிறப்பு என்னும் தலைப்பில் கட்டுரை எழுத வாய்ப்பளித்தும், எழுதுவதற்கும் துணை புரிந்த திருவருளுக்கு என் உளங்கனிந்த நன்றியை தெரிவித்து இக்கட்டுரையை முடிக்கின்றேன்,

வாழ்க சைவம்

வளர்க சைவ சித்தாந்த நன்னெறி.

உ

குமரகுருபரர் அருட் பனுவல்களில் தளைஇயல்

முனைவர். கு. சுந்தரமூர்த்தி
அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்
தருமபுரம். மயிலாடுதுறை.

கடந்த முந்நூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றியருளிய அருந்தவச்சீலர் குமரகுருபர முனிவராவர். செந்திலாண்டவனின் திருவருள் பெற்றுத்தருமையில் நான்காவது குருமூர்த்தி களாக விளங்கிய அருள் மாசிலாமணியாம் குருமுதல்வரின் திருவருளையும் பெற்று விளங்கிய முனிவரர் ஆவர். இவர் அருளிய அருட் பனுவல்கள் பதினாறாம். அவற்றில் காணத் தகும் கவின் பொருள்கள் பல அவற்றுள் தலைமையாகவும், சிறப்பாகவும் காணத்தகுவது சைவசித்தாந்த மெய்ப்பொருள்இயல்பாம்.

சைவசித்தாந்தத்தைப் பல படப் பாராட்டிக் கூறும் இவர், அச்சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள் இயல்புகளை ஆங்காங்குப் பரவலாகவும், சிலவிடங்களில் ஆழமாகவும் குறித்துச் செல்கின்றார். அம்முப்பொருள்களுள் ஒன்றாய தளை இயல்பை இப்பகுதியில் காணலாம்.

தளை :-

இது கட்டு என்னும் பொருள்படும். உயிர்க்கு இயல்பாயுள்ள அறிவினை மறைத்து அதனைச் சூழ்ந்து நிற்றலின் அது தளை எனப்பட்டது. இவ்வாறு செய்யும் பொருளை ஆணவம் என்பர். "காரிட்ட ஆணவக் கருவறையுள் கட்டுண்டு" என வரும் திருவாக்கால் 1 இவ்வுண்மை அறியப்படும் உயிரை மறைத்து நிற்கும் இவ்வாணவக் கட்டால் உயிர்க்கு விருப்பு வெறுப்புக்களும் உளவாகின்றன. கருணையே வடிவாகக் கொண்டிலங்கும் இறைவன், இவ்வாணவக் கட்டையும், அதன்வழி உளவாய விருப்பு வெறுப்புக்களால் உயிர்கள் பெறும் நலம் தீங்குகளையும் அகற்ற உடல், கருவி, உலகு, நுகர்வு களைத் தந்தருள்கின்றான். அவ்வாறு தந்தருளுவதன் வாயிலாக உயிர் அம்மாசு நீங்கி வீடுபேறு அடையும். இவ்வாற்றான் உயிரைத் தகைத்து நிற்கும் ஆணவமும், இருவினையும், மாயையும் அதன் வினைவாய உடல், கருவி, உலகுகளும் உயிரைச் சூழ நிற்கின்றன. இவற்றைக் குறிக்கும் பொதுச் சொல்லே 'தளை' என்பது.

ஆணவம் :-

நெல்லினிடத்து உமியும், செம்பினிடத்துக் களிம்பும் உடனாய் நிற்றல்போல, உயிரிடத்து உடனாய் நிற்பது இவ்வாணவமாகும். இது உயிரை மறைத்தல் பற்றி 'இருள் மலம்' எனப் பெயர் பெறும். இருள் பிற பொருளைக் காட்டாது தன்னையேனும் காட்டி நிற்கும். இவ்வாணவமோ பிற பொருளையும் காட்டாது; தன்னையும் காட்டாது. எனவே இது அதனினும் கொடிதாம் என்பர் திருவருட்பயன் ஆசிரியர். 2 இவ்வாறு இவர் கூறும் ஆணவ இயல்பைக் குமரகுருபர அடிகளும் ஆணவ மாண படலம் 3 என்றும் குறித்துக்காட்டுவர். திருவருட்பயன் இதனை இருளாக உருவகித்த தன்றி இருட்பாவையாகவும் உருவகித்துக்காட்டும். உலகில் வாழும் பாவையர் தத்தமக்குரிய கணவரொடு சேர்ந்து வாழும் பெற்றியர். அந்நிலையில் அவர் கற்புநெறி வழாதவர் எனப்

---

1. தாயுமானவர்.
2. ஒரு பொருளும் காட்டாது இருள் உருவம் காட்டும்
இரு பொருளும் காட்டாது இது.
3. கந்தர் கலி வெண்பா; 26.
4. பலரைப் புணர்ந்தும் இருட்பாவைக்கு உண்டு என்றும்
கணவர்க்கும் தோன்றாத கற்பு.

படுவர். இவ்விருட்பாவையோதான் ஒருத்தி -யாகவே நின்று உயிர்கள் அனைத்திற்கும் மனைவியாக வாழும் பெற்றியது. ஏனைய உலக மகளிர் பிறர் நெஞ்சு புகார். ஆனால் தன் நெஞ்சார்ந்த கணவற்குத் தோன்றியும், அவர்க்குப் பணிந்தும் வாழ்வர். இவ்விருட்-பாவையோ தம் கணவர்க்கும் தோன்ருத கற்புடையதாகும் என்பர் 4. இவ்வாறு புகழ்வது போலப் பழித்திறம் புனைந்து நிற்பக்கூறும் இவ்வுருவகங்களைத் தழுவியே, நம் குமரகுருபரரும் உருவகித்திருக்கும் திறம் எண்ணற்குரியதாகும்.

— இருண் மலத்துள்
மோகமுறும் பல்லியிர்.' 5

"அலையா மரபின் ஆணவக் கொடியெனும்
பலர்புகழ் சேரிப் பரத்தையொடு தழீஇ'' 6

என வரும் தொடர்களால் அடிகளும் அவ் விருட்பாவை பலரொடு புணர்ந்து நிற்குமாற்றையும். அது உயிரைத் தன்னொடு பிணித்து மகிழ்வித்து நிற்கும் இயல்பையும் விளக்குவர். இவ்வாணவமலம் ஒன்றுமே உடையரை விஞ்ஞான கலர் என்பர். இவர்க்கு இறைவன் அருளுமாற்றை, உள்நின்று, ஒருமலத் தார்க்கு இன்பம் உதவி 7 எனும் தொடரால் குறித்தருளுவர்.

கன்மம் :-

உயிர்கட்குற்ற விருப்பு வெறுப்புக்களாய நலந்தீங்குகள் கன்மம் எனப்படும். இதனை இப்பெயரால் குறிக்கும் அடிகள் மாயை இலராயும் இம்மலமுடையார்க்கு இறைவன் இம்-மலக்கட்டை நீக்குமாற்றையும் ஒரிடத்துக் குறித்தருளுகின்ருர்.

"கன்ம மலத் தார்க்கு மலர்க்
கண்மூன்றும் தாழ்சடையும்
வன் மழுவு மானுமுடன்
மால் விடைமேல் — மின்னிடத்துப்
பூத்த பவளப் பொருப்பொன்று
வெள்ளி வெற்பில்
வாய்த்தனைய தெய்வ வடிவாகி - மூத்த
கரும மலக் கட்டறுத்து8...

என்பது அப்பகுதியாகும். அன்றியும் இவ் வாறு தாம் செய்த நலந்தீங்குகள் தம்மைத் தவருது சாருமென்பார். தீர்வரிய கன்மம் 9 என்ருர். ஆணவமும் கன்மமும் உடையார் பிரளயாகலர் எனப்படுவர். அவர்க்கு இறைவன் முன்நின்று அருளுவதையும், அம்-மலக்கட்டை நீக்குவதையும் இப்பகுதி குறிக் கின்றது.

மாயை:-

உயிர்கட்குற்ற வினைமாசுகளை நீக்கு-தற்கு இறைவன் கொள்ளும் நிலைகளுக்கு இடம் தூய மாயை எனப்படும். அந்நிலைக் களத்திருந்து செயற்படும் இறைவன், உயிர் களின் வினை மாசுகளை நீக்கத்தக்க கருவி களையும் சூழல்களையும் உருவாக்கித் தருவன். அவற்றிற்குரிய இடம் தூயதல்லாத மாயையாகும். அவ்விடமும் சூழலும் அமைய முக்குறைவடிவான நுகர்வு உயிர்கள், உடல், கருவிகளைப் பெற்று வாழுதற்குரிய இடம் பிரகிருதி மாயை எனப்படும். இவ்வாறு குறிக்கத்தகும் இம்மூவகை மாயைகளும் காரணம் அசுத்த மாயையின் காரியம் மாயே யம் எனப்படும். மாயையும் மாயேயமும் வித்தும் முளையும் போல்வனவாம். இம்மூன்-றன் நிலைக்களனாக உயிர்கள் தத்துவக் கூட்டைப்பெறும் இதனை,

அலையா மரபின்
ஆணவக் கொடியெனும்
பலர்புகழ் சேரிப்
பரத்தையொடு தழீஇ

---

5 கந்தர் கலிவெண்பா; 11—12
6. சிதம்பர மும்மணிக்கோவை; 29; 23—4
7. கந்தர் கலிவெண்பா; 32
8. கந்தர் கலிவெண்பா; 30—2
9 ,, ,, 15—6

ஏகலன் தணந்தாங்கு
என்னையும் உணராது
மோகமொடு அழுந்தி
முயங்குறும் அமையத்து
அங்கவட் குரிய
தங்கையர் இருவருட்
குடிலையென்று
மடவரல் ஒருத்தி
எய்தரும் புதல்வியர்
ஐவரைப் பெற்றனள்
மோகினி என்பவள்
மூவரைப் பயந்தனள்
ஆகிய புதல்வியர்
அங்கவர் மூவருட்
கலையெனப் பெயரிய
கணிகைமற் றொருத்தி
தானும் மூவரைத்
தந்தனள் அவருள்
மானெனப் பட்ட
மடவரல் ஒருத்தி
எண்மூன்று திறத்தரை
யின்றனள் இத்திறம்
நண்ணிய மடந்தையர்
ஐயெழுவரையும்
கிளப்பருங் காமக்
கிழத்திய ராக
அளப்பில் காலம்
அணைந்தனன் முயங்குழி
முறைபிறழ்ந்து இவரொடு
முயங்குதல் ஒழிகென." 1

இத்தகைய தத்துவக் கூட்டின் வழி உயிர்கட்-குற்ற வினைமாசுகளை இறைவன் போக்கியரு-ளுவன் என்பதை,

முற்படு மாயை
முதற்கரை நாட்டிற்
பற்பல புவனப்
பகுதி பற்றி
ஈரிரு கண்ணாற்
றெழுதரம் வகுத்த
ஆறே ழிரட்டி
நூறா யிரத்த
செயற்படு செய்களின்
உயிர்ப் பயிரேற்றி
ஊழெனப் பட்ட
தாழ்புனற் படுகரிற்
தெய்விக முதலாச்
செப்புமும் மதகும்
ஒவ்வொரு மதகா
யுடனுடன் திறந்து
தாகம் என்னும்
தனிப்பெருங் காலிற்
போகம் என்னும்
புதுப்புனல் கொணர்ந்து
பாயும்ஐம் பொறியாம்
வாய்மடை திறந்து
பருவம் பார்த்து
வரன்முறை தேக்கலும்
இதத்துடன் அகிதம்
எனும் இரண்டு ஊற்றிற்
புதுப்புனல் பெருகிப்
புறம்பலைத்து ஓட
வார்புனல் அதனை
மந்திர முதலா
ஒரறு வகைப்படும்
ஏரிகள் இரப்பி
விளைவன விளைய
விளைந்தன அறுத்தாங்கு

1. சிதம்பர செய்யுட் கோவை; 29; 23—39
குடிலை—தூயமாயை
ஐவர்—சுத்தவித்தை, ஈசுவரன், சாதாக்கியம், சத்தி, சிவம்
மோகினி—தூயதல்லாத மாயை
மூவர்—காலம், நியதி, கலை
கலைதந்தமூவர்—வித்தை, அராகம், கலை
எண்மூன்று திறத்தர்—அறிகருவி 5, தொழிற்கருவி. 5, தன்மாத்திரை. 5, பூதங்கள். 5, அகக்கருவிகள் 4, மேற்கூறிய ஐவர் முதல் 24 வரை எண்ணப்பட்டோரைக் கூட்ட 35 பேராவர்

ஒருகளஞ் செய்யும் உழவனாகி
மாநிலம் புரக்கும் மாசிலாமணி 1

எனவரும் பகுதியான் அறியலாம். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலம் உடையாரை சகலர் என்பர். இதனைச்

'சாயா மும்மலச் சகலரேம் உய்ய' 2

எனவரும் தொடரால் அடிகள் குறிப்பிடுவர். இவர்க்கு இறைவன் அருளுமாற்றை 11—29 வரையுள்ள கந்தர்கலி வெண்பா கண்ணி களால் அடிகள் குறித்தருளுவர்.

மறைப்பாற்றல் :-

இறைவனின் இன்னருளே அவனது சத்தி உயிர்கள் தம் வினைப்பயனை நுகர் -தற்கு அதன் அறிவை மறைத்து வினையை ஊட்டுவிக்குங்கால் அந்தச் சத்தி 'மறைப் பாற்றல்' எனப்பெயர் பெறும். உயிரை மறைத்து நிற்கும் அந்நிலையில் 'மலம்' எனப் பெயர் பெறும் மலம் நீங்கிய வழி உயிரை இறைவனொடு சேர்ப்பிக்கும் நிலையில் இனி -மையுடையதும் இவ்வருளேயாம். மறைப் பாற்றலை திரோதானசத்தி என்பர். அடிகள் இதனை ஈரிடங்களில் குறிப்பிடுவர்.

— தீர்வரிய
கன்மத்துக் கீடாயக்
கறங்குஞ் சகடமும் போல்
சென்மித்து உழலத்
திரோதித்து 3

ஈட்டிய வினைப்பயன்
எவற்றையு மறைத்து நின்று
ஊட்டுவது ஆகும் நின்
ஊன்றிய பதமே 4

இவற்றுள் முன்னைய தொடர் இருவினையின் போக்குவரவு புரிய எனவும் சிவஞானபோதத் தொடருக்கு உவமை வாயிலாக விளக்கம் தந்து நிற்கின்றது.

ஊன்றிய திருவடி இச்செயலைச் செய்யு மாற்றை, "ஊன்று மலபதத்தே உற்ற திரோதம்" என வரும் உண்மை விளக்கமும் குறிக்கும். இவ்வகையில் வரும் மலங்கள் ஐந்தாம்.

'தோய்ந்து களித்தோர்
துதிக்கையினால் பஞ்சமலம்
காய்ந்தசிவ ஞானக்
கடாக்களிறும்' 5—எனவரும்

தொடரால் மலங்கள் ஐந்தென அடிகள் தொகுத்துச்சுட்டுவர். மறைப்பாற்றலை ஆண -வத்துள்ளும், மாயேயத்தை மாயையுள்ளும் அடக்கி மும்மலம் எனக்கூறும் முறையும் உளவாதலை 'மும்மைப் பெருமலங்கள் மோசித்து' 6 எனவரும் தொடரால் குறித் தருளுவர்.

---

1. பண்டாரமும் மணிக்கோவை; 11, 1—19

முற்படுமாயை—தூயமாயை ஈரிருகண்ணாறு—முட்டை, வியர்வை கிழங்கு, வித்து எனும் நால்வகை பிறப்பாகிய பேராறுகள். ஆரேழிட்டி—6X7—42X2—84.

பிறப்பு வகைகள்:— ஊர்வ பதினொன்றாம் ஒன்பது மானுடம்
நீர் பறவை நாற்கால்லூர்பத்துச்—சீரிய
பந்தமாம் தேவர் பதினாலு அயன் படைத்த
அந்தமில் சீர் தாவரம் நாலைந்து—எனவரும் படலால் இத்தகை விளக்கம் அறியப்படும். தெய்வீகம் மூன்று—தன்னைப்பற்றி வருவன, பிற உயிர்களைப் பற்றி வருவன, தெய்வத்தால் வருவன.

இதம் அதிகம்—விருப்பு வெறுப்புகள், மந்திரம் முதலாகிய ஆறு ஏரிகள்—மந்திரம், பதம் வன்னம், புவனம், தத்துவம், கலை எனும் ஆறு பெருவழிகள்

2. பண்டாரமும் மணிக்கோவை; 20—9
3. கந்தர் கலிவெண்பா; 15—6
4. சிதம்பரமும்மணிக்கோவை; 2, 9—10
5. கந்தர்கலிவெண்பா; 70
6. ,, ,, 120

அடிகளார் துறவுள்ளம்

தி. வே. கோபாலையர்,
தமிழ்த்துறை, பிரெஞ்சு ஆய்வு நிறுவனம், புதுவை.

முந்நூறு ஆண்டுகளுக்கு முன் தமிழகம் தந்த சான்றோர்களிடையே குமரகுருபர அடிகளார்க்குக் குறிப்பிடத்தக்க சிறந்த இடம் உண்டு. செந்தில் பெருமான் திருவருளால் ஊமை நீங்கப் பெற்ற இப்பெருமான் சாத்திரக் கருத்துக்கள் பல பொதிந்த கந்தர் கலிவெண்பாவைப்பாடியருளியவர். அப்பெருமானிடம் தாம்வேண்டியவற்வையே இறுதிவரை தாம் வழிபட்டுப் பிரபந்தங்கள் இயற்றிய திருத்தலங்களில் வீற்றிருக்கும் இறைவனிடத்தும் வேண்டிப் பெற்றவராவர்.

சிவபெருமானே பரம் பொருள் என்பதனை உறுதியாக உளங்கொண்ட அப்பெருமான்

'ஆதிமுதலுணர்ந்துயாம் அன்பு
செயப் பெற்றவாறு
ஒஒ பெரிதும் அரிதே; எளிதேயோ'
—சித. செய். கோவை 13

என்று மகிழ்கிறார். அப்பெருமான் திருவடிகளே பிறவிப்பிணியைப் போக்குவன என்பதும் உலகப் பற்றறுத்த ஞானிகளுக்கு அவன் வீட்டின்பம் நல்குவான் என்பதும் அடிகளார் துணிபு

"கூற்றம் குமைத்த குரை
கழற்கால் கும்பிட்டுத்
தோற்றம் துடைத்தேம்
துடைத்தே மால்
—சித. செய். கோவை 8

அருவருக்கும் உலக வாழ்வு
அடங்க நீத்தோர்க்கு
ஆனந்தப் பெருவாழ்வாம்
ஆடல் காட்டும்......ஒருவர்" 54

என்பன அடிகளார் பாடலடிகள்.

தம்முதற் பிரபந்தத்தில் தாம் முருகப் பெருமானிடம் வேண்டிய பழுத்த தமிழ்ப் புலமை, ஒழுக்கம் அகப்பற்று புறப்பற்றுக்களின் நீக்கம், மும்மலநீக்கம், பசுபோதநீக்கம், அடியார் இணக்கம், பேரின்ப நுகர்ச்சி, திருவடிக்காட்சி இவற்றையே தம்பிரபந்தங்கள் பலவற்றுள்ளும் சிவபெருமானிடம் வேண்டு தலைத் திருவாரூர் நான்மணிமாலை, சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட் கோவை, பண்டார மும்மணிக்கோவை ஆகியவற்றில் தெளிவாகக் காணலாம்.

வாய்கொண்டு மானிடம் பாடவந்த கவிஞர் அல்லர் நம் அடிகளார். இறைவனைப் பாடுவதையே தம் பண்பாகக் கொண்ட அடிகளார் மன்பதை உய்ய நீதநெறி விளக்கம் பாடியதும் மானிடர் மாட்டுத் தாம் கொண்ட அகற்சியாலேயாம். அந்நூலில் அடிகளார் இறுதிப் பதினெட்டு வெண்பாக்களில் துறவறத்தின் சிறப்பை எடுத்துரைத்தமை அடிகளாரின் துறவுள்ளத்தை வெளிப்படுத்துவதாகும்.

தாம் தேடிக்கொள்ளும் வீடுபேற்று வாழ்க்கையை விரும்பும் துறவிகள் இப்புன்புலால் யாக்கையைப் பாதுகாப்பதில் கருத்தூன்றார் எனவும், பேரின்பக்கடலில் திளைக்க விரும்புவோர் இவ்வுலகின்பமாகிய சேற்றில் வீழ்ந்து தடுமாறார் எனவும், காமநுகர்ச்சியில்லாதவரைப் பகைவரும் கைதொழுவர் எனவும், வாழ்நாளின் வரம்புடைமை கண்டவர் தவம் செய்வதற்கு மூப்புவரும் வரை காத்திரார் எனவும், ஞானியர் பொய்யான நிலையற்ற பொருள்கள்மேல் பொறிகளைச் செலுத்தாது அவற்றைத் தடுத்துத் தத்துவ ஞானம் பெறுவதிலேயே முயல்வர் எனவும் அகப்பற்று புறப்பற்று இரண்டினையும் நீத்தார்க்கு மெய்ஞானத்தால் தோன்றும் இன்பமே நிலையான இன்பம் எனவும் பற்றற்றான்

பற்றினையே பற்றி எல்லாச் செயலும் அடங்கும்படி நின்று பரம் பொருள் தியானத்தில் நிற்பவரே வீடு எய்தற்பாலார் எனவும், அத்தகைய சான்றோர்கள் பெண்ணழகை வியவாமல் அவர்கள் பெயரையும் கூறாமல் அவர்களை மனம் ஒன்ற நோக்காமல், அவர்களுடைய இசையின்பத்தில் ஈடுபடாமல் ஐம்பொறி ஓம்பும் இயல்பினர் எனவும் அடிகளார் கூறுவன அவர் வாழ்ந்த வாழ்க்கையை உலகிற்கு எடுத்துரைக்கும் பகுதிகளாம்.
அப்பாடல்களின் அடிகள் பின்வருமாறு;

புன்புலால், பொய்க்குடில் ஓம்புவரோ? போதத்
தால் தாம் வேய்ந்த புக்கில் குடிபுகுதுவார்.
...86

பேரின்பமாக்கடல் ஆடுவார் வீழ்பவோ
பாரின்பப் பாழ்ங்கும்பியில் 87
எவ்வினைய ரேனும் இணைவிழைச்(சு)
ஒன்(று) இலரேல்
தெவ்வும் திசை நோக்கிக் கைதொழும்
......88
வாழ்நாள் வரம் பின்மை காண்பரேல்
காண்பாரும்
தாழாமே நோற்பார்தவம் 90
மெய்புணர்ந்தார் பொய்மேல் புலம் போக்கார்
மெய்யுணர்ச்சி
கைவருதல் கண்ணாப்புலம் காப்பார்
......98
முற்றத், துறந்தார்க்கு மெய்யுணர்வில் தோன்
-றுவதே இன்பம்
இறந்தவெலாம் துன்பமலா(து) இல்
பற்றுவதே பற்றிப் பணியற நின்(று)
ஒன்றுணர்ந்து
நிற்பாரே நீணெறிச் சென்றார் 100

பெண்மை வியவார்; பெயரும் எடுத்தோதார்;
கண்ணொடு நெஞ்சுறைப்ப நோக்குறார்;
—பண்ணொடு
பாடல் செவிமடார் பண்பல்ல பாராட்டார்;
வீடில் புலப்பகையினார் 84

'ஜ்ஞாந வைராக்ய ஸித்தயர்த்தம்
பிக்ஷாந்தொர்ச பார்வதீ'
—அந்நபூர்னாஷ்டகம்
'ஸங்கஸ் ஸஸ்து விதீயதாம்
பகவதோபக்திர் த்ருடாதீயதாம்'
—ஸோபாநபஞ்சகம்

என்று ஆதிசங்கரர் அருளுவது போல நம் அடிகளாரும் இறைவனிடம் ஞானமும் வைராக்கியமும் அடியார் இணக்கமும் அவர்களுக்குத் தொண்டு செய்யும் உள்ளமும் தமக்கு அருளுமாறும், இறுதியில் தமக்கு வீடுபேறு அருளுமாறும் வேண்டும் வேண்டுகோள்களே அடிகளார் பாடல்களில் காண்கிறோம்.

ஈதொன்று இயம்புவல்; கேண்மதிபெரும! என்னிடை,

ஞானவல்லியை நன்மணம் புணர்த்தி
ஆனா ஏஞயத்து அரும்பொருள் வழங்கி
இறவா வீட்டினில் இருத்தி
குறையச் செல்வரொடு கூட்டுதி விரைந்தே
சித. மும். கோவை 29

இவ்வடிகளில் உண்மை ஞானத்தை வேண்டுகிறார்.

செல்வம் என்பது சிந்தையின் நிறைவே
அல்லல் நல்குரவு அவா எனப்படுமே...
பல்லுயிர்த்தொகுதியும் பவக்கடல் அழுந்த
அல்லல் செய்யும் அவா எனப்படும் அவ்
வறுமையினின்றும் வாங்கி
அறிவின் செல்வம் அளித்தருள் எனக்கே
—26

இவ்வடிகளில் அவா அறுத்தலாகிய வைராக்கியம் வேண்டுகிறார்.

ஊனிடைப் பிறவிக் கானகத்து உழலாது
ஏனையமுத்தி நாடி எய்த ஓர்
ஞான வாரணம் நல்குதி எனவே
பொன்னடிக் கமலம் சென்னி வைத்தி-
றைஞ்சுசுதும்
—பண். மும். கோவை 2

என்று ஞானாசிரியனிடம் ஞானமே வேண்டுகிறார். அந்தஞானமும்,

பல்வேறு உரைக்குநர் சொல்வழிப் படாது
திவ்வியம் பழுத்த சைவசித்தாந்தத்து
இறவா நிலைமை பெற்று இன்பம் ஆர்ந்து
இருக்கும்
பிறவா நன்னெறி பெறப்புரிவதுவே
பண். மும். கோவை-5

-யாக இருத்தல் வேண்டும் என்று குறிப்பிடுகிறார். தாம் வேண்டினாலும் அடியார் இணக்கமும். வீட்டின்பமும் அன்றித் தமக்கு வேறு எந்தப் பேறும் தருதல் கூடாது என்று இறைவனை இறைஞ்சுகிறார்.

ஒழுக்கம் நிறைந்த விழுப்பெருங்கேள்வி
மெய்த்தவர் குழாஅத்தொடும் வைகஇத்-திறம்
உடல் நீங்கு அளவும் உதவி, கடவுள்! நின்
பெரும்பதம் அன்றி மற்றுயான் பிறி-தொன்று
இறந்தனன் வேண்டினும் ஈந்திலாததுவே
சித-மும் கோவை 8

அடியார் இணக்கமே தமக்கு வீடுபேறு நல்கும் என உறுதியாக நம்புகிறார்.

நற்றவர் தொண்டர் கூட்டம்
பெற்றவர்க்கு உண்டோ பெறத்தகாததுவே
சித. மும். கோவை-11

இமயம் சேர்ந்த புறவும் காக்கையும் ஒரே நிறத்தன வாகக் காட்சி வழங்குதல் போல இறைவன் சந்நிதியைச் சேர்ந்த மெய்யடியார் களும் தாமும் ஒரேவிதமான அருளைப் பெறுதல் கூடும் என்கிறார்.

பொன்னிறப்புறவும் கருநிறக்காக்கையும்
மன்னுமால் இமைய வரைப்புறம் சேர்ந்-துழி
இருதிறப் பறவைக்கும் ஒரு நிறன் அல்லதை
நிறம்வேறு தெரிப்பதுண்டோ? இறைவ! நின்
இன்னருள் பழுத்த சந்நிதி சேர்ந்துழி
இருவேம் பெற்றது ஒருபேறு ஆகலின்
வேற்றுமை உளதோ? இல்லை
ஆற்றல்சால் சிறப்பின் அனைய தோடெ-னக்கே
சித-மும்-கோவை-5

அடியார் திருவடிகளைக்கழுவிய நீரை உட் கொண்ட தமக்குத்தேவர் அமுதமும் கைக்கும் என்கிறார்.

சாரம் கொண்ட சைவ சித்தாந்தத்
தேனமுது அருந்தினர் சிலரே யானவர்
நன்னிலை பெறுதற்கு அன்னியன் ஆயினும்
அன்னவர் கமலப் பொன்னடி விளக்கி அத்
தீம்புனல் அமுதம் ஆர்ந்தனன் அதனால்
வேம்பெனக் கொண்டனென் விண்ணவர் அமுதே
பண்-மும்-கோவை-11

பிறவாயாக்கைப் பெரியோனாகிய இறைவன் பிறவித்துயரை அறியாதவனாதலின் தமக்கு அருள் செய்யக் காலம் தாழ்ப்பதாகக் கருது கிறார்.

பிறவியின் துயர்நினக்கு அறிவு அரிதா-கலின்
அருளாது ஒழிந்தனை போலும்;
கருணையிற் பொலிந்த கண்ணுதலோயே
திரு-நான்-மாலை-17

நெஞ்சகம் குழைந்து நெக்கு நெக்கு உருகநின்
குஞ்சித கமலம் அஞ்சலித்து இறைஞ்சுதும்
மும்மலம் பொதிந்த முழுமலக் குரம்-பையில்
செம்மாந்து இருப்பது தீர்ந்து
மெய்ம்மையில் பொலிந்த வீடுபெறற் பொருட்டே
சித-செய்-கோவை-68

என வீடு வேண்டிய அடிகளார் சிற்றின்பம் வெஃகாத திருவுளத்தில் விரும்பிய மற்றின்பம் பின்வருமாறு:

காதலின் எமைஅருள் கைப்பிடித்து அருளி
ஒருவரும் உணராப் பரம வீட்டில்
இருள் அறை திறந்த பெருவெளி மண்ட-பத்து
உயர்நா தாந்தத் திருமலக் அமளியில்
புளகம்மெய் போர்ப்ப மொழிதடு மாற
உள்ஒலி நாதப் புள்ஒலி முழங்க
ஞானஆர் அமுதப் பானம்அது ஆர்ந்து
கருவிகள் கழன்று பரவசம் ஆகிப்
பரமானந்தப் பரவையுள் படிந்து
பேரா இயற்கை பெற்றினி திருப்ப
ஆரா இன்பம் அளித்துஅருள் எமக்கே
பண்-மும்-கோவை-8

இளமையிலேயே துறவுள்ளம் கொண்டு, அடி-யார் குழாங்களைக் கூடி ஞான வைராக்கியங் களைப் பெற்று வீடுபேறுற்ற குமரகுருபர அடி களாரின் துறவுள்ளத்தை ஒருசிறிது நோக்கி-னோம். அடிகளார் புகழ் வாழ்க,

மதுரைத் திருவிளையாடல்கள்—
மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில்

ப. நீலா எம். ஏ., எம். பில்—முதுநிலைவிரிவுரையாளர்
தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி—தருமபுரம்.

முன்னுரை :

ஆசுகவியாக விளங்கிய ஸ்ரீ குமரகுருபரர் வாக்கின் தமிழ்த்திறம் பல்வேறு கூறுகளில் பிரபந்தத்தில் ஒளிவிடும் உண்மையைப் புலமையுலகம் நன்றாகவே அறிந்துள்ளது அவரது முந்நூறாவது பிறந்த நாளில் தமிழுலகம் பல்வேறு கோணங்களில் அவரது நூல்களைச் சிந்தித்து வருவது பாராட்டுக்குரியது. அவ்வகையில் புராணங்களில் ஒன்றான திருவிளையாடல் புராணக் கூறுகள் அடிகள் வாக்கில் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் எப்படி அமைந்துள்ளன என்பதை இங்கே சிந்திக்கலாம்.

புராண விளக்கம் :

புராணம் என்ற சொல்லை, புரா—நவ என்ற இரண்டு வடசொற்களின் இணைப்பாகக் கருதுவர். பழமைக் கதைகளையும் தத்துவங்களையும் புதிதாகச் சிந்திக்கும் அமைப்பாக அது அமையும். முப்பெரும் புராணங்களும் சிவபெருமானின் முக்கண்களுக்கும் நிகரானவை என்று எண்ணப்படும் வழக்கம் இருக்கிறது. திருவிளையாடல் பாண்டிய குலத்தரசர்களின் பெருமையை சந்திர வம்சத்தினைக்காட்டும் அமைப்பில் இடக்கண்ணாக, பெரியபுராணம் சோழ அரசர்களைச் சார்ந்து—சூரியவம்சம் விளக்கும் வகையில் வலக்கண்ணாக, கந்தபுராணம் முருகனின் அவதாரம் அருளிப்பாடுகளை விளக்குவதாக நெற்றிக்கண்ணாம் நெருப்பிலிருந்து தோன்றிய அமைப்பாகக் கருதப்படுகின்றன.

திருவிளையாடல் :

பாண்டியர்களின் குலதெய்வமாகிய சோமசுந்தரப் பெருமான் அக்குலத்திற்குத் தோன்றிய இடையூறுகளையெல்லாம் முன்னின்று போக்கியருளியதே இப்புராணத்தின் அடிநிலையமைப்பாகும். குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம் மடிதற்று முந்துறும் என்ற வள்ளுவர்வாக்கு நூறுசதமும் உண்மையென்பதை நாமும் உணர்கிறோம்.

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் :

மதுரையின் பெண்ணரசியாக இருந்த அம்பிகையைப் பிள்ளையாக்கிப் பெருமை சேர்ப்பது இந்நூல். அவளது எண்ணற்ற பெருமைகளைப் பிள்ளைத்தமிழில் சேர்த்துப் பாராட்டி மகிழ்கிறார் அடிகள்.

அறுபத்துநான்கு திருவிளையாடல்களில் சில இந்நூலில் வந்துள்ளன. இந்திரன் பழிதீர்த்தது, வெள்ளானைசாபம் தீர்த்தது, ஞானசம்பந்தர் பாண்டியன் சுரம், கூன் நீக்கியது, பிட்டுக்கு மண்சுமந்தது, மாபாதகம் தீர்த்தது, உக்கிர குமாரன் திருவவதாரம் தடாதகை திருவவதாரம், திருமணம் கடல் சுவற உக்கிரகுமாரன் வேல் விட்டது போன்றவை. இவற்றைப் பிள்ளைத் தமிழ்ச் செய்திகளுடன் இங்கே இணைத்துக் காண்போம்.

திருவவதாரம் :

மலையத்துவசன் காஞ்சனையின் மகளாக அம்மை அவதாரம் செய்தமை, முத்தனங்களுடன் திகழ்ந்தமை பல இடங்களில் அடிகளால் குறிக்கப்படும்.

முத்தன மேவு பெண்ணரசு (1. 3)
மும்முலைத் திரு (1. 7)
முக்கட்சுடர்க்கு விருந்திடு மும்முலை
-யாய் (5. 1)

திருவிளையாடல் புராண ஆசிரியர் - மலையத்துவசன் செய்த தவத்தைப் போற்றி- அம்மையின் அவதாரத்தை-அற்புத உடல-மைப்போடு எடுத்தாளுவார்.

உரையாதி மறை கடந்த வொருமுதல்வி
திருமகளா யுதித்தற்கிந்தத்
தரையாளு மன்னவன்செய் தவமிதுவோ
அதற்குரிய தவந்தான் மன்னோ
4. 22

முலை மூன்றுடைய தோர்பெண்
பிள்ளையென மூவொரு பிராய
மொடு நின்னாள் 4. 19.

திக்விசயம் :

அவனி தழைத்திட மவுலி புனைந்தவள் (2. 7) பலதிசைகளையும் வெல்லப் புறப்படு கிறாள். அப்போது அவள் தானைக் கடலொடு பொலியும் திருமகளாக (3. 7) விளங்குகிறாள். பறந்தலையில் சேனைகளை அலகைகள் சுவைத்துக் குரவையாட திசைத்தலைவர்கள் பெருநாணெய்த சிறுநாணொலி செய்யும் கூனற்சிலையி னெடுங்கணை தொட்டவள் (4. 6) குடைநிழலில் உலகம் அடங்கு முறை-யில் குன்றவிலாளியை வென்ற தடாதகை (4. 8) சேல்வைத்த ஒண்கொடியை வலம் வைத்தாளாம். (5 8) கடற்றானை செங்களங் கொள வம்மை திக்குவிசயம் கொண்ட நாள் (6. 3) சுட்டப்படுகிறது.

இவைகளைப் பரஞ்சோதியார்
செங்கோல் செலுத்திய முடிச்செழியர்
கோமகள் 5. 8
மதுரைத் துரை மகள் 3 6
மதுரா புரித்தலைவி 8. 5
குடைநிழலில் புவிமகளை வளர்த்தவள்
4. 7

என்று புராணத்தில் காட்டிச் செல்கிறார்.

இறைவனைக் கண்டுநின்றது :

திக்குவிசயத்தின் போது மேருமலைக்-குப் படைகளுடன் சென்றவள்

பொன்மேரு வில்லியை யெதிர்பட்ட
ஞான்றம்மை
பொம்மன்முலை மூன்றிலொன்று
கைவந்த கொழுநரொடு முள்ளப் புணர்ச்-
-சிக்
கருத்தா னகத் தொடுங்க (4. 2)
நின்றாள்

பரஞ்சோதியார்-அம்மை பிறந்த போது எழுந்த 'தெய்வ ஒலி' பலித்து நிற்கலானாள் என்கிறார்.

ஒற்றைவார் கழற் சரணமும்
பாம்பசைத் துடுத்தவெம் புலித்-
தோலும்
கொற்றவாண் மழுக் கரமும்
வெண் ணீறணி கோலமுந்நூன்
மார்பும்
கற்றை வேணியுள் தன்னையே
நோக்கிய கருணை செய்
திருநோக்கும்
பெற்ற தன்வலப் பாதியைத் தடாதகைப்
பிராட்டியு மெதிர் கண்டாள்.

கண்ட வெல்லியி லொருமுலை
மறைந்தது கருத்தினாண் மடனச்சங்
கொண்ட மைந்திடக் குனிதர
மலர்ந்த பூங்கொம்பரி னொசிந்
தொல்கி
மண்கிளைத்து நின்றாள் 5-42, 43.

மணங்கொண்ட மாண்பு :

இறைவனை நன்மருகெனப் பெற்று வாழ இமயமென்ன தென்னனும் பேறு பெற்-றான். புவனங்கடந்து நின்ற ஒருவன் திரு-வுள்ளத்தில் அழகொழுக எழுதிப் பார்த்திருக் -கும் உயிரோவியமாக அம்மை விளங்குகிறாள்

தேர்க்கோல மொடுநின் திருக்கோல
முங்கண்டு
சிந்தனை புழுங்குகோபத்
தீயவிய மூண்டெழுங் காமா னலங்கனற்
சிகையென வெழுந்து பொங்கத்
தார்க்கோல வேணியர்த முள்ளமென
வேபொற்
றடஞ்சிலையு முருகி யோடத்
தண்மதி முடித்ததும் வெள்விடைக்
கொண்மணி
தரித்ததும் விருத்தமாகக்
கார்க்கோல நீலக் கருங்களத் தோடொரு
வர்
செங்களத் தேற்றவு மலர்க்
கட்கனை துரக்குங் கரும்புருவ வில்லொ.
டொரு
கைவிற் குனித்துநின்ற
போர்க்கோல மேதிரு மணக்கோல மான
பெண் (10. 6-

என்று அம்பிகையின் கோலம் குறிக்கப்படும்)

சடைமறைத்துக் கதிர்மகுடந் தரித்து
நறுங் கொன்றை
யந்தார் தணந்து வேப்பந்
தொடை முடித்து விடநாகக் கலனகற்றி
மாணிக்கச்
சுடர்ப்பூ ணேந்தி
விடைநிறுத்திக் கயலெடுத்து வழுதிமரு
மகனாகி மீன நோக்கின்
மடவரலை மணந்துலக முழுதாண்ட
சுந்தரன்
என்பது பரஞ்சோதியார் காட்டும் ஓவியம்.

மகப்பேறு :

உக்கிரகுமாரனைத் திருவயிறு வாய்த்-தாள் அம்பிகை.

அருள்சூல் கொண்ட அங்கயற்கண்
அமுது (3. 3)
சமரிற்பொரு திருமகனைத் தருமயில்
(3. 8)
தெண்டிரை கொழித்தெறிய வெண்டிரை
நெருப்பூட்டு தெய்வக் குழந்தையை (4. 5)
தடாதகை தந்தாள்.

இது திருவிளையாடல் புராணத்தில் ஆலத்தை அமுதமாக்கு மண்ணலு மணங்குங் கொண்ட கோலத்துக் கேற்ப-உக்கிரவழுதி அவதரித்-தான் 11. 14 எனவரும்.

கடல்சுவற வேல்விட்டமை :

சுழியுங் கருங்கட் குண்டகழி
சுவற்றுஞ் சுடர்வேல் கிரிதிரித்த
தோன்றல் (1. 6)
என்பது பிள்ளைத் தமிழ்.

எடுத்த வேல்வ லந்திரித்தெ றிந்தவேலை
வேன்முனை
மடுத்தவேலை சுஃறெனவ்வ றந்துமான
வலிகெட 13. 14
என்பது திருவிளையாடல்.

இனிக்குறிப்பாக அமைந்த சில திருவிளை-யாடல்கள்

வெள்ளியம்பலத் திருக்கூத்து:

பரசு மிரசத சபையி னடமிடு
பரத பதயுக முள்ளம்வைத் தேத்-
ததும் (1. 1)
ஆடினா னமலமூர்த்தி யஞ்சலி முகிழ்த்-
துச் சென்னி
சூடினா ரடியில் வீழ்ந்தார்-பாடினார் 6.17

மாபாதகம் தீர்த்தது :

மாபாதகம்-போக்குமித் தலமலது புக-லில்லை காண் (7. 2) விடுவகையின்றி வேறு களைகணு மின்றி வீயக்கடவனைக் காப்ப தன்றோ காப்பென்றான் கருணைமூர்த்தி 26.35

இந்திரன்பழி-வெள்ளையானை சாபம் தீர்த்தது :

முன்பும் பரரசுசெய் பெரும்பாவ முங்-
கோவ
மூரிமாத் தொடர் சாவமும் (7. 6)
வெய்யவென் பழியினோடு மேலைநா ளடி
யேன் செய்த
மையல்வல் வினையு மாய்ந்து 1. 92
கோட்டான நாற்கோட்டு வெண்ணிறத்த
குஞ்சரமுங்
காட்டானை யாகவென விட்டான் கடுஞ்
சாபம் 2. 15

பிட்டுக்குமண் சுமந்தது :

பிட்டுண்டு கட்டுண்டுநின் றடிபட்ட திரு
-மேனி (1. 9)
ஒருத்தி வெண்பிட் டிடவு மடித்தொருவன்
வேலைகொளவும் (9. 8)
கடையானேன் வெகுண்டடித்த கைப்-
பிரம்பு முலமெல்லாம் உடையானே
பொறுத்ததோ வுன்னருமைத் திருமேனி
61. 79

பாண்டியன் சுரம் தீர்த்தது :

மும்மைத் தமிழ்ச்செழியன் வெப்பொடு
கொடுங்கூனும் மோசித்த இத்தலம் (7. 6)
வெள்ளை நீறுதொட் டங்கையா னீவுமுன்
மேனாள் உள்ள கூனொடு வெப்புநோ-
யொழிந்து மீனுயர்த்த வள்ளல் 62. 67

முடிவுரை :

புராணச் சிந்தனைகள் அடிகள் வாக்-கில் பல்கியிருந்தாலும் ஒருசில எடுத்து எழு-தப் பெற்றன. பிறபிரபந்தங்களையும் இதே போக்கில் ஆய-இது துணை செய்யும் என நம்பலாம்.

குமரகுருபரர் அருட்பனுவல்

சைவ சாதனங்கள் திருநீறு - உருத்திராக்கம்-திருவைந்தெழுத்து

அ. பாலருவாயன், எம்.ஏ.,
இலயோலாக் கல்லூரி, சென்னை-34.

திருநீறும், உருத்திராக்கமும் அணிவது சைவ வேடமாகும். சேக்கிழார் பெருமான் இவ்வேடத்தை 'மங்கலமாம் திருவேடம்: **(அப்பூதி 15)** என்று புகழ்கிருர். இத் திருவேடமுடையார் திருவைந்தெழுத்தை இடையருது சிந்திப்பர்; ஓதுவர்.

திருநீறு, உருத்திராக்கம் திருவைந்தெழுத்து இம்மூன்றும் சிறந்த பயனுை வீட்டுப்பேற்றினை உயிர்க்குத் தரவல்லன ஆதலின் 'சாதனங்கள்' எனப் பட்டன. "விதிஎண்ணும் அஞ்செழுத்தே" **(சிவஞான நூற்பா 9)** என்று மெய் கண்டாரும் திருவைந்தெழுத்தைச் சாதன இயலில் கூறியுள்ளது காண்க.

சைவத் திருமுறைகளில் தேவார ஆசிரியர்களான மூவரும் இம் மூன்று சாதனங்களைப் பாடியுள்ளனர். திருநீறு, திருவைந்தெழுத்து இரண்டிற் கும் தனித்தனிப் பதிகங்களே உள்ளன என்பது நாம் அறிந்ததே!

திருநீறு உத்தூளனம், திரிபுண் டரம் என இருவகையாக இப்போது அணியப் பெறினும் திருமுறைகளில் 'குழைத்து அணியும் திருபுண்டரம்' பற்றிய குறிப்புக் காணப்பெறவில்லை.

'பூச இனியது நீறு' **(5-66-5)**
'நீறு மெய் பூசினனே' **(4-55-1)**
'வெண்ணீறு சண்ணித்த மேனியான். **(7-38-6)**
'பூசுவதும் வெண்ணீறு'
(திருவாசகம் - திருச்சாழல்-1)

எனத் திருநீற்றைப் பெருமான் 'பூசியிருப்பதாகவே' அருளப் பெற்றிருக் கிறது.

'உருத்திராக்கம்' பற்றிய குறிப்புத் திருமுறைகளில் பெருமளவு காணப்படவில்லை. எனினும் உரிய இடங்களில் திருஞானசம்பந்தரும், அப்பர் பெருமானும் குறித்துள்ளனர். திருஞானசம்பந்தரும் தம் நமச்சிவாயத் திருப்பதிகத்தில்,

'நெக்கு ளார்வம் மிகப்பெரு கிந்நினைந்து
அக்கு மாலைகொடு அங்கையில்
எண்ணுவார்'
(பாடல் 3)

எனக் குறித்தருளுகிருர். அப்பர் பெருமான்,

'கண்டி பூண்டு கபாலம்கைக்
கொண்டிலர்'
(5-95-10)

என்றும்,

'எவரேனும் தாமாக இலாடத் திட்ட
திருநீறும் சாதனமும் கண்டால்'
(6-61-3)

என்றும்உருத்திராக்கம்பற்றிப்பாடியருள் கிருர். 'சாதனம்' என்பது துணைப் பொருள் எனப் பட்டு உருத்திராக் கத்தைக் குறிக்கும். 'சாதனம்' என்பதே உருத்திராக்கம் என்ற கருத்தும் உண்டு.

குமரகுருபரர் அருட்பனுவல்களில் சைவ சாதனங்களான இம் மூன்றையும் நாம் காணமுடிகிறது. திருநீறு திரு வைந்தெழுத்துஇவற்றைக் குமரகுருபரர் கற்பனையோடு குறிக்குமிடங்கள் அறிந்து மகிழ்தற்குரியன

திருநீறு :

திருநீற்றைக் குமரகுருபரர்,

வெண்பலி (,, 59)

வெளுத்த நீறு (,, 63)

பூதி (சிதம்பர செய். 55)

வெண்பொடி (திருவாரூர் நான்மணி 25, 38)

சாம்பல் (காசிக்கலம் 81)

எனவும்,

புண்டரம் (மதுரைக்கலம் 33)

புண்டரம் (கந்தர்கலி, 38 கண்ணி)

எனவும் குறிக்கிறார்.

விநாயகரும் முருகனும் குழந்தைகள் ஆதலின் புழுதியில் விளையாடி மகிழ்கிறார்கள். அப் புழுதி வேறு எதுவும் அல்ல. சிவபெருமானின் திருமேனியில் உள்ள வெண்ணீற்றுப் புழுதியே என்கிறார். இக்கற்பனையை,

'வெண்பொடிதுடி அடித்துவைத்துப்
புழிதியாட் டயராவொ ரயிராவ
ணத்துலவு
போர்க்களிற்றைத் துதிப்பாம்'

என மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்க் காப்புச் செய்யுளிலும்,

'விழவு முதிர் செம்மேனி வெண்ணீறு
தூளெழ
மிகப் புழுதி யாட் டயர்ந்து'

என முத்துக் குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் வருகைப் பருவச் செய்யுளிலும் (2) காணலாம்.

சிவபெருமானின் வலப்பக்கத் திருமேனியில் வெண்ணீறும், கபாலமும் உள்ளதால் வெண்மை நிறம் வாய்ந்த கங்கை இருப்பதுபோல் தோன்றுகிறது; இடப்பக்கந்தை உமையம்மை கவரக் கங்கை வலப்பக்கம் கவர்ந்து கொண்டனள் போலும் என வெண்ணீற்றொளியை வைத்துக் கற்பனை செய்கிறார் குமரகுருபரர்.

"நாம வேற்படைக் கடவுளைப் பயந்தருள்
நங்கைதென் கமலேசர்
வாம பாகத்தைக் கொளவலப் பாகம் நீர்
மங்கைகொண் டனள்போலாம்
தாம நீற்றொளி தன்னிறம் காட்ட"
(திருவாரூர் நான்மணி 12)

உருத்திராக்கம் :

முருகன் திருவுருவைப் புகழ்ந்து பாடும் இடத்தில்

பைம்பொற்
புரிநூலும் **கண்டிகை**யும் பூம்பட்டு
டையும்
(கந்தர்கலி 55)

என்றும்,

கண்டிகைபொற்
பைந்நாகத்தான்' (பண்டார மும்மணி 1)

என்று காப்புச் செய்யுளிலும் உருத்திராக்கம் பற்றிக் குமரகுருபரர் குறித்தருள்கிறார்.

திருவைந்தெழுத்து :

திருவைந்தெழுத்தைக் குமரகுருபரர் காசிக் கலம்பகத்தில்,

'கலை பறைக்கு நாயகமாம் அஞ்சக்கரம்''
(31)

எனச் சிறப்பித்துக் கூறுகிறர். சிதம்பரச் செய்யுட் கோவை பாடும் போது நடராசர் திருவுருவம் திருவைந் தெழுத்தே என்ற சாத்திரக் கருத்து அவருக்கு நினைவில் வருகிறது. அந் நினைவைத் தமக்கே உரிய கற்பனைத் திறத்தோடு பாடுகிறர்.

பதஞ்சலியார் நடராசர் திருவுருவைக் கண்டுகளிப்பவர். பதஞ்சலியார் ஆதிசேடனின் அவதாரம். ஆதிசேடன் பாம்பு. எனவே 'கட்செவி' என்ற அடிப்படையில் கண்ணே செவியாக - செவியே கண்ணுக - பதஞ்சலியாருக்கு அமைந்துள்ளது. எனவே திருவைந்தெழித்தின் ஒலி உருவத்தையும், வடிவத்தையும் ஒருங்கே உணர்ந்து நடராசரை அறியும் ஆற்றல் பதஞ்சலியாருக்கே வாய்த்துள்ளது என்று நயம்பட உரைக்கிறர். நடராசர் திருவுருவம் 'பஞ்சாக்கர வடிவம்' என்ற சாத்திரக் கருத்தைப்பதஞ்சாலியாருக்குஇணைத்துப் பாடும் பாடல் இது;

''சத்தமு மாகியச் சத்தத் தாற்பெறும்
அத்தமு மாகலி னனந்தன் கண்களே
உத்தம னைந்தெழுத்
துருவம் காண்பன''
(சிதம்பரச் செய்யுள் 46)

இவ்வாறு சைவ சாதனங்களான திருநீறு, உருத்திராக்கம், திருவைந்தெழுத்து மூன்றையும் குமரகுருபரர் அருள்நூல்களில் அறியலாம்.

குமரகுருபர அடிகளாரின் அருந்தமிழ் நூல்கள்

பன்னூலாசிரியர், இலக்கியச் சுடர், பல்கலைச் செல்வர்
பேராசிரியர். மு. சாயபு மரைக்காயர்,
தமிழ்த்துறை, அறிஞர் அண்ணா அரசினர் கலைக்கல்லூரி
காரைக்கால்.

பதினேழாம் நூற்றாண்டில் சைவம் வளர்த்த சான்றோர்களுள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர் குமரகுருபர அடிகளார் ஆவார். தெள்ளு தமிழால் தென்னக மக்களைக் கவர்ந்ததோடன்றி,வடக்கும் சென்று தம் கருத்தை வளப்படுத்திய பெருமை அடிகளார் ஒருவரையேசாரும். விவேகானந்தர் அயல்நாடு சென்றுசமய வாதத்தில் வெற்றி பெறுவதற்கு முன்பே அடிகளார் அயலிடம் சென்று வாதிட்டு வென்று அரும்புகழ் எய்தியமை ஈண்டு நினைவு கொள்ளத்தக்கது.

குமரி முதல் இமயம் வரை கொடி கட்டி வென்ற குமரகுருபரனாரின் பெருமை நீர்வீழ்ச்சி போல் கூறக்கூறச் சுரப்பதாகும். அடிகளார் வெறித்தன மற்ற நெறியினர்; துறவுக் கோலத்துக் கேற்ற தூயவுள்ளம் கொண்டவர்; தமிழ்நெறிப் பூசையைத் தாம் நிறுவிய காசி மடத்தில் தவழச்செய்த தமிழ்ப் புரட்சியாளர் ; பிற்கால நூல்களெல்லாம் கருத்துச்செறிவு குறைந்தவை என்ற கருத்தைக் கல்லியெறிந்தவர்; சொல்லழகு பொருளழகே யன்றி,எல்லா அழகும் இணையப் பாடும் திறம் மிக்கவர்; தம் படைப்புகளைப் பிற மொழி களில் பெயர்க்கும் அளவுக்குத் தகுதி வாய்ந்தவர்; தமக்குப் பின்னும் தமிழ் வளர்ச்சிக்கும், சைவச் சிறப்புக்கும் தக்க மடத்தையும், தகுதியுடையோரையும் தந்து சென்ற தன்னலமற்றவர்; மக்களேயன்றி மாண்புமிகு தேவர்களும் விழைந்த மதுரத் தமிழ்ப்புலவர்; சுருங்கக்கூறின், தமிழ்ப் புலவர்களில் குமரகுருபர அடிகளார் தனிச்சிறப்பு வாய்ந்தவர் என்பது தேற்றம்.

அடிகளாரின் அருந்தமிழ் நூல்கள் :

பதினாறு கலை மலிந்த பைந் தமிழ்த் திங்களைப் போன்று, குமரகுருபர அடிகளார் இயற்றியளித்த நூல்களின் எண்ணிக்கையும் பதினாறு ஆகும். அவையாவன :

1. கந்தர் கலி வெண்பா
2. கயிலைக் கலம்பகம் ✻
3. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்
4. மீனாட்சியம்மை குறம்
5. மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை
6. மதுரைக் கலம்பகம்
7. நீதி நெறி விளக்கம்
8. திருவாரூர் நான்மணி மாலை
9. முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழ்
10. சிவகாமியம்மை இரட்டை மணிமாலை
11. சிதம்பர மும்மணிக்கோவை
12. சிதம்பரச் செய்யுட்கோவை

13. பண்டார மும்மணிக் கோவை
14. துண்டி விநாயகர் விருத்தம் ❋
15. காசிக் கலம்பகம்
16. சகலகலாவல்லி மாலை

[❋ இக் குறியிட்ட நூல்கள் காசி மடத் துப்பதிப்பில் காணப்படவில்லை - 1952]

அடிகளாரின் நூற் சிறப்புக்கள்

மதுரையிலே அரசாண்டு வந்த திருமலை நாயக்கரின் வேண்டுகோளுக்-கிணங்க மீனாட்சியம்மையின் மீது அடிகளார் பாடிய நூலே **"மீனாட்சி-யம்மை பிள்ளைத்தமிழ்"** ஆகும். பக்திச்சுவையும், இலக்கிய நயமும், ஓசைச் சிறப்பும் ஒருங்கே அமையப் பெற்ற இந்நூலுக்குப் பிள்ளைத்தமிழ் நூல்களுள் தனியிடம் உண்டு. இந்-நூலைப் பாடியபோது மீனாட்சியம்-மையே குழந்தை வடிவில் நேரில் வந்து இவருக்கு முத்துமாலை பரிசளித்ததாக மொழிவர்; அவ்வகையில் தெய்வப்பரிசு பெற்ற தெள்ளுதமிழ்ப் புலவராக இவர் திகழ்கின்றார்.

குமரகுருபரர் இயற்றிய மற்-றொரு பிள்ளைத்தமிழ் நூல் **"முத்துக் குமாரசாமி பிள்ளைத்தமிழ்** ஆகும். இந்நூல் முருகனைக் குழந்தை-யாகப் பாவித்துப் பாடப்பட்டதாகும். தெய்வ அருள் பற்றிக் குறத்தி குறி சொல்லும் முறையில் அமைந்தது **"மீனாட்சியம்மை குறம்"** என்பது மீனாட்சியம்மையின் மீது இவர் பாடிய மற்றொரு நூல் **"மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை"** ஆகும்.

ஊமையாய் இருந்தவர்க்குப் பேசும் ஆற்றலைத் தந்த திருச்செந்தூர் முருகன் மீது இவர் பாடிய நூலே **"கந்தர் கலிவெண்பா"** ஆகும். கலிவெண்பாவிற்குரிய இலக்கியமாக இலங்கும் இந் நூல் சைவசித்தாந்த சாரமாக அமைந்துள்ளது. தத்துவக் கருத்துக்கள் செறிந்த இந்நூல் நக்கீர-ரின் திருமுருகாற்றுப் படையோடு ஒப்பு நோக்கத் தக்கது.

மதுரையைப் பற்றி **''மதுரைக் கலம்பகம்"** என்ற நூலும், திருவா-ரூர் பற்றித் **"திருவாரூர் நான் மணிமாலை"** என்ற நூலும், சிதம்-பரத்தைப் பற்றிச் **''சிதம்பர மும் மணிக் கோவை" ''சிதம்பரச் செய்யுட் கோவை"** ஆகிய நூல் களும் இவர் இயற்றியுள்ளார். சிதம்பரச் செய்யுட்கோவை பாவும் பாவினங்களும் நிறைந்து தேனென இனிப்பது; சிதம்பர மும்மணிக்கோவையில் திருக்குறட் கருத்-துக்கள் செறிந்துள்ளன.

அடிகளாரின் நூல்களில் ஒன்-றான **'நீதிநெறி விளக்கம்"** சங்க இலக்கியங்களோடு ஒத்த சிறப்புடையது என்பது அறிஞர்களின் ஒருமித்த துணி-பாகும். அறிவுரைக் களஞ்சியமாகத் திகழும் இந்நூல் திருக்குறளின் வழிநூ-லெனக் கொள்ளத்தக்கது. இந்நூலை ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்துள்ள-னர் எனின் இதன் பெருமையைக் கூற-வும் வேண்டுமோ?

தருமபுரத்தில் தம்முடைய ஆசிரியராகிய மாசிலாமணி தேசிகரைப் பரமசிவமாகவே கொண்டு இவர் பாடிய நூல் **"பண்டார மும்மணிக் கோவை"** ஆகும். சிறந்த சைவச் சித்தாந்த நுண்பொருள்களை உடையது இந்நூல்.

தமிழ்ப் புலவர்களுள் வடநாட்டுக்குச் சென்று தங்கியிருந்து தமிழ்நூல்கள் பாடிய பெருமை குமரகுருபரர் ஒருவரையே சாரும். **"துண்டி விநாயகர் விருத்தம்"** என்ற நூலையும், காசியைப் புகழ்ந்து **"காசிக் கலம்பகம்"** என்ற நூலையும், அங்கே அவர் பாடினார். காசியில் தங்கி ஒரு மடத்தை ஏற்படுத்தினார், அது இன்றளவும் உள்ளது. காசியில் இருந்த போது இராமாயணச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். இராமாயணக் கதையை இவரிடம் கேட்டறிந்தே துளசிதாசர் "துளசி ராமாயணம்" செய்ததாகக் கூறுவர்.

காசியில் இருந்தபோது தில்லியை ஆண்ட முகலாய அரசரிடம் பேசி, அவருடைய உதவியைப் பெற முயன்றார். அதற்காக இந்துஸ்தானி மொழி கற்கக் கலைமகளின் அருளை வேண்டிச் **"சகலகலா வல்லி மாலை"** என்ற நூலைப் பாடினார். இந்துஸ்தானி மொழியில் தேர்ந்த அடிகளார் இசுலாமியப் பெரியார்களிடம் இணங்கிப் பேசி அவர்கள் நெஞ்சங்களை ஈர்த்தார். முகலாய அரசரின் அவையில் சைவம், இசுலாம் சமயங்களின் ஒருமைப்பாட்டை விளக்கிப் பெருமையுற்றார். அரசரின் அன்பைப் பெற்று, அங்கே மடம் அமைத்துத் திருத்தொண்டாற்றினார்.

இவ்வாறு செந்தமிழ்த் தொண்டும் சிவத்தொண்டும் ஒருங்கே ஆற்றிய குமரகுருபரர்அடிகளாரின் முந்நூறாவது ஆண்டு நினைவு விழாவை இப்பொழுது நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு அன்றே வித்தூன்றிய அடிகளாரின் உள்ளுணர்வை உணர்ந்து, இறை நெறியில் நாம் ஈடேற்றம் காண்போமாக.

குமரகுருபரரின் அருட்பனுவல்—அணிநலம்

டாக்டர். சு. கோவிந்தராசன்,
இணைப் பேராசிரியர்,
தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலைநகர்.

இன்றைக்குச் சுமார் 300 ஆண்டுகட்கு முன்னர், தமிழகத்தில் தோன்றிப் பெரும் புலமையுடனும் புகழுடனும் விளங்கியவர் குமரகுருபர அடிகள். தமிழ் இலக்கண இலக்கியங்களையும் ஞான நூல்களையும் ஐயமறக் கற்று நூல் படைக்கும் திறன் மிக்கவர். இவர் இயற்றிய சிற்றிலக்கியங்கள் தமிழ்ப் பிரபந்த நிரலில் முக்கிய இடம் வகிப்பன. இவரியற்றியனவாக இன்று தமிழ் உலகிற்குக் கிடைப்பன, 1. கந்தர் கலிவெண்பா, 2. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், 3. மதுரைக்கலம்பகம், 4 நீதிநெறி விளக்கம், 5. திருவாரூர் நான்மணிமாலை, 6. முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ், 7. சிதம்பர மும்மணிக்கோவை, 8. பண்டார மும்மணிக் கோவை 9. காசிக் கலம்பகம், 10. சிதம்பரச் செய்யுட் கோவை, 11. சகலகலாவல்லி மாலை, 12. கைலைக் கலம்பகம், 13. காசித்துண்டி விநாயகர் பதிகம் முதலியன.

குமரகுருபரரின் செய்யுட்கள் யாவும் கருத்துப் பொருண்மை கொண்டு விளங்குவது மட்டுமன்றி இன்னோசை பெற்றும் விளங்குவன இவற்றின் ஓசை நயம் கொண்டே ஏனையோர் செய்யுட்களினின்றும் இவற்றைப் பிரித்துணரலாம் என்பர். இவ்வினிய ஓசை நயத்தைப் பல்வேறு விருத்தங்களும் வெண்பாவும் விளக்கி நிற்கின்றன. எதுகை வகைகளும் மோனை நயங்களும் தொடை விகற்பங்களும் இவரறியாமலே இவருடைய பாடல்களில் வந்து வீழ்கின்றன எல்லா வகையான யாப்பும் இவருக்குக் கைவந்த கலை என்பதை மதுரைக் கலம்பகம், காசிக்கலம்பகம், மீனாட்சியம்மை, முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் முதலிய நூல்கள் விளக்கி நிற்கின்றன.

இத்தகைய திறன் படைத்த குமரகுருபரரின் அருட்பனுவல்களில் அணிநலன்களுக்கு அளவே இல்லை எனலாம். தன்மை, உவமை, உருவகம் போன்ற தாயணிகளைத் தமிழ் புலப்படுத்தி நின்றவேளையில் வடமொழிச் சார்பும் கலப்பும் அதற்கு ஏற்பட்டது. வடமொழி இலக்கிய உணர்வுகளும் சிந்தனைகளும் தமிழர்க்கு ஏற்பட்டபோதுதான் உயர்வு நவிற்சி, தற்குறிப்பேற்றம், சிலேடை என்ற இன்னோரன்ன பொருளணி இயல்புகளும் யமகம் திரிபு மடக்கு போன்ற சொல்லணி இயல்புகளும் தோன்றின. புலவர்கள் என்போர் தத்தம் காலச் சூழலுக்கேற்றவாறு இலக்கியம் படைப்பவர். குமரகுருபர சுவாமிகளும் 17 ஆம் நூற்றாண்டில் இத்தகைய சூழலில் வாழ்ந்த பெரும் புலவராதலால் இத்தகைய அணிகளைத் தமது நூல்களிலும் கையாண்டுள்ளார் என்பது போதரும்.

அவர் தமது நூல்களுள் பயன்படுத்திய அணி வகைகளை நயப்படுத்தி உரைத்தல் என்பது எளிதன்று. அவற்றை இரண்டொரு பக்கங்களுக்குள் அடக்கிக் காட்டிவிடலாம் என்றால் கடுகைத் துளைத்து ஏழ் கடலையும் புகுத்தி விடலாம். எனவே இஃதோர் அரிய செயல். இருப்பினும் இடத்திற்கேற்ப ஒரு சிலவற்றை எடுத்தியம்பி மனதை நிறைத்துக் கொள்ள முயலலாம்.

கற்பனை :

குமரகுருபரர் தமது கற்பனைத் திறத்தினால் கற்பார் மனத்தைக் கனிவிக்கின்றார். இக்கற்பனை என்னும் அலங்காரம் உயர்வு நவிற்சி என்னும் அலங்காரத்தினும் சற்று வளர்ந்த நிலை எனலாம். உலகில் 'கழைக் கூத்து' என்ற ஓராட்டம் உண்டு. நாட்டில்

நடக்கும் கழைக்கூத்தைக் காட்டில் காணு-கின்றார் குமரகுருபரர். பச்சிளங் கமுக மரம் சோலையில் நிற்கின்றது. அதன் மேலேறிப் படர்ந்த முல்லைக்கொடி, பக்கத்தேயுள்ள வாழையின் மேலும் படர்ந்து நிற்கின்றது அந்நிலையில் கமுகு மரத்தின் கண் மயி-லொன்று நின்று நடிக்கின்றது. நெடுந்தாளையு டைய மந்திகள் பலாப் பழங்களைத் தூக்-கிக் கொண்டு கமுக மரத்திற்கும் வாழைமரத் திற்கும் இடையே பாலமாக அமைந்த முல்-லைக்கொடியின்மேல் கழைக்கூத்தாடிபோல் நடந்து வருகின்றது இதனை,

'பைந்துணர்க் கொடியில்
படர்தரு தோற்றம்
வடஞ்சூழ்ந்து கிடந்த
நெடும்பெருங்கம்பத்து
அணங்கனாள் ஒருத்தி
ஆடினாள் நிற்ப'
(திருவாரூர் நான்மணிமாலை 41)

என்று மயிலாட்டத்தை அணங்கின் ஆட்டத் திற்கும் மந்தி கொடிமேல் நடப்பதைக் கழைக் கூத்தன் கயிறுமேல் நடப்பதற்கும் உவமைப் படுத்தி அழகுறுத்துகின்றார் ஆசிரியர் இவ்-வாறு மந்திகள் மட்டுமல்லாது இயற்கையில் காணப்படும் மீனினம், எருமை, குரங்கு முதலான எல்லா உயிர்கள் பாலும அவர் தம் கற்பனையைச் செலுத்துகின்றார். விநாயகர், சிவபெருமான், மீனாட்சியம்மை முதலானோ-ரையும் அவருடைய கற்பனை உள்ளம் விட-வில்லை. இவ்வாறு இயற்கை நிகழ்ச்சிகள் இயற்கை அல்லா நிகழ்ச்சிகள் பலவற்றிலும் இவரது உள்ளம் கற்பனையில் மிதக்கின்றது.

உயர்வு நவிற்சி:

இயற்கையாக நிகழுகின்ற நிகழ்ச்சி-களைக் கற்பனை கலந்து மிக உயர்வாகச் சொல்லுவது உயர்வு நவிற்சியாகும். மருத நிலத்து மகளிர் களிமண்ணையும் சிறுகற்-களையும் கொண்டு சிற்றில் அமைத்தலும் சிறுசோறடுதலும் இயல்பு. இவ்வியல்பினைப் புலவர் பெருமான், மகளிர் பவளவிறகை அடுப்பில் மாட்டி, மாணிக்கத்தீயை அதில் மூட்டிச் சங்காகிய பானையில் தேனாகிய உலை நீரில் முத்தாகிய அரிசியை இட்டுச் சோறாக்கினர் என்று கற்பனைப்படுத்து-கின்றார். குமரகுருபரர் காணும் மதுரை மிக வியப்பாகக் காட்சியளிக்கின்றது. வானள-வும் ஓங்கிய கரும்பு கற்பக வனத்தையும் தொட்டு நிற்கிறது. அதனை இந்திரனின் ஐராவதம் உண்கிறது. இவ்வாறே மதுரை மண்ணில் தோன்றிய நெல் வானுலகில் போய்க் கதிர்விட, அதனைக் காமதேனு தன் கடை வாயால் குதப்புகின்றது. இத்தகு எண்ணற்ற உயர்வு நவிற்சிகளைக் குமரகுருபரர் பிரபந்-தங்களில் காணலாம்.

தற்குறிப்பேற்றம் :-

ஒருபொருளுக்கோ அன்றிச் செய-லுக்கோ இயல்பான காரணம் ஒன்றிருக்க அதற்கு வேறொரு காரணத்தைக் கற்பித்து அல்லது வேறொரு குறிப்பினை ஏற்றிக் கூறு-வதாக அமைவது இது. மதுரைத் திருத்தலச் செய்திகள் பலவற்றை ஆசிரியர் தற்குறிப் பேற்வகையில் சொல்லுவதைப்பல விடங்களில் காணலாம் சிவனுடைய கணங்கள்மாறிப்பிறப்-பதில்லையென்பதும், ஆருரில் பிறந்தார் சிவ கணங்கள் ஆவர் என்பதும் புராண வரலாறு, ஆயின், 'இவண் பிறந்தார் இனிப் பிறவார்' என்று சத்தியம் செய்வார் போன்று சிவகணங் கள் யாவும் மழுப்படையேந்தியுள்ளனர் என்பர். சூரியன் வெப்பம் உடையவன் என்பது இயல்பு. இவ்வியல்பினை மீனாட்-சியம்மை தோன்றுவதற்குரிய பெருமையைச் சந்திர வமிசம் பெற்றதை உன்னி அவன் வெப்பமானான் என்று ஏற்றியுரைக்கின்றார்; இவ்வாறு எண்ணிறந்தன.

சிலேடை :-

'பாவலரும் நாவலரும்
பண்மலரக் கண்மலரும்
காவலரும் ஏடவிழ்க்கும்
காசியே. (காசி—கல. 32)

என்று இருபொருள்படச் சிலேடை வகையில் வகையில் செய்யுள் செய்யவும் வல்லவர் குமரகுருபரர்.

முரண் :-

'ஒன்றே யுடம்பங் கிரண்டே
யிடும்பங்கு' (மது. கல. 7)
'ஒருபாதி சத்தி யொருபாதியும்
பரமசிவமெனத் தொகுத்து
வைத்த வவிமுத்த நாயகர்'

(காசி கல—40);

'உமாதேவியின் திருவிழி பாய்ந்து சிவனின் வலப்பாகம் கருநிறம் பெற்றது; சிவனின் திரு -விழிப்பார்வை பட்டு உமையின் இடப்பாகம் மாறுபட்டது. அதனால் இன்னாருடைய இன்னபாகம் இவ்வாறாகிறது என்று சொல்ல வொண்ணாநிலையுண்டாகியது' (திரு. நா. மாலை—4) என்று முரண்பட்ட பல செய்திகளைச் சொல்லிச் செல்வர்.

சொல்லணி:-

குமரகுருபரரின் பிரபந்தங்களில் மடக்கு, திரிபு, யமகம் போன்ற சொல்லணி வகைகளும் மிக்குள்ளன என்பதும் குறிப்பிடத் தக்கது.

'சிலை சிலையாகக் கொண்டதென்மது ரேசர்' (மது. கல 74)
'சுடர்ப்பருதி பருதிக் கொடுஞ்சி மான்றேர்' (மீனா-பி. த. 49)

என்பனவும்; இன்னும் 'தொடுத்தணிந்தது' என்றும், 'ஐயமணிக்கலம்' என்றும், 'நல்லார் தொழுங்கலை' என்றும்; 'வள்ளக்கலச முலை' என்றும்; வண்ண மேனியரும்பு' என்றும்; குருகை விடுத்தாள்' என்றும் தொடங்கக்கூடிய செய்யுட்களும் பிறவும் மடக் கணி பெற்று வந்துள்ளன என்பதும் நோக்கத் தக்கது.

இன்னும், ஒரு பொருளைப் பழிப்பது போலப் புகழ்வதும் புகழ்வது போல இழிப்-பதும் ஆகிய நிந்தைத் துதி, துதி நிந்தை ஆகியவையும்; இயல்பாக நிகழும் நிகழ்ச்சி களில் சில குறிப்புச் செய்திகளைப் புலப்படுத்-தும் நிதரிசனமும், பலதொனிவகைகளும் நிறைந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இயற்கையின் எழில் நலங்களை உள்-ளது உள்ளவாறே எடுத்தியம்பப் பெற்ற சங்க காலத்திலும் அதன் தொடர்பான காலத்திலும் விரிவடையாத அணிவகைகள் வடமொழித் தொடர்பால் விரிவடைந்ததென்றும், வடமொழி தென்மொழியறிந்த புலவோர் விரிவடைந்த அணிவகைகளைத் தமது நூலுள்ளும் பரக்க அமைத்துப் பாடுதலைப் பெருமையாய்க் கொண்டிருந்தனரென்னும், இவர்கள் கண்-ணாற்கண்ட காட்சிகளைக் கருத்தால் விரிவு படுத்தி இன்பங்கண்டனரென்றும் கொள்ளலாம்.

குமர குருபர அடிகள் தெரிக்கும் நகைச்சுவைத் திறன்

நல்லாசிரியர், நகைச்சுவையரசு, வித்துவான்
க. சம்பந்த முதலியார்,
தொண்டை மண்டல ஆதீனம்,
காஞ்சிபுரம்.

தமிழ் இலக்கியங்கள் காட்டும் ஒன்பான் சுவைகளுள் நகைச் சுவையும் ஒன்றாகும். ஒரு கருத்தைச் சுவைபட-வேடிக்கையாகச் சொல்லுவதே நகைச் சுவை எனப்படும் இதனால், பேசுவோரும் கேட்போரும் இன்டம் நுகர்வர். ஆகவே, புலவர்கள் நகைச் சுவையைத் தம் பாடல்களில் அமைத்துப் பாடுவது மரபு. அத்தகையோருள் முன்னர் வைத்து எண்ணத்தக்கவர் நம் குமர குருபர அடிகளார் ஆவார்கள்.

இப்புலவர் கோமான் பாடல்களுள் மலிந்து கிடக்கும். அத்துணை நகைச்சுவைகளையும் முற்றாக எடுத்துக் கூறுவது இக்கட்டுரையின் நோக்கமன்று. ''ஒரு பானை சோறுக்கு ஒரு சோறு பதம்'' என்பது பழமொழி; இங்கு இரு சோறு மட்டுப் பதமாக எடுத்துக்கொண்டு பார்ப்போம்!

தமிழ் மொழியின்கண் வழங்கும் 96 வகைப் பிரபந்தங்களுள் **பிள்ளைத் தமிழ்** என்பதும் ஒன்று. இஃது ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இரு கூறாகும். இங்கு முதல வகையிற் கூறப் பெற்றுள்ள ஓர் நகைச்சுவை வருமாறு:

முருகு என்னும் சொல்லுக்கு **இளமை,** அழகு, மணம், கடவுட்டன்மை எனப் பல பொருள் காண்பர். ''என்றும் இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே'' என்பது திருமுருகாற்றுப்படை வெண்பா. ஆகவே, இளையோனாகிய முருகனுடைய பிள்ளைமை விளையாட்டுக்கள் பல. அவற்றுள் ஒன்று, இறைவனது தடத்த லட்சணத்தில் (ஏன்று கொண்ட வடிவத்தில்) உள்ள அடையாளங்களை ஒன்றோடு ஒன்றை இணைத்துத் திருவிளையாடல் புரிதலாகும்.

பாலமுருகன் உமையம்மையின் மடிமீது அமர்ந்துள்ளான். அப்போது மழலை மொழி பேசும் அவனது வாயினின்றும் உமிழ் நீர் (சொள்ளு) ஒழுகி அம்மை உடுத்துள்ள வெண்ணிற ஆடையை நனைக்கின்றது. அன்னையின் மணிவயிறு குளிரத் தவழ்ந்து ஏறிச் சிவபிரான் திருமேனியைப் பற்றிப் பிடித்து மார்பில் நின்று முருகன் குரவைக் கூத்தாடுகின்றான். பின், பெருமான் கையிலுள்ள, உடுக்கையைப் பறையாகக் கொண்டு அடித்து முழக்குகின்றான். அதன் பின், பெருமானது இடக்கையிலுள்ள நெருப்பினைச்சடைக் கங்கை நீரை மொண்டு மொண்டு ஊற்றி அணைக்க முயல்கிறான்; பிறகு மூன்றாம் பிறைச் சந்திரனை எடுத்து, அதற்குப் பகையாகிய பெருமான் அணிந்துள்ள பாம்புகளின் வாயில் திணித்து விளையாடுகிறான்; மேலும், பெருமானது சடைக்காட்டில் விளைந்

துள்ளதும், அன்பர் அருச்சித்ததும் ஆகிய அறுகம் புல்லைப் பிடுங்கி எடுத்து, அவன் கரத்துள்ள இள மானுக்குக் கொடுத்து அதன் நீண்ட நாள் பசியைத் தணிக்கின்றான். பெருமான் தன் பவள மேனியில் சண் ணித்துள்ள (பொடியாகப் பூசியுள்ள) திருவெண்ணீறு புழுதித்துகளாகி எழும் படிக் குதித்துக் குதித்து ஆடுகிறான்; இதனால் முருகன் திருமேனி முழுதும் புழுதி படிகின்றது. இப்புழுதியைப் போக்கச் சடைக் கங்கையில் தன் விழி கள் சிவக்கும்படி நெடுநேரம் நீர் விளையாட்டயர்கின்றான். இப்படி யாக அம்மையப்பரை அகமகிழ்விக் கின்றான் முருகன். இதோ அப்பாடல்:

மழவு முதிர் கனிவாய்ப் பசுந்தேறல்
வெண்துகில்
மடித்தலம் நனைப்ப அம்மை
மணி வயிறு குளிரத் தவழ்ந்தேறி
எம்பிரான்
மார்பினிற் குரவையாடி
முழவுமுதிர் துடியினில் சிறுபறை
முழக்க அனல்
மோலிநீர் பெய்தவித்து
முளைமதியை நெளியரவின்
வாய்மடுத்து இளமானின்
முதுபசிக் கறுகருத்தி
விழவுமுதிர் செம்மேனி வெண்ணீறு
தூளெழ
மிகப்புழுதி யாட்டயர்ந்து
விரிசடைக் காட்டில்நின் றிருவிழிகள்
சேப்பமுழு
வெள்ளநீர்த் துணைய மாடிக்
குழவிமுதிர் செவ்விப் பெருங்களி
வரச்சிறு
குறும்புசெய் தவன் வருகவே
குரவுகமழ் தருகந்த புரியிலருள்
குடிகொண்ட
குமரகுரு பரன்வருகவே.

தெருப்புழுதி எழ ஆடுவதும், அதனால் தம் உடலிலும் படிந்த புழு தியைப் போக்க நீர் நிலையிற் குதிப் பதும், நீண்ட நீர் விளையாட்டால் கண்கள் சிவப்பேறுவதும், கன்று குட்டி களை விரட்டி ஓடச் செய்து கை கொட்டிச் சிரிப்பதும், பெரிய பாத்திரத் துள்ள நீரை மொண்டு மொண்டு கீழே கொட்டுவதும், ஆகிய இவை எல்லாம் பிள்ளைமை விளையாட்டுகளே! இவை நிகழும் இடங்களும் காலங்களும் வேறு வேறானவை. ஆனால் முருகன் பிள் ளைமை விளையாட்டுகள் அனைத்துக் கும் உரிய இடமாக அம்மையப்பர் திரு மேனிகளையும் சிவபிரான் தடத்த திரு மேனி அடையாளங்களையும் கொண்டு இப்படி ஒரு கற்பனைச் சுவை தோன்றக் காட்டியுள்ள அழகு உயர் ஒப்பில்லாத ஒன்றாகுமன்றோ!

பிறிதொன்று வருமாறு:- தேவர் கள் அமுதம் பெறத் திருப்பாற்கடலைக் கடைவதற்கு மந்தர மலையை மத்தாக நாட்டினர் என்ப. சிவபிரான் முப்புறங் களை அழிக்க எழுந்தருளிய ஞான்று மேருமலையை வில்லாக வளைத்து ஏந் தினர் என்பது புராண வரலாறு.

தலைவி ஊடிய வழி (சிறு கோபம் கொண்டால்) அவ்வூடலைத் தணித்தற்குத் தலைவன் அவளை வணங்குதலும் உணடு.

சிவபிரான் தம் தலையிற் கங்கை சூடியதற்கு உமையம்மை ஊடினாள்; அதைத் தவிர்க்கச் சிவபிரான் அம்மை யின் திருவடியை வணங்குகின்றான்,

அம்மையின் திருவடி தாமரை மலர் ஒப்பது; இறைவன் திருமுடியிற் சூடுவது ஊமத்தர்பூ. அவன் வணங்கிய போது தாமரையோடு ஊமத்தையை

உடன் வைத்ததாயிற்று. இப்படி ஒவ்வா மலர்களை ஒரு சேர வைத்தல் பித்தர் செய்கையாகும்.

குமரகுருபர அடிகள் இக்கருத்துக்களைக் கொண்டு ஒரு சொற் சித்திரம் அமைக்கின்றார். இப்படிச் சிவபிரான் செய்தது பித்தமன்று; முன்னர் புது மத்தாகப் பயன்பட்ட மலையை முப்புற அழிப்புக்கு வில்லாக எண்ணி எடுத்தது போன்ற அறியாமையே யாகும் என நகைச்சுவைபடக் கூறுகின்றார். அப்பாடல்,

பதுமத் திருவல்லி கற்பூர வல்லிநின்
பாத பத்மம்
மதுமத் தொடும்தம் முடிவைத்த
வாமது ரேசரவர்
இதுமத்தப் பித்தமன்று ஏழைமை
முன்னர் இமையவர் கைப்
புதுமத் தினைப்பொற் சிலைஎன்
றெடுத்த புராந்தகர்க்கே.

(மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை)

இதுகாறுங் கூறியவற்றால், ஒன்பான் சுவைகளுள் நகைச் சுவையும் ஒன்று என்பதும், இச்சுவை பொலியப் பாடுவதில் அதிசமர்த்தர் நம் அடிகளார் என்பதும், சான்றாக ஈரிடங்கள் காட்டப்பட்டுள்ளன என்பதும், இன்ன பிறவும் தெரிய வரும்.



நீதிநெறி விளக்கமும் சமூக நெறியும்

டாக்டர். T.B. சித்தலிங்கையா, M.A., Ph D.,
தலைவர், சைவசித்தாந்தத் துறை.
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

குமரகுருபரர் மெய்ப்பொருளுணர்ந்தவர். கவிஞர். துறவரசர் எனவே தாம் உணர்ந்தவற்றை உலகுக்கு எடுத்துரைத்தார். சமயநெறியாகவும், தத்துவ நெறியாகவும் பல நூல்களைப் புனைந்தார். அவையனைத்திலும் மனிதன் உயர்வதற்குரிய வழிகளை வகுத்துத் தந்தார்.

சமுதாய வாழ்க்கை பற்றியும் குமரகுருபரர் கூறுகிறார். தனிமனிதன் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகளை நீதிநெறி விளக்கத்தில் கூறுகிறார். சமயம், தத்துவம் என்பவற்றிலிருந்து வேறுபட்டோ, மாறுபட்டோ இருக்கிற கருத்துக்களை நீதிநெறி விளக்கம் கூறவில்லை. சமயம் என்ற வண்ணம் தீட்டாமல் சமய நெறிகளையே அறநெறிகளாக-நீதிநெறிகளாக அந்த நூல் கூறுகிறது. 'கடுத்தின்னாதானைக் கட்டி பூசித்' தின்ன வைக்கும் பழைய முறையே இது.

சமயக் கோட்பாடுகளைச் சமூகக் கோட்பாடுகளாக்கித் தனிமனித வாழ்க்கை அமைய வழிகாட்டுகிறார் குமரகுருபரர்.

தெய்வம் இல்லாது சமயம் உண்டோ? நீதிநெறி விளக்கம் சமய நூல் அல்லவே? ஆனால் அது தெய்வங்களைப் பற்றிச் சொல்லுகிறது. அவரவர் நிலைகளுக்கேற்பத் தெய்வங்கள் வேறுபடுகின்றன. குலப் பெண்ணுக்குத் தெய்வம் கணவன், மக்களுக்குப் பெற்றோரே தெய்வம்; மாணவர்க்கும், அடியார்க்கும் ஆசிரியர் தெய்வமாவார். இவர்களுக்கும் இவர்களுக்குத் தெய்வமாகவிளங்குபவர்களுக்கும் ஒரு பெருந்தெய்வம் உண்டு; அது அரசன். அந்த அரசன் வணங்கும் தெய்வமும் உண்டு.

அரசனை இறை என்ற சொல்லால் குறிக்கிறார் கவிஞர். ஏன் தெரியுமா? அவன் ''எண்மையனேனும்அரியன்; கண்ணிலன்! உள்வெயர்ப்பினான்,'' அந்த அரசுரிமையும் புண்ணியத்தின் வழியாகவே வருகிறது ''கண்ணிற் சொலிச் செவியி னோக்கும் இறைமாட்சி புண்ணியத்தின் பாலதே'' என்று அழகாகக் கூறுகிறது நீதிநெறி விளக்கம். என்றாலும் இந்தப் புண்ணியப் பலனை இழக்கும் மன்னர்களும் இருக்கிறார்கள்—. ''குடிகொன்று இறைகொள்ளும் கோமகன்'' பசுவின் மடியை யறுத்துப் பால் கொள்ளவும் வல்லவன். ''இன்று கொளற்பாலநாளைகொளப் பொறான்'' ஆகிய மன்னன், 'எயிறலைப்பான் ஆறலைக்கும் வேடலன் வேந்து மலன்.'' ''வேலொடு நின்றான், இடுவென்றது போலும் கோலொடு நின்றான் இரவு'' என்ற திருக்குறளின் கருத்தை மிக அழகாக எடுத்துக்கூறுகிறது இந்த நூல். அரசனின் ஆட்சி ஒழுங்காக அமைந்தால் நாடு நலம் பெறும்; வளம் பெருகும். அரசன் தவறு செய்தால் அந்த நாடே துன்பமுறும். பட்டுடுத்திப் பணிகள் பூண்பது மட்டுமா அரசனின் சிறப்பு? உயர்ந்த உணவை உண்பதும், சிறந்த வாசனைப் பொருட்களைப் பூசுவதும் மட்டுமா அவன்வேலை? அமைச்சர் இடித்துக் கூறுவனவற்றைக் கேட்க வேண்டும்; அறிவுக் கண்களைத் திறந்து காணவேணடும். இல்லாவிட்டால்அவன் மூச்சு விடுகின்ற பிணம். அவ்வளவுதான்.

'நெட்டுயிர்ப் போடுற்ற பிணம்' நீதி நெறி கூறுகிறது,

செங்கோல் எவ்வாறு அமைய வேண்டும் என்று கூறிய குமரகுருபரர், கேடுகளை விலக்குவது பற்றியும் கூறு கிறார். கேடுகள் யாவை? அவை எப்படியெல்லாம் ஏற்படுகின்றன. ஒரு பட்டியலே தருகிறார், பாருங்கள்.

'நட்பு பிரித்தல் பகை நட்டல் ஒற்றிகழ்தல்
பக்கத்தார் யாரையும் ஐயுறுதல்-தக்கார்
நெடுமொழி கோறல் குணம்பிறி தாதல்
கெடுவது காட்டும் குறி'

இக்கேடுகளைத் தவிர்ப்பது எப்படி? பெரியவர்களைப் போற்ற வேண்டும். அரசனைப் பற்றியும் செங்கோல் பற்றியும் கூறிய குமரகுருபரர் இனித் தனி மனிதன் வாழ்க்கையில் மேற்கொள்ள வேண்டியவற்றைக் கூறுகிறார். பெரியவர்களைப் பணிவதால் திருவைப் பெற்று, அவள் தமக்கையை விரட்டலாம். இவ்வாறு பணிந்து நிற்பதற்குத் தேவை அடக்கம். ''முற்றும் உணர்ந்தவர் இல்லை'' எனவே 'முழுவதூஉம் கற்றனம்' என்று களிக்காமல் இருந்தாலே போதும் சிற்றுளியால் பெருமலையும் தகர்ந்து விடும் அல்லவா! ஆமாம். இந்த அடக்கத்தைப் பெறுவது எப்படி? பிறரோடு தன்னை ஒப்பிட்டுக் கொள்வதனாலேயே எல்லாத் துன்பமும் ஏற்படுகின்றன. அவர் அத்தனைச் செல்வமும் நமக்கில்லையே என்றுவருத்தமும், பிறகு பொறாமையும் ஏற்படுகின்றன. ஆகவே துன்பம் வேண்டாமென்றால் பிறரைப் பார்த்து ஒப்பிடக்கூடாது. ஆனால் குமரகுருபரரோபிறரைப்பாருங்கள், ஒப்பிட்டுப் பாருங்கள் என்றார் பார்க்கிற கோணம் மட்டும் தான் மாற வேண்டும். நம்மினும் உயர்ந்தவர்களைப் பார்த்து வருந்துகிறோம். குமரகுருபரர் நம்மினும் எளியாரைப்பார்க்கச் சொல்கிறார் மிக எளிய அந்தப் பாடல்

இதோ;

'தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க-தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்
எற்றே இவர்க்கு நாம் என்று'

உடைமை என்று ஒன்று உள்ள போது உடையவன் என்ற ஒருவன் தோன்றுகிறான். உடையவன் என்கிற போதே இல்லாதவனும் இருப்பானல்லவா? எது உடைமை? கல்வியும் செல்வமுமேஉடைமைகளாம். குமரகுருபரர் சொல்கிறார், 'கல்வியுடைமை பொருளுடைமை யென்றிரண்டு செல்வமும் செல்வமெனப்படும்—' இந்தச் செல்வம் உடையவர்கள் மிகவும் விழிப்பாகஇருக்கவேண்டும். இவையிரண்டும் இல்லாதவர்கள் தம்முன் தாழ்ந்து நிற்பது போல, இவை இரண்டையும் உடைய செல்வர்களாகிய தாமும்தாழ்ந்து நிற்கவேண்டும். இந்தப் பணிவு இல்லாவிட்டால் செல்வம் நீங்கி வறுமை எய்தும். தன்னைப் பற்றிய மதிப்பீடுபெரிதாக இருக்கும்போதுதான் பணிவு இல்லாது போகிறது. தன் பெருமையைத் தானே பேசுவதும், பிறரைக் கொண்டு பேசுவிப்பதும் அகந்தைக்கு அடையாளமாகும். ''நீர் ஊற்றி நெருப்பை வளர்க்கின்ற முயற்சி''

''உண்மையில் தன்னை வியவாமை, எல்லார்க்கும் மேலாக ஒருவன் இருந்து கொண்டு எல்லாவற்றையும். எப்பொழுதும் கண்காணிக்கிறான்' என்னும் உணர்வேயாகும்.

''வஞ்சித் தொழுகும் மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தே மென்று மகிழன் மின்-வஞ்சித்த
எங்கும்உளனொருவன் காணுங்கொல்என்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு''

என்று இதனைக் குறிப்பிடுகிறது நீதி நெறி விளக்கம்.

எனவே சமயநெறிகளாகப் பிற தத்துவ நூல்களில் கூறிய குமரகுருபரர். தனிமனித வாழ்க்கை மேம்பட்டுக் சிறப்பதற்காகச் சமுதாய நீதிகளாகக் கூறியவை நீதிநெறி விளக்கத்தில் இடம் பெறுகின்றன தத்துவ நூல்களில் கண்ட கருத்துக்களே சமயப் பெயர் தோற்றாமல் நீதிநெறிகளாக இந்நூலில் தரப்பட்டுள்ளன. எனலாம்.

A Lamp in the way of Righteousness

Dr. K. P. ARAVAANAN,
Professor and Head
Dept. of Tamil Studies,
Pondicherry University,
PONDICHERRY

INTRODUCTION

1. 1 FALL AND RISE OF THE TAMILS

The country of the Tamils which was once ruled by themselves became the seat of foreigners from the dawn of the 3rd century A.D. Thus a stage was set for the introduction of different cultures and languages in Tamil Naatu. The intermingling of the variegated cultures and races did not form a fertile field for their growth. The internal conflict welcomed the aggression of Islam. As a result, the Paantiyaa country which was at the crest of its fame fell under the feet of the Muslim rule.

At the same time Krishna Deevaraayaa the emperor of Vijayanagar, was struck by the supreme growth of the other kings and religions in Tamil Naatu. This diverted his attention towards Maturai, the mingling place of the ancient intellectuals. Thus a generous rule of the Naayaks slowly spread its bud in the capital city of the Paantiyaa kings. This was a period when Tamil Naatu was slowly regaining its lost civilization and culture.

In almost all the central parts of this country, many religious mutts took their roots. They had arrested the deteriorating ignorance and the antegonism which took a violent turn towards the native religion and language Devotion towards God and Tamil literature was encouraged by them.

Thus the grip of darkness slowly loosened and many morning stars raised their heads in the sky of Tamil literature, to spread their light.

1.2. RIVER OF INTELLECTUALITY

A river of intellectuality in the shape of Kumara Kuruparar started from Sri Vaikuntam and ran in full through the ups and downs of India, to contribute its grace to the living millions. When the river was passing through Maturai, the kink Tnirumalai Naayakar, a foresighted ruler, coustructed a dam across it. Many river-lets began to flow from there.

Niiti Neri vilakkam was composed at Maturai by the poet Kumara Kuruparar according to the wishes of the king Tirumalai Naayakar.*1.

1.3. THE LIGHT OF MORALS

Prof. T.P.M. has called it as "The light on the path of morals*2 and Prof. J. M. Coomaeuntaram Pillai translated it as ' A lamp in the way of Righteous -ness*3 and Prof. T. B. Krishnacaami named it as "An exposition of the path of righteousness"*4. The first two expla -nations that it is a lamp which will help to see the morals in the darkness of ignorance, seem to be suitable.

1.4 EVOLUTION AND EVALUATION

Dr. Kamil Zvalebil, a foreign critic and linguist cites:

"this cycle of Cankam poetry repre -sents one of the summits of literary creation in India and in the whole world.

Conciseness of expression, pregnancy of meaning, purity of diction and unity of thought are the maincharacteristics of these poems.... There is art, severe and simple; but of artificiality there is very little trace"*5 His words suit not only to Cankam literature, but the whole of the the Tamil Literature as well.

All of them evolved not at a single period, year or moment; but at different periods and at different situations The Tamil literature was affected by the changes which took shape in the thoughts of the Tamils. Intermingling of thoughts also contributed its share. Particularly, the reason for the rise of the ethical lite rature is the deterioration which caught the oriented life of the Tamils.

During the Cankam period or prior to it, there is no evidence to point out the existence of ethical literature. Even then Peeraaciriyar a commentator of Tolkaap piyam illustrates with the ethical literature found in 'Patinen-kill-k-kanakku' when he commented on 'ammai' a kind of literary piece in the Tolkaappiyam*6 Therefore we can tolerably assume that this type of literature existed during the days of Tolkaappiyar, though they have not seen the light of the day.

The absence of ethical literature during the Cankam epoch will not reflect the emptiness of ehical thoughts. The fruitful p eces of advices and the lines such as' aRattu aaRu Nuvalum puutkai maRam' (PuRam 9) which are found in the literary pieces in this age witness the existence of high thoughts. Such high thoughts which occured as parts of poems during the Cankam literature grew as an indipendent, separate literary genre from the time of Thiruvalluvar

Ethical thought in the ancient world grows, expands and develops according to the structure of society and the phenomen on of social change. It appears in its most elementary form in Egypt, in summer and in Babylon, in the legal codes of Lipit-Ishtar and Hammurabi the first records in which right of property and ownership are recognised and defended*7. The customs which are formulated for the welfare of society become social or ethical laws and thus they protect the morality of the society. Apart from that, they have caught the attention of poets and became the core of many songs Niiti NeRi vilakkam an ethical composition is also composed according to this tradition.

It is said that imparting aesthetic pleasure is the only function of poetry. They also say that aesthetic pleasure will bid goodbye if poetry is composed for preaching ethical values. The Western critics group them as didactic poetry and make them parentless children They have separated art from life and this separation gave birth to the concept of 'Art for art's sake'.

Art and literature cannot be the sworn enemy of life, they cannot be inhuman, they cannot be inveterately undivine, but neither can they be crudely partism loudly dogmatic or fiersely maginsterial.

St. Aurobindo says: 'Art for Ar't sake certainly, Art as a perfect form and discovery of Beauty; but also Art for the soul's sake, the spirit's sake and the expression of all that the soul the spirit

wants to seize through the medium of beauty.

The aim of great literature is to kindle the spirit's says Dr. S. Radhakrishnan.*9 A work of art in so far as it is b e a u t i f u l and true, will also be an engine of the spirit and a moral force of tremendous import. W. H Hudson observes'' there is no reason why poetry should not be the outcome of philosophy and the vehicle of ph losophic truth with out sacrificing anything of its essential poetic qualities and graces'*10 Niiti-NeRi vilakkam belongs to that category of poetry which celebrates philosophic truth without sacrificing its essential poetic charm. ''Poetry of ideas is like other, not to be judged by the value of the material but by its degree of integration and artistic intensity'*11. If one looks at Niiti-NeRi vilakkam with this point, in mind, one will find that it is not only a treasure house of high thoughts but also a treasure house of poetical beauties.

1. 4. 1 A DROP OF SWEET WINE

The author wishes to say 'do charity.' He might have commanded by saying ''like to do charity''

He could have pointed out the benefits of doing charity by citing such lives as ''If you do charity you will achieve heaven''.

He can emphasise it by narrating the story of those who did charity.

Our poet has followed none of these tactics. It is wonderful that he has not mentioned in his song what he wants to mention. But uniquely he has also mentioned what he wants to mention.

Here the poet is born.

He makes one to see two pictures One of them is the feeling of an elephant, and the other is a row of ants.

'The restless elephant suffers no loss by a small quantity of rice falling off from the mouthful that it receives; but a crore of crawling ants find that, with all their families, a plentiful feast*12.

This is the content of the song. Through the elephant, the poet shows chartitable persons who give and through the ants he shows those who receive what others give.

vaankum kavalat toruciRitu vaaytappin
Tuunkum kaliRoo turaruRaa aankatukon
Tuurum eRumpin korukooti uyyumaal
aarum kilaiyoo tayinRu (Song No 38)

The poet has disguised his thoughts in metaphors and similes.

There are fortysix such songs, similes:

The songs having similes:

1, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 13, 14, 16 17, 19, 23 and 24,

The Songs having mataphors:

26, 29, 31, 32, 33, 36, 37, 38, 44, 45, 50, 51, 54, 56. 59, 61, 63, 64, 66, 68, 74, 75, 80, 81, 87, 88, 93, 95, 99, 100.

One may argue that all of them do not have such poetical beauties. In no literary piece, all lines are equally beautiful. When we evaluate a poet, we are not degrading him simply because some lines of his literary pieces are ordinary*13.

Therefore instead of condemning on the basis of the subject matters such as morals, it is better to appreciate them on the basis of the expression in which the content is handled even if it is an ethical literature!

The Niiti NeRi vilakkam reflects on education as well as on ignorance; on righteous rule as wall as on unrighteous rules; on friendship as well as evil friend ship; on wealth as well as poverty; on perfection as well as on basen-ess; on ideas as well as poetry

1. 5 ARTS FOR LIFE'S SAKE

Pieces of valuable advice are given to all, ranging from the rank and file to the kings Though the works main motive is the spreading of ethical values, it has not failed in displaying high literary values.

1. 6 WHETHER ORIGINAL OR BORROWED.

Some scholars have pointed out that Niti Neri vilakkam is an abbreviation of Tiru-k-kuRal and some opine that it is composed by following Tiru-k-kuRal*14. But no vaild reason can be shown to prove that it is an abbreviation or it is a follower of Thiru-k-kuRal. Some of the words employed by Tiruvalluvar might have been used by the author. But we cannot say that those words are the sole property of one poet.

In a similer manner, they point out the resemblance in the matter treated by the two authors. But one should remember that apart from resemblances, there are also differences 'yaakam' or 'veelvi' was not accepted by Tiruvalluvar*15, but it is acceptable to Kumara Kuruparer*16. All the matters treated in Tiru-k-kuRal may not be found in Niiti NeRi vilakkam and the vice versa is also true. There is a generality of thought which are common to all people irrespective of centuries, caste and creed. Any poet can emply them in his work Therefore we cannot say that one poet has followed another merely on the basis of the resemblance of thoughts. Kumara Kuruparar has employed his craft manship to make it a unique composition and it is not an abbreviation.

1. 7 MUTE BECAME POET

The author was born in Srivaikun tam in the Paantiyaa country. His father was canmuka cikamani and mother was CivakaamacuNtari ammaiyaar. He lived as a mute up to the age of five and later by the grace of the Lord Murukaa of Thiru-c-ceNtuur his muteness wasremoved Then he composed many literary pieces*17.

1. 8 AGE OF THE POET

@ Since the age of Tirumalai Naayak kar in 1623-1659 A. D. *18 the age of the author is also considered to be the same, because the author was closely associated with him.

1. 9 STRUCTURE OF THE POEMS

The composition consists of 102 stanzas with an invocatory song where the Lord Civaa is praised. The stanzas consist of both 'Innicai' and 'Neeriicai' Alliteration and assonance play an important role and no where the work has gone away from the requirements of the metre known as 'Venpaa'. Though one cannot find a larger number of Sanskrit words, one will not fail to notice the occurance of rare words such as 'kuyyam' (deceit)

1. 10 EDITIONS AND COMMENTARIES OF THE TEXT

In 1889 A.D., the saint Raamalinkar Published an edition. It was followed by the edition with commentary by S V. Taamootaram Pillai. In 1902 Kumaara cuvaami pulavar of Cunnakam wrote a commentary. Tiru T. Cupparaaya-c-cettiyaar wrote a commentary and it was published by the viveekaananta Company on 3-3-1929 Tiru. Capaapati Mutaliyaar wrote a commentary, with word meaning Dr. U. V. CaamiNaata aiyar published a collection of the works of Kumara Kuruparar with critical notes on 1939 A D. Aarumuka Naavalar also included it in an anthology of ethical literature. N wa days a larger number of cheap editions are also available.

1. 11 ENDLESS END

Research is not a short story which will end today or tomorrow. It has only started its long journey and so it is an endless story which will continue for ever. If my work is also useful for that endless journey, I sincerely believe that it is the only reward which I can ever expect for my work.

NOTES

1. Kumara Kurupara Atikal Varalaaru by Prof Kaa. Cu. Pillai, P. 6
2. Prof. T. P. M. Sixty-fifth birthday Commemoration Volume P. 92
3. Two thousand years of Tamil Litera ture by Prof. J. M. Coomacuntaram Pillai P. 275.
4. Ten Tamil Ethics by Prof. T.B. Krish nacaami P. 99
5. Tamil Culture Vol. X. Ni. 2, 1963 'Tamil Poetry 2000 years ago' by Dr. Kamil Zvelebil P. 28, 30
6. Peeraaciriyam: 547 Tamil Culture Vol. X No. 3, 1963 'Vanappu ilakkiyam' by V. K. Siva -p-prakaacam P. 76.79.
7. Dr. Xavier S. Thaninayam: R. P. S. Silver Jubilee Commemoration Volume, 1961 P. 74.
8. An adventure of criticism by Prof K. R. Srinivasan P. 660
9. Ciru Katai-k-kalanciyam-Edited by A. C. Chettiyar-A quotation for his Introduction.
10. An Introduction to the Study of literature by W. H. Hudson, 1963 Edition, P. 94
11. Theory of Literature by Wellek and Warren 1966, P. 124
12. Ten Tamil Ethics-Translated by T. B. Krishnaswami, P. 113
13. Please refer 'arankeerru kaatai' in Cilappatikaaram and 'Raaca-paaram pariyam' in Kalinkattu-p-parani
14. Prof. T. P. M. Sixty-fifth birthday Volume, P. 92 Kalai-k-kalanciyam Vol. IV P. 40
15. Tiru-k- kuRal: 259
16. Niiti Neri vilakkam: 97
17. Sri Kumara Kurupara Cuvaamikal Pirapanta-t-tirattu edited by Dr. U. V. CaamiNaata Aiyar P. XIV
18. The following works are composed by him:

1. KaN ar kali venpa
2. Miinaatci ammai-p-pillai-t-tamil
3. Maturai-k-kalampakam
4. Niiti NeRi vilakkam,
5. Tiruvaaruur Naanmani maalai
6. Muttu-k-kumara Cuvaami-p-pillai-t-tamil
7. Citampara mummani-k-koovai
8. Citampara-c-ceyyul koovai
9. Pantaara mummani-k-koovai
10 Kaaci-k-kalampakam
11. Cakalakalaa valli maalai
12. Maturai miinaatci ammai irattai mani maalai
13. Maturai miinaatci ammai kuRam
14. Tillai-c-civakaami-ammai irattai mani maalai
15. Kaaci-t-tunti viNaayakar patikam

19. Matuai Naayakkar Varalaaru by Prof. A. K. Parantaamanaar, P. 150

This portion was taken from my **M. A.** Dissertation which was submitted in 1967 under the following title:
"CRAMMATICAL STUDY OF NIITINERI VILAKKAM"

(Note:- The Phoneties and spelling of some proper nouns are used by the author)
—Editer

குமரகுருபரர் இலக்கியங்களில் திருமுறைகள்

திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ.,
தருமபுரம்.

உலகில் காணப்பெறும் புற இருளைப் போக்கி ஒளிபரப்பும் பன்னிரு கதிரவர்களைப் போலச் சமய உலகில் மக்களின் அக இருளைப் போக்கி மெய்ப் பொருளை உணர்த்துவன பன்னிரு திருமுறைகளாகும். அவற்றை அருளிய ஆசிரியர்கள் விண்மீன்களை ஒப்ப இருபத்தெழுவர் ஆவர்.

பன்னிரு திருமுறைகளில் மூவர் முதலிகள் அருளிய முதல் ஏழு திருமுறைகள் தேவாரம் எனப்படும். அவை சப்தகோடி மகாமந்திரங் களைப் போல்வன எனக் கூறுவர் ஆன்றோர்.

சைவ சமயத்திற்கு வேதங்களாக-ஆக மங்களாக விளங்குவன இத் திருமுறைகள் எனலாம். சைவ சமயிகள் இவற்றைப் பக்தியோடு ஓதி உணர்ந்து போற்றிப் பயன்கொண்டு வருகின்றனர்.

குமரகுருபர அடிகளும் இம்முறையில் இப் பன்னிரு திருமுறைகளில் திளைத்த முனிவராய் விளங்குகிறார். சைவத் திருமுறைகளிலும் சைவம் சார்ந்த மெய்யடியார்களிடத்தும் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டை அவர் அருளிய இலக்கியங்களில் காணலாம்.

தேவாரத் திருமுறைகளையும் அவற்றின் பின் வந்த திருமுறைகளையும் திருவருளா லுணர்ந்து அவற்றில் ஈடுபட்ட குமரகுருபர அடிகள், தெய்வங்களைக் குறித்த தோத்திரங் களாகவே தம் இலக்கியங்களை அமைத்தார். இலக்கியச் சுவையோடு பத்திச் சுவையை மக்கட்கு ஊட்டி வளர்த்தார். திருமுறை ஆசிரியர் களில் திருஞான சம்பந்தரை ஒப்பத் தமிழ் மொழிமீது பற்றுக்கொண்டார். தமிழாக, தமிழின் சுவையாகக் கடவுளைப் போற்றி வழிபட்டார். இறைவன்பால் பக்தி செலுத்துதற்குத் தமிழ் உரிய மொழியாதலை உணர்த்தினார்.

திருஞானசம்பந்தர்:-

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில், சீகாழியில் உமையம்மை திருஞானசம்பந்தருக்கு ஞானப்பால் அளித்தருளியவரலாற்றைச் சுட்டி

> "செழுமறை தெளியவ டித்தத
> மிழ்ப்பதி கத்தோடே
> திருவரு ளமுதுகு ழைத்துவி
> டுத்தமு லைப்பாலால்
> கழுமல மதலைவ யிற்றைநி
> ரப்பிம யிற்சேயைக்
> களிறொடும் வளரவளர்த்த
> வருட்செவி லித்தாயே"

எனப் போற்றுகிறார். திருஞானசம்பந்தரின் செவிலித்தாய் என அம்பிகையை இவர் அழைப் பதில் ஞானசம்பந்தர்மீது இவர் கொண்டிருந்த ஈடுபாடு புலப்படுகிறது.

ஞானசம்பந்தர் மதுரையில் சமணர்களோடு புனல் வாதம் செய்தபோது தாம் அருளிய திரு முறை ஏடு ஒன்றை வையையாற்றில் இட ஏடு எதிர்த்துச் சென்று வெற்றி தேடித் தந்ததைக் குறிப்பிட்டு மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில்,

"செடிகொள் பறிதலை அமணர்
எதிர் எதிர் செலவொர்
மதலைசொல் வையையில் கூட்டினர்''

எனப் போற்றுகிறார். இப்பாடலில் மதலை என அடிகள் குறிப்பிடுவது திருஞானசம்பந்தரை-யாகும். இவ்வாறே இந்நூலின் அம்புலிப் பருவத்தில் ஞானசம்பந்தர் பாண்டிய மன்னனுடைய வெப்பு நோய் நீங்கவும், கூன் நிமிரவும், திருப்பதிகம் பாடித் திருநீறு வழங்கிய வரலாற்றை'

"மும்மைத் தமிழ்ச்செழியன் வெப்பொடு
கொடுங்கூனும் மோசித்த இத்தலம்"

"கோவாம் வில்லி கொடுந்தவைவும்
கூன் நிமிராதால்

என மதுரைக் கலம்பகத்திலும் போற்றுகிறார்.

மதுரைக் கலம்பகத்தில் புயவகுப்பு என்னும் துறைப்பாடலின் சவுந்தரமாறர் தடம பொற்புயங்களின் பெருமைகளைக் கூறுமிடத்துத் திருஞானசம்பந்தருக்குச் சிவபெருமான் திருக்கோலக்காவில் பொற்றாளம் வழங்கியதைச் சுட்டிக்காட்டி

"புகலியர் குரிசில் பண்ணொடு
தமிழருமை அறிந்தொரு தாளம்
வழங்கப் புகுந்தன''

எனப் போற்றுகிறார். குமரகுருபரர் தருமை ஆதீனத்தை அடுத்து அப்போது எழுந்தருளியிருந்த நான்காவது குருமூர்த்திகளாகிய மாசிலாமணி தேசிக சுவாமிகளிடம் அருளுபதேசம் பெற்றவ . தம் குருநாதர் மீது அடிகள் அருளிய குருதோத்சிரமாகப் பண்டார மும்மணிக் கோவை என்னும் பாமாலை ஒன்றை அருளிப் போற்றியுள்ளார். குமரகுருபரர் தமக்கு ஞானம் வழங்கிய குருநாதரை ஞானசம்பந்தராகக் காணும் வேட்கை எழுந்தது. ஞானசம்பந்த இவ்வுலகில் பதினாறு வயது மட்டுமே வாழ்ந்து நல்லூர்ப் பெருமணத்தில் முத்திப்பேறு எய்தியவர். தம் குருநாதராகிய மாசிலாமணி தேசிகரோ வயது முதிர்ந்தவர். இருப்பினும் ஞானசம்பந்தர் வயது முதிர்ந்தவராக வாழ்ந்திருந்தால் இப்படித்தான் இருந்திருப்பார் எனக் கற்பனை செய்து தமது குருநாதரை ஞான சம்பந்தராகவேகருதிப் போற்றுவதை அந்நூலில் காணலாம்.

"அமண்மாசு அறுத்த கவுணியர் பெருந்தகை
பிள்ளைமை விடுத்த தள்ளரும் பருவத்து
தன்னதன் படிவம் உணர்த்துவ கடுப்ப
மாநிலத்து அமர்ந்த ஞானசம்பந்த''

என்பது முனிவரர் ஞானசம்பந்தராகவே மாசிலாமணி தேசிக சுவாமிகளைக் கருதிப் போற்றும் பாடல் வரிகளாகும்.

திருஞானசம்பந்தரைக் குறிப்பிடுவதோடு அவர் அருளிய தேவாரச் சொற்றொடர்களை, சொற்களைப் பொன்னேபோல் பொதிந்து தம் நூலுள் அருளிச் செய்துள்ளதைக் காணலாம்.

தென்குடித்திட்டைத் தேவாரத்தில் திருஞானசம்பந்தர் அருளிய 'கருவின்றலன்றியே கருவெலாம் ஆயவன்' என்னும் சொற்றொடரை அடிகள் கந்தர் கலிவெண்பாவில் 'கருவின்றி நின்ற கருவாய்' என எடுத்தாளுவதைக் காணலாம்.

உலக உயிர் வகைகள் 84 நூறாயிரமாக அவர் பிரபந்தத்தில் குறிக்கப்படுகிறது. 'உரைசேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனிபேதம்' என்பது ஞானசம்பந்தர் தேவாரம்.

நீதிநெறி விளக்கத்தில் கடவுள் வாழ்த்தாக வருவது

நீரில் குமிழி இளமை நிறைசெல்வம்
நீரில் சுருட்டும் நெடுந்திரைகள் - நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று

என்ற பாடலாகும். மற்றும் சிதம்பரச் செய்யுட் கோவையில்.

கூற்றம் குமைக்க வருமுன் நமரங்காள்
ஏற்றுவந்தான் பெற்றாளிணை

என்ற பாடலிலும்

வ(ம்)மின் நமரங்காள் மன்றுடையான்
வார்கழல்கண்டு, உய்மின் உறுதி
பிறிதில்லை'

என்ற பாடலிலும் நமரங்காள் என்ற சொல்லைக் குமரகுருபரர் அருமையாகக் கையாளுவதைக் காணலாம். இச்சொல் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் திருக்குற்றாலத் திருப்பதிகம் 'வம்பார் குன்றம்' என்ற பாடலில் வரும் அரிய சொல்லாட்சியாகும். திருஞானசம்பந்தர் திருவாக்கு அடிகளால் பொன்னேபோல் போற்றப்படுவதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும்.

திருநாவுக்கரசர் :

குமரகுருபர அடிகள் திருநாவுக்கரசர் மீது எல்லையற்ற பக்தி கொண்டவர் என்பதை அவர் அருளிய பல சொற்றொடர்களையும் கருத்துக்களையும் எடுத்துக் கையாளுவதால் இனிது அறியலாம். சரக்கறைத் திருவிருத்தம் என்ற பெயரில் ஒருதிருப்பதிகத்தை அப்பர் அருளிச் செய்துள்ளார். செய்யாள் சரக்கறை-யாம் திருவாலவாய்' எனஅச்சொல்லை மதுரைக் கலம்பகத்தில் அடிகள் கையாளுகிறார்.

கங்கை ஆயிரம் முகத்தை உடையவள் என அப்பர், 'நிலைதளரா ஆயிரம் முகத்-தினோடும், பாய்ந்தொருத்தி படர்சடைமேல் படரக் கண்டும்' என அருளியுள்ளார்.

'மறிதிரைச் சிறைவிரியும் ஆயிரமுகக் கடவுள்
மந்தாகினி என மீனாட்சியம்மை பிள்ளைத்
தமிழில் குமரகுருபரரும் அதனைக் குறிப்பிட்டு
ரைப்பதைக் காணலாம்.

'மணியார் வைகைத் திருக்கோட்டில்
நின்றதோர் திறமும் தோன்றும்'

என்று அப்பர் பாடிய கருத்து' அடிகளின் மதுரைக் கலம்பகத்தில்'

'வைகைத் தடங்கரைக் கண் நின்றவர்'

எனவரும் சொற்றொடரோடு இணைத்து எண்ணற்குரியதாயுள்ளது.

அப்பர் சுவாமிகள் சிவபெருமானின் அட்ட மூர்த்த வடிவங்களை 'இரு நிலனாய்த் தீயாகி' எனத்தொடங்கும் திருத்தாண்டகப் பதிகத்துள் குறிப்பிடுகிறார். அடிகளும் சிதம்பர மும்மணிக் கோவையில்'

'இருபெரும் சுடரும் ஒருபெரும் புருடனும்
ஐவகைப் பூதமோடு எண்வகை உறுப்பின்
யாபெருங் காயந்தாங்கி'

என அட்டமூர்த்த வடிவங்களைக் குறித்தருளு வதைக் காணலாம்.

'நீடு நெஞ்சுள் நினைந்து கண் ணீர்மல்கும்
ஓடு மாலினொடு ஒண்டொடி மாதரார்
மாட நீண்மரு கற்பெரு மான்வரின்
கூடு நீயென்று கூடல் இழைக்குமே

என்று மகளிர் இழைக்கும் கூடலை அப்பர் குறிப்பிடுகிறார். அடிகளும் மதுரைக் கலம் பகத்தில்,

தழைத்திடும் கூடலார்
குழைத்துடன் கூடலார்
பிழைத்திடும் கூடலே
இழைத்திடும் கூடலே

எனக் குறித்தருளுகிறார்.

'அரியலால் தேவி இல்லை ஐயன் ஐயாறனார்க்கே' என்பது அப்பர் தேவாரம் சிதம்பரச் செய்யுட் கோவையில்,

'பூந்தண் பசுந்துழாய்ப் போது நறவிரி
தேந்தண் திரள்தோள் தேவற்கும் தேவிக்கும்
காந்தன்'

எனத் திருமால் இறைவற்குப் புருஷ சக்தியாதல் கூறப்படுகிறது.

"செடிகொள் பறிதலை அமணர்
எதிர் எதிர் செலவொர்
மதலைசொல் வையையில் கூட்டினர்"

எனப் போற்றுகிறார். இப்பாடலில் மதலை என அடிகள் குறிப்பிடுவது திருஞானசம்பந்தரை-யாகும். இவ்வாறே இந்நூலின் அம்புலிப் பருவத்தில் ஞானசம்பந்தர் பாண்டிய மன்னனுடைய வெப்பு நோய் நீங்கவும், கூன் நிமிரவும், திருப்பதிகம் பாடித் திருநீறு வழங்கிய வரலாற்றை'

"மும்மைத் தமிழ்ச்செழியன் வெப்பொடு
கொடுங்கூனும் மோசித்த இத்தலம்"

"கோவாம் வில்லி கொடுந்தவைவும்
கூன் நிமிராதால்

என மதுரைக் கலம்பகத்திலும் போற்றுகிறார்.

மதுரைக் கலம்பகத்தில் புயவகுப்பு என்னும் துறைப்பாடலின் சவுந்தரமாறர் தடம பொற்புயங்களின் பெருமைகளைக் கூறுமிடத்துத் திருஞானசம்பந்தருக்குச் சிவபெருமான் திருக்கோலக்காவில் பொற்றாளம் வழங்கியதைச் சுட்டிக்காட்டி

"புகலியர் குரிசில் பண்ணொடு
தமிழருமை அறிந்தொரு தாளம்
வழங்கப் புகுந்தன"

எனப் போற்றுகிறார். குமரகுருபரர் தருமை ஆதீனத்தை அடுத்து அப்போது எழுந்தருளியிருந்த நான்காவது குருமூர்த்திகளாகிய மாசிலாமணி தேசிக சுவாமிகளிடம் அருளுபதேசம் பெற்றவ . தம் குருநாதர் மீது அடிகள அருளிய குருதோத்திரமாகப் பண்டார மும்மணிக் கோவை என்னும் பாமாலை ஒன்றை அருளிப் போற்றியுள்ளார். குமரகுருபரர் தமக்கு ஞானம் வழங்கிய குருநாதரை ஞானசம்பந்தராகக் காணும் வேட்கை எழுந்தது. ஞானசம்பந்த இவ்வுலகில் பதினாறு வயது மட்டுமே வாழ்ந்து நல்லூர்ப் பெருமணத்தில் முத்திப்பேறு எய்தியவர். தம் குருநாதராகிய மாசிலாமணி தேசிகரோ வயது முதிர்ந்தவர். இருப்பினும் ஞானசம்பந்தர் வயது முதிர்ந்தவராக வாழ்ந்திருந்தால் இப்படித்தான் இருந்திருப்பார் எனக் கற்பனை செய்து தமது குருநாதரை ஞானசம்பந்தராகவேகருதிப் போற்றுவதை அந்நூலில் காணலாம்.

"அமண்மாசு அறுத்த கவுணியர் பெருந்தகை
பிள்ளைமை விடுத்த தள்ளரும் பருவத்து
தன்னதன் படிவம் உணர்த்துவ கடுப்ப
மாநிலத்து அமர்ந்த ஞானசம்பந்த"

என்பது முனிவரர் ஞானசம்பந்தராகவே மாசிலாமணி தேசிக சுவாமிகளைக் கருதிப் போற்றும் பாடல் வரிகளாகும்.

திருஞானசம்பந்தரைக் குறிப்பிடுவதோடு அவர் அருளிய தேவாரச் சொற்றொடர்களை, சொற்களைப் பொன்னேபோல் பொதிந்து தம் நூலுள் அருளிச் செய்துள்ளதைக் காணலாம்.

தென்குடித்திட்டைத் தேவாரத்தில் திருஞானசம்பந்தர் அருளிய 'கருவினாலன்றியே கருவெலாம் ஆயவன்' என்னும் சொற்றொடரை அடிகள் கந்தர் கலிவெண்பாவில் 'கருவின்றி நின்ற கருவாய்' என எடுத்தாளுவதைக் காணலாம்.

உலக உயிர் வகைகள் 84 நூறாயிரமாக அவர் பிரபந்தத்தில் குறிக்கப்படுகிறது. 'உரை சேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனிபேதம்' என்பது ஞானசம்பந்தர் தேவாரம்.

நீதிநெறி விளக்கத்தில் கடவுள் வாழ்த்தாக வருவது

நீரில் குமிழி இளமை நிறைசெல்வம்
நீரில் சுருட்டும் நெடுந்திரைகள் - நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று

என்ற பாடலாகும். மற்றும் சிதம்பரச் செய்யுட் கோவையில்.

கூற்றம் குமைக்க வருமுன் நமரங்காள்
ஏற்றுவந்தான் பெற்றாளிணை

என்ற பாடலிலும்

வம்மின் நமரங்காள் மன்றுடையான்
வார்கழல்கண்டு, உய்மின் உறுதி
பிறிதில்லை'

என்ற பாடலிலும் நமரங்காள் என்ற சொல்லைக் குமரகுருபரர் அருமையாகக் கையாளுவதைக் காணலாம். இச்சொல் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் திருக்குற்றாலத் திருப்பதிகம் 'வம்பார் குன்றம்' என்ற பாடலில் வரும் அரிய சொல்லாட்சியாகும். திருஞானசம்பந்தர் திருவாக்கு அடிகளால் பொன்னேபோல் போற்றப்படுவதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும்.

திருநாவுக்கரசர்:

குமரகுருபர அடிகள் திருநாவுக்கரசர் மீது எல்லையற்ற பக்தி கொண்டவர் என்பதை அவர் அருளிய பல 'சொற்றொடர்களையும் கருத்துக்களையும் எடுத்துக் கையாளுவதால் இனிது அறியலாம். சரக்கறைத் திருவிருத்தம் என்ற பெயரில் ஒருதிருப்பதிகத்தை அப்பர் அருளிச் செய்துள்ளார். செய்யாள் சரக்கறை-யாம் திருவாலவாய்' எனஅச்சொல்லை மதுரைக் கலம்பகத்தில் அடிகள் கையாளுகிறார்.

கங்கை ஆயிரம் முகத்தை உடையவள் என அப்பர், 'நிலைதளரா ஆயிரம் முகத்-தினோடும், பாய்ந்தொருத்தி படர்சடைமேல் படரக் கண்டும்' என அருளியுள்ளார்.

'மறி திரைச் சிறைவிரியும் ஆயிரமுகக் கடவுள்
மந்தாகினி என மீனாட்சியம்மை பிள்ளைத்

தமிழில் குமரகுருபரரும் அதனைக் குறிப்பிட்டு ரைப்பதைக் காணலாம்.

'மணியார் வைகைத் திருக்கோட்டில்
நின்றதோர் திறமும் தோன்றும்'

என்று அப்பர் பாடிய கருத்து' அடிகளின் மதுரைக் கலம்பகத்தில்'

'வைகைத் தடங்கரைக் கண் நின்றவர்'

எனவரும் சொற்றொடரோடு இணைத்து எண்ணற்குரியதாயுள்ளது.

அப்பர் சுவாமிகள் சிவபெருமானின் அட்ட மூர்த்த வடிவங்களை 'இரு நிலனாய்த் தீயாகி' எனத் தொடங்கும் திருத்தாண்டகப் பதிகத்துள் குறிப்பிடுகிறார். அடிகளும் சிதம்பர மும்மணிக் கோவையில்'

'இருபெரும் சுடரும் ஒருபெரும் புருடனும்
ஐவகைப் பூதமோடு எண்வகை உறுப்பின்
யாபெருங் காயந்தாங்கி'

என அட்டமூர்த்த வடிவங்களைக் குறித்தருளு வதைக் காணலாம்.

'நீடு நெஞ்சுள் நினைந்து கண்ணீர்மல்கும்
ஓடு மாலினொடு ஒண்டொடி மாதரார்
மாட நீண்மரு கற்பெரு மான்வரின்
கூடு நீயென்று கூடல் இழைக்குமே

என்று மகளிர் இழைக்கும் கூடலை அப்பர் குறிப்பிடுகிறார். அடிகளும் மதுரைக் கலம் பகத்தில்,

தழைத்திடும் கூடலார்
குழைத்துடன் கூடலார்
பிழைத்திடும் கூடலே
இழைத்திடும் கூடலே

எனக் குறித்தருளுகிறார்.

'அரியலால்-தேவி இல்லை ஐயன் ஐயாறனார்க்கே'

என்பது அப்பர் தேவாரம் சிதம்பரச் செய்யுட் கோவையில்.

'பூந்தண் பசுந்துழாய்ப் போது நறவிரி
தேந்தண் திரள்தோள் தேவற்கும் தேவிக்கும்
காந்தன்'

எனத் திருமால் இறைவற்குப் புருஷசக்தியாதல் கூறப்படுகிறது.

சுந்தரர்:-

சுந்தரமூர்த்தி சுவாமிகளிடத்தும் அடிகளார்க்கிருந்த பக்தி ஈடுபாடு அவர் அருளிய பிரபந்தங்களில் வெளிப்படுவதைக் காணலாம். சுந்தரருக்காக இறைவன் தூது சென்றதை

'ஓர் புலவன் பண்மலர்
சாத்திப்பணி கொண்டவா'
'பரவை வாய்தலில் பதமலர்
சேப்ப, ஒருகால் அல்ல
இருகால் நடந்தும்'

எனத் திருவாரூர் நான்மணி மாலையிலும்,

'ஒருபெரும் புலவனொடு ஊடல் தீரப்
பரவை வாய்தலில் பாயிருள் நடுநாள்
ஏதம்என்று உள்ளாது இருதாள் ஒருகால்
தூதில் சென்றநின் துணையடிக் கமலம்

'பரவைதன் மனைவயின் பாவலன் ஏவலின்
இருமுறை திரிதலின் எளியன்'

'சொன்மாலை தொடுத்தணிந்த
தொண்டர்க்குத் துணைவராய்
நன்மாலைக் குழலியர்பால்
நள்ளிருளில் செலவல்லீர்'

எனச் சிதம்பரச் செய்யுட் கோவையிலும்,

'தூது கொண்டும்
தமைத்தோ மமைகொண்ட
தொண்டர் தண்டமிழ்ச்
சொற் கொண்டகுண்டலக்
காது கொண்டு எம் கவிதை
கொண்டு ஆட்கொண்ட காசிநாதர்'

எனக் காசிக் கலம்பகத்தும் உரைத்தருள்கிறார் சிதம்பரமும்மணிக் கோவையில் இத்தொண்டத் தொகைக்கு முதற்பொருளாக விளங்குபவர் தில்லை நடராசர் எனக் குறிப்பிடுவதைக் காணலாம்.

ஆற்றில் இட்டுக் குளத்தில் தேடியதை நகைச்சுவையோடு தலைவி பாணனுக்குக் கூறுவதுபோலப் பாடுவது கற்பார்க்குப் பெருவிருந்தாய் அமைவது.

கொங்குரை ஆற்றில் இட்டுக்
குளத்தினில் தேடநீடு
மங்குல்தோய் முதுகுன்றையர்
மதுரையோ மதியில் பாணா
எங்கையர் மனைக்கண் வைத்தாங்கு
எம்மிடைத்தேறி மற்றம்
மங்கையர் மனம்போ லன்றே
மகிழ்நர்தம் வாழ்க்கை தானே

என்பது அக்கருத்தமைந்த மதுரைக் கலம்பகப் பாடலாகும்.

மணிவாசகர் :

எட்டாம் திருமுறையாக இலங்கும் திருவாசகம் திருக்கோவையார் ஆகிய இரு நூல்களையும் அடிகள் போற்றிப் புகழுமிடங்கள் பலவாகும் சிதம்பர மும்மணிக் கோவையில்

'பைந்தமிழ் நவின்ற செந்நாப் புலவன்
ஐந்திணை உறுப்பில் நாற்பொருள் பயக்கும்
காமம் சான்ற ஞானப் பனுவற்குப்
பொருளெனச் சுட்டிய ஒருபெருஞ் செல்வ'

எனத் 'திருக்கோவையாரின் பொருள் கூத்தப் பெருமான்' என மணிவாசகர் கூறியதை அடிகள் போற்றுவதைக் காணலாம். ஊமைப் பெண்ணை மணிவாசகர் திருச்சாழல் பாடிப் பேசவைத்ததை

'கைசொலக் கேட்கும் கட்செவி மூங்கைக்கு
உய்வகை புணர்த்தது ஒருவியப் பாகலின்'

என்று குறிப்பிடுவதைக் காணலாம்.

கொள்ளேன புரந்தரன் மால்
அயன் வாழ்வு குடிகெடினும்'

எனவரும் திருவாசகக் கருத்து

புனையேன் தருஉதவு பொன்னரிமாலை
வனையேன் பசுந்துழாய் மாலை

என்ற பாடலில் அமைந்திருப்பதை அறியலாம்.

மணிவாசகர் அருளிய திருவாசகத் தொடர்களை அவ்வாறே அமைத்துக் குமரகுருபர அடிகள் பல இடங்களில் போற்றி உரைத்துள்ளார்.

'போக்கும் வரவும் புணர்வும்
இலாப் புண்ணியன்'

என்னும் சிவபுராணத் தொடர், அடிகளின் கந்தர் கலிவெண்பாவில்

'பூரணமாய் நித்தமாய்ப் போக்கு வரவும்
புணர்வும், காரணமும் இல்லாக் கதியாகி'

என எடுத்தாளப்படுகிறது.

'அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபரனாகி அருளிய பெருமை'

என்னும் திருவாசகத் தொடர் அடிகள் வாக்கில் 'கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக் குருபரன் என்றோர் திருப்பேர் கொண்டு' எனப் போற்றப்படுகிறது 'ஐயா வழியடியோம்' எனும் தொடர் 'ஆயும் பழைய அடியாருடன் கூட்டி' எனவும், நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதன் என்னும் தொடர் நள்ளிருளில் நட்ட மிடும் மதமத்தர் எனவும் எடுத்தாளப்படுகிறது. 'சமய வாதிகள் தத்தம் மதங்களே அமைவதாக அரற்றி மலைந்தனர்' என்னும் மணிமொழியை மீனாட்சியம்மை ஆடும் அம்மனைக்காயை முத்து எனவும், செம்மணி எனவும், கருமணி எனவும் கூறலைக்காட்டி மற்றைச் சமயத்து அமைவு பெறத் தத்தமில் நின்று பிதற்றுவ பொருள் என அடிகள் எடுத்தாளக் காணலாம்.

இமவான் மகட்குச் சிவன் தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன் என மணிவாசகர் திருப்பொற் சுண்ணத் திருப்பதிகத்தில் கூறு தலைக் குமரகுருபரர் மாற்றி, சிதம்பர செய்யுட் கோவையில்,

அனக நாடகற்கு எம் அன்னை
மனைவி தாய் தங்கை மகள்

என உரைத்தருள்வதைக் காணலாம்.

இவ்வாறு நால்வர், ஏனைய அருளாளர் வாக்குகளின் சொல்லும் பொருளும் தாக்கமும் குமரகுருபரர் இலக்கியங்களில் நிரம்பி நின்று கற்பார்க்குப் பக்திமையையும் இலக்கியச் சுவை யையும் ஒருங்கே அளித்து அறிவிற்கு இன்பத் தையும் உயிருக்கு உறுதியையும் தந்து விளங்கு கின்றன.

'பரசிருக்கும் தமிழ்மூவர் பாட்டிருக்கும்
திருமன்றில் பரசோன்றேந்தி
அரசிருக்கும் பெருமானார்க்கு
ஆட்செய்யார் என்செய்வார்
முரசிருக்கும் படை நமனார்
முன்னாகும் அந்நாளே'

என்னும் பாடலும்,

பொழிந்தொழுகு முதுமறையின்
சுவைகண்டும் புத்தமுதம்
வழிந்தொழுகும் தீந்தமிழின்
மழலைசெவி மடுத்தனையே

என்ற பாடலும்

சிறிய எனது புன்மொழியும் வடிதமிழ்
தெளியும் அவர் முதுசொல் எனச் சூட்டினர்

என்னும் பாடலும் குமரகுருபர அடிகளுக்குத் தேவாரம் திருவாசகம் முதலிய நூல்கள் மீது இருந்த எல்லையற்ற பக்தி ஈடுபாட்டைக் காட்டுவனவாக உள்ளன.

உ

சிவமயம்

ஸ்ரீமத் குமரகுருபர சுவாமிகள் 300-ஆம் ஆண்டு நிறைவு விழாவிற்கு எழுந்தருளியுள்ள

ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானங்களின் பொற்கமல பாதங்களுக்கு வணக்கங்கள்

திருநெல்வேலி மாவட்டம், சங்கர நயினார் கோவில்

ஸ்ரீ கோமதி சமேத ஸ்ரீ சங்கரலிங்கப்பெருமான் திருக்கோயில்

கும்பாபிஷேகம் 1990-இல்

நடைபெற இருக்கிறது. திருப்பணிக்கு உதவுக.

அன்புடன்,

இ. அமராபதி நாடார்,

(திருப்பணிக்குழுத் தலைவர்)

கமிஷன் மளிகை, வடக்கு ரதவீதி,

சங்கரன்கோவில்-627 756.

Phone : 2697

S. Chokkanthan,

519, Gandhi Road,

KANCHEEPURAM-1.

(PALLAVA PALACE)

S. C. N. SILKS,

FASHION SILK SAREES MANUFACTURERS,

6-A, Mettu Street,

Kancheepuram-631 501.

உ

Rri Ramajayam

Phone : Shop: 2209
Resi : 2137

SRI JAYALAKSHMI VILAS

A. K. Govindaraju Mudaliar & Sons,

HAND-LOOM SILK CLOTH MERCHANTS,

431, Gandhi Road, Kancheepuram-1.

இல்லம் : 2137

உ

Phone : 2209

SRI AMIRDHA SILK HOUSE,

Hand-loom Silk Cloth Merchants,

431, Gandhi Road, : : Kancheepuram-1.

உ

Phone : 2433

S. T. Ponnusami Chettiar,

HAND-LOOM SILK & LACE CLOTH PRODUCERS,

23-A, Mettu Street, : : Kanchipuram-1.

Phone : 2747

உ

ஸ்ரீ ராமஜெயம

C. S. T. No. 54747
R. C. No. 186218

M. தக்ஷிணாமூர்த்தி & சன்ஸ்,

பலசரக்கு மளிகை,

148, செங்கழுநீரோடைத் தெரு,

காஞ்சிபுரம்-2.

USE ALWAYS ONE "LAKSHMI"
AND "LAKSHMINARAYAN" BRAND JARI

MFRS :

Sri Laxmi Narayan Jari Industries,

2/68 B, Kotsafil Main Road,
SURAT-395 001.

AGENT :

M/s SARADHA AGENCIES,
19-A/33, Mettu Street, Gandhi Road,
Kanchipuram-631 501.

KUMARAKURUPARAR'S MEENAKSHI AMMAI PILLAIT TAMIL

An Appreciation

Dr. K. CHELLAPPAN

The nucleus or the soul of Kumara kuruparar's poetry is God, the religious savants and their birth places. It is signifi cant that most of his poems are linked with sacred spots or places like Tiruchen dur, Madurai or Benares and while they glorify the deity of those spots they describe the sanctity and beauty of the place as well as narrate the mythological events and both converge in God. Hence we see a harmonious blending of Nature, and God in his poetry, in which again we see the confluence of fancy and theology. But it is not fancy in the sense of empty dreaming and exaggerated description or narration. To Kumarakuruparar myth was a liviug reality. and religion was the very life blood of his own self as well as the great culture of which he was ths spokesman. In this article we would like to see Kumarakurupurar's **Meenakshi Ammai Pillai Tamil** as a beautiful poem on a religous theme.

Meenakshi Ammai Pillai Tamil, his second work and the master piece in this kind according to Dr. M Varadarajan is a glorification of goddess Meenakshi in the genre of 'the Tamil of childhood,' one of the ninety-six forms of minor poetical compositions. This form made popular since Periyalvar, consists of ten tens each dealing with one activity of the child from the point of the view of the child or of its parents. It is one of the most popular type of literature. This is in praise cf child hood in all its varying stages whether the child be a male or a female. It starts sing ing of the child from the third month, when we have usually, the prayer offered for the child's welfare. Then follow the songs of the varied movements of the body of the child, forwards and backwards or sideways, the lullaby, the song of clapping hands, the song of kisses, the welcome song and the song of the moon These seven sections are common to both sexes. But, if the child is a male, there are in addition the song of the kettledrum, the song of the childish pranks or brushing aside the toy-houses built of sand by the female children and the song of the try cart. If the child is a female, we have any three of the following: the song of the swing, the song of the bath, the song of toy-houses, the song of throwing up and catching seeds or other such things."

This form was very handy for the poet to sing of the divine in a most concrete and intimate way which can easily appeal to every human being. Wordsworth glorified child as 'the mighty philosopher, the eye among the blind, that, deaf and silent, read'st the eternal mind" and ad dressed it as "Mighty prophet, Seer blest." And it is in Tamil tradition we find the full exploitation of the symbolic power of childhood. If in the Western tradition the divinity of the child is a metaphor, in the Tamil tradition the divine takes the shape of the child and the creation and destruc tion of the cosmos becomes the child's play, in the literal sense. In this way the poet not only humanises and concretises the divine, but enhances the very sublimity of the divine principle, because the activities of the creative principle shown as the activities of a child enhance the sense of grandeur in its very simplicity

and intimacy. The infinite seems to incar nate itself as child in order to playfully experience the cosmos, its own creation.

Song 61 is said to be so supreme in beauty that goddess Meenakshi herself wanted to listen to it in the human form. There is also an interesting dialogue between Meenakshi and her maid on the adventures of Shiva on the banks of the river Vaigai when it was in flood. As Prof. Mutharasu says, "the way in which the miraculous acts of the acts of creation and destruction are described in these songs and the language used to describe them are majestic and grand." The whole poem is a magniffìcent but human vision of the dance of the creative principle in its varied moods and all the mythic events which have a scientific basis are made concrete and sensuous and the sound effect coheres with the beautiful and elaborate pictures and we simultaneously see and listen to the orchestration of the divine creation. Meenakshi's wonder over Lord Siva's work as a servant and his being beaten by the Pandiya King, humanises the cosmic principle and it looks as if the entire Pillai Tamil is an attempt to bring the divine within the human grasp.

The greatness of this poem can be seen by the fact that a modern revolution ary and rationalist poet Bharathidasan has included a whole section of **Meenak shi Ammai Pillai Tamil** begining with Thodukkum Katavul Palampadal in one of his poems **'The Unexpected Kiss'** where St Kumarakurupurar himself comes as a character. This shows that Tamil is a uni fying force among the great Tamil poets, in spite of their religious or ideological differences In fact St. Kumarakuruparar himself asks all the deities, from Lord Muruga of Thiruchendur to Sakalakala valli only to bless him with scholarship and creativity in Tamil and all his poetry, including **Meenakshi Ammai Pillai Tamil** provides ample testimony to the fact that his boon was granted.

உ
சிவமயம்

காஞ்சிபுரம் அருள்மிகு கச்சபேசர் திருக்கோயிலில் 1-5-1989 அன்று நடைபெற்ற

ஸ்ரீ குமர குருபர சுவாமிகள்

300ஆவது ஆண்டு நினைவு விழாக்குழுவினர் நன்றியுரை

''அசைவில் செழுந்தமிழ் வழக்கே
அயல் வழக்கின் துறை வெல்ல''

எனச் சேக்கிழார் பெருமான் அருளிச் செய்தார். அவர் அவ்வாறு அருளிச் செய்தமை ஞானசம்பந்தரது நற்றமிழ்ப் பாடல்களை வைத்தே ஆகும்.

ஞானசம்பந்தரும் தமிழ் நாட்டின் எல்லையைக் கடந்து செல்லாமல் தமிழ்நாட்டில் இருந்து கொண்டே வடநாட்டுத் தலங்களைத் தம் அக நோக்கில் கண்டு திருப்பதிகங்கள் அருளிச் செய்தார்.

வாகீசராகிய திருநாவுக்கரசரும் திருக்கயிலாய யாத்திரை செய்து மீண்டதன்றி, வடநாட்டில் எழுந்தருளியிருந்து தமது செந்தமிழ்த் திருப்பதிகங்களை அருளிச் செய்யவில்லை

சங்க காலந்தொட்டு இந்நாள் வரையில் அரசர்களும், வள்ளல்களும், பெருஞ்செல்வர்களும் தமிழ்ப் புலவர் பலரை ஆதரித்து, அவர்கள் வழியாகத் தமிழை வளர்த்தனர்; வளர்த்தும் வருகின்றனர். ஆயினும், எந்த ஒரு பெரும் புலவரும் அல்லது தமிழ் அருளாளரும் தமிழ் நாட்டிற்கு அப்பால் வட மாநிலம் சென்று அங்குத் தங்கித் தமிழையோ, தமிழ்ச் சமயுமாகிய சைவத்தையோ பரப்பியதாக, பரப்பி வருவதாக வரலாறு இல்லை.

இதற்கு விலக்காக, வடநாட்டிற்குச் சென்று, அங்கே எழுந்தருளியிருந்து, தமிழையும், சைவத்தையும் வளர்த்த தமிழ்ப் பெரும் புலவர் மட்டுமல்லாது, சைவ சமயப் பேரருளாளராய் இற்றைக்கு 300 ஆண்டுகட்கு முன் ஐந்து வயதிலேயே திருச்செந்தூர் ஆறுமுகன் அருளைப் பெற்றுத் திகழ்ந்த பேரருளாளர், திருப்பனந்தாள் காசி மடத்தின்முதல்வர் ஸ்ரீ குமர குருபர அடிகளேயாவர்.

மதுரை மாநகரைப் பலரும் ''தமிழ் வளர்த்த மதுரை'' என்றுதான் கூறுவார்கள். ஆனல் அடிகள்

'வடகலையியல் பல்கலையொடு
தமிழ் வளரும் கூடல்''

என அருளிச்செய்தனர். அடிகள் வடநாட்டிற் சென்று, சகல கலாவல்லி மாலை பாடி, அப்பொழுதே இந்துஸ்தானி மொழி ஞானம் வரப் பெற்று, அந்நாளைய முகமதிய மன்னனேடு அளவளாவி, அற்புதங்கள் நிகழ்த்தி அம்மன்னனல் நிலம் முதலியன தானமாக வழங்கப் பெற்றுக் காசித் தலத்தில் குமாரசாமி மடத்தையும் கேதார கட்டத்தையும் நிறுவி அருள்மிகு கேதாரீசுவரருக்குத் தமிழ்நாட்டு முறைப்படி ஆலயம் அமைத்து, அன்றுடச் சிறப்பு பூசை முறைகளை ஏற்படுத்தி அவைதொடர்ந்து வளர வழி வகுத்துள்ளார்கள்.

இவை அடிகளது சமய ஆக்கம், மொழி ஆக்கம் என்பவற்றை மட்டுமின்றி இந்திய நாட்டு ஒருமைப் பாட்டிற்கும் அன்றே வித்தூன்றி உள்ளமையை நமக்குநன்கு உணர்த்துவனவாகும்.

தருமை ஆதீனம் குருமகா சந்நிதானம் அவர்களின் அருளாணைப்படி இவ்வாண்டை

இத்தகைய அருட் பேரடிகளது 300ஆவது ஆண்டு விழாவாக, பல்கலைக் கழகங்களும் சைவ அமைப்புக்களும் ஆங்காங்குக் கொண்டாடி வருதல் பலரும் அறிந்ததே.

"கல்வியிற் கரையிலாத காஞ்சி மாநகர்" என அப்பர் பெருமானுல் சிறப்பித்தருளப் பெற்ற நம் காஞ்சி மாநகரிலும் அத்தகைய தொரு பெருவிழாவினை காஞ்சிபுரம்தொண்டை மண்டலாதீனம் 230ஆவது குருமகா சந்நிதானம் அவர்கள் அருள்நோக்கில் அனைத்து மடாதிபதிகளும், அடியார் திருக்கூட்டங்களும் இணைந்து, குழு அமைத்து சுக்கில ஆண்டு சித்திரை 18ஆம் நாள் (1-5-89) ஞாயிறன்று நடத்தி மகிழ்ந்துள்ளோம். அதன் நினைவாக இந்தச் சிறப்பு மலரையும் வெளியிட்டுள்ளோம்.

